
www.padippakam.com

# பிரபாகரன்



## தமிழர் எழுச்சியின் வடிவம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பிரபாகரன்

## தமிழர் எழுச்சியின் வடிவம்

பழ. நெடுமாறன், எம். ஏ.,

வெளியீடு :

தமிழ்க்குலம் பதிப்பாலயம்

48, மேலமாசி வீதி,

மதுரை-625 001.

படிப்பகம்

www.padippakam.com

விலை : ரூ. 10/-
முதற் பதிப்பு : மே, 1988

PIRABAKARAN
By P. Nedumaran, M. A.,
© P. Nedumaran

First Edition : May, 1988
Pages: 104
Cms : 21×14
Box Board Binding

Printed at
Vivekananda Press, Madurai

Publishers :
TAMIL - KULAM PATHIPALAYAM
48, West Masi st., Madurai-625 001.
Prize : Rs. 10/-

அச்சிட்டோர் :
விவேகாநந்தா அச்சகம்
48, மேலமாசி வீதி
மதுரை-625-001

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

தமிழீழ விடுதலைப் புரட்சியின் தளநாயகனாக விளங்கும் அருமைத் தம்பி திரு. பிரபாகரன் உலகத் தமிழர்களின் எழுச்சியின் வடிவமாகத் திகழுகிறார். தமிழரின் வரலாறு கண்டறியாத வகையில் வீரத்தை நிலைநிறுத்திப் புதிய புறநானூற்றைப் படைத்து வரும் திரு. பிரபாகரன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒவ்வொரு தமிழனும் அறிந்து கொள்ள வேண்டியது அவசிய மாகும் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் திரு. பிரபாகரனின் வீர வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பண்டை நாளில் மூவேந்தரையும் வென்ற பேராற்றல் படைத்த பெருவீரனான வாணனின் பெயரை இளைஞர்கள் தங்கள் மார்புகளில் எழுதிக்கொண்டு பெருமிதம் பொங்கத் திரிந் தனர் எனப் பழம்பாடல் ஒன்று தெரிவிக்கிறது. அதைப் போல இலட்சிய வேங்கையான திரு. பிரபாகரனின் தீரவாழ்வை முன் னுதாரணமாகக் கொண்டு தமிழ் இளைஞர்கள் வீறுபெற்று எழ வேண்டும்.

திரு. பிரபாகரன் யார்? அவரது தோற்றத்திற்கும், வளர்ச் சிக்கும் பின்னணி என்ன? அவரது நோக்கமும், வழிமுறையும் என்ன? அவர் தலைமை தாங்கி நடத்தும் ஈழப்புரட்சியின் தன்மை யாது? விடுதலைப் புலிகள் இயக்கம் உருவானது எப்படி? அதன் குறிக்கோள்கள் எவை? என்பவற்றை இந்நூலின் மூலம் ஓரளவு விளக்கியுள்ளேன். திரு. பிரபாகரன் அவர்களையும், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் பற்றித் தெரிந்து கொள்ள இந்நூல் உதவும் என நம்புகிறேன்.

இந்நூல் பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றினை அப்படியே விவரிக்கும் நூல் அல்ல. திரு. பிரபாகரனின் குடும்பத் தினரோ அல்லது அவரது நெருங்கிய தோழர்களோ கூட அவரது வாழ்க்கை வரலாற்றை முழுமையாகக் கூற முடியுமா என்பது சந்தேகமே. ஏனென்றால் பிரபாகரனின் வாழ்க்கையில் எத்த னையோ மெய் சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இந்நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் அவற்றை அறியமாட்டார்கள். பிரபாகரனின் வாழ்க்கை வரலாற

படிப்பகம்

www.padippakam.com

றினை முழுமையாகக் கூறக்கூடியவர் அவர் மட்டுமே. அவரே முயன்று தனது சுயசரிதையை எழுதுவாரானால் எத்தனையோ உண்மைகள் உலகத்திற்குத் தெரியவரும்.

பிரபாகரனின் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி களையும், அவரும் அவரது இளம் பருவத்துத் தோழர்களும் ஒன்று கூடி விடுதலைப் புலிகள் இயக்கத்தினை உருவாக்கியது குறித்தும் அவர்கள் சந்திக்க நேர்ந்த சவால்கள், சோதனைகள் குறித்தும், அவற்றை அவர்கள் வெற்றிகரமாகக் கடந்து புரிந்த சாதனைகள் குறித்தும் எனக்குத் தெரிந்த தகவல்களை ஒருங்குத்திரட்டித் தந்துள்ளேன்.

பிரபாகரனின் தந்தை திரு. வேலுப்பிள்ளை, வல்வெட்டித் துறையைச் சேர்ந்த பல பெரியவர்கள், உறவினர்கள், அவரது நெருங்கிய தோழர்களான திரு. கிட்டு, திரு. மாத்தையா, திரு. ரகு திரு. சுப்பிரமணியம் மற்றும் இயக்கத் தோழர்கள் ஆகியோரிட மிருந்து சேகரிக்கப்பட்ட பல விவரங்களும் திரு. பிரபாகரனுடன் பழகத் தொடங்கிய நாட்களிலிருந்து அவரே என்னிடம் தெரிவித்த பல விவரங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

சிங்கள இராணுவத்தைக் கதிகலங்க அடித்து, இந்திய ராணுவத்தையும் திணற வைத்து மாபெரும் சாதனை புரிந்து வருகிற திரு. பிரபாகரன் உலகின் தலைசிறந்த கொரில்லாப்போர்த் தளபதிகளில் ஒருவர் என்ற புகழினைப் பெற்றுள்ளார். தமிழர்கள் வீரப்பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமையினைத் தமிழி னத்திற்கு அவர் ஈட்டித் தந்திருக்கிறார். உலகில் தமிழன் தலை நிமிர்ந்து நடக்க வழி செய்த பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை ஒவ்வொரு தமிழனும் படித்துப் பெருமிதம் கொள்ள வேண்டும். தாழ்ந்த தமிழினம் மீண்டும் எழுச்சி பெற வேண்டும்.

பிரபாகரனைப் பற்றிய முதல் நூல் இதுதான் எனக் கருதுகிறேன். ஆனாலும் இது முழுமையான நூல் அல்ல. பிரபாகரனைப் புரிந்து கொள்ள இந்நூல் நிச்சயமாக உதவும் என நம்புகிறேன்.

1-5-'88 — பழ. நெடுமாறன்.
மதுரை.

படிப்பகம்

www.padippakam.com

# இளமைப்பருவம்.

இலங்கைத்தீவின் வடமாநிலத்தில் உள்ள பருத்தித்துறை வரியிறைப் பகுதியில் உள்ள **வல்வெட்டித்துறை** சிறந்த மீன்பிடித்துறைமுகமாகும். தமிழீழ வரலாற்றில் அழியாத இடம் இவ்வூருக்கு உண்டு. விடுதலை வீரர்கள் பலரை ஈன்றெடுத்த ஊர் இந்த ஊராகும். சிங்கள இராணுவத்தின் மூர்க்கத்தனமான பலதாக்குதல்களைச் சந்தித்த பெருமையும் இவ்வூருக்கு உண்டு. இந்த வீரமண்ணில்தான் பிரபாகரன் பிறந்தார்.

வல்வெட்டித்துறையில் பிரபலமான குடும்பம் "**திருமேனியார் குடும்பமாகும்**". இக்குடும்பத்தில் மூதாதையரான திருமேனியார் வேங்கடாசலம் என்பவர் அவ்வூரில் உள்ள **வல்வைமுத்து மாரியம்மன்கோவில், வல்வை வைத்தீஸ்வரன்கோவில், நெடியகாடு பிள்ளையார்கோவில்** ஆகிய மூன்று முக்கிய கோவில்களைக் கட்டினார். இவ்வூருக்கு அருகேயுள்ள பருத்தித்துறையில் **மெத்தைவீட்டு நாகலிங்கம்** என்பவரின் குடும்பமும் பிரபலமான குடும்பமாகும். இந்தக் குடும்பமும் பலகோவில்களைக் கட்டிய குடும்பம் ஆகும். தெய்வத்திருப்பணி பல செய்த இவ்விரு குடும்பங்களும் திருமண உறவின்மூலம் இணைந்தன. திருமேனியார் குடும்பத்தில் தோன்றிய திரு. திருவேங்கடம் வேலுப்பிள்ளைக்கும், நாகலிங்கம் வழித்தோன்றிய திருமதி. வல்லிபுரம் பார்வதியும் திருமணத்தின்மூலம் இணைந்தனர். இவர்களுக்குப்பிறந்த கடைக்குட்டிப் புதல்வரே பிரபாகரன் ஆவார். 1954ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் தேதி பிரபாகரன் பிறந்தார். இவருக்கு திரு. மனோகரன் என்ற பெயரில் மூத்த சகோதரர் ஒருவர் உண்டு. திருமதி. ஜெகதீஸ்வரி, திருமதி. வினோதினி ஆகிய இரு மூத்த சகோதரிகளும் உண்டு.

பிரபாகரின் தமையனுக்கும், தமக்கைகளுக்கும் திருமணமாகிவிட்டது. மனோகரின் மனைவியின் பெயர் திருமதி. வனஜாதேவி என்பதாகும். திருமதி. ஜெகதீஸ்வரி திரு. மதிஆபரணம் என்பவரையும் திருமதி. வினோதினி திரு. இராசேந்திரன் என்பவரையும் திருமணம் செய்துள்ளனர்.

பிரபாகரனுடைய குடும்பம் இயல்பாகவே இறையுணர்வு மிகுந்த குடும்பமாகும். **திருமுருககிருபானந்தவாரியாரை** இலங்கைக்கு அறிமுகம் செய்துவைத்த பெருமை பிரபாகரன் குடும்பத்தைச் சேர்ந்த திரு. அரு. வேங்கடாசலம் அவர்களையே சாரும். வல்வெட்டித்துறையிலுள்ள மூன்று பெரிய கோவில்களிலும் நடைபெறும் விழாக்களில் சொற்பொழிவாற்ற திருமுருககிருபானந்தவாரியார் ஆண்டுதோறும் அங்குவருவது வழக்கமாகும். இலங்கைக்கு அவர் எப்போது வந்தாலும் வல்வெட்டித்துறைக்கு வராமல் போகமாட்டார். அவருடைய சிறுபிராயத்திலிருந்தே கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவுகளினால் பிரபாகரன் ஈர்க்கப்பட்டார்.

பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை தனது 19ஆம் வயதில் இலங்கை அரசாங்கக் குமாஸ்தாவாகப் பதவியேற்றார். படிப்படியாக உத்தியோக உயர்வுபெற்று மாவட்டக் காணி அதிகாரியாகப் பல காலம் பணி புரிந்தார். தனது 58வது வயதில் ஓய்வுபெற்றார். அரசு பணியில் இவர் இருந்தகாலத்தில் ஏராளமான மக்களை அரசு நிலங்களில் குடியேற்றி அரசாங்கத்திடமிருந்தும், தமிழ்மக்களிடமிருந்தும் நன்மதிப்பைப் பெற்றார். சிங்கள மேலதிகாரிகள்கூட இவரை மதித்தார்கள். நேர்மையுடன் பணியாற்றிப் பேரும் புகழும் பெற்றார். இவரது கடமையுணர்வை மக்கள் வாய்விட்டுப் பாராட்டினார்கள். மக்களுடன் அன்பாகவும், ஆதரவாகவும் பழகுபவர். பொதுமக்களின் வாழ்க்கைக்கு வழிவகுக்கும் ஒரு அம்சமான குடியேற்றத்தைச் சிறப்புறச் செய்ததால் ஏழை, எளிய மக்களின்



படிப்பகம்

www.padippakam.com

நன்மதிப்பைப் பெற்றார். தந்தையிடமிருந்த இந்த நற்பண்புகள் பிரபாகரனிடமும் எதிரொலித்தன. தமிழர்களின் நல்வாழ்வுக்காகப் போராடும் மன உறுதியைப் பிரபாகரன் தனது தந்தையிடம் இருந்து பெற்றார் என்றுதான் கூறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அந்நாளில் செல்வமிக்கக் குடும்பங்களில் பிறந்த பிள்ளைகள் ஆங்கிலக்கல்விகற்பதும் வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போவதும், அரசுபணிகளில் அமர்வதே வாழ்வின் இலட்சியமாகக் கொள்வதும் நடைமுறையாக இருந்துவந்தன.

சமுதாயத்தில் நன்கு மதிக்கப்பட்ட, வசதிமிக்க ஒரு குடும்பத்தில் பிரபாகரன் பிறந்திருந்த போதும் அவர்மனம் சுகவாழ்வில் நாட்டம்கொள்ளவில்லை. சிறுவயதிலேயே அவரது சிந்தனையோட்டம் வேறுவிதமாக இருந்தது.

பிரபாகரன் தனது சிறுவயதில் பெற்றோரின் செல்லப்பிள்ளையாக விளங்கினார். அவரது தந்தைக்கு அவர்மீது மிகவும் அன்பு. எங்கு போனாலும் தனது செல்ல மகனையும் அவர் அழைத்துக்கொண்டு போவார். அப்பாவும் அவரது நண்பர்களும் ஆங்கிலமொழியில் பேசிக் கொள்வதைப் பார்த்து பிரபாகரனுக்கு மிகுந்த எரிச்சல்வரும். எல்லோரும் தமிழர்களாக இருந்தும் இப்படி ஆங்கிலத்தில் பேசுகிறார்களே என அந்தச் சிறுவயதிலும் வருந்துவது வழக்கம்.

தந்தையுடன் வெளியே செல்லும்போது சிங்களப் போலீஸ்காரர்கள் அப்பாவித் தமிழர்களை அடித்து இம்சிப்பதையும், உதைப்பதையும் பார்த்து சிறுவன் பிரபாகரன் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தான். இந்த நிகழ்ச்சிகள் அந்த பிஞ்சு உள்ளத்தில் ஆழமான வடுவை ஏற்படுத்திவிட்டன.

பிரபாகரன் ஏழாவது படிக்கும் சிறுவனாக இருந்தபோது அவனும், அவனுடைய நண்பர்களும் ஒன்றாகப் படிக்கப்போவார்கள். சிறுவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பெரியவர்கள் நினைக்க இந்த வீரச் சிறுவர்களோ வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். வெடிமருந்துகளைக் கொண்டுவந்து பக்குவமாகக் கலந்து வெங்காயவெடிகள் செய்து அதை வெடிப்பார்களாம்.

ஆரம்பகாலத்தில் கைக்குண்டுகளை பிரபாகரன் தானே தயாரித்தபோது எதிர்பாராதவிதமாகக் குண்டுவெடித்து அவரது காலில் எரிகாயம் ஏற்பட்டது. சிகிட்சைக்குப் பின்னர் அந்த இடம் கருமையாக மாறியது. அதனால் கரிகாலன் என்னும் புனைப் பெயரும் பிரபாகரனுக்கு அமைந்தது.

10-ம் வகுப்பு வரையிலும் பிரபாகரன் படித்தார். அதன்பின்னர் விடுதலைப்போராளியாக வீட்டைவிட்டு வெறியேறிவிட்டதால் படிப்பைத் தொடரவில்லை. ஆங்கிலமொழியை முழுமையாகத் தான் படிக்கவில்லையே என்ற வருத்தம் அவர் உள்ளத்தில் இப்போதும் உண்டு.

தமிழ் மாணவர்கள் பள்ளிக் கல்வியை முடித்தபிறகு மேற்படிப்புக்குச் செல்ல சிங்கள அரசின் தரப்படுத்துதல் கொள்கை ஒரு தடையாக இருந்தது. எனவே இளைஞர்கள் கப்பல்களில் வேலை செய்ய வெளிநாடுகளுக்குச் சென்றனர். 10-ம் வகுப்புப் படிப்பை முடித்த பிரபாகரனுக்கு எதிர்காலம் என்ன? என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாக இருந்தது. தனது வயதையொத்த இளைஞர்களைப் போலத் தானும் கப்பல் வேலைக்குச் செல்ல பிரபாகரன் விரும்பினார்.

வேலைப்பார்த்துச் சம்பாதிக்கவேண்டுமென்ற ஆசையினால் அல்ல. வெளிநாடுகளுக்குச் சென்றால் ஆயுதங்கள் வாங்கிவரலாம் என்ற எண்ணத்



படிப்பகம்

www.padippakam.com

த்தால் கப்பல் வேலைக்குப் போகவிரும்பினார். ஆனால் அவரது தந்தை அதை விரும்பவில்லை. சிறுவயதில் இந்தமாதிரி வேலைகளுக்குப் போனால் பையன் கெட்டுப்போவான் என அஞ்சினார். ஆகவே அதைத்தடுத்தார்.

அப்போது பிரபாகரன் தனது அக்காவிடம் பின்வருமாறு கூறினாராம்.

''கப்பல் வேலைக்கு என்னைப்போகவேண்டாம் என அப்பா தடுத்ததுக்காகப் பின்னால் வருந்தப்போகிறார்'' என்றாராம்.

தான் போராளியான விஷயம் தெரிந்த பிறகு ''ஐயோ! மகன் கப்பல் வேலைக்குச் சென்றிருந்தால் இப்படி ஆகியிருக்கமாட்டானே'' என தந்தை வருந்தநேரிடும் என்பதையே பிரபாகரன் மறைமுகமாகக் கூறினார்.

பிரபாகரனின் போக்கு அவரது தந்தைக்குப் புரியவில்லை. மகன் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறான் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. ஆனால் அவர் அதை அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் தானே தேடிவந்தது.

ஒருமுறை பிரபாகரனைத்தேடி போலீஸ் வந்தது. அதிகாலை 3 மணிக்கு போலீஸ் அவர்வீட்டுக் கதவைத் தட்டியது. கதவைத் தட்டும் சப்தம் கேட்டவுடனேயே போலீஸ் வந்துவிட்டது என்பதைப் புரிந்துகொண்ட பிரபாகரன் யாருமறியாமல் தப்பிவிட்டார். பிரபாகரனின் தாய் கதவைத் திறந்தபோது ஏராளமான போலீஸ் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். ஏனென்றால் பிரபாகரன் இரகசிய இயக்கத்தில் இருக்கிறார் என்ற செய்தியை அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. வீடுமுழுவதும் போலீஸ் சோதனையிட்டது. இறுதியில் பிரபாகரனைக் கண்டுபிடிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பியது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பிரபாகரன் தன்வீட்டிற்குத் திரும்பவே இல்லை. மற்றொருமுறை பிரபாகரன் என்று நினைத்து அவரது அண்ணன் மனோகரனை போலீஸ் பிடித்துச் சென்றது. இப்படி எத்தனையோ விதத்தில் பிரபாகரனின் குடும்பத்தினர் சொல்லமுடியாத கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். பிரபாகரன் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்ற செய்தியை அறிந்தபோது பிரபாகரன் தன்தோழர்களுடன் இருந்த இடத்திற்கே அவரது தந்தை சென்று அவரை வீட்டிற்கு அழைத்து வந்தார். பிரபாகரனை விசாரித்த போது அவர் பின்வருமாறு கூறினார்.

''குடும்பப்பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். எனக்கு ஒரு பொறுப்புமில்லை. உங்களுக்கோ, குடும்பத்திற்கோ நான் ஒருபோதும் பயன்படமாட்டேன். என்னால் உங்களுக்கு எத்தகைய தொல்லையும் வேண்டாம். என்னை என்போக்கில் விட்டுவிடுங்கள். இனி எதற்கும் என்னை எதிர்பார்க்காதீர்கள்'' என்று சொன்னார்.

பிரபாகரனின் தந்தை இயற்கையிலேயே பற்றற்ற உள்ளம் படைத்தவர். தன்னுடைய புதல்வர்கள், புதல்விகள் ஆகியோர் அவரவர்களின் எதிர்காலத்தை அவர்கள்தான் அமைத்துக்கொள்ளவேண்டும். பிள்ளைகளைப் பெற்று வளர்த்து படிக்கவைத்து ஆளாக்குவதோடு பெற்றோர்களின் கடமை தீர்ந்துவிடுகிறது என்று நினைக்கக்கூடியவர். அவர் அரசாங்கப் பதவியில் இருந்த காலத்திலும், அதிலிருந்து ஓய்வுபெற்ற காலத்திலும்கூட பிறர் கையை எதிர்பாராமல் வாழ்பவர் எனவே பிரபாகரனின் பதில் அவரைத் திகைப்படையச் செய்யவில்லை. தன் மகனை அவன் போக்கிலேயே விட்டுவிடுவது என முடிவுசெய்தார்.

பிரபாகரனின் நடவடிக்கைகளின் விளைவாக அமைதியான அவர் குடும்பத்தில் புயல்வீசத் தொடங்கியது. போலீஸ் தொந்தரவுகள் அதிகமாயின. பிரபாகரனைத்தேடி அடிக்கடி போலீஸ் வந்தது. அரசு அதிகாரியான அவரின் தந்தை தர்மசங்கடத்திற்கு ஆளானார். ஆனாலும் அவர்கள் அவற்றைச் சகித்துக் கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

பெற்றோரும் குடும்பத்தினரும் இவ்வாறு தொல்லைகளுக்குள்ளாகிக் கொண்டிருந்தபோது பிரபாகரனும் அவரது தோழர்களும் புரட்சி இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். தமிழீழம் சுதந்திரம் பெறவேண்டும் என்ற தாகம் அவர்களை ஆட்கொண்டது. இந்தியாவின் சுதந்திரப்போராட்ட வரலாறு அவர்களுக்கு வழிகாட்டியது.

இந்திய சுதந்திரப்போராட்ட வரலாறு எப்படி தன்னை ஈர்த்தது என்பதை பிரபாகரனே பின்வருமாறு விளக்குகிறார். இளமையில் அவருக்கு ஆதர்சனமூட்டிய பல்வேறு நிகழ்ச்சிகளையும் பற்றி 1986ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4, 5 தேதிகளில் வெளியான ஆங்கில நாளிதளான **'இந்து'**விற்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறுகிறார்.

கே:- மாணவப்பருவம் தொடக்கம் - இன்றுவரை - அரசியலில் உங்கள் படிநிலை வளர்ச்சியை அறியவிரும்புகிறேன். சின்னவயதில் உங்கள் உள்ளுணர்வுகளைத் தட்டி எழுப்பிய விடுதலைப் போராட்ட வீரர்கள் - வரலாறுகள் உண்டா? சொல்லுங்கள்?

ப:- சிறுவயது முதல் இந்தியப் போராட்ட வரலாறுதான் என்னைக் கவர்ந்திருந்தது. இப்போராட்டத்தில் நேதாஜி அவர்கள் கொண்டிருந்த பங்கு என்னை ஆழமாகத் தொட்டது. அந்தக் காலத்தில் நான் வீட்டில் மிகவும் கட்டுப்பாடான சூழலில்தான் வளர்ந்தேன். வெளியாரோடு கலந்து பழக எனக்கு அனுமதி இருக்கவில்லை. இளம் பெண்களைக்கண்டால் வெட்கப்படுவேன். என் தந்தையின் நல்லொழுக்கம் என்னை நெறிப் படுத்தியது. அவர் வெற்றிலைக்கூட போடமாட்டார். ஒழுக்கங்களை அவரைப் பார்த்தே நான் உருவாக்கிக் கொண்டேன். ஓர் அரசு ஊழியராக-மாவட்ட நில அதிகாரியாக அவர் இருந்தார். என் தந்தையார் கொஞ்சமும் ஒளிவு மறைவில்லாதவர். நேர்மையானவர். எமது ஊர்மக்கள் இப்படிச் சொல்லிக் கொள்வார்கள். ''அந்த மனிதர் நடந்தால் அவர் காலின்கீழே உள்ள புல்லுக்குக்கூட நோகாது. ஆம்! அப்படிப்பட்ட சாதுவான தந்தைக்கு இப்படி ஒருமகன் பிறந்தானே'' என்றுதான் மக்கள் பேசிக் கொண்டார்கள். அவர் கண்டிப்பானவராக இருந்தார். அதே வேளையில் பிறரின் நெஞ்சைத் தொடுகிற ஓர் ஆற்றலும் அவரிடம் இருந்தது. நண்பர் ஒருவனைப்போல் பக்கத்தில் உட்கார்ந்து நியாயங்களை எடுத்துச் சொல்லி அவர் என்னை நல்வழிப்படுத்தினார்.

சுபாஷ் சந்திரபோஸின் வாழ்க்கை என்னைப்பெரிதும் கவர்ந்தது. சிறுவனாய் இருந்த காலத்தில் காந்தியடிகளின் 'உண்மை' 'பிரம்ச்சரியம்' பற்றிய நூல்களைப் படித்தேன். சின்ன வயதிலேயே ஆன்மீகத்தைத் தேடிப் போய் ஈற்றில் துறவுவாழ்க்கைக்குத் திரும்பிய சுபாஷ் சந்திரபோசை எனக்குப் பிடித்திருந்தது. ஆனாலும் வாழ்வில் துன்பமும் தொல்லையும் சூழ்ந்தபோதெல்லாம் அவர் மீண்டும் மீண்டும் ஆன்மீகத்தை நாடினார். சுபாஷின் வாழ்க்கை என்னை மிகவும் கவர்ந்தது. என்நெஞ்சில் சுபாஷ் நிலைத்த மனிதரானார். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் நூல் வடிவில் வந்தன. அவற்றைப் படித்தேன். அவை அப்படியே நெஞ்சில் பதிந்தன. ''கடைசித் துளி இரத்தம் இருக்கும்வரை என் மண்ணுக்காக நான் போராடுவேன் என்ற சுபாஷின் வீர உரையை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். நினைவுக்கு வரும்போதெல்லாம் இந்தச் சொற்கள் என்நெஞ்சைச் சிலிர்க்க வைத்தன. அடுத்து **பகவத்சிங்கின்** வரலாறு என்னை ஆகர்ஷித்தது.

சுருக்கமாகச் சொன்னால் அநீதியாளர்களுடன் மோதியவர்களின் வாழ்க்கை வரலாறுகளையே அந்த நாட்களில் நான் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தேன்.



படிப்பகம்

www.padippakam.com

இதற்கெல்லாம் ஒரு காரணம் இருந்தது. எமது தாயகத்தில் சிங்களவர்கள் அப்போது எம்மை மிகவும் கொடுமையாக நடத்திக் கொண்டிருந்தார்கள். அக்கொடுமைகள்பற்றிய சேதிகள் அவ்வப்போது பத்திரிகைகளிலும், நூல்களிலும் வெளிவந்து கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் 1958ஆம் ஆண்டு நடைபெற்ற பயங்கரமான தமிழர்படுகொலைகள் பற்றி நான் படிக்க நேர்ந்தது. அந்த நிகழ்ச்சிகள் எத்தனை கொடூரமானவை தெரியுமா? கோயிலில் உறங்கிக் கொண்டிருந்த பூசை செய்யும் ஒரு பிராமணரைத் தட்டி எழுப்பி கொடிய சிங்களவர்கள் எண்ணெய் ஊற்றி எரித்துக் கொன்றார்கள். பானந்துறை என்ற இடத்தில் இந்தநிகழ்ச்சி நடந்தது.

''கோயில் அர்ச்சகரையே கொன்றுவிட்டார்களே கொடியவர்கள். நாங்கள் ஏன் இவர்களைத் திருப்பித் தாக்கக்கூடாது'' என்று கடவுள் பக்தியுள்ள, சமயஉணர்வுள்ள எமது மக்கள் எண்ணத் தலைப்பட்டார்கள். இந்த இன வெறிக் கலவரத்தில் இன்னொரு கொடுமையும் நிகழ்ந்தது. ஒன்றும் தெரியாத பிஞ்சுத் தமிழ்க் குழந்தை ஒன்றைச் சிங்களவெறியர்கள் துடிக்கத் துடிக்கக் கொதிக்கும் தாரில் தோய்த்துக் கொன்றார்கள். இந்த நிகழ்ச்சிகள் என் நெஞ்சிலும் என் நண்பர்கள் நெஞ்சிலும் அந்தச் சின்னவயதிலேயே நெருப்பைமூட்டிற்று. ''ஒன்றுமறியாத அப்பாவிகளைக் கொல்லுகிறார்களே. திருப்பி நாம் ஏன் இவர்களைத் தாக்கக்கூடாது'' என்று எண்ணத் தொடங்கினோம்.

இந்தக் காலகட்டத்தில்தான் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு என் உள்ளுணர்வுகளுக்கு எருவாயிற்று. ஒவ்வொரு ஆண்டும் இந்திய சுதந்திர நாளில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய கட்டுரைகள் வெளியிட்டு வந்தன. அவற்றைப் படிக்கும் வாய்ப்பு அப்போது எனக்குக் கிடைத்தது. திருப்பூர் குமரனை எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய அகிம்சைப் போராட்டத்திலும் ஓர் இரும்பு உறுதி இருந்தது. ஆயுதப்போரில் அனுபவங்களைப்பற்றி நான் கற்றறிந்த அதே வேளை அகிம்சைப்போரின் ஒழுங்குணர்வாலும் கவரப்பட்டேன். இப் போராட்டங்களில் காணப்பட்ட மன உறுதியும், துன்பங்களின் நடுவில் நிற்கும் துணிச்சலும் என்னை உணர்ச்சிவசப்படுத்தின. சின்ன வயதிலேயே இத்தகைய உணர்வுகளில் தோய்ந்துதான் நாமும் ஓர் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினால் என்ன? என்று சிந்திக்கத் தொடங்கினேன்.

நெப்போலியனின் எழுச்சி-வீரச்செயல்கள் பற்றி அன்று நான் படித்தவை இன்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.

மகாபாரதத்தில் வீமன், கர்ணன் ஆகிய கதாபாத்திரங்களைப் படித்த போது ஒரு மனநிறைவு ஏற்பட்டது. பாரதத்தில் வரும் கதாபாத்திரங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்ப்பார்கள். தன்னிழப்புக்கு, உயிர்த்தியாகத்துக்கு ஒவ்வொரு மணித்துளியும் தயாராக இருந்தானே கர்ணன் அவனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விவேகானந்தரின் பொன்மொழிகள் சிலவற்றைப் படித்தேன். 'இளைஞர் அணி' ஒன்றைத் திரட்ட வேண்டும் என்ற எண்ணம் மெல்ல அரும்பிற்று. ஆம்! அப்போது எனக்கு வயது 16 தான்.

கிருபானந்தவாரியாரின் சமயச்சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறேன். அரசியல் கூட்டங்களுக்குப் போயிருக்கிறேன். எங்களூரில் அரங்கேறிய 'சாக்ரடீஸ்' போன்ற நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்...

இப்படித்தான் நாங்கள் உருவானோம். எமது வரலாற்றுப் பின்னணியே எம்மை ஆயுதபாணிகள் ஆக்கிற்று. நாங்கள் சிந்தித்தோம். ''ஆயுதங்கள் இன்றி நாம் வெறுங்கையோடு பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதால் தானே ஆயுதங்கள் உள்ள சிங்களவர்கள் கொடுமையாகத் தாக்குகிறார்கள். நாம் ஏன் வெறுங் கைகளோடு இருக்கவேண்டும்? ஆயுதங்களை ஆயுதங்களால் முறியடிப்போம்!'' ஆம்! அனுபவங்களின் இந்த முதிர்ச்சி நிலையில்தான் நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்''.


படிப்பகம்

www.padippakam.com

# இளம்பருவத்துத் தோழர்கள்

பிரபாகரனின் புரட்சி வாழ்க்கையின் ஆரம்பகாலத் தோழர்கள் அவரது ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாகவும், உறவினர்களாக வுமே இருந்தனர். இளம்பிராயத்தில் நெருங்கிப்பழகியவர்கள் ஒன்றுகூடி ஒரு இயக்கத்தை ஸ்தாபிக்கும்போது அது அப்படித்தான் அமையமுடியும். புலிகளின் இயக்கத்திலும் இதுதான் நிகழ்ந்தது.

விடுதலைப்புலி இயக்கத்தில் இன்று தளபதிகளாக விளங்கும் மாத் தையா, கிட்டு, ரகு, பேபி ஆகியோரும், தளபதிகளாக விளங்கி வீர மரணமடைந்தவர்களான சங்கர், பண்டிதர், செல்லக்கிளி, பொன்னம் மான், சீலன், புலேந்திரன், சந்தோசம், ரஞ்சன், ஆகியோரும் அவரது இளம்பருவத் தோழர்களே.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் துணைத்தலைவராகவிருக்கும் மாத் தையா என்ற மகேந்திரராஜா, வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். அவரு டைய தந்தை அரசு அதிகாரியாவிருந்து ஓய்வுபெற்று, பிறகு கடை ஒன்று நடத்திகொண்டிருந்தார். 10ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போதே மாத்தையாவுக்குப் பிரபாரனுடன் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அவரால் முழுமையாக ஈர்க்கப்பட்டுவிட்டார். கப்பல் வேலையில் போய்ச் சேரப் போகிறேன் என்று குடும்பத்தாரிடம் சொல்லிவிட்டுப் பிரபாகரன் நடத்திக் கொண்டிருந்த பயிற்சிமுகாமில் போய் அவர் சேர்ந்தார். அதன் பிறகு புலிகள் இயக்கத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு பல்வேறு களங்களில் போரிட்டு வீரத்தை நிலை நிறுத்திய பெருமை அவருக்குண்டு. வவுனியாப் பகுதித் தளபதியாக அவர் இருந்தபோது 1985ஆம் ஆண்டு அக்டோபரில் அவருடன் அப்பகுதி முழுவதும் நான் சுற்றிப் பார்த்திருக்கிறேன். அப்பகுதி மக்களால் அவர் எவ்வாறு நேசிக்கப்படுகிறார் என்பதை நேரில் கண்டேன். சிங்களராணு வத்தின் அடிச்சுவடே அப்பகுதியில் இல்லாமல் துடைத்தெறிந்த வீரர் அவர். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இந்திய ராணுவம் முயன்ற போது அதை எதிர்த்து விடுதலைப்புலிகள் நடத்திய போராட்டத்தையும் அவரே தலைமைதாங்கி நடத்தினார். எப்போதும் சிரித்தமுகத்துடன் காட்சிதரும் அவர் இனிமையாகப் பேசக்கூடியவர். அதே நேரத்தில் மாறாத மன உறுதியும், திடமான சித்தமும் கொண்டவர்.

யாழ்த்தளபதியாக விளங்கி சிங்களவருக்கு சிம்மசொப்பனமாகவிருந்த கிட்டு என்ற கிருஷ்ணகுமார், பிரபாகரனின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவராவார். அவருடைய தந்தை திரு. சதாசிவம்பிள்ளை, 'தமிழரசுக் கட்சியின்' முக்கிய பிரமுகர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அவரது தாய் திருமதி. ராஜலெட்சுமி அம்மையாரும் தமிழரசுக்கட்சி நடத்திய சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைக்குழந்தையாக கிட்டு இருந்தபோதே சிறைக்குச்சென்ற பெருமைக்குரியவர். இந்த அம்மையாரை அவருடைய வீட்டில் நான் சந்தித்துப் பேசியிருக்கிறேன். வீரமகனைப்பெற்ற வீரத்தாய்க் குரிய சகல குணங்களும் அவரிடம் நிறைந்திருப்பதை நான் பார்த்தேன். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பெண்களைத் திரட்டும் பணியிலும் மற்றும் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதிலும் அவர் இன்னமும் ஈடுபட்டிருக்கிறார்.

கிட்டு மாணவனாகயிருக்கும்போதே தனது 17வது வயதில் பிரபாகரனுடன் நட்புக் கொண்டார். அந்தக்கணம்முதல் பிரபாகரனின் இணைபிரியாத தோழரானார். தன்னை முழுமையாக விடுதலைப்புலி களின் இயக்கத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டார். பிரபாகரன் மதுரை


படிப்பகம்

www.padippakam.com

யிலிருக்கும் போது அவருடன் உடன் இருந்தார். அப்போது அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அடக்கமும், எளிமையும், கூச்சசுபாவமும் நிறைந்த ஒரு இளைஞராக கிட்டுவை நான் மதுரையில் பார்த்தேன். ஆனால் 1985ஆம் ஆண்டு அக்டோபரில் நான் யாழ்ப் பாணம் சென்றிருந்தபோது யாழ் தளபதியாக விளங்கிய கிட்டுவைச் சந்தித் தேன். சிங்கள இராணுவத்தின் பிடியிலிருந்த யாழ்ப்பாணத்தை மீட்டு அதைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து ஒரு மாபெரும் திருப்பத்தினை ஏற்படுத்திய வீரர் என்ற புகழினை அவர் பெற்றிருந்த நேரம் அது. யாழ்ப்பாணத்து மக்கள் அவரிடம் எப்படி அன்புசெலுத்து கிறார்கள், எவ்வாறு பயபக்தியுடன் நடந்துகொள்கிறார்கள் என்பதினை யும், நேரில் பார்த்தபோது நான் வியந்து போனேன். பல ஆண்டுகளுக்கு முன்னால் மதுரையில் சந்தித்த அந்த எளிமையான இளைஞன்தானா இன் றைக்கு வீரத் தளபதியாக விளங்குகிறான்? என்பதை எண்ணி எண்ணிப் பிரமித்தேன். போர்க் கலையில் நிபுணராக மட்டும் கிட்டு விளங்கவில்லை. திட்டமிட்டுப் பல காரியங்களைச் செய்வதிலும் சிறந்து விளங்குகிறார். யாழ்ப்பாணத்தில் மக்களுக்குத் தேவையான பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை வகுத்து அவற்றை அவர் செயல்படுத்திக் கொண்டிருந்தவிதம் என்னை மிகவும் கவர்ந்தது. இதைப்பற்றியெல்லாம் ''**ஈழப்போர்முனையில் புலிகளுடன்**'' என்ற நூலில் விரிவாகவே சொல்லியிருக்கிறேன். சிங் களருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய கிட்டுவுக்கு 1987ஆம் ஆண் டில் ஒரு விபத்து நிகழ்ந்தது. துரோகிகள் அவர்மீது வீசிய குண்டின் விளைவாக அவர் தனது கால்களில் ஒன்றை இழக்கவேண்டிய நிலைக்கு ஆளானார். அவருக்கு ஏற்பட்ட இந்த நிலை குறித்துத் தமிழர்களின் இதயங் கள் எல்லாம் துடித்தன. கால் இழந்த நிலையிலும் தனது கடமையை அவர் தொடர்ந்து செய்து வருகிறார். தனக்கு ஏற்பட்ட இந்த விபத்துக்குறித்து அவர் கொஞ்சமும் மனக்கவலையடையவில்லை. அவரைப் பார்த்தவர்கள் தான் கண்கலங்குகிறார்களேதவிர அவர் அதைப்பற்றிக் கொஞ்சமும் எண்ணிப்பார்க்காமல் புன்னகைமாறாத முகத்துடன் இன்னமும் சுறுசுறுப்பு டன் இயங்கிக் கொண்டிருக்கிறார்.

பிரபாகரனின் மற்றொரு நெருங்கிய தோழனான ரகு ஒருவகையில் பிரபாகரனின் நெருங்கிய உறவினர். இருவரின் குடும்பங்களும் உறவு கொண்ட குடும்பங்களாக இருந்தபோதிலும் இயக்கத்திற்கு வருவதற்குமுன் இருவருக்குமிடையே அதிகமான தொடர்பு இல்லை. ரகுவின் தந்தை பரமகுருசாமி அவர்களையும், தாய் சரோஜினிதேவி அவர்களையும் நான் சந்தித்திருக்கிறேன். ரகுவின் தந்தை அரசு அதிகாரியாக இருந்தவர். தன்னைப்போலவே தன்மகனும் அரசாங்கப்பணியில் சேரவேண்டும் என்று அவர் விரும்பினார். வாட்டசாட்டமான உடலமைப்புக்கொண்டிருந்த ரகு போலீஸ்வேலையில் சேர முயற்சிசெய்தார். அதற்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் அவருக்கு இருந்தன. கிட்டத்தட்ட தேர்ந்தெடுக்கப்பட்டநிலை யில் அவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் என்பதை அறிந்தவுடன் வெளியே அனுப்பிவிட்டார்கள்.

ரகு இயக்கத்திற்கு வந்தது **பண்டிதர்** மூலமேயாகும். பண்டிதர் ரகுவின் வகுப்புத் தோழன். பண்டிதர், ரகு, சங்கர் மூவரும் இளமையிலேயே அரசி யலில் ஈடுபாடுகொண்டிருந்தனர். தமிழர்கூட்டணிக் கூட்டங்களில் மேடை யில் ஏறி தங்கள் கையைக் கத்தியினால் கீறிப் பீரிட்டுவழியும் ரத்தத்தினால் தலைவர்களுக்கு ரத்தத் திலகமிடுவதைப் பெருமையாகக் கருதினார்கள். இப்படி ஆரம்பித்த இவர்களின் அரசியல் தொடர்பு இவர்களைப் புரட்சி யாளர்களாக மாற்றியது. ''ஐவர் இராணுவம்'' **(Fiveman Army)** என்ற பெய ரில் ரகுவும் அவருடைய தோழர்களும் அழைக்கப்பட்டார்கள். சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து பழைய ரிவால்வர் ஒன்றினை விலைக்கு வாங்கி


படிப்பகம்

www.padippakam.com

னார்கள். தங்கள் பள்ளியில் ஆசிரியருக்கு அளிப்பதற்காக வைக்கப்பட் டிருந்த சம்பளப்பணத்தை இந்த ரிவால்வரைக்காட்டி மிரட்டிக் கொள்ளை யடித்தார்கள். அதைக் கொண்டு மேலும் ஆயுதங்களை வாங்கினார்கள். இதில் ரகு தவிர மற்றவர்களைப் போலீஸ் கைது செய்தது. எனவே ரகு தலைமறைவானார். ரகுவின் இந்த வீரச்செயல் பிரபாகரனுக்கு எட்டியது. கிட்டத்தட்ட ஓராண்டுக்காலம் தலைமறைவாகயிருந்த ரகுவை 1978ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பிரபாகரன் சந்தித்தார். அவரைப் பாராட்டினார். பிறகு அவரைக் காட்டிலிருந்த தங்கள் முகாமுக்கு அழைத்துச் சென்றார். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேருவதற்கு ரகுவும் விருப்பம் தெரிவித்தார். ஆனால் பிர பாகரன் உடனடியாக அவரைச் சேர்த்துக் கொண்டுவிடவில்லை. சிறையிலிருக்கும் ரகுவின் தோழர்களிடம் சென்று விஷயத்தைக்கூறிவிட்டு பிறகு வந்து சேரும்படி சொன்னார். பிரபாகரனின் இந்த நேர்மை ரகுவின் உள்ளத்தைத் தொட்டது. மற்றொரு புரட்சி அமைப் பைச் சேர்ந்தவர்கள் சிறையில் இருக்கும்போது அவர்களில் ஒருவரை தான் இழுத்துக் கொள்வது சரியல்ல. அதனால் அந்த அமைப்பைச் சேர்ந்தவர் களுக்கு மனவருத்தம் ஏற்படலாம் அவர்களும் நாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். ஆகவே அவர்களின் சம்மதமில்லாமல் இதைச்செய்யக் கூடாது என பிரபாகரன் கருதினார். அதன்படி ரகுவும் சிறையிலிருந்த தனது நண்பர்களைப் போய்ப்பார்த்தார். ரகுவைப் போலீ சார் தேடிக்கொண்டிருந்தாலும் இவர்தான் ரகு என்பது அப்போது அவர் களுக்குத் தெரியாது. ஆகையால் சிறையிலிருந்தவர்களை அவர் சந்திப்பது எளிதாகயிருந்தது. ரகுவின் நண்பர்களும் மிக மகிழ்ச்சியடைந்தார்கள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் அவர்களும் விடுதலைப்புலிகளோடு சேர்ந்தார்கள்.

*1982ஆம்* ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் தேதியன்று **சாவகச்சேரி** போலீஸ்நிலையத்தின்மீது விடுதலைப்புலிகள் திடீர்த்தாக்குதல் நடத்தினார் கள். யாழ்ப்பாணத்திலேயே பெரியதும் அதிகமான பாதுகாப்புக் கொண் டதுமான இந்தப் போலீஸ்நிலையத்தின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலினால் இலங்கை அரசு கதிகலங்கியது. இத்தாக்குதலில் **சீலன், ரகு, மாத்தையா, புலேந்திரன், சங்கர், ரஞ்சன், அருணா, சந்தோஷம், பஷீர்காகா, இராமு,** ஆகியோர் கலந்து கொண்டனர். இத்தாக்குதலை வெற்றி கரமாக நடத்தி ஏராளமான ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றி னார்கள். இத்தாக்குதலில் சீலன், ரகு, புலேந்திரன் ஆகியோர் படுகாய மடைந்தனர். அவர்கள் சிகிட்சைக்காகத் தமிழகம் கொண்டுவரப்பட்ட போது நான் அவர்களைச் சந்தித்தேன். எங்கள் கட்சியின் துணைத்தலைவர் திரு. த. விசுவநாதன் அவர்கள் உதவியோடு தனியார் மருத்துவமனை யொன்றில் அவர்களைச் சேர்த்து தகுந்த சிகிட்சையளிக்கப்பட்டது. அந்த சில மாதங்கள் இவர்களோடு நெருங்கி உறவாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

பிரபாகரனின் மற்றொரு இளம்பிராயத்துத் தோழனான **லெப்டினட் செல்வநாயகம்** கல்லியங்காடு என்ற ஊரில் பிறந்தவர். செல்லக்கிளி, அம்மான், சந்திரன் என்ற புனைப்பெயர்களும் இவருக்கு உண்டு. ஏழை விவசாயக்குடும்பத்தில் பிறந்து ஆரம்பக்கல்வியைக்கூடத் தொடரமுடியாத நிலையில் டிரைவராக வேலை பார்த்தார். பிரபாகரனுக்கு அறிமுகமான காலத்திலிருந்து இயக்க நடவடிக்கைகளில் தன்னை முழுமையாக ஈடு படுத்திக்கொண்டார். இவரின் பெரிய தாயார் மகனான **செட்டி** என்பவர் இயக்கத்திற்குத் துரோகம் செய்தபோது அவரைக் கடுமையாக எதிர்த்தார். இயக்கம் அவனுக்கு அளித்த தண்டனையைப் பாராட்டினார். இயக்கத்திற் காக அவர் ஆற்றிய தொண்டுகள் ஏராளம். 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் காட்டுக்குள் இருந்த புலிகளின்முகாமை சிங்களப்போலீசார்



படிப்பகம்

www.padippakam.com

வளைத்துக்கொண்டபோது தன்னுடைய வீரச்செயலால் போலீஸ்படையை வீழ்த்தித் தன்னுடைய தோழர்களைக் காத்த பெருமை செல்லக்கிளிக்கு உண்டு. 1983ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23ஆம் தேதி திருநெல்வேலியில் சிங்களராணுவ வெறியர்களின்மீது செல்லக்கிளியின் தலைமையில் 10 விடுதலைப்புலிகள் தமது தாக்குதலைத் தொடுத்தனர். 13 சிங்களச்சிப்பாய்கள் பிணமாக வீழ்த்தப்பட்டார்கள். ஏனையவர்கள் அஞ்சி ஓடியபோது எதிர்பாராதவிதமாக செல்லக்கிளியின் மார்பில் குண்டுபாய்ந்து பிணமானார். வெற்றி கிட்டியதருணத்தில் தளபதியைப் புலிகள் இழந்தார்கள்.

பிரபாகரனின் மற்றொரு தோழன் **கேப்டன் இரவீந்திரன்.** பண்டிதர், தாகூர் என்ற புனைப்பெயர்களால் இவர் அழைக்கப்பட்டார். பிரபாகரனின் ஊருக்கு அருகாமையிலுள்ள கம்பர்மலை என்ற கிராமத்தில் பிறந்தவர் பண்டிதர். பிரபாகரனின் மற்றொரு தோழனான சங்கரின் பள்ளித் தோழன். 1977ஆம் ஆண்டில் பிரபாகரனுடன் இவர் சேர்ந்தார். 1985 ஆம் ஆண்டு இவர் மறையும் வரை இயக்கத்திற்காக மிகக் கடுமையாக உழைத்தார். இயக்கத்தின் முக்கிய பொறுப்புகளையும் அவரே வகித்தார். தூயதமிழில் பேசும் சுபாவம் கொண்டிருந்ததினால் இயக்கத்தோழர்கள் அவருக்குப் பண்டிதர் என்னும் நாமத்தைச் சூட்டினார்கள். எளிமையான சுபாவமும், அடக்கமான பண்புகளும் நிறைந்தவர். 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் தேதி இவர் இருந்த முகாமை 500 பேர்கள் கொண்ட சிங்களப்படை சுற்றி வளைத்தது. யாரோ ஒரு துரோகி அவர் இருந்த இடத்தை சிங்களராணுவத்திற்குத் தெரியப்படுத்திவிட்டான். இறுதி வரை போராடி களத்திலேயே பண்டிதர் வீரமரணமடைந்தார்.

அவர் மறைந்த செய்தி பிரபாகரனுக்குக் கிடைத்தபோது பிரபாகரனுடன் நான் இருந்தேன். தனது ஆருயிர்த்தோழனை இழந்த பிரபாகரன் எவ்வாறு துடித்துப்போனார் என்பதை நேரிலேயே பார்த்தேன். பண்டிதரின் நல்லியல்புகளை எண்ணி எண்ணி வேதனைப்பட்டார் பிரபாகரன். 1985ஆம் ஆண்டு அக்டோபரில் நான் ஈழத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது கம்பர்மலையிலுள்ள பண்டிதரின் வீட்டிற்குச் சென்று அவரின் தாயைப் பார்த்து ஆறுதல் கூறினேன். தன்மகனை இழந்த அந்தத்தாயின் அழுகைக்குரல் இன்னமும் என்னுடைய செவிகளில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. ஆனால் 87ஆம் ஆண்டின் நடுவில் வடமராட்சிமீது சிங்களராணுவம் தாக்குதல் நடத்தியபோது அந்த வயதான தாயைச் சிங்களச் சிப்பாய்கள் வெறிகொண்டு படுகொலைசெய்துவிட்டனர். பண்டிதரைப் பெற்றெடுத்த தாய் என்பதனால் அவர்மீது சிங்களவெறியர்களுக்கு அடங்காத கோபமிருந்தது. வயதான மூதாட்டி என்பதைக்கூட பாராமல் சிங்கள வல்லரக்கர்கள் அவரைப் பதைபதைக்கக் கொன்றார்கள். பண்டிதரின் மரணமும், அதைத் தொடர்ந்து அவரின் தாயின் படுகொலையும் என்றும் ஆறாத ரணங்களாகவே தமிழர் உள்ளங்களில் இருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப்பிரிவு தலைவர்களாக இருந்த **லூகாஸ் சார்லஸ் அன்றனி** பிரபாகரனின் இளம்பிராயத்துத் தோழன். திரிகோணமலையில் பிறந்த இவன் மாணவனாக விளங்கிய காலத்திலேயே போராட்ட உணர்வுமிக்கவனாக விளங்கினான். இவனுக்கு ஆசிர், சீலன், இதயச்சந்திரன் என்ற புனைப்பெயர்களும் உண்டு. 13 வயது மாணவனாக சீலன் இருந்தபோது சிங்களப்போலீசாரால் கைதுசெய்யப்பட்டு சித்தரவதைச் செய்யப்பட்டான். 1979ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்தான். இயக்கம் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் பங்கு பெற்றான். 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் தேதி மீசாலை கிராமத்தை சிங்களராணுவம் வளைத்தபோது அந்த வளையத்திலிருந்து தப்ப முயன்ற சீலனும் அவருடைய தோழர்களும் கடுமையாகப் போராடி



படிப்பகம்

www.padippakam.com

னார்கள். குண்டடிப்பட்டுக்கீழே சாய்ந்த சீலன் இனி தப்பமுடியாது என்பதை உணர்ந்தவுடன் தன்னைச் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச்செல்லும்படி தனது தோழர்களுக்கு உத்தரவிட்டான். தங்கள் தளபதியை சுட்டுக்கொல்ல தோழர்கள் தயங்கியவுடன் மீண்டும் கண்டிப்பானக்குரலில் உத்தரவிட்டு சாவை மகிழ்ச்சியோடு அணைத்துக் கொண்டான் சீலன். பிரபாகரன் தமிழ் நாட்டிலிருந்தபோது சீலனை நான் பலமுறை சந்தித்திருக்கிறேன். அழகான இளைஞன். அவனது புன்னகை பூத்த முகமும், இனிமையான பேச்சும் யாரையும் அவனிடம் கவர்ந்து இழுக்கும். பிரபாகரன் தன்னுடைய புதல்வனுக்கு அவனது பெயரைச் சூட்டியதிலிருந்து அவர் அவன் மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்பது தெளிவாகிறது.

பிரபாகரனின் இன்னொரு இளம்பிராயத்துத் தோழன் **சத்தியநாதன்.** இவனுக்கு சங்கர், சுரேஷ் என்ற புனைப்பெயர்கள் உண்டு. தன்னுடைய 20வது வயதிலேயே விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்து தன்னை முழுமையாக இயக்கத்திற்கு அர்ப்பணித்தவர். சிங்களராணுவத்தோடு ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்த சங்கர் அந்த நிலையிலும் ஆயுதத்தோடு தப்பிச் சென்றான். படுகாயமடைந்த நிலையில் அவன் மதுரைக்குக் கொண்டுவரப்பட்டான். மதுரையில் அவனுடைய உயிரைக் காப்பாற்ற நாங்கள் பெருமுயற்சி செய்தோம். ஆனாலும் இறைவனின் சித்தம் வேறுவிதமாக இருந்தது. சாகும் தருவாயில்கூட அவன் தன் பெற்றோர்களையோ, உடன்பிறந்தவர்களையோ நினைக்கவில்லை. ''தம்பி, தம்பி'' என்றுதான் அவனுடைய உதடுகள் முணுமுணுத்தன. தன்னுடைய தலைவனின் மடியில்தான் தன்னுடைய இறுதிமூச்சை விட விரும்பினான். அப்போது பிரபாகரன் மதுரையில் இருந்தார். செய்தியறிந்து ஓடோடிவந்தார். அவர் மடியிலேயே அவனுடைய விழிகள் நிரந்தரமாக மூடிக்கொண்டன. மதுரையில் சங்கரின் உடலுக்கு இறுதிக்கிரியைகளைச் செய்தோம். 1985ஆம் ஆண்டு அக்டோபரில் நான் ஈழம் சென்றபோது சங்கரின் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே அவனது பெற்றோரைக் கண்டு ஆறுதல் கூறினேன். சங்கரின் இறுதிக் காலத்தைப் பற்றிய விவரங்களையும் தெரிவித்தேன்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல்பிரிவு பொறுப்பாளராக விளங்கும் **சுப்ரமணியம்** பிரபாகரனுடன் சேருவதற்குமுன் தனியானப் புரட்சிக்குழு ஒன்றினை இயக்கிவந்தார். பலர் இக்குழுவில் அங்கம் வகித்தனர். இவர்களின் நடவடிக்கைகளைக் கேள்விப்பட்ட பிரபாகரன் சுப்பிரமணியத்தை அழைத்துப் பேசித் தனது இயக்கத்தில் சேர்த்துக்கொண்டார். 1976ஆம் ஆண்டில் சுப்பிரமணியம் பிரபாகரனோடு சேர்ந்தார்.

சுப்பிரமணியம் சுறுசுறுப்பான இளைஞர். ஓய்வு, ஒழிச்சல், ஊண், உறக்கம் என்ற சொற்களுக்கு இவரது அகராதியில் இடமேயில்லை. இவரை அறியாத அரசியல்தலைவர்கள் தமிழ்நாட்டில் இல்லை. யாராகயிருந்தாலும் அவர்களை எந்தநேரத்திலும் அணுகிபேசும் உரிமையினைப் பெற்றிருந்தார் சுப்பிரமணியம். அவர் ஒரு நடமாடும் அலுவலகம். இயக்கப்பணிகளை மேற்கொண்டு பம்பரமாகச் சுழன்று கொண்டேயிருப்பார். பிரபாகரனுக்கு வாய்த்த ஒரு அற்புதமான தோழன் அவர். ஈழநாட்டுச் சுற்றுப்பயணத்தில் நான் ஈடுபட்டிருந்தபோது ஏழ்மைவாய்ந்த அவரது குடும்பத்தைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சுப்பிரமணியத்தின் ஏழைத்தாயையும், சகோதரரையும் நான் கண்டு நெகிழ்ந்து போனேன். அந்தத்தாய் வறுமையில் வாடிக்கொண்டிருந்தாலும் தனது புதல்வன் நாட்டிற்காகப் பணிபுரிகிறான் என்பதில் பெருமிதம்கொண்டிருந்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரான லெப்டினட் கர்னல் **குமரப்பா,** பிரபாகரனின் ஊரான வல்வெட்டித்துறையைச்



படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்தவர். 1977ல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அவர் சேர்ந்தார். விடுதலைப்புலிகள் இயக்கம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் முக்கிய பங்கு வகித்தார். தமிழகத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் புகைப்படக் கண்காட்சிகளை நடத்தும் பொறுப்பினை குமரப்பா ஏற்றிருந்தபோது அவரை நான் பலமுறை சந்தித்திருக்கிறேன். அதற்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொறுப்பாளராகப் பொறுப்பேற்றுப் பல்வேறு சாதனைகளை அவர் புரிந்தார். கொக்கட்டிச்சோலை என்னுமிடத்திலிருந்த விடுதலைப்புலிகள் முகாமின்மீது ஆயிரக்கணக்கான சிங்கள முப்படைகள் திடீரென முற்றுகையிட்டு தாக்கியபோது கடும் எதிர்த் தாக்குதல் நடத்தி விடுதலைப்புலிகள் தரப்பில் எவ்வித இழப்புகளுமின்றி எதிரிகளை முறியடித்த வீரர் அவர். இப்போரில் 60க்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். யாழ்மாவட்டப் பொறுப்பாளராக அவர் இருந்த போது தீலிபனின் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அப்போது யாழ்ப்பாணம் சென்ற என்னை அன்புடன் வரவேற்று அழைத்துச் சென்றார். சிங்கள இராணுவத் தாக்குதலின் விளைவாக கடுமையான சேதத்திற்கு உள்ளாகியிருந்த வடமராட்சிப் பகுதிகளை எனக்குக் காட்டிமாறு குமரப்பாவுடன் என்னை பிரபாகரன் அனுப்பி வைத்தார். அப்போது வல்வெட்டித்துறையிலுள்ள அவரது வீட்டிற்கு நான் சென்று அவரது குடும்பத்தினரைச் சந்தித்தேன். ஏற்கெனவே 1985ஆம் ஆண்டிலும் அவர் வீட்டிற்குச் சென்றிருக்கிறேன். இந்தத்தடவை அவரது துணைவியையும் சந்தித்தேன். மட்டக்களப்பைச் சேர்ந்த அவரைக் காதலித்து திருமணம் செய்துகொண்டார் குமரப்பா. திருமணம் நடந்து ஒருமாதம்தான் இருக்கும். நான் இத்தம்பதியரைச் சந்தித்த இரண்டு நாட்களில் குமரப்பாவும், புலேந்திரனும் சிங்களக்கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இறுதியில் நஞ்சருந்தி உயிர்த்தியாகம் செய்த செய்தி எனக்குக் கிடைத்தபோது அதிர்ந்து போனேன். புன்னகைமாறாத அந்த வீரத்திரு முகம் இன்னமும் என் நினைவில் நிற்கிறது.

விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் மற்றொரு மூத்த உறுப்பினர் **லெப்டினட் கர்னல் புலேந்திரன்.** இவர் திருகோணமலையில் பிறந்தவர். குணநாயகம் தர்மராஜா என்பது இவரது இயற்பெயராகும். 1980ல் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். சீலன், கணேஷ் ஆகியோரின் நெருங்கிய நண்பரான புலேந்திரன் பிரபாகரனின் உற்ற தோழரானார். இயக்கத்தின் ஏராளமான உறுப்பினர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தார். இயக்கவீரர்களால் **அம்மான்** என பாசத்துடன் அழைக்கப்பட்டார். தமிழ்நாட்டிலிருந்தபோது என்னுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தார். பிரபாகரன் கைதுசெய்யப்பட்டபோது இவரையும் மற்ற தோழர்களையும் மறைத்து வைத்துப் பாதுகாக்கும் பொறுப்பினை நான் ஏற்க நேர்ந்தது. அப்போது இவருடன் நெருங்கிப்பழகி அவரின் குணநலன்களை அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இவரது பெற்றோரை நான் நன்கு அறிவேன். வயதான அந்தப் பெற்றோரை நினைத்தால் என் நெஞ்சம் நெகிழுகிறது. குமரப்பா மாண்டபோது அவருடன் இவரும் உயிர்த் தியாகம் செய்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மற்றொரு மூத்த உறுப்பினர் **தளபதி சந்தோஷம்** ஆவார். திருகோணமலை மாவட்டத்தின் தளபதி புலேந்திரனோடு கூட்டாகப் பணிபுரிந்தார். பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியான தளபதி சந்தோஷம் பல்வேறு களங்களில் விடுதலைப்புலிகளுக்கு வெற்றிகளை ஈட்டுக்கொடுத்தார். இந்திய ராணுவத்துடன் ஏற்பட்ட போரில் அவர் வீரமரணமடைந்தார்.


படிப்பகம்

www.padippakam.com

பொன்னம்மான் என்று விடுதலைப்புலிகளால் செல்லமாக அழைக்கப் படும் யோகரத்தினம் குகன் விடுதலைப்புலிகள் பயிற்சிமுகாம் அனைத் துக்கும் பொறுப்பாக இருந்து வந்தவர். இவரின் இயற்பெயர் லெப்டினட் கர்னல் அற்புதம் என்பதாகும். யாழ்ப்பாணம் கலட்டியைச் சேர்ந்தவர். பிரபாகரனின் உற்ற தோழராக இருந்து பல்வேறு தாக்குதலில் முக்கிய பங்கெடுத்தவர். சிங்கள இராணுவத்திற்கு எதிரான ஒரு தாக்குதலுக்குத் தயாராகிக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் வீரமரணமடைந்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்த தோழர்களுக்கு ஆரம்பகாலத்தில் பிரபாகரனே இராணுவப்பயிற்சி வகுப்புகளை நடத்தினார். பிரபாகரனி டம் பயிற்சிபெற்ற முதல்குழுவில் மாத்தையா, ரகு, கிட்டு, சங்கர், பண்டிதர், செல்லக்கிளி, அப்பையா, பொன்னம்மான் போன்றவர்கள் இருந்தனர்.

இரண்டாவதுக்குழுவில் சீலன், புலேந்திரன், சந்தோஷம், ரஞ்சன் ஆகி யோர் பயிற்சிபெற்றனர்.

மூன்றாவதுகுழுவில் பொட்டு, விக்டர், பஷீர்காகா, லிங்கம், கணேஷ், அருணா ஞானம், ரெஜி, சுப்பண்ணா, ஆல்பர்ட் பயிற்சி பெற்றனர்.

பிரபாகரன்டம் பயிற்சி பெற்ற இவர்கள் பின்னர் தளபதிகளாக மாறி பல்லாயிரக்கணக்கான தோழர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு இராணுவப் பயிற்சி மட்டுமல்ல, அரசியல் பயிற் சியும் அளிக்கப்பட்டது. அந்தப் பொறுப்பினை பேராசிரியர் டாக்டர் அன் ரன் பாலசிங்கம் ஏற்றார். ''பாலா'' என இயக்கத் தோழர்களால் அன்புட னும், மதிப்புடனும் அழைக்கப்படும் டாக்டர் பாலசிங்கம் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைமிக்கவர். இயக்கத்தின் தத்துவப் பேராசனாக விளங்கும் இவரின் தந்தை மட்டக்களப்பைச் சேர்ந்தவர். தாய் யாழ்ப்பாணம் கரை வெட்டியைச் சேர்ந்தவர். கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு கொழும் புவில் இருந்து வெளியாகும் ''வீர கேசரி'' தமிழ் நாளிதழில் துணையாசிரி யராகப் பணியாற்றினார். பிறகு பிரிட்டிஷ் தூதுவர் அலுவலகத்தில் சிறிது காலம் வேலைபார்த்து விட்டு இலண்டனில் உள்ள கல்லூரி ஒன்றில் பேரா சிரியராகப் பணி புரிந்தார். அப்போது இவரிடம் மாணவியாக ''ஏடேலி'' என்னும் ஆஸ்திரேலிய நாட்டுப் பெண் படித்தாள். இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர்.

1977 ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. பேராசிரியர் பதவியை உதறித் தள்ளிவிட்டு இயக்கத் திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். பிரபாகரன் இவரை இயக்கத்தின் அரசியல் ஆலோசகராக ஏற்றுக் கொண்டார். பிரபா கரனும் இயக்கத் தோழர்களும் இவர்மீது பெருமதிப்பு வைத்துள்ளனர். எத் தனையோ நெருக்கடிகளையும் சோதனைகளையும் இயக்கம் சந்தித்த போது கொஞ்சமும் மனந்தளராமல் உறுதியாக நின்ற பெருமைக்கு உரியவர்.

பல்வேறு பேச்சுவார்த்தைகளில் இயக்கத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு தங்கள் நிலையைப் பக்குவமாக எடுத்துரைத்து மாற்றாரின் மனம் கவரும் திறமைப்படைத்தவர்.

இவரது துணைவியான திருமதி. ஏடேலி ஆஸ்திரேலியப் பெண்மணி யாக இருந்த போதிலும் தமிழீழ மக்களுக்குத் தொண்டு புரியத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார். தன் கணவரோடு கை கோர்த்து நின்று இயக்கப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இந்த இலட்சியத் தம் பதிகளின் தொண்டு அனைவரையும் அவர்கள்பால் ஈர்த்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

பிரபாகரனும் அவரது தோழர்களும் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதன் விளைவை அவர்களது குடும்பங்கள் நிறையவே அனுபவித்தன. சிங்கள அரசாங்கத்தின் கடுங்கோபத்திற்கு இந்தக் குடும்பங்கள் இரையாயின. இவர்களின் பெற்றோர்களில் அரசு அதிகாரிகளாயிருந்தவர்கள் பதவிநீக்கம், பதவி இறக்கம், இடமாற்றம் போன்ற பல்வேறு கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். பிரபாகரன், ரகு, கிட்டு, பண்டிதர், மாத்தையா, சங்கர், ஆகியோரின் வீடுகளைத் தேடிவந்து சிங்களவராணுவம் அழித்து நாசப்படுத்தியது. 1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நான் ஈழம் சென்றிருந்தபோது நாசமாகிக்கிடந்த இந்த வீடுகளை நேரில் பார்த்தேன். இவர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினர்களும் எவ்வளவோ தொல்லைகளுக்கு ஆளானபோதிலும் தங்களின் வீரப்புதல்வர்களை வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. மாறாக அவர்களைப்பெற்ற பெருமித உணர்வுடனேயேயிருக்கிறார்கள். தங்களுடைய வீரப்புதல்வர்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவே இருக்கிறார்கள். ''அகதிகள் புனர்வாழ்வு'' போன்ற பணிகளுக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். ஆனால் நேரடியாகப் போராட்டத்தில் ஈடுபடாத இந்தப் பெற்றோர்களையும் இராணுவ வெறியர்கள் விட்டுவைக்கவில்லை.

பண்டிதரின் விதவைத்தாயை சிங்கள இராணுவ வெறியர்கள் கண்டந்துண்டமாக வெட்டிப்படுகொலை செய்தனர். சங்கரின் பெற்றோர்களை இராணுவம் படுகொலை செய்தது. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதமிருந்து உயிர்த்தியாகம் செய்த திலீபனின் தந்தையைக்கூட இந்திய இராணுவம் விட்டு வைக்கவில்லை. அவரைச் சுட்டுக்கொன்று மாறாத அவமானக்கறையை இந்தியாமீது படியவைத்துவிட்டது. விடுதலைப்புலிகளின் குடும்பத்தினர்களையே கருவறுத்துவிட வேண்டும் என்று வெறிகொண்டு சிங்கள இராணுவமும், இந்திய இராணுவமும் திரிகின்றன. வீரப் புதல்வர்களைப் பெற்றதினால் இவர்களும் தியாகச்சீலர்களானார்கள்.





படிப்பகம்

www.padippakam.com

# புலிகள் இயக்கம் பிறந்தது.

1970 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தமிழர்களுக்கு எதிராக ஏவிவிடப் பட்ட கடுமையான அடக்குமுறையும், சகலதுறைகளிலும் தமிழர்கள் புறக் கணிக்கப்பட்டவிதமும், தமிழ் இளைஞர்கள் மத்தியில் கடுமையான எதிர்ப் புணர்வை உருவாக்கியிருந்தது. சிங்கள ஆதிபத்திய ஆட்சிக்கு எதிராக ஏதாவது செய்தாக வேண்டுமென்று இளைஞர்கள் துடித்தனர். தமிழர் களின் கட்சிகளோ அல்லது மற்ற சிங்கள இடதுசாரி இயக்கங்களோ இந்த இளைஞர்களின் மனக்கொதிப்பைப் புரிந்துகொள்ளவில்லை. கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் தமிழர்களுக்காகப் போராடச் சரியான தலைவர்களோ, இயக்கங்களோ இல்லை என்று இளைஞர்கள் கருதினார்கள். 30 ஆண்டுகாலத்திற்கு மேலாக பல்வேறு வகையான அறப் போராட்டங்களைத் தமிழ் அரசியல் தலைவர்கள் நடத்தியிருந்தபோதிலும் கூட இலங்கையின் ஆட்சிப்பொறுப்பிலிருந்து அவர்கள் ஒதுக்கியே வைக்கப் பட்டிருந்தனர். நாடாளுமன்றத்தில் அவர்கள் எழுப்பிய குரலுக்குச் செவி சாய்ப்பார் யாரும் இல்லை. கானகத்தில் காரிருளில் எழுப்பப்பட்ட குர லாக அவை ஒலித்தன. சிங்களப் பேரினவாதத்திற்கு இரையாகிபோன இடதுசாரிக் கட்சிகள், சிங்கள முதலாளித்துவக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து தமிழருக்கு எதிராகச் செயல்பட்டன. தமிழர்களின் போராட்டங் களை அவர்களும் அலட்சியம் செய்தனர். எனவே தமிழ் இளைஞர்கள் இடதுசாரிக் கட்சிகளை நம்பக் கொஞ்சமும் தயாராக இல்லை.

இதன் விளைவாகத் தமிழீழப் பகுதியில் ஒரு அரசியல் சூனியநிலை உருவாயிற்று. சிங்கள பேரினவாதிகளின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதி ராகக் கிளர்ந்தெழுந்து, தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்நடத்தி செல்லப் புரட்சிகரமான அரசியல் அமைப்பு ஒன்று இன்றியமையாதது என்பதைத் தமிழ் இளைஞர்கள் உணரத்தொடங்கினார்கள்.

**தமிழ்மாணவர்பேரவை** என்ற அமைப்பு தமிழ் மாணவர்களைக் கிளர்ந் தெழச் செய்தது. 1970ஆம் ஆண்டில் இப்பேரவை உருவானது.

சிங்களஅரசு கொண்டுவந்த தரப்படுத்துதல் திட்டத்திற்கு எதிராக மாணவர்களை ஒன்றுதிரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டங்களைத் தமிழ் மாண வர் பேரவை நடத்தியது. ஈழத்தமிழ் மாணவர்கள் மத்தியில் மாபெரும் சக்தியாக இப்பேரவை வளர்ந்தது. ஆயுதம் தாங்கிய புரட்சியின்மூலமே சிங்களரது பிடியிலிருந்த தமிழர்கள் விடுதலைபெறமுடியும் என்பதை மெல்ல மெல்லத் தமிழ் இளைஞர்கள் உணர இப்பேரவையே வழிகாட்டி யது எனலாம்.

தமிழ் மாணவர்பேரவை பலம்பொருந்திய இயக்கமாக வளர்ந்தது. இதில் தீவிரவாதக் குழுவாக **தங்கத்துரை, சின்னஜோதி, பிரபாகரன்** ஆகியோர் இயங்கினர். தொடக்ககாலத்தில் கைக்குண்டுகள் செய்யவும், துப்பாக்கி சுடுவதற்கும் இவர்கள் பயிற்சி பெற்றனர். பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் தங்கத்துரை. எனவே அவருடன் பிரபாகரனுக்கு நெருக்கமான தொடர்பு இருந்தது. இந்தத்தீவிர வாதக் குழுவில் இருந்தவர்களில் சுமார் 25 பேருக்கு மேற்பட்டோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

அரசாங்கத்திற்கு தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும்வகையில் அரசு பஸ் ஒன்றை எரிப்பது என முடிவு செய்திருந்தார்கள். பிரபாகரன் உட்பட நான்குபேர் இதற்கான பொறுப்பை ஏற்றுச் சென்றார்கள். ஆனால் மற்ற மூவரும் நடுவிலேயே பயம்கொண்டு திரும்பி ஓடிவிட்டார்கள். 14 வயதுச்



படிப்பகம்

www.padippakam.com

சிறுவனான பிரபாகரன் மட்டும் தைரியமாகச் சென்று அரசு பஸ்சைக் கொளுத்திவிட்டுத் தப்பிவந்தார். பிரபாகரனின் இந்தத் துணிவு அனைவரையும் கவர்ந்தது. அவரைவிட மூத்தவர்களான தங்கத்துரை, குட்டிமணி போன்றவர்களின் பாராட்டுதல்களுக்கு ஆளானார். பிரபாகரன்மீது அவர்களுக்கு அளவுகடந்த நம்பிக்கை பிறந்தது.

மாணவர்பேரவையின் நடவடிக்கைகளைக் கவனித்துவந்த அரசாங்கம் அதை ஒடுக்குவதற்கு முயன்றது. மாணவர் பேரவைத் தலைவராக இருந்த **சத்தியசீலனை** போலீஸ் கைதுசெய்து சித்திரவதை செய்தது. சித்திரவதைக் கொடுமை தாங்கமுடியாமல் தனது கூட்டாளிகளைச் சத்தியசீலன் போலீசில் காட்டிக்கொடுத்துவிட்டார். சிங்கள போலீசின் கொடுங்கரங்கள் அனைவரையும் தேடத்தொடங்கின. பிற்காலத்தில் டெலோ இயக்கத்தின் தலைவராக விளங்கிய சிறி சபாரத்தினம் போலீசாரால் கைதுசெய்யப் பட்டார். பிரபாகரனின் வீட்டை அவர் போலீசிடம் காட்டினார். ஆனாலும் பிரபாகரனை போலீசினால் பிடிக்கமுடியவில்லை. பிரபாகரனின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அடிக்கடி போலீஸ் தொல்லைகளுக்கு ஆளானார்கள். அரசு அதிகாரியான பிரபாகரனின் தந்தை மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளானார்.

தங்கத்துரை, குட்டிமணி, சின்னஜோதி ஆகியோருடன் பிரபாகரன் இந்தியாவிற்குத் தப்பிச் சென்று அங்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தங்கவேண்டி நேர்ந்தது. ஆனால் பிரபாகரனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. துருதுருவென்று ஏதாவது செய்து பழக்கப்பட்ட பிரபாகரன் தமிழீழம் சென்று தங்களது புரட்சிகரமான காரியங்களை தொடர்ந்து நடத்தவேண்டுமென்று விரும்பினார். ஆனால் மற்றவர்கள் இன்னும் காலம் கனியவில்லை என்று கூறி அதற்குத் தடையாக இருந்தார்கள். இதற்கிடையில் சின்னஜோதி இக்குழுவைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்.

அப்போது மற்றொரு தீவிரவாதக் குழுவைச் சேர்ந்த **செட்டி** என்ற தனபாலசிங்கம் என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு வந்து பிரபாகரனைத் தனியாகச் சந்தித்தார். தன்னுடைய குழுவில் சேர்ந்து பணியாற்றும்படி அவர் அழைத்தார். ''செட்டி யோக்கியமானவர் அல்ல, அவரை நம்பிச் செல்லவேண்டாம்'' என்று தங்கத்துரையும், குட்டிமணியும் பிரபாகரனைத் தடுத்தனர். ஆனால் எப்படியாவது இயங்கவேண்டுமென்று துடித்த பிரபாகரன் செட்டியோடு செல்ல முடிவு செய்தார். அப்போது தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரிடம் அவர் பின்வருமாறு கூறினார். ''என்னைப் பொறுத்தவரை நான் தூய்மையாக இருக்கிறேன். இறுதிவரை அப்படியே தொடர்ந்து இருப்பேன். செட்டி யோக்கியரா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. அவர் எப்படியிருந்தாலும் என்னை அவர் வழிக்கு இழுக்கமுடியாது. முடிந்தால் அவரை நான் என்வழிக்குக் கொண்டு வருவேன்'' என்று சொல்லிவிட்டு பிரபாகரன் செட்டியுடன் யாழ்ப்பாணம் திரும்பி தனது புரட்சி வேலைகளைத் தொடர்ந்தார்.

பிற்காலத்தில் செட்டி பல்வேறு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டபோது பிரபாகரன் அவரைக் கடுமையாக எச்சரித்துத் திருத்த முயன்றார். ஆனால் அவர் திருந்துவதாக இல்லை. எனவே இயக்கத்தின் முடிவுக்கேற்ப அவரைத் தண்டிக்கவேண்டியநிலை ஏற்பட்டது. செட்டியின் சகோதரரான **செல்லக்கிளி** பிரபாகரனுக்கு இதில் மட்டுமல்ல இறுதிவரை துணையாயிருந்தார்.

உரும்பராயைச் சேர்ந்த **பொன்னுத்துரைசிவகுமாரன்** தமிழீழத்தில் ஆயுதப்போராட்டத்தை முதன்முதலாக ஆரம்பித்தான். 1971ஆம் ஆண்டு உரும்பராய் வந்த சிங்கள அமைச்சர் சோமவீரசந்திரசிறி என்பவரின்



படிப்பகம்

www.padippakam.com

காரை நோக்கிக் குண்டுவீசினான். தமிழர்களுக்குத் தொடர்ந்து துரோகம் செய்துவந்த யாழ் மேயர் துரையப்பாவின் காருக்குள் குண்டுவைத்தான். ஆனால் துரோகி துரையப்பா அப்போது தப்பினார். கார் சுக்குநூறாகியது. இந்நிகழ்ச்சிகளின் விளைவாக சிவகுமாரனைப் போலீஸ் கைது செய்தது.

சிறையிலிருந்து மீண்ட சிவகுமாரன் ஆயுதப்போராட்டத்தைத் தீவிரப் படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டான். 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த **உலகத்தமிழ் மாநாட்டில்** கடைசி நாளன்று எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் சிங்களப் போலீசார் கூட்டத்திற்குள் புகுந்து தடியடி நடத்திக் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். மின்கம்பிகளைச் சுட்டுவீழ்த்தியதி னால் மின்சாரம் பாய்ந்து 10 தமிழர்கள் மாண்டனர். இச்சம்பவத்தின் போது அல்லோலகல்லோலப்பட்டு ஓடிய மக்களுக்குத் தொண்டனாக நின்று பாதுகாப்பு அளித்தான் சிவகுமாரன்.

10 தமிழர்களைக் கொலை செய்த சிங்கள இன்ஸ்பெக்டர் சந்திரசேகரா வைத் தீர்த்துக்கட்ட உறுதிபூண்டான் சிவகுமாரன். இதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டான். ஒருநாள் போலீசாரை எதிர்த்துப் போரா டியபோது அவனிடமிருந்து தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன. சிங்களப் போலீசாரிடம் உயிரோடு பிடிபடுவதில்லை என்ற கொள்கைக்கு ஏற்ப **சயனைடு** என்னும் நஞ்சுண்டு தன் உயிரை நீத்தான் சிவகுமாரன். அவனது இந்த வழியையே விடுதலைப்புலிகளும் பின்பற்றி வருகின்றனர்.

சிவகுமாரன் விட்ட பணியினை பிரபாகரன் தொடர்ந்தார். தமிழர் களுக்குத் தொடர்ந்து துரோகம் புரிந்துவந்த யாழ்மேயர் துரோகி துரை யப்பாவுக்குத் தக்க தண்டனையை விதிக்க வேண்டுமென்று சிவகுமாரன் விரும்பினார். அவனது அந்த விருப்பத்தினை அவன் இறந்ததன் பின் பிரபாகரன் நிறைவேற்றி வைத்தார்.

1975ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் தேதியன்று யாழ்ப்பாண மேயர் **அல்பிர்ட் துரையப்பா** சுட்டுக்கொல்லப்பட்டார். தமிழர்களுக்குத் துரோகம்புரிந்து சிங்களவர்களின் கையாளாக அவர் செயல்பட்டார் என் பதினால் அவருக்கு இந்தத் தண்டனையை விடுதலைப் புலிகள் அளித்தனர்.


நான்காவ து உலகத்தமிழ்மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதைத் தடுக்க துரையப்பா தீவிர முயற்சிசெய்தார். யாழ் திறந்தவெளியரங்கினை மாநாடு நடத்துவதற்கு தரமறுத்தார். இம்மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள்மீது சிங்களப் போலீஸ்படையை ஏவிவிடுவதற்கும் அவரே காரண மாக இருந்தார். எனவேதான் அவருக்கு விடுதலைப் புலிகள் மரணதண்ட னையை விதித்தார்கள். துரையப்பாவுக்கு ஏற்பட்ட கதி சிங்களக் கட்சிகள் தமிழர் பகுதிகளில் நிலைகொள்ள முனையும் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தமிழர்களின் போராட்டத்தைக் காட்டிகொடுக்க முயலும் தமிழ்த் துரோகிகளுக்கும் இந்நிகழ்ச்சி ஒரு எச்சரிக்கையாக அமைந்தது.

1976-77ஆம் ஆண்டுகளில் சிங்களப் போலீஸ்படைக்கு எதிரான பல் வேறு தாக்குதல்களை விடுதலைப்புலிகள் நடத்தினார்கள். 1978ஆம் ஆண்டு **பொத்துவில்** பாராளுமன்ற உறுப்பினராகயிருந்த எம். கனக ரத்தினம் என்பவர் விடுதலைப்புலிகளால் சுடப்பட்டார். 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர் தேர்தல் முடிந்த ஒருமாத காலத்திற் குள் ஆளும்கட்சியான **ஐக்கிய தேசிய** கட்சிக்குத் தாவினார். தமிழர்களது உரிமைகளை ஜெயவர்த்தனாவினால்தான் பாதுகாக்கமுடியும் என்றும் பகிரங்கமாகப் பேசினார். இவ்வாறு தனது மக்களையும், விடுதலைப்



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்தையும் காட்டிக் கொடுக்கும் துரோகியாக மாறிய இவரை 1978ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 27ஆம் தேதி விடுதலைப்புலிகள் சுட்டனர். மயிரிழையில் உயிர்தப்பினாலும் சில மாதங்களுக்குப் பின் அவர் காலமானார்.

தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான அஞ்சாநெஞ்சர் இராசரத்தினம் ஆயுதம் தாங்கிய புரட்சியின்மூலமே தமிழீழம் மலரமுடியும் என்ற முடிவுக்கு வந்தார். இளைஞர்களுக்குப் புதிய உத்வேகத்தினை அவர் ஊட்டினார். பிரபாகரனுக்கும் அவரது தோழர்களுக்கும் நல்ல ஆலோசனைகளை அவர் கூறினார். தாமிரவருணி புதிய புலிகள் என்ற பெயருடன் ஒரு இரகசிய இயக்கத்தைத் தொடங்கும்படி இளைஞர்களுக்குத் திட்டம் தந்தார். இலங்கைத்தீவின் பழமையான பெயர் தாமிரவருணி என்பதாகும்.

செயல் ஒன்றையே நோக்கமாகக்கொண்ட பிரபாகரன் அவரது யோசனையை ஏற்று புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரில் சில இளைஞர்களுடன் இயங்கினார். 1976ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி திறன்கொண்ட சில இளைஞர்களை மேலும் சேர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் என்று இயக்கத்திற்குப் புதிய பெயரிட்டு விடுதலைப் போராட்டத்திற்கான உறுதியான அடித்தளத்தை அமைத்தார். ஆரம்பத்தில் இயக்கத்திற்கென இருந்தது ஒரே ஒரு துப்பாக்கி. அதற்கான ரவையையும் தானே தயாரித்து தனது 20வது வயதில் தன்னைவிட வயதில் குறைந்த இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தார் பிரபாகரன். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோற்றமானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது. தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டமே புதிய திருப்பம் பெற்றது.

அதே வேளையில் தமிழீழ அரசியலிலும் பெரும் மாற்றங்கள் உருவாயின. கடுமையான அடக்குமுறை தமிழர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்டது. தமிழர்கள் தனிநாடு கேட்பதைத்தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். 1976ஆம் ஆண்டு மே மாதத்தில் வட்டுக்கோட்டையில் தமிழர் கூட்டணி ஒரு தேசிய மாநாட்டினை நடத்தியது. சுதந்திரத் தமிழீழம் அமைப்பதே தமது இலட்சியம் என இம்மாநாடு வரலாற்றுப் பெருமைமிக்க ஒரு தீர்மானத்தைப் பிரகடனம் செய்தது. மேலும் இந்த மாநாட்டில்தான் தமிழர் கூட்டணி தனது பெயரை தமிழர் விடுதலைக்கூட்டணி என்று மாற்றிக்கொண்டது. 1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசியல் சட்டத்தை இம்மாநாடு அடியோடு நிராகரித்தது.

1977ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிட்டது.

''இலங்கையிலுள்ள தமிழர்கள் பாரம்பரியமாக வாழும் தாயகப்பகுதிகளைக் கொண்ட தமிழீழ சோசலிச சுதந்திர நாட்டினை அமைப்பதற்குத் தமிழ்மக்களின் அனுமதியைத் தமிழர்கூட்டணி வேண்டுகிறது''.

இத்தேர்தல் அறிக்கையில் மேலும் தெளிவாகப் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. ''சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தங்கள் தாயகத்தில் தங்களது இறைமையை நிறுவிக்கொள்ள தமிழ்த்தேசிய இனம் உறுதிபூண வேண்டும். இந்த உறுதியை சிங்கள அரசுக்கும், உலகத்திற்கும் தெரிவிக்க ஒரே வழி தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு ஆதரவாக வாக்களிப்பதுதான்''.

2



படிப்பகம்

www.padippakam.com

இந்தத் தேர்தல் அறிக்கையில் மற்றும் ஒரு முக்கியமான அம்சமும் கூறப்பட்டிருந்தது. ''தமிழர்களின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தாலும் அதே வேளையில் தமிழீழத் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் விளங்குவார்கள். இவர்கள் தனியாகக் கூடி தமிழீழத்திற்குரிய அரசியல் சட்டத்தை வகுப்பார்கள். இந்தப் புதிய அரசியல் சட்டத்தை அமைதியானமுறையிலோ அல்லது நேரடி நடவடிக்கைகளின் மூலமோ அல்லது போராட்டங்கள் மூலமாகவோ அமுலுக்குக்கொண்டு வந்து சுதந்திரத் தமிழீழத்தை அமைப்பார்கள்''.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் இந்த வேண்டுகோளை ஏற்று மக்கள் அதற்குப் பேராதரவு அளித்தார்கள். கிட்டத்தட்ட ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே இது திகழ்ந்தது. இதன்மூலம் தமிழர்களின் பிரச்னை புது வடிவத்தைப் பெற்றது. மக்கள் அளித்த இந்தத் தீர்ப்புத் தெளிவானது. மாற்ற முடியாதது. மாநில சுயாட்சி பெறுவதற்காகவோ, மாவட்டக் குழுக்களை அமைப்பதற்காகவோ இந்தத் தீர்ப்பை மக்கள் வழங்கவில்லை. சுதந்திர சோசலிசத் தமிழீழத்தை அமைக்க வேண்டுமென்றே மக்கள் திட்டவட்டமான தீர்ப்பு வழங்கினார்கள்.

தமிழீழத்திற்கு ஆதரவாக மக்கள் அளித்த இந்தத் தீர்ப்பு பிரபாகரனையும் அவரது தோழர்களையும் மேலும் ஊக்கப்படுத்தியது. அதே வேளையில் மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்று நாடாளுமன்றம் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தமிழகக் கோரிக்கையைக் கூர்மைப்படுத்தத் தவறினார்கள். சிங்கள ஆட்சியாளர்களும் தமிழர்களை ஏமாற்ற முயன்றனர். அடக்குமுறையை ஏவிவிட்டனர்.

இதன் விளைவாக ஜனநாயகமுறையினால் தமிழர்களின் உரிமைகளைப் பெற முடியாது என்ற எண்ணம் இளைஞர்களுக்கு வலுப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாயின. கொரில்லாப் போருக்கான தயாரிப்புவேலையில் ஈடுபட்டு சிங்களப் போலீசாருக்கு எதிரான சிறுசிறு தாக்குதல்களை, பிரபாகரன் தொடங்கிய போது எத்தனையோவிதமான எதிர்ப்புகள் கிளம்பின. தனிநபர் பயங்கரவாதமென இதை வருணித்தவர்கள் உண்டு. தமிழீழத்தில் போதிய மலைகளோ, காடுகளோ இல்லாததால் கொரில்லாப்போர்முறை இங்கு சரி வராது என்று கூறியவர்கள் உண்டு. தாக்கிவிட்டு மறைவது மூலம் சாதாரண பொதுமக்கள் சொல்லமுடியாத கஷ்டங்களுக்கு ஆளாவார்கள் என்று வக்கணைகளும், வம்புகளும் கிளம்பின. பிற போராளிகளின் இயக்கங்கள்கூட வக்கரித்தே பேசின.

''நான்கு துப்பாக்கிகள் வைத்துக்கொண்டு ஈழத்தைப் பெறமுடியுமா? சிங்கள அரசின் பீரங்கிகள் வந்தால் என்ன செய்வீர்கள்'' என்று சவால் விட்ட தமிழீழ அரசியல்வாதிகளும் இருந்தார்கள்.

''நாம் சிங்கள மக்களைக் கொல்லும் செயலில் ஈடுபடமாட்டோம். சிங்களத் தொழிலாளர்வர்க்கத்துடன் சேர்ந்து முதலாளித்துவ அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தை முன்நடத்துவோம்'' எனக்கூறி பிரபாகரனின் போர் முறையை அடியோடு நிராகரித்த சில இயக்கங்கள் இறுதியில் பிரபாகரனின் வழிமுறைக்கே வந்தன.

ஆனால் அதே நேரத்தில் கொரில்லா நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு கட்டுப்பாடான இராணுவமாக மாறி சிங்கள ராணுவத்துடன் நேருக்குநேர் மோதி அவர்களை அழிக்கவும், முகாமுக்குள் விரட்டவும், தமிழீழத்தின் பெரும்பாலான பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் முடிந்தது என்றால் இது பிரபாகரனின் துணிவையும், தீர்க்க தரிசனத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த நிகழ்ச்சிகளை அடுத்து விடுதலைப்புலிகளை வேட்டையாடிப் பிடிப்பதில் போலீஸ்படை தீவிரமாக ஈடுபட்டது. இன்ஸ்பெக்டர் **பஸ்தியான் பிள்ளை** என்பவர் தலைமையில் போலீஸ் உளவுப்படை ஒன்று விசேஷமாக இயங்கியது. பஸ்தியான் பிள்ளை சித்தரவதை செய்வதில் கைதேர்ந்தவர். தமிழ் இளைஞர்களைக் கண்டபடி கைது செய்வதிலும், தடுப்புக்காவலில் வைப்பதிலும் ஈவிரக்கமின்றி சித்தரவதை செய்வதிலும் மும்முரமாக ஈடுபட்டார்.

*1978* ஆம் ஆண்டு ஏப்ரல் *20* ஆம் தேதி **முருங்கன்-மடு** வீதிக்கு உட்புற மான காட்டுப்பகுதிக்குள் இருந்த விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாமை பஸ்தியான்பிள்ளை தலைமையில் போலீஸ்படையினர் சுற்றிவளைத்துக் கொண்டனர். இந்த திடீர் முற்றுகையினால் விடுதலைப்புலிகள் அதிர்ச்சி யடைந்தார்கள். ஆனாலும் விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவரான **லெப்டினட் செல்லக்கிளி** ஒரு போலீஸ் அதிகாரிமீது பாய்ந்து அவரது கையில் வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கியைப்பிடுங்கி போலீஸ் படை யினரைச் சுட்டு வீழ்த்தினார். இன்ஸ்பெக்டர் பஸ்தியான்பிள்ளை உட்பட பல போலீஸ் அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். விடுதலைப் புலிகள் அனைவரும் பத்திரமாகத் தப்பினார்கள். இந்நிகழ்ச்சி சிங்கள அரசாங்கத்தைத் திகிலடைய வைத்தது. இலங்கைப் பத்திரிகைகள் இந் நிகழ்ச்சி பற்றிய செய்திகளை மிகப்பரபரப்புடன் வெளியிட்டன. புலிகள் இயக்கம் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றது. எனவே புலிகள் இயக் கத்தை அழிக்கும் வேலையில் சிங்களஅரசு ஈடுபட்டது. *1978* ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் இது போன்ற அமைப்புகளைத் தடை செய்யும் சட்டமென இச் சட்டம் அழைக்கப் பட்டது. விடுதலைப்புலிகளை அழிப்பதற்குப் பாது காப்புப் படைகளுக்கு சகலவிதமான அதிகாரங்களையும் இச்சட்டம் வழங் கியது. தமிழ் இளைஞர்களைக் கைது செய்யவும், சித்தரவதை செய்யவும், கொல்லவும், விசாரணையில்லாமல் தடுப்புக்காவலில் நீண்டகாலம் வைத் திருக்கவும் இச்சட்டம் இடமளித்தது. விடுதலை புலிகளின் நடவடிக்கைகளை ஆதரிப்பவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய் வதற்கும் இச்சட்டம் வழிவகுத்தது. விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குத் தமிழர்கள் எவ்விதமான ஆதரவையும் வழங்கவிடாமல் தடுப்பதே இச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதையும்மீறி மக்கள் விடுதலைப் புலி களை ஆதரிக்கத் தொடங்கினார்கள். சிங்கள அரசு இந்தச் சட்டத்தை பிறப்பித்த அதே வேளையில் யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலையைப் பிரகடனம்செய்துவிட்டு சிங்களராணுவத்தை அங்கு கொண்டுவந்து குவித் தது. ஆறுமாதகாலத்திற்குள் விடுதலைப்புலிகளை ஒழிக்கவேண்டுமென்று ஜெயவர்த்தனா இராணுவத்திற்கு ஆணைப்பிறப்பித்தார். இதன் விளை வாக என்றுமில்லாத வகையில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு காட்டுமிராண்டித்தனமான சித்தா வதைக்கு ஆளானார்கள். இவர்களில் பலர் இராணுவ முகாம்களிலும், போலீஸ்நிலையங்களிலும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழிப்பதற்கு சிங்களஇராணுவம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டபோது பிரபாகரன் தமது இயக்கத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். ஆயுதப்போராட்டத்தையும், அர சியல் போராட்டத்தையும் ஸ்திரப்படுத்தி விரிவாக்கவேண்டிய தேவை எழுந்தது. *1979-80* ஆம் ஆண்டுகளில் ஆயுதப்போராட்ட நடவடிக்கை களைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து இயக்க அமைப்பினை பலப்படுத்து வதில் அவர் கவனம் செலுத்தினார். தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மக்களை அணிதிரட்டுவதோடு அவர்களை அமைப்புரீதியாக, அரசியல் மயப்படுத்தும் பணியினையும் விடுதலைப்புலிகளின் இயக்கம் மேற் கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

1979ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பிரபாகரன் இலங்கைக்குத் திரும்பி இயக்கத்தை வளர்க்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டார். சுமார் 80 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள். ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் முக்கியமாகக் கருதும் பிரபாகரன் தனது இயக்க உறுப்பினர்கள் அவற்றைக் கடுமையாக பின்பற்றும்படி வற்புறுத்தினார் இவைகளுக்கு உட்படாது செயல்பட்ட மைக்கேல், பெடரிக் என்ற இருவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவர்களை பிரபாகரன் இயக்கத்திலிருந்து விலக்கினார். தன்னிச்சையாக இந்த முடிவை அவர் செய்யவில்லை. நாகராசா, ஐயர், ரவி போன்ற மற்ற அனைத்து உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்துத்தான் இதைச் செய்தார்.

ஆனால் அம்மூவரும் ஒன்று சேர்ந்து கொண்டு பிரபாகரனுக்கு எதிராகச் சூழ்ச்சி புரிந்தார்கள். பிரபாகரன் எதேச்சதிகாரமாகச் செயல்படுகிறார் என்று குற்றம் சாட்டினார்கள். இதைக்கண்டு பிரபாகரன் மனம் நொந்தார். உடனடியாக இயக்கத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டி நிலைமைகளை விளக்கிவிட்டு தான் இயக்கத்திலிருந்து விலகுவதாக வேதனையுடன் அறிவித்தார். உறுப்பினர்களுக்கு உண்மை தெளிவாகியது. இயக்கத்தைப் பிளவுபடுத்த சதி செய்த நாகராசா, ஐயர், ரவி ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து வெளியேற்றுவதென இயக்கம் முடிவுசெய்தது.

இந்நிகழ்ச்சி பிரபாகரனின் குணாதிசயத்திற்கு ஒரு சான்றாகும். சத்தியத்தையும், உண்மையையும், ஒழுங்கினையும், கட்டுப்பாட்டினையும் தனது வாழ்வில் உறுதியாகக்கடைப்பிடித்த பிரபாகரன் தன்மீது பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டபோது தனது பதவியைத் தூக்கியெறிய கொஞ்சமும் தயங்கவில்லை. அவரிடமிருந்த சத்தியவேட்கை அவரை இயக்கத்திலிருந்தே விலகிக்கொள்ளத் தூண்டியது.

ஆனால் மற்ற இயக்கங்களில் தலைவர்களை எதிர்த்து யார் செயல் பட்டாலும் அவர்களை ஈவிரக்கமின்றி பழிவாங்கிவிடுவதுதான் வழக்கமாகும். ஆனால் பிரபாகரன் அதற்கு நேர்மாறாக தானே விலகிக் கொள்ள முன்வந்தது அவர் எத்தகையவர் என்பதை எடுத்துக்காட்டியது.

பிரபாகரனின் சத்திய ஆவேசம்தான் இயக்க உறுப்பினர்களை அவரைப் புரிந்து கொள்ள வைத்தது. அவரை உயிருக்கும் மேலாக நேசிக்கவும் வைத்தது.

அதன்பின் பிரபாகரனும் அவரது தோழர்களும் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோருடன் இணைந்து செயல்படுவதென முடிவுசெய்தார்கள். 1981ஆம் ஆண்டில் நீர்வேலி வங்கிக்கொள்ளையில் டெலோ இயக்கம் ஈடுபட்டு வெற்றியடைந்தது. இதற்குப்பிறகு போலீஸ் கெடுபிடி கடுமையானது. தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் இந்தியாவுக்குத் தப்பி செல்லும் வழியில் சிங்களப்போலீசாரிடம் பிடிபட்டார்கள். பிரபாகரனும், மற்றவர்களும் இந்தியாவுக்குத் தப்பி வந்தார்கள். தங்கத்துரை, குட்டிமணி ஆகியோருக்கும், பிரபாகரனுக்குமிடையேயிருந்த அந்த நல்லுறவு அவர்கள் சிறைப்பட்டபிறகு மற்றவர்களிடம் இருக்கவில்லை. தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர்களைச் சிறையிலிருந்து தப்புவிக்க பிரபாகரன் வகுத்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் டெலோ இயக்கத்தைச் சேர்ந்த மற்றவர்கள் தயக்கம் காட்டினார்கள். எனவே பிரபாகரனும் அவரது தோழர்களும் 1981ஆம் ஆண்டு இறுதியில் டெலோவிலிருந்து பிரிந்தார்கள்.

டெலோவிலிருந்தபோது வாங்கப்பட்ட ஆயுதங்கள், பணம் ஆகியவற்றை டெலோவிடமே பிரபாகரன் திருப்பிக் கொடுத்தார். அவர்களிமிருந்து ஆயுதங்களையும், பணத்தையும் எடுத்துச்செல்ல பிரபாகரன்



படிப்பகம்

www.padippakam.com

கொஞ்சமும் விரும்பவில்லை. டெலோவிலிருந்தபோது சிங்களப்போலீசாரிடம் மோதி பறித்தெடுக்கப்பட்ட ஆயுதங்களையும் டெலோவிடமே பிரபாகரன் ஒப்படைத்தார். இயக்கத்திலிருந்து ஆயுதங்களையும், பணத்தையும் எடுத்துக்கொண்டு பிரபாகரன் போய்விட்டார் என்ற பழிக்கு ஆளாக அவர் விரும்பவில்லை.

வெறும் கையுடன் வெளியேவந்த பிரபாகரனும் அவரது தோழர்களும் ஒருவேளை உணவுக்குக்கூட திண்டாடும் நிலைமை உருவானது. பண்ணைகளில் வேலைசெய்தும் காட்டுமிருகங்களை வேட்டையாடியும் அவர்கள் சாப்பிட்டனர். மிகக்கடுமையான சோதனைகளுக்கு அவர்கள் ஆளான போதிலும் கொஞ்சமும் மனவுறுதி குன்றாது செயல்பட்டனர்.

1978ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் தேதி ஜெயவர்த்தனா அரசு புதிய அரசியல் சட்டத்தை அறிமுகப்படுத்தியது. சிங்களமொழிக்கும், புத்த சமயத்திற்கும் இந்த அரசியல் சட்டத்தின்மூலம் விசேஷமான அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டது. தமிழ் இரண்டாம்தர நிலைக்குத் தள்ளப்பட்டது. ஜெயவர்த்தனா சர்வாதிகாரியானார். இந்தச் சட்டத்திற்குத் தமிழர்களின் எதிர்ப்பைத் தெரிவிக்க பிரபாகரன் விரும்பினார். இந்த எதிர்ப்பின் மூலம் உலகத்தின் கவனத்தைக் கவரவும் அவர் திட்டமிட்டார். இலங்கை நாடாளுமன்றத்தில் இந்த அரசியல்சட்டம் நிறைவேற்றப்பட்ட அன்று ஏர் சிலோன் (Air Ceylon) என்ற அரசு நிறுவனத்துக்குச் சொந்தமான ஒரே ஒரு பயணிகள் விமானத்தை விடுதலைப்புலிகள் குண்டு வைத்து தகர்த்தனர். கொழும்பு ரத்தமாலானை விமானநிலையத்திலிருந்த இந்த விமானத்திலிருந்த பயணிகள் அனைவரும் வெளியேறிய பிறகே விமானம் சிதைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அப்பாவிகளான சிங்கள மக்களை கொல்ல பிரபாகரன் ஒருபோதும் விரும்பியதில்லை என்பதற்கு இத்தாக்குதல் ஒரு சான்றாகும். இதைத் தொடர்ந்து தென்னாப்பிரிக்காவின் மோசமான பயங்கரவாதத்தடைச் சட்டத்தைப் பின்பற்றி மற்றொரு சட்டத்தினை ஜெயவர்த்தனா அமுலுக்குக் கொண்டுவந்தார். இக்கொடூரச் சட்டம் ஜூரிமார்கள் இல்லாமல் வழக்கு விசாரணை மேற்கொள்ளவும், யாரையும் 18 மாதகாலத்திற்குச் சிறையில் வைக்கவும் இடமளித்தது. ஆனாலும் விடுதலைப் புலிகளை ஒடுக்கமுடியவில்லை. யாழ்ப்பாணத்தில் பல்வேறு கொடுமைகளைச் செய்த சிங்களராணுவத் தளபதி பிரிகேடியர் வீரதுங்க என்பவருக்கு மேஜர் ஜெனரல் பதவி உயர்வினை ஜெயவர்த்தனா அளித்தார். இலங்கை இராணுவத்தின் தலைமைத்தளபதியாகவும் இவர் பொறுப்பேற்றார். இவர் பொறுப்பேற்ற தினத்தன்று அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் காங்கேசன்துறையில் இராணுவ ஜீப் ஒன்றின்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். 1981ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் தேதி லெப்டினட் சார்லஸ் அன்ரனி (சீலன்) தலைமையில் நடைபெற்ற இத்தாக்குதலில் ஒரு இராணுவ அதிகாரியும் ஒரு சிப்பாயும் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஜீப்பில் இருந்த ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினார்கள். சிங்களராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய முதல் கொரில்லாத் தாக்குதல் இதுவேயாகும்.

1981ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறையை சிங்களஅரசு தீவிரபடுத்தியது. அந்த ஆண்டு மே மாதம் 31ஆம் தேதி சிங்கள இராணுவமும், சிங்கள வெறியர்களும் யாழ்நகரை எரித்து வெறியாட்டம் நடத்தினார்கள். கொலையும், கொள்ளையும், தீ வைப்பும் தாராளமாக நடந்தன. நூற்றுக்கணக்கான கடைகள் எரிந்து சாம்பலாயின. யாழ் சந்தை தீப்பற்றி எரிந்தது. ''ஈழநாடு'' தினசரிப் பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டது. ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான யாழ்பொதுநூல்நிலையம் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. தமிழினத்தின் மீதான கலாச்சாரப் படுகொலைத் திட்டமாக இது அமைந்தது. யாழ்ப்பாணம் நூலகம் எரிந்து


படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்த போது அருகேயிருந்த பார்த்து பிரபாகரன் மனம் பதைத்தார். இந்நிகழ்ச்சி பற்றி பின்னர் அவரே என்னிடம் பின்வருமாறு கூறினார். ''தமிழர்களை அழிப்பதற்கு முன்னால் அவர்களுடைய கலாச்சாரத்தை அழித்துவிட வேண்டும் என திட்டமிட்ட சிங்களவர்கள் யாழ்நூலகத்தை அழித்தார்கள். என் கண்முன்னாலேயே யாழ்நூலகம் எரிந்து சாம்பலானதைப் பார்த்தேன். என்மனம் சொல்லமுடியாத வேதனைக்கு ஆளானது''.

''எமது மக்களை விடுவிக்கப் போராடியே ஆகவேண்டும் என்ற உறுதி என்நெஞ்சில் ஸ்திரப்பட்டது'' என்றார்.

இந்நிகழ்ச்சி நடந்து 4 மாதங்கள் கழித்து நான் யாழ்ப்பாணம் சென்றேன். அந்நகரில் சிங்களராணுவத்தினர் நடத்தியிருக்கும் அழிவுவேலைகளைப் பார்த்து மனம் நொந்தேன். தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவர்கள் என்னைப் பல இடங்களுக்கும் அழைத்து சென்று எல்லாவற்றையும் காட்டினார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவரான திரு. சிவசிதம்பரம், செயலாளர்-நாயகம், திரு. அமிர்தலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினரான திரு. யோகீஸ்வரன் போன்ற பலரைச் சந்தித்துப்பேசும் வாய்ப்பு எனக்கு அப்போது கிடைத்தது. திரு. யோகீஸ்வரனின் வீட்டை இராணுவத்தினர் முற்றிலுமாக எரித்துச்சாம்பலாக்கியிருந்தார்கள். யோகீஸ்வரன் தம்பதிகள் எப்படி உயிர்தப்பினார்கள் என்பது ஆச்சரியமான ஒன்றாகும்.

பல்வேறு இடங்களுக்கும் என்னை அழைத்து சென்று வருமாறு திரு. அமிர்தலிங்கம் என்னுடன் சிலரை அனுப்பினார். தெல்லிப்பளை பலநோக்குக்கூட்டறவுச் சங்கத் தலைவர் சிவமகராஜா, குணாளன், சின்னத்துரை ஆகிய இந்த நண்பர்கள் பல்வேறு இடங்களுக்கும் என்னை அழைத்து சென்றனர். இவர்கள்மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றி மேலும் அறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்களைச் சந்திக்க நான் விரும்பினேன். அதற்கு ஏற்பாடுகள் செய்வதாக அவர்கள் சொன்னார்கள்.

யாழ் மேயரான திரு. ராஜா விசுவநாதன் அவர்கள் யாழ்நகராட்சி சார்பில் எனக்கு ஒரு வரவேற்பளித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் பலரும் அங்கு வந்திருந்தார்கள். அந்தக் கூட்டம் முடிந்தபிறகு சில இளைஞர்களை குணாளன் எனக்கு அறிமுகப்படுத்தினார். ஆனால் அவர்களை இன்னாரெனச் சொல்லவில்லை. பிறகு நான் கேட்டபோது நீங்கள் பார்க்க விரும்பிய விடுதலைப்புலிகள் அவர்கள் என்று சொன்னார். அடடா! ஒரு நல்ல வாய்ப்பை இழந்துவிட்டோமே என்று நான் வருந்தினேன்.

1982ஆம் ஆண்டில் செப்டம்பர் 29ஆம் தேதியன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் பிரசாரம் செய்வதற்காக ஜெயவர்த்தனா யாழ்ப்பாணம் வந்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடற்படை வாகனங்கள் சிலவற்றுக்கு விடுதலைப் புலிகள் நிலக்கண்ணி வைத்தார்கள்.

1982ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் தேதி சாவகச்சேரி போலீஸ்நிலையத்தின் மீது விடுதலைப்புலியினர் வெற்றிகரமானத் தாக்குதலை நடத்தினார்கள். இத்தாக்குதலில் 3 போலீசார் சுட்டுக்கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். சீலன் தலைமையில் நடைபெற்ற இத்தாக்குதலில் ஏராளமான ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றி வெற்றிகரமாகத் தப்பினார்கள். சீலன் இத்தாக்குதலில் காயமடைந்தார். இதைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் இராணுவத்திற்கும், போலீசுக்கும் எதிராக கொரில்லாத் தாக்குதல்களை விடுதலைப்புலியினர் நடத்தினார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

1983ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் தேதி பாதுகாப்பு மாநாடு ஒன்றினை யாழ் அரசாங்க அதிபர் கூட்டினார். விடுதலைப்புலிகளை அழித்து ஒழிப்ப தற்கான ஒரு செயல்திட்டத்தை உருவாக்குவதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். இம்மாநாட்டில் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் **விஜயக் கோன்** மற்றும் இராணுவ உயர் போலீஸ் அதிகாரிகள், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் கலந்துகொள்ளவிருந்தனர். மாநாடு ஆரம்பமாவ தற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் மாநாட்டுக் கட்டிடத்தை விடுதலைப் புலிகள் குண்டுவைத்துத் தகர்த்தனர். பலத்த பாதுகாப்புக்குள் இருந்த இக் கட்டிடத்தின்மீது நடந்த தாக்குதல் அரசாங்கத்தை திகிலடையச் செய்தது.

1983ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி தமிழர் பகுதிகளில் உள்ளூ ராட்சி தேர்தல்களை நடத்த அரசாங்கம் முயன்றது. இத்தேர்தலை பகிஷ் கரிக்குமாறு பிரபாகரன் வேண்டுகோள் விடுத்தார். இவ்வேண்டுகோளுக்கு பெருவாரியான மக்கள் ஆதரவளித்தார்கள். இதன் காரணமாக ஆத்திர மடைந்த சிங்கள அரசு இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது.

1983ஆம் ஆண்டு ஜூன் மாதம் வவுனியா, திரிகோணமலை ஆகிய இடங்களில் தமிழர்கள் படுகொலைச் செய்யப்பட்டார்கள். நூற்றுக்கணக் கான வீடுகள் எரிந்து சாம்பாலாக்கப்பட்டன. தமிழர்களின் வழிபாட்டு ஸ்தலங்கள் அழிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டன. இதற்குப் பதிலடி கொடுக்க பிரபாகரன் திட்டமிட்டார்.

1983ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் தேதி பிரபாகரனின் நெருங்கிய தோழனும், விடுதலைப்புலிகளின் தலைசிறந்த தளபதிகளில் ஒருவருமான சீலன் எதிர்பாராதவிதமாக சிங்களராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட் டார். அந்நிலையில் போராடி வீரமரணமடைந்தார். இந்நிகழ்ச்சி பிரபாகரனின் கோபாவேசத்தை அதிகமாக்கியது. சீலனின் மரணத்திற்குப் பதிலடி கொடுத்தேயாகவேண்டும் என்று அவர் முடிவு செய்தார்.

ஜூலை 23ஆம் தேதி விடுதலைப்புலிகள் சிங்களராணுவத்திற்குப் பதிலடிகொடுக்க **யாழ்ப்பாணம்** திருநெல்வேலியிலுள்ள பலாலிவீதியில் தயாராகயிருந்தனர். 14 விடுதலைப்புலிகளை உள்ளடக்கிய இந்தப்படைக்கு லெப்டினட் செல்லக்கிளி தலைமைவகித்தார். இந்த 14 போராளிகளில் பிரபாகரனும் ஒருவராகயிருந்தார். தானே எல்லாவற்றுக்கும் தலைமை தாங்குவது என்பதல்லாமல் தன்னுடைய தோழர்களுக்கும் அந்தப் பயிற்சி வரவேண்டும் என்பதற்காக செல்லக்கிளியைத் தலைமைதாங்கச் செய்தார். சற்று நேரத்தில் இராணுவ டிரக்வண்டி ஒன்றும், ஜீப் ஒன்றுமாக அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தன. குறிப்பிட்ட இடத்தை ஜீப்வண்டி தாண்டியதும் நிலக்கண்ணிவெடி பயங்கரமாக வெடித்து ஜீப்வண்டி தூள்தூளாகி சிதறி யது. பின்னால் வந்துகொண்டிருந்த டிரக் வண்டிகளிலிருந்த இராணுவத்தி னர் தப்பியோட முயலும்போது விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகள் வெடித்தன. இத்தாக்குதலின் விளைவாக 13 சிங்களச் சிப்பாய்கள் கொல்லப் பட்டார்கள். இரண்டுபேர் காயமடைந்தனர். வெற்றி பெற்ற நிலையில் **லெப்டினட் செல்லக்கிளி** அவரது மார்பில் துப்பாக்கிகுண்டு ஒன்று பாய்ந்து அவர் வீரமரணமடைந்தார். விடுதலைப்புலிகளின் இத் தாக்குதல் ஒரு மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. இதன் விளை வாக ஆத்திரம்கொண்ட சிங்களவெறியர்கள் கொழும்பில் மிகப்பெரிய இனக்கலவரம் ஒன்றை நடத்தினார்கள். மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். கொழும்பு வெலிக்கடை சிறையில் வைக்கப்பட்டிருந்த தங்கத்துரை, குட்டிமணி போன்ற போராளிகள் பலரும் ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டார்கள். இந்தக் கொழும்புப் படு கொலை உலகத்தையே குலுக்கி விட்டது. இதன் விளைவாகத் தமிழகம் பொங்கி எழுந்தது. ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக மாபெரும் எழுச்சி தமிழகத்தில் ஏற்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

1983ஆம் ஆண்டு ஆகஸ்டு 7ஆம் தேதி என்னுடைய தலைமையில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் மதுரையிலிருந்து இலங்கையை நோக்கித் தியாகப்பயணத்தை மேற்கொண்டோம். இந்தப் பயணம் தமிழகத்தில் மாபெரும் எழுச்சியைத் தோற்றுவித்தது. இந்தப் பயணத்தைப் பற்றி பிரபாகரன் பின்னொருசமயம் என்னிடம் இவ்வாறு கூறினார். ''அண்ணா! உங்களது தியாகப்பயணம் ஈழத்தமிழர்கள் மத்தியில் பெரிய நம்பிக்கையை உருவாக்கியது. இந்தப்பயணத்தின்மூலம் எங்கள் பிரச்னையை சர்வதேசப் பிரச்னையாக்க நீங்கள் முயலுகிறீர்கள் என்பதை நான் புரிந்துகொண்டேன்'' என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து 83-84ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகளுக்கும், சிங்களராணுவத்திற்குமிடையே பல தாக்குதல்கள் நடைபெற்றன. 1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ஆம் தேதி யாழ் இரயில்வே நிலையத்திற்கு அருகே சிங்கள இராணுவத்திற்கு எதிராக ஒரு தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலினால் பல இராணுவ வெறியர்கள் கொல்லப்பட்டனர். செய்தியறிந்த சிங்கள இராணுவத்தினர் மேலும் வந்து குவிந்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்த அடைக்கலமாதா ஆலயத்தைத் தாக்கி சேதப்படுத்தினார்கள். வீதியில் சென்று கொண்டிருந்த அப்பாவித் தமிழ்மக்களை சுட்டுக்கொன்றார்கள். யாழ்க்கூட்டுறவுப் பண்டக சாலையை எரித்தார்கள். சிங்களராணுவத்தின் அட்டகாசத்தை முறியடிக்க விடுதலைப்புலிகள் களத்தில் குதித்தார்கள். புலிகளோடு மக்களும் சேர்ந்து போராடியது ஒரு மாபெரும் திருப்பமாக அமைந்தது. யாழ் நகரில் பொதுமக்களே ஆங்காங்கு தடைகள் ஏற்படுத்தினார்கள். இராணுவ வண்டிகளைக் கண்டதும் வெடிகுண்டுகளை வீசினார்கள். ஏப்ரல் 10ஆம் தேதியன்று காலை மக்கள் தாக்குதலின் விளைவாக யாழ்ப்பாணத்திலிருந்த பௌத்தவிகாரையும் சிங்கள மகாவித்யாலயமும் நாசமாக்கப்பட்டன. பல அரசாங்க கட்டிடங்களும் தாக்கப்பட்டன. விடுதலைப்புலிகளின் போராட்டம் மக்கள் போராட்டமாக மாறுகிறது என்பதற்கு அடையாளமாக இந்நிகழ்ச்சிகள் அமைந்தன.

இதைத்தொடர்ந்து மக்கள்வேறு, விடுதலைப்புலிகள் வேறு அல்ல இருவரும் ஒன்று என்ற நிலைமை உருவானது.

1984ஆம் ஆண்டு நெடுகிலும் தொடர்ச்சியாக சிங்களராணுவத்திற்கு எதிராகப் பல்வேறு தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தினார்கள். இதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேருவதற்கு போட்டிபோட்டுக் கொண்டு முன்வந்தனர். மக்களும் விடுதலைப்புலிகளுக்குத் தாராளமாக உதவி செய்தார்கள், என்றாலும் சேர முன்வந்தவர்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்ள பிரபாகரன் விரும்பவில்லை. தங்களை முழுமையாக நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணிக்கும் தியாக உணர்வுக்கொண்டவர்களையே பிரபாகரன் தேர்ந்தெடுத்தார். தனது இயக்கத்தின் எண்ணிக்கையைப் பெருக்கிக் காட்டவேண்டுமென்று அவர் ஒருபோதும் விரும்பியது இல்லை. எண்ணிக்கைக் குறைவாகயிருந்தாலும் வீரமும் - தியாகமும் நிரம்பப்பெற்றவர்களாக இருந்தால்தான் களத்தில் வெற்றிகள் பெறமுடியும் என்று அவர் உறுதியாக நம்பினார். எனவே பலவிதமான சோதனைகளுக்குப் பிறகே விடுதலைப்புலிகளின் இயக்கத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள். தேர்ந்தெடுக்கப்படாத இளைஞர்கள் மற்ற இயக்கங்களில் போய்ச்சேர்ந்தார்கள். எனவேதான் விடுதலைப்புலிகள் இயக்கத்திலுள்ள ஒழுங்கும், கட்டுப்பாடும், தியாக உணர்வும் மற்ற இயக்கங்களில் காணப்படவில்லை.


படிப்பகம்

www.padippakam.com

1984ஆம் ஆண்டுக்குப்பிறகு விடுதலைப்புலிகளின் இயக்கம் வேகமாக விரிவடைந்தது. பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இராணுவ பயிற்சியளிக்கப் பட்டு அவர்கள் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் செயலில் இறங்கினார்கள். தமிழீழம் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் பிராந்திய தளபதிகள் நியமிக்கப்பட்டார்கள். பிரபாகரனின் ஆரம்பக்கால தோழர்களான **மாத்தையா, கிட்டு, விக்டர், புலேந்திரன்,** குமரப்பா ஆகியோர் பிராந்திய தளபதிகளாகப் பொறுப் பேற்றார்கள். அரசியல்பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டது. அதற்கு நாடெங் கும் கிளைகள்உருவாக்கப்பட்டன. மற்ற இயக்கங்களில் இருப்பதைப் போல இராணுவ பிரிவுக்கும், அரசியல் பிரிவுக்குமிடையே மோதல் புலிகள் இயக்கத்தில் அறவே கிடையாது. இரண்டும் இணைந்தே பணி புரிந்து வருகின்றன. இதன்பின்னர் தமிழீழப்பகுதியில் சிங்கள சிவில் நிர் வாகம் அடியோடு ஒழித்துக்கட்டப்பட்டது. சிங்கள இராணுவம் முகாம் களைவிட்டு வெளியேவர விடாமல் முடக்கப்பட்டது. தமிழீழத்தில் பல பகுதிகள் விடுதலைப்புலிகளின் வசமாகியது.




படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் இயக்கமாக மலர்ந்தது

1983ஆம் ஆண்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய இளைஞர்களைக் கொண்ட இரகசியமாகயிருந்த விடுதலைப்புலிகளின் இயக்கம் ஐந்தாண்டு காலத்திற்குள் இத்தகைய வேகமான வளர்ச்சியைப் பெற்றது எப்படி? தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாக உருவானவிதம் எவ்வாறு? இவ்வளவு மகத்தான சாதனைகளை விடுதலைப்புலிகள் எப்படிச் செய்தார்கள்? என்ற கேள்விகளை பிரபாகரனின் நெருங்கிய தோழரான தளபதி கிட்டு அவர்களிடம் கேட்டபோது அவர் அவற்றுக்கு விடையளித்தார். விடுதலைப்புலி இயக்கத்தின் வியக்கத்தக்க வளர்ச்சியை குறித்தும் அதனுடைய அற்புதமான சாதனைகள் குறித்தும் என்னிடம் அவர் பின்வருமாறு கூறினார்.

''1976ஆம் ஆண்டு எங்கள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது ஆயுதப் போராட்டத்தில் மக்களுக்கு நம்பிக்கை வரவில்லை. ஆயுதப்போராட்டம் எந்த அளவுக்கு வெற்றியளிக்கமுடியும்? என்பது பெரும் கேள்விக்குறியாக இருந்தது. சிங்களராணுவத்துடன் மோதி பையன்களால் வெற்றிபெற முடியுமா? என்ற சந்தேகம் மக்களுக்கு இருந்தது. அந்தச் சமயத்தில் இராணுவத்தின் கெடுபிடியும் அதிகமாக இருந்தது. இராணுவம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்றது. இதன்காரணமாக இராணுவத்தை எதிர்த்து இளைஞர்களால் போராட முடியுமா? என மக்கள் தயங்கினார்கள்''.

''76ஆம் ஆண்டிலிருந்து 83ஆம் ஆண்டுவரை இயக்கத்தில் ஒரு தேக்கக் கட்டம் இருந்தது. இயக்கத்தில் சேருவதற்கு இளைஞர்கள் பெருமளவு முன்வரவில்லை. ஆனால் இயக்கத்தைக் காட்டுக் கொடுத்த துரோகிகளை அதாவது அரசாங்க உளவாளிகளை நாங்கள் களையெடுத்தோம். அத்தகையவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்தோம். இதன்காரணமாக மக்களுக்கு எங்கள்மீது நம்பிக்கை படிப்படியாக வளரத்தொடங்கியது. 1983ஆம் ஆண்டு ஜூலை 13ஆம் தேதி, 13 இராணுவவீரர்களை நாங்கள் சுட்டுவீழ்த்திய நிகழ்ச்சியும், அதைத்தொடர்ந்து ஏற்பட்ட பெரிய கலவரமும் எங்கள் நாட்டின் அரசியல் சூழ்நிலையையே பெரிதும் மாற்றிவிட்டன. தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்கள் நடத்திய கொலைவெறித் தாண்டவம் இளைஞர்களைக் கொதித்தெழ வைத்தது.

1976ஆம் ஆண்டில் இதுபோன்ற கலவரம் நடந்தபோது தமிழர்களை வழிநடத்திச் செல்ல ஒரு இயக்கம் இருக்கவில்லை. ஆனால் 1983ஆம் ஆண்டு கலவரம் ஏற்பட்டபோது மக்களை வழிநடத்த நாங்கள் இருந்தோம். இதன்விளைவாக இளைஞர்கள் இயக்கத்தில் நேரடியாகப்பங்கேற்க முன்வந்தார்கள். இதையொட்டி இந்தியஅரசு எங்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுக்க முன்வந்தது. மற்ற இயக்கங்கள் இந்த விஷயத்தில் எங்களை முந்திக் கொண்டன. எங்களுக்கு இந்த உதவி கடைசியாகத்தான் கிடைத்தது. சிங்களர்களின் கொடுமைகளை எதிர்த்துப் போராட வேண்டுமென்று துடித்த எங்களது இளைஞர்கள் பிளாட், ஈ.பி.ஆர்.எல்.எப்., டெலோ போன்ற இயக்கங்களில் முன்பின் யோசியாது சேர்ந்தனர். இதனால் எங்கள் இயக்கத்திற்குக் கொஞ்சம் பின்னடைவு இருந்தது. மற்ற இயக்கங்களைப்போல நாங்கள் திடீர் வளர்ச்சியடையவில்லை. நாங்கள் படிப்படியான வளர்ச்சியையே அடையவிரும்பினோம். அவ்வாறு வளர்ந்ததினால்தான் இன்றைக்கும் நாங்கள் களத்தில் உறுதியாக நிற்க முடிகிறது''.



படிப்பகம்

www.padippakam.com

''1984-85ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிராக சிங்களராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகளும், அவற்றை எதிர்த்து நாங்கள் நடத்திய போராட்டங்களும் மக்களிடம் நம்பிக்கையை ஊட்டின. 1983ஆம் ஆண்டிலிருந்து 85ஆம் ஆண்டுவரை தமிழீழப்பகுதிகளில் இராணுவத்தினர் தாராளமாக நடமாடினார்கள். திடீர் திடீரெனப் புகுந்து மக்களைத் தாக்கினார்கள். ஆனால் 85ஆம் ஆண்டுக்குப் பிறகு சிங்கள ராணுவ நடமாட்டத்தை நாங்கள் கட்டுப்படுத்தினோம். யாழ் மாவட்டமும், இன்னும் சில பகுதிகளும் எங்கள் முழு கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. இளைஞர்கள் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் நாட்டைக் கொண்டுவந்து விட்டார்கள் என்று மக்கள் பெருமிதத்துடன் பேசிக்கொண்டார்கள். இதன் விளைவாக விரைவில் தமிழீழம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையும் மக்களிடம் வளர்ந்தது. இந்த நம்பிக்கையில் மக்களும் இயக்கத்தில் நேரடியாகப் பங்குகொள்ளத் தொடங்கினார்கள். எந்தெந்த வடிவங்களில் அவர்கள் பங்களித்தார்கள் என்பது மிக முக்கியமானது. மக்களுக்காக நாங்கள் ஆயுதம் தாங்கிப் போராடினோம். எனவே யாருக்காகப் போராடினோமோ அந்த மக்களையும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கச் செய்ய வேண்டுமென்று விரும்பினோம். எனவே பல வடிவங்களில் மக்களை இப்போராட்டத்தில் பங்கெடுக்க வைத்தோம்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவமுகாம்களை நாங்கள் அமைத்தோம். சிங்களராணுவத்திடமிருந்து மக்களைக் காக்க வேண்டிய பொறுப்பை அந்தந்த முகாம்களிலிருந்த இளைஞர்கள் ஏற்றிருந்தனர். ஒரு முகாமில் சுமார் 500 இளைஞர்கள் இருந்தனர். இவர்களுக்குத் தேவையான உணவு மற்ற உதவிகளை நாங்கள் இயக்கத்திலிருந்து செய்து கொடுப்பதில்லை. அந்தந்தப் பகுதி மக்களே அவற்றைச் செய்வதற்கு முன் வந்தார்கள். ஏனென்றால் தமிழர் பகுதிகளில் சிங்களராணுவம் நுழைய முயலும்போது அதை வீரத்துடன் எதிர்த்துப் போராடிப் புலிகள் தங்களைக் காப்பதை மக்கள் நேரடியாகப் பார்த்தார்கள். சிங்களராணுவத்துடன் புலிகள் நேரடியாக மோதுவதை மக்கள் பார்த்ததினால் மக்களுக்கு உணர்ச்சிப் பூர்வமான ஒரு பிணைப்பு புலிகளுடன் ஏற்பட்டது. இந்த இளைஞர்கள் நமக்காக அடிபடுகிறார்கள். நமக்காக சாகிறார்கள் என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டது. அதனால் எங்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்ய மக்கள் தாமாகவே முன்வந்தார்கள்.

யாழ்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் முறைபோட்டுக் கொண்டு மக்களே காவல்காக்க வேண்டுமென்ற முறையை நாங்கள் கொண்டுவந்தோம். ஏனென்றால் நெடுகிலும் எங்கள் இளைஞர்களே விழித்திருந்து காவல்காக்க முடியாது. நாங்கள் குறிப்பிட்ட சில பகுதிகளில் அரண்கள் அமைத்து காவல்காத்தோம். மற்ற இடங்களில் மக்கள் காவல் காத்தார்கள். எதிரிகள் வரும்போது அவர்கள் ஓடோடி வந்து எங்களிடம் செய்தியைத் தெரிவிப்பார்கள். பிறகு நாங்கள் எதிரிகளை எதிர்த்துப் போராடுவோம். ஆக சிங்களராணுவத்தை எதிர்த்து நாங்கள் நடத்திய போராட்டத்தில் மக்களும் நாங்களும் இணைந்து போராடினோம்.

மக்கள் இவ்வாறு எங்களுக்கு உதவுவதற்கு முன்வந்ததற்கு இது அவர்களின் சொந்தப்பிரச்னை என்பது முக்கிய காரணமாகும். எங்களோடு இப்படி ஒத்துழைக்காவிட்டால் சிங்களராணுவம் கிராமங்களில் புகுந்து தங்களுக்கு சொல்லொண்ணாத அழிவுகளை ஏற்படுத்தும் என்பதை மக்கள் உணர்ந்திருந்தார்கள். எனவே தாமாகவே முன்வந்து இத்தகைய பணிகளைச் செய்தார்கள். ஏனைய இயக்கங்களோடு தொடர்புகொண்டிருந்த காரணங்களினாலும் மற்றும் சில காரணங்களினாலும் எங்களுக்கு எதிராக இருந்தவர்கள்கூட, ஊர்மக்களே திரண்டு எங்களுக்கு ஒத்துழைக்கும் போது அவர்களால் விலகிநிற்கமுடியவில்லை. எனவே அவர்களும் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டிய நிலைமைக்கு ஆளாகி, எங்களுடைய செயல்பாடுகளைக்கண்டு எங்களுக்கு ஆதரவாக மாறிக்கொண்டிருந்தார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

கடற்கரையோரமிருந்த மக்களைக்கொண்டு கரையோரப் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. நடுப்புறத்திலிருந்த கிராமங்களிலும் பாது காப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இக்குழுக்களில் மக்கள் உற் சாகத்துடன் பங்கு கொண்டனர். இக்குழுக்களுக்கும் எங்களுக்குமிடையே இணக்கமான தொடர்பு இருந்தது.

சிங்களஅரசு நிர்வாக இயந்திரத்தை நாங்கள் முற்றிலுமாகச் செயலற்றுப் போக வைத்தோம். எனவே கிராமங்களில் ஏற்படும் பிரச்னைகளுக்கு பரி காரம்காண ஒரு அமைப்புத் தேவைப்பட்டது. எனவே ஒவ்வொரு கிராமத் திலும் சமாதானசபை, கிராம நீதிமன்றம் போன்ற அமைப்புகளை மக் களின் துணைகொண்டு ஏற்படுத்தினோம். யாழ்மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 110 கிராமங்களில் இத்தகைய அமைப்புகளை ஏற்படுத்தி யிருந்தோம். கிராம மக்களிடம் செல்வாக்குப் பெற்றவர்களை இந்த அமைப்புகளில் இடம்பெறச் செய்தோம். நல்லவர்களாகவும், பண்புள்ள வர்களாகவும். மக்களின் மதிப்பைப் பெற்றவர்களாகவும் இவர்கள் திகழ்ந் ததினால் இந்த அமைப்புகள் திறம்பட இயங்கின. இந்த அமைப்புகளின் முடிவுகளை மக்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டார்கள். சமாதானசபை களும், கிராம நீதிமன்றங்களும் எவ்வித ஆதாயத்தையும் எதிர்பாராமல் சேவை செய்ததால் இவைகள் மக்களின் உண்மையான இயக்கங்களாக உருவெடுத்தன. சிங்கள அரசாங்கத்தினால் பல ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்க்கப்பட முடியாமலிருந்த பல பிரச்னைகளை இந்த அமைப்புகள் சுலப மாகத் தீர்த்துவைத்தன. இதன் விளைவாக எங்களுக்கும் நல்ல பெயர் ஏற் பட்டது. ஒரு சுதந்தர அரசாங்கத்தின்கீழ் வாழ்கிறோம் என்ற உணர்வை மக்கள் பெறத் தொடங்கினார்கள்.

இந்த மக்கள் இயக்கத்தில் பெண்களையும் ஈடுபடுத்த வேண்டுமென்று நாங்கள் திட்டமிட்டோம். ஏனெனில் பெண்கள் பங்குகொள்ளாமல் எங் கள் போராட்டம் வெற்றிபெறமுடியாது என்பதை நாங்கள் உணர்ந்திருந் தோம். முதலில் பெண்களுக்கு முதலுதவி சிகிட்சைக்கான பயிற்சியைக் கொடுத்தோம். யாழ் மாவட்டத்தில் மட்டும் சுமார் 500க்கு மேற்பட்ட சிகிட்சைப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. யாழ்மாவட்டத்திலுள்ள பெண்களில் சுமார் 75 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் முதலுதவி பயிற்சிப்பெற்றவர்களாக மாற்றப்பட்டார்கள். இயக்கத்தில் சேர்வதைப் பற்றி முதலில் தயங்கிய பெண்கள்கூட இத்தகைய பயிற்சிவகுப்புகளுக்கு ஏராளமாக வந்தார்கள்.

பிறகு, **'சுதந்திரப்பறவைகள்'** என்ற பெயரில் சமூகசேவை அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி ஏராளமான பெண்களை அதில் ஈடுபடவைத்தோம். அகதிகள் புனர்வாழ்வு போன்ற பல்வேறு சமூகப்பணிகளை இந்த அமைப் பிலிருந்த பெண்கள் உற்சாகத்துடன் செய்தார்கள்.

அரசியல் தெளிவு, போராடும் உணர்வு போன்ற குணநலன்கள் கொண்ட பெண்களைத் தேர்ந்தெடுத்து ஆயுதம்தாங்கிய பயிற்சி கொடுத் தோம். இப்படிப் படிப்படியாகப் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் விடுதலைப்போராட்டத்தில் பங்குகொள்ள வைத்தோம்.

தமிழீழத்தில் மூன்று பெரிய சாதிப் பிரிவுகள் இருந்தன. ஆனால் சாதி பேதமற்ற சமுதாயத்தை நாங்கள் அமைக்கவிரும்பினோம். தமிழின உணர் வுக்கு சாதியுணர்வு முட்டுக்கட்டை என்பதை மக்களுக்குப் போதித்தோம். சாதி அடிப்படையைத் திடீரென மக்களால் ஒதுக்கித்தள்ளிவிடமுடியாது. எனவே தொழில் அடிப்படையில் அவர்களை ஒன்றுதிரட்டத் திட்டமிட் டோம். விவசாயம், மீன்பிடித்தல், மரம் ஏறுதல் ஆகிய இம்மூன்று முக்கிய



படிப்பகம்

www.padippakam.com

தொழில்கள் அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டினோம். விவசாயி களை விவசாயிகள் சங்கத்தின்மூலமும், மீன்பிடிப்பவர்களை மீனவர்சங்கத் தின் மூலமும், மரமேறுகிற தொழில் செய்பவர்களை சீவல் தொழிலாளர் சங்கத்தின்மூலமும் அணிதிரட்டினோம். இந்த அமைப்புகளின்மூலம் இவர் களிடையே ஒற்றுமையை உருவாக்கினோம். இவர்களின் பொருளாதா ரத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்தோம். இதன்விளைவாக இளைஞர்களிடையே இப்போது சாதிவேறுபாடு இல்லை. வயதான பெரியவர்களிடம்கூட முன்னால் இருந்த அளவுக்குச் சாதிவேறுபாடு இல்லை.

மாணவர்களுக்காக **SOLT** என்னும் அமைப்பை உருவாக்கினோம். அகதி கள் புனர்வாழ்வுக்காக ''தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தை'' அமைத்தோம்.

ஒருகட்டத்தில் எல்லாமக்களையும் ஒருங்கிணைந்த ஒரு அரசியலமைப்பு எங்களுக்குத் தேவைப்பட்டது. அதாவது ஒரு மக்கள் கட்சியை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த சகல சங்கங்களையும், அமைப்பு களையும் ஒருங்கிணைத்து அத்தகைய அமைப்பு ஒன்றினை நாங்கள் ஏற் படுத்தினோம். இவை எல்லாவற்றுக்கும் முன்னோடியாக நாங்கள் இருந் தோம். இப்படி நாங்கள் மக்களோடு மக்களாக இணைந்து வேலை செய்த தனால் எங்கள்மீது மக்கள் நம்பிக்கைக்கொண்டார்கள். எங்களுடைய போராட்டங்களுக்கு பக்கபலமாக நின்றார்கள். சிங்களராணுவத்திற்கு எதி ராக அகழிகளை வெட்டுதல், சுரங்கப்பாதைகள் அமைத்தல், சாலைத் தடைகள் ஏற்படுத்துதல், அரண்கள் உருவாக்குதல் போன்ற பணிகளில் எங்களுக்கு உதவிசெய்ய மக்கள் தாமாகவே முன்வந்தார்கள். தங்களைக் காக்க உயிரைத் திரணமாக மதித்துப் போராடும் புலிகளுக்கு இந்த உதவி யையாவது நாம் செய்யவேண்டுமென்று மக்கள் உணர்ந்து ஒத்துழைத்தனர். நாங்கள் ஆயுதப்போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவேளையில் மக்கள் ஒன்றுதிரண்டு எங்களுக்கு ஆதரவாக ஊர்வலம், உண்ணாவிரதம், போன்ற வைகளின்மூலம் தங்கள் ஆதரவைக்காட்டினார்கள். 'ராஜீவ்-ஜெயவர்த்தனா' ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் அதற்கு எதிராக மக்கள் திரண்டதோடு மட்டுமல்லாமல் எங்களுக்கு ஆதரவாக நின்றார்கள். மக்களுக்கும், எங் களுக்குமிடையே வேறுபாட்டை உருவாக்கச் செய்யப்பட்ட முயற்சிகள் படு தோல்வியடைந்தன. நாங்கள் வேறு, மக்கள் வேறு அல்ல என்பது நிரூபிக்கப்பட்டது.

சமூகவிரோதக் குழுக்கள்மூலம் மக்களுக்கும் எங்களுக்குமிடையே பிளவு ஏற்படுத்த சிங்களஅரசும், இந்தியஅரசும் முயற்சிகள் செய்தன. ஆனால் எங்கள்மீது மக்கள்வைத்திருந்த நம்பிக்கையின் விளைவாக இந்தப் பொய்ப் பிரச்சாரங்களுக்கு அவர்கள் இரையாகவில்லை. அதனால்தான் பலமிக்க இந்தியராணுவத்தின் தாக்குதலை மக்கள்துணையோடு நாங்கள் வெற்றி கரமாக எதிர்த்து நிற்கமுடிந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழமக்களின் பேராதரவுபெற்ற இயக் கம். மக்கள் உதவியோடு எங்களுடைய போராட்டத்தை மேலும் விரிவு படுத்துவோம். இறுதிவெற்றி காணும்வரை ஓயமாட்டோம்''.

தளபதி கிட்டு கூறிய இந்த விவரங்கள் உண்மையில் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் என்பதில் சந்தேகமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலைப்புலிகளின் கொள்கைகள்

விடுதலைப்புலிகளின் இயக்கம் வெறும் ஆயுதம் தாங்கிய கும்பல் அல்ல. திட்டவட்டமான தெளிவான இலட்சியங்களை இலக்காகக்கொண்டு அவற்றுக்காகப் போராடும் ஒரு புரட்சிப்படை. தமிழீழ மக்களின் சுதந்திர ராணுவம் அது.

தனது தோழர்களுக்கு வெறும் ஆயுதப் பயிற்சியைமட்டும் பிரபாகரன் அளிக்கவில்லை. அரசியல் சித்தாந்தங்களையும் அவர்களுக்குப் புகட்டி விழிப்புள்ள அரசியல்வாதிகளாகவும் அவர்களை உருவாக்கி இருக்கிறார்.

ஆனால் அவரது தத்துவங்களைப்புரிந்து கொள்ளாதவர்களும் அரைகுறையாகப் புரிந்து கொண்டிருப்பவர்களும் அவரைச் சர்வாதிகாரச் சிந்தனை படைத்தவர் எனக் குற்றம்சாட்டுகிறார்கள்.

ஆங்கிலவார ஏடான இந்தியா-டு-டே 30-6-86 தேதி இதழுக்கு அளித்த ஒரு பேட்டியில் அவர்கூறிய சில கருத்துக்கள் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டன.

தமிழீழத்தின் எதிர்காலம் பற்றியும், அதனுடைய அரசியல் அமைப்பு எப்படி இருக்கும் என்பதைப்பற்றியும் விளக்கும்போது பிரபாகரன் சில கருத்துக்களை வெளியிட்டார்.

கேள்வி:- தமிழீழத்துக்கு எம்மாதிரியான அரசியலமைப்பு இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

பிரபா:- தமிழீழ அரசு ஒரு சோசலிச அரசாக அமைந்திருக்கும். மக்களால் ஆதரிக்கப்படும் ஒரே ஒரு அரசியற் கட்சியே அங்கு இருக்கும். பல கட்சி ஜனநாயகத்தை நான் விரும்பவில்லை. ஒரு கட்சி அரசு மூலமே விரைவில் தமிழீத்தை வளர்ச்சியடைந்த ஒரு நாடாக மாற்றியமைக்க முடியும். ஒரு சோசலிச அமைப்பில் மக்களின் தேவைகளுக்கே முக்கியத்துவம் தரப்படும்.

கேள்வி:- பாராளுமன்ற ஜனநாயகம் இருக்குமா?

பிரபா:- மக்கள் ஜனநாயகக் குடியரசாக - யூகோஸ்லேவிய அமைப்பு முறையில் ஒரு கட்சியை மக்கள் தெரிவுசெய்வார்கள்.

தடையைக்கண்டு மிரளும் காளையைப்போல சிலர் இதைக்கண்டு மிரண்டார்கள். ஒரு கட்சி ஆட்சியை ஸ்தாபிக்க பிரபாகரன் திட்டமிடுகிறார். எனவே அவர் ஜனநாயகவிரோதி. சர்வாதிகார மனோபாவம் கொண்டவர் என்றெல்லாம் குற்றம் சாட்டினார்கள். தமிழ்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவரைப்பற்றிய அவதூறு பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டது. பிரபாகரனின் தியாக வாழ்வின்மீது எத்தகைய குறையும் கூற முடியாதவர்கள், வேறு எந்த வகையிலும் அவர்மீது குற்றம் சாட்ட முடியாதவர்கள் அவரைச் சர்வாதிகார வெறிபிடித்தவர் எனக் குற்றம் சாட்டினார்கள். ஜனநாயகத்தைக் காக்க அவதரித்தவர்கள் போலக் கூக்குரலிட்டார்கள். ''ஒருகட்சி ஆட்சியை ஏற்படுத்த முயலும் பிரபாகரனை ஆதரிக்கலாமா?'' என ஓலமிட்டார்கள்.

இவர்களின் குற்றச்சாட்டுகளுக்குபிரபாகரனே தகுந்த பதிலை அளித்தார். ''இந்து'' நாளிதழுக்கு 1986 செப்டம்பர் மாதம் 4, 5 தேதிகளில் அவர் அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

''எமது மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதைப் பொறுத்தே எங்கள் அரசு அமையும். மக்களுக்கு விருப்பமான கட்சியை அவர்கள் தேர்வு செய்யலாம். இந்தியாவைப் பாருங்கள். நீண்ட நெடுங்காலமாக காங்கிரசுக் கட்சி இங்கே ஆட்சி செய்யவில்லையா? இன்றும் அதே காங்கிரஸ் கட்சி தானே இங்கே ஆட்சி செய்கிறது. எனது கருத்து சிலருக்கு சந்தேகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறுகிறார்கள். போராட்டத்தில் பங்குகொள்ளாமலேயே தலைமைப்பதவியைக் கைப்பற்ற விரும்புபவர்களே இவ்வாறு பேசுகிறார்கள் என்பது என் கருத்து. விடுதலைப் போராட்டத்தில் பங்குகொள்ளாமல் விலகி நின்றுகொண்டு அதேவேளையில் தலைமைப்பதவியை அடைய கனவுகாணும் சிலரின் மனத்திலேயே எனது கருத்துக்கள் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. சோசலிச நாடுகள் அனைத்தையும் ஒருமுறை நோக்குங்கள். அங்கெல்லாம் இருப்பது என்ன? அங்கெல்லாம் ஒருகட்சிதான் புரட்சியை வெற்றிகரமாக முன்னெடுத்து மக்களின் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சியை நடத்துகிறது. கியூபா, சோவியத் குடியரசு உட்பட ஒவ்வொரு சோசலிச நாட்டிலும் இதுதான் நிலைமை''.

பிரபாகரனின் மேற்கூறிய விளக்கம் மிகத் தெளிவானது. ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்தி அதற்காக எண்ணற்ற தியாகங்களைச் செய்தவர்களுக்கு அந்த நாட்டினைப் புனர்நிர்மாணம் செய்யும் பணியிலும் முக்கிய பங்கு உண்டு. அது அவர்களின் கடமையுமாகும். ஆனால் எதிர்ப்புரட்சிச் சக்திகளுக்கு அந்தப் பொறுப்பும் கடமையும் கிடையாது. எனவே அவர்கள் ஜனநாயகப் போர்வையில் புகுந்துகொண்டு மக்களைக் குழப்பி ஏமாற்ற முயற்சிக்கிறார்கள். விடுதலைப்போரின் விளைவாக மிகப்பெரிய சீரழிவுக்கு உள்ளாகியிருக்கும் தமிழீழத்திரு நாட்டை முழுமையாகச் சீரமைப்பதற்கும், நொந்துபோன அந்த மக்களுக்குப் புதிய வாழ்வு அமைப்பதற்கும் திட்டமிட்டு வேலை செய்வேண்டும். அது உடனடியாக முடியக்கூடிய வேலை அல்ல. பல ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய பணி. இந்த மகத்தான பணியினை ஜனநாயகத்தின் பெயரால் பொறுப்பற்றவர்களிடம் ஒப்படைத்துவிடமுடியாது. யார் அந்த நாட்டுக்காகப் போராடி ரத்தம் சிந்தினார்களோ, யார் அதற்காக எண்ணற்ற தியாகங்களைச் செய்தார்களோ அவர்களை நம்பித்தான் அந்தப் பொறுப்பை அந்த நாட்டு மக்கள் ஒப்படைப்பார்கள். மக்களால் ஒப்படைக்கப்பட்ட இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டிய கடமை விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு உண்டு. அந்தக் கடமையிலிருந்து அந்த இயக்கமோ, அதன் தலைவர் பிரபாகரனோ விலகிச் சென்றுவிடமுடியாது.

சோவியத்நாட்டில் புரட்சியை முன்னின்று நடத்திய லெனின் அந்நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நிர்மாணப்பணியை முன்னின்று நடத்தினார். செஞ்சீனத்தில் **மாசேதுங்**, கியூபாவில் **பிடல்காஸ்ட்ரோ**, யூகோஸ்லேவியாவில் **டிட்டோ** வியட்நாமில் **ஹோ-சி-மின்** ஆகியோர் புரட்சித் தளபதிகளாக விளங்கியதோடு ஆட்சித் தலைவர்களாகவும் பொறுப்பேற்று புனர்நிர்மாணப்பணியில் ஈடுபட்டு அந்நாடுகளை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் சென்றனர். இது ஜனநாயகத்திற்கு விரோதம் என்றோ, சர்வாதிகாரம் என்றோ யாரேனும் குற்றம் சாட்டுவார்களேயானால் அவர்கள் பிரச்னைகளைத் திசை திருப்ப முயலுபவர்கள் ஆவார்கள்.

மேலும் ''இந்து'' இதழுக்கு பிரபாகரன் அளித்த பேட்டியில் தமது இயக்கத்தின் அரசியல் கோட்பாடுகள் குறித்துத் தெளிவான விளக்கத்தை அளித்துள்ளார். அவரது அரசியல் பார்வை விரிவானது. குழப்பமில்லாதது. திட்டவட்டமான குறிக்கோளை இலக்காகக்கொண்டது என்பதை எளிய சொற்களால் அவர் விளக்கும் விதம் உள்ளத்தைக் கவர்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

கே:- இறுதியாக உங்கள் அரசியல் பார்வை, சித்தாந்தம்பற்றி சில கேள்விகளை கேட்க விரும்புகிறேன். தமிழீழ விடுதலைப்புலிகளைப் பற்றியும் உங்களைப் பற்றியும் பல கோணங்களில் எழுதப்பட்டும், பேசப்பட்டும் வருகின்றன. ஒவ்வொரு மனிதனும் பல படிநிலைகளைத் தாண்டித்தான் வளர்கிறான். உங்களைப் பொறுத்தவரை காலத்தின் ஊடாக நீங்கள் பெற்ற அரசியல் பரிணாம வளர்ச்சிபற்றி நான் அறியவிரும்புகிறேன். தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் சித்தாந்தம் பற்றி முதலில் கூறுங்கள்.

பதில்: ''சோசலிசமும் தமிழீழமும்தான்'' எமது அரசியல் குறிக்கோள். அடிப்படைக் கோட்பாடு.

கே:- பத்திரிகையாளர்களும், வெளிநாட்டுப் பார்வையாளர்களும் தமிழீழப் போராளிகள் இயக்கங்களை மதிப்பாய்வு செய்யும்போது சில இயக்கங்களைத் தேசியவாதக் கோட்பாட்டில் உருவானவை என்றும், வேறுசில இயக்கங்களை சோசலிசக் கோட்பாட்டில் அமைந்தன என்றும் வேறுபடுத்திப் பேசுகிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் முன்பிருந்த டெலோ இயக்கமும் தேசியவாதக் கோட்பாட்டில் தோன்றியவை என்றும் ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகிய இயக்கங்கள் சோசலிசக் கருவில் பிறந்தவை என்றும் கூறுகிறார்கள். இந்த வேறுபாடுபற்றி உங்கள் கருத்து என்ன?

ப:- சிந்தாந்த ரீதியில் எல்லா இயக்கங்களும் ஒரே நிலைப்பாட்டை கொண்டிருப்பது போலத் தோன்றலாம். ஆனால் நடைமுறையில்தான் வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளலாம். சோசலிசம் என்பது இன்று பல ரகங்களைக் கொண்டதாக இருக்கிறது. சோசலிசத்திற்கு ஒருவர் அளிக்கும் விளக்கத்திலிருந்தும் அதை நடைமுறைப்படுத்தும் தன்மையிலிருந்தும் அதன் வேறுபாடுகளை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இன்று எல்லோருமே தம்மைச் சோசலிசவாதிகளெனக் கூறிக்கொள்கிறார்கள். ஜெயவர்த்தனா கூட தன்னை ஒரு சோசலிசவாதியெனக் கூறிக்கொள்ளவில்லையா? சோசலிசம் பேசுகிறவர்கள் அதனை நடைமுறைப்படுத்தும்பொழுது அதன் தன்மையை நாம் தீர்மானிக்க முடியும். எமது மக்களின் அபிலாசைகளையும் நலன்களையும் முழுமையாகப் பேணும் ஒரு சோசலிச சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது இலட்சியம். வெகுசனத்தின் ஆக்க சக்திக்கு ஊக்கமளிப்பதாக எமது சோசலிச இலட்சியம் அமையும். முன்பு ஒருமுறை யூகோஸ்லாவியாவின் சோசலிச வடிவம்பற்றி குறிப்பிட்டிருந்தேன். அரசியல் நடைமுறையில் சனநாயகப் பண்புகளை மேம்படுத்தும் ஒரு சோசலிசப் பரிசோதனையாக இது அமையப்பெற்றது என்பதே எனது கருத்து. தொழிலாளரின் சுயாட்சி என்ற திட்டத்தின்கீழ் இந்த சோசலிச அமைப்பில் சனநாயக உரிமைகளுக்கு இடமளிக்கப்படுகிறது.

ஒரு சோசலிச சமுதாய அமைப்பில் பரந்தளவில் மக்கள் சனநாயகத்திற்கு இடமளிப்பதே எமது குறிக்கோள். யூகோஸ்லாவியாபாணியில் சோசலிச அமைப்பைக் கட்டுவது எமது நோக்கமல்ல. எமக்கே உரித்தான, தனித்துவமான ஒரு சோசலிச வடிவத்தை நாம் எதிர்காலத்தில் அமைப்போம். யூகோஸ்லாவியா மேற்கொண்ட இன்னொரு முயற்சியையும் நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். நேருவின் காலத்தில் அவருடன் சேர்ந்து மூன்றாவது உலக சக்தியை அது உருவாக்க முயன்றது. அணிசேரா மண்டல நாடுகளின் இயக்கத்திற்கு இது மூலமாக அமைந்தது. முற்போக்கான சோசலிசப் போராட்டத்தில் அவர்களுக்குப் பாரிய பங்குண்டு. அதே வேளை எவரோடும் சார்பற்ற ஒரு சுதந்திரமான பாதையை யூகோஸ்லாவிய மக்கள் வகுத்துக்கொண்டனர். இப்படியான அம்சங்கள் எம்மை வெகுவாக கவர்ந்துள்ளன. இதனை நாம் மிகவும் ஆழமாகப் பரிசீலனை செய்து பார்க்கிறோம். இந்த வழிமுறைபற்றியும் நாம் எண்ணிப் பார்ப்பதுண்டு. எனினும், எமது கலாச்சாரம், பாரம்பரியம், வரலாறு ஆகியனவற்றிற்கு உகந்த



படிப்பகம்

www.padippakam.com

தாக ஒரு சோசலிசச் சமுதாய அமைப்பைக் கட்டி எழுப்புவது பற்றியே நாம் சிந்தித்து வருகிறோம். எமது சமுதாயக் கட்டுமானம் விசேச தனித் தன்மைகளைக் கொண்டதாக இருக்கிறது. எமது சமூகத்தில் பெரும் முத லாளிகள் என்று குறிப்பிட யாருமில்லை. குறிப்பிடத்தக்க அளவு நடுத்தர வர்க்கத்தினர் உண்டு''.

''சண்டே'' என்னும் ஆங்கில வார ஏட்டுக்கு 1986ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் தேதி அளித்த பேட்டியிலும் இதே கருத்தை அவர் வலி யுறுத்தியிருப்தோடு ''சுதந்திரத் தமிழீழத்தில் மனித சுதந்திரம் மதிக்கப் படும். தனிநபர் உரிமைகளுக்கு உத்தரவாதமுண்டு'' என்றும் அவர் கூறி யுள்ளார்.

மேலும் ''சுதந்திரத் தமிழீழம் அணிசேராக் கொள்கையைக் கடைப் பிடிக்கும். இந்தியாவின் நேசநாடாக விளங்கும். இந்துமகாசமுத்திரத்தை ஒரு சமாதானப் பிராந்தியமாக்கும் வெளிநாட்டுக்கொள்கையை இந்தியா வோடு சேர்ந்து கௌரவிக்கும்'' என்றும் கூறியுள்ளார்.

கே:- எப்படியோ ஒரு காலம் தமிழீழம் கைகூடிவிட்டால் அது எவ் வகையான நாடாக அமையுமென நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப:- தமிழீழம் ஒரு சோசலிச அரசாக அமையபெறும். சோசலிசம் என்பதன் மூலம் சமத்துவமான சமூக அமைப்பை நான் கருதுகிறேன். **இதில் மனித சுதந்திரத்திற்கும், தனிநபர் உரிமைகளுக்கும் உத்தரவாத முண்டு.** எல்லாவித ஒடுக்குமுறையும் சுரண்டலும் ஒழிக்கப்பட்ட மக்களின் உண்மையான ஜனநாயகமாக அது திகழும். தமிழ் மக்கள் தங்களுடைய பொருளாதாரத்தைப் பேணி வளர்த்து தமது கலாசாரத்தை மேம்பாடு செய்யும்வகையில் அவர்களுக்கு அதிகபட்ச வாய்ப்புகள் கிடைக்கின்ற ஒரு சுதந்திரச் சமூகமாகத் தமிழீழம் அமையும். இந்தச் சுதந்திரத் தமிழீழம் நடு நிலை நாடாக இருப்பதுடன் அணிசேராக்கொள்கையைக் கடைபிடிக்கும். அத்தோடு இந்தியாவோடு நேச உறவு கொண்டு அதன் பிராந்தியக் கொள் கைகளை, குறிப்பாக இந்துமகா சமுத்திரத்தை ஒரு சமாதானப் பிராந்திய மாக்கும் வெளிநாட்டுக்கொள்கையைக் கௌரவிக்கும்.

தமிழீழ மண்ணுக்கேற்ற கோட்பாட்டினையே கடைப்பிடிப்போம் என் பதை பிரபாகரன் திட்டவட்டமாகத் தெளிவாக்கியதன்மூலம் தனது அரசி யல் எதிரிகளின் பொய்ப்பிரச்சாரங்ளைத் தவிடுபொடியாக்குகிறார்.

தமிழீழமக்களின் தொன்றுதொட்ட கலாச்சாரம், பெருமைமிக்க பாரம் பரியம், சிறப்புமிக்க வரலாறு ஆகியவற்றோடு இசைந்த, அவற்றுக்கு உகந்த ஒரு சோசலிசச் சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே விடுதலைப்புலிகளின் இலட்சியம் என அவர் வரையறுத்துக் கூறியபிறகு எதிரிகளின் குற்றச் சாட்டுக்கள் யாவும் வலுவிழந்து விடுகின்றன.

மலையகத்தமிழர்கள் என்று அழைக்கப்படும் இந்திய வம்சாவழித் தமி ழர்கள் நிலைபற்றி போதுமான அக்கறையை பிரபாகரன் எடுத்துக்கொள்ள வில்லை என ஒரு குற்றச்சாட்டு சிலரால் சொல்லப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டில் கொஞ்சமும் உண்மையில்லை. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் மலையகத் தமிழ் இளைஞர்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மலையகத் தமிழர்களை ஒருபோதும் பிரித்துப்பார்த்ததில்லை. தமிழ்த்தேசிய இனம் என்பதற்கு இந்த இயக்கம் கொடுத்துள்ள விளக்கத்தைக் கீழே தருகிறோம். **சோசலிசத் தமிழீழத்தை நோக்கி...** என்ற தலைப்பில் 1980ஆம் ஆண்டு மாசி மாதத்தில் விடு தலைப்புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள நூலின் 28, 29ஆம் பக்கங்களில் பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

''தமிழ்த் தேசிய இனம் என்னும்பொழுது, வடக்கு-கிழக்கு மாகாணங் களைத் தமது பாரம்பரிய, மரபுரிமை மண்ணாகக் கொண்டுள்ள தமிழ்ப் பேசும் மக்களை மட்டுமல்ல, தென்னிலங்கையில் வதியும் சகல தமிழ்ப் பேசும் மக்களையும், குறிப்பாக, மலையகத்தில் வாழ்ந்துவரும் தமிழ்த் தோட்டப் பாட்டாளி மக்களையுமே குறிக்கிறோம். தமிழ்த்தேசிய அமைப்பில் மலையகத் தமிழரும், இஸ்லாமிய கிறிஸ்துவ, சைவ மதங் களைச் சார்ந்தவரும், மதசார்பு அற்றோருமான தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் அடங்குவர். தமிழீழம் என்னும் பொழுது, தமிழைத் தாய் மொழியாகக்கொண்ட தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான தேசிய இன அமைப்பையே குறிக்கிறோம்.

தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தில், தமிழீழ சோசலிசப் புரட்சி யில் மலையகத் தமிழ்ப் பாட்டாளி வர்க்கமும் இணைபிரியாத அங்கமாய் அமைந்துள்ளது என்பதே எமது நிலையாகும். தமிழருக்கெதிராகக் கட்ட விழ்த்து விடப்பட்ட தேசிய ஒடுக்குமுறையில் மிகவும் கொடூரமாக நசுக்கப் பட்டுவந்த மக்கள் இவர்களே. மொழிவாரியாக, தொழில்வாரியாக, கல்வி வாரியாக, பொருளாதாரரீதியாக இப்படிப் பல்வேறு வடிவங்களில் தலை விரித்தாடிய ஒடுக்குமுறையில் படுமோசமாக நசுக்கப்பட்டது மட்டுமன்றி குடியுரிமையில்லாத கொடூர நிலைக்கும், இவர்கள் ஆளாக்கப்பட்டார்கள், தமிழருக்கெதிராகக் குமுறி வெடித்த இனக்கலவரங்களில், மிகவும் கொடூர மாகத் தாக்கப்பட்டு, அகதிகள் என்ற அனாதரவான நிலைக்குத் தள்ளப் பட்டவர்கள் இம்மக்களே.

மலையகத் தமிழ்ப்பாட்டாளி வர்க்கமானது, இலங்கையின் பொருளா தார உற்பத்தி இயந்திரத்தை இயக்கிவரும் மாபெரும் தொழிலாக்க சக்தி யாக அமைந்திருப்பது, தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் முக்கியத் துவத்தை அதிகரிக்கிறது. தமிழரின் தேசிய விடுதலைக்கும், சோசலிசப் புரட்சிக்கும் இத்தொழிலாளி வர்க்கத்தின் பங்கு, அதிமுக்கியமானதாகும். சோசலிசப் புரட்சியின் மையமாக விளங்கும் இப்பாட்டாளிகளை அணி திரட்டும் ஒரு புரட்சிகரமான செயல்திட்டமே. சிங்கள முதலாளித்துவ அரசை முறியடிக்கும் வலுவைக் கொண்டிருக்கும். இதனை விடுவித்து, அனைத்துத் தமிழரின் நலனை முன்னிட்டு எமக்குப் 'பிரிவினை தேவை யில்லை' ன்பது, அரசியல் சாணக்கியம் ஆகாது. முற்போக்கான, புரட்சிகர தன்மையுடைய ஒரு தேசிய இனத்தின் விடுதலையெழுச்சியை, சோசலிசப் புரட்சிப் பாதையில் இட்டுச்செல்ல வழிதெரியாதவர்களின் வறட்டுச் சித்தாந்தம் இது''.

**இலங்கையில் உள்ள மலையகத் தமிழர்கள் தமிழ்த்தேசிய இனத்தின் இணைபிரிக்கமுடியாத அங்கம் ஆவார்கள் என்பதில் விடுதலைப்புலிகள் இயக்கம் அசைக்கமுடியாத உறுதிகொண்டுள்ளது** என்பதை மேலே கண் டவை நிரூபிக்கின்றன.

இலங்கையில் நாடற்றவர்களாக்கப்பட்டுள்ள மலையக மக்களுக்குக் குடி யுரிமை வழங்கப்படவேண்டும் என்பதை பேச்சுவார்த்தைக்கு ஒரு நிபந் தனையாக பிரபாகரன் ஏற்கெனவே அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பிரபல வார இதழான **நியூஸ் வீக்** இதழுக்கு அளித்த பேட்டியில் பிரபாகரன் பின்வருமாறு கூறினார். 1986 ஆகஸ்டு 11ஆம் தேதி இதழில் இந்தபேட்டி வெளியாகியிருக்கிறது.

கே:- தமிழர்களுக்கு அதிகாரப்பங்கீடு செய்வதற்னெ சிறீலங்கா அரசுக் கும் மிதவாதத் தமிழர்களுக்குமிடையே கொழும்பில் நடைபெறும் பேச்சு வார்த்தைக்குறித்து உங்கள் கணிப்பென்ன?



படிப்பகம்

www.padippakam.com

ப:- கொழும்பு அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள், பேச்சு வார்த்தையொன்றை ஆரம்பிக்கவே போதாதவை. பேச்சுவார்த்தைக்கு நாம் நான்கு கொள்கைகளை அடிப்படை ஆதாரமாக ஏற்க வேண்டுமெனக் கூறியுள்ளோம். 1. தமிழர்களின் மரபுவழித் தாயகம் அங்கீகரிக்கப்படவேண்டும். 2. தமிழீழமக்கள், தனியான தேசிய இனம் என்பது ஏற்கப்படவேண்டும். 3. தமிழீழ நாட்டினத்தின் சுயாதிபத்திய உரிமை ஏற்கப்பட வேண்டும். 4. நாடற்றவராக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழருக்கும் குடியியல் உரிமைகள் அளிக்கப்படவேண்டும். இந்த நான்கு அம்சங்களையும் உள்ளடக்கிய திட்டம் முன்வைக்கப்படுமானால் பேச்சுவார்த்தை குறித்து நாமும் சிந்திப்போம்.

இந்த நான்கு அடிப்படை அம்சங்களையும் தமிழீழ விடுதலைப்புலிகள், ஈரோஸ், டெலோ, பிளாட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஆகிய 5 போராளிகள் இயக்கங்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் திம்பு மாநாட்டின்போது ஏற்றுக் கொண்டுள்ளன. இவையே ஈழத்தமிழர்களது குறைந்தபட்ச கோரிக்கைகள் என்று இந்த 5 அமைப்புகளும் அறிவித்தன. இந்த நான்கு அடிப்படைக்கொள்கைகளைக் கைவிடாமல் விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே இன்னமும் உறுதியாக நிற்கிறது. மற்றவர்கள் இதிலிருந்து நழுவிவிட்டனர். இந்த நான்கு கோரிக்கைகளில் எதையுமே ஏற்றுக்கொள்ளாத ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தத்திற்கு பிற இயக்கங்கள் ஆதரவளித்துள்ளன. அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச கோரிக்கைகளைக்கூட தொடர்ந்து வலியுறுத்த இவர்கள் தயாராக இல்லை என்பது அம்பலமாகி விட்டது.

குறிப்பாக நாடற்றநிலையில் உள்ள இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு குடியுரிமையளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையைக்கூட மற்ற இயக்கங்கள் அடியோடு கைகழுவிவிட்டன. இரண்டு இலட்சம் நாடற்ற தமிழர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு இந்த ஒப்பந்தம் வழி செய்தது. விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தது. மற்ற இயக்கங்கள் இந்த உடன்பாட்டினை ஏற்றதின்மூலம் மலையகத் தமிழர்களுக்கு மகத்தான துரோகம் செய்துவிட்டன.

எனவே இந்திய வம்சாவழித் தமிழர்களுக்காகத் தொடர்ந்து போராடி வருவது விடுதலைப்புலிகள் இயக்கமேயாகும். சிங்களர் வெறியாட்டத்தால் அகதிகளாகி தமிழீழப்பகுதிக்கு ஓடிவரும் இந்தியவம்சாவழித் தமிழர்களை அரவணைத்து அடைக்கலம் தந்து காப்பது விடுதலைப்புலிகள் இயக்கமே என்பதை நானே நேரில் கண்டேன். இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள அகதிகள் முகாம்களில் மலையகத்தமிழர்களை 1985 ஆம் ஆண்டு அக்டோபரில் நான் சந்தித்தபோது அவர்களுக்கு விடுதலைப் புலிகள் செய்துவரும் உதவிகளை நன்றியுணர்வோடு தெரிவித்தார்கள்.

இந்தியா-இலங்கை உடன்பாட்டின்படி மாநிலசட்டமன்றத் தேர்தல்கள் நடந்தால் தனது இயக்கத்தை மக்கள் நிராகரித்துவிடுவார்கள் என பிரபாகரன் அஞ்சுகிறார். எனவேதான் உடன்பாட்டை எதிர்க்கிறார் என இந்திய அரசும் அதனுடைய கைக்கூலிகளும் இடைவிடாது பிரச்சாரம் செய்கின்றன.

தமிழீழமக்கள் பிரபாகரனை எந்த அளவுக்கு நேசிக்கிறார்கள் என்பது பற்றியோ அல்லது விடுதலைப்புலிகளின் இயக்கம் மக்களிடம் வேரூன்றி நிற்பது பற்றியோ எதுவும் அறியாதவர்கள் கூறும் கூற்றே தவிர இது வேறொன்றும் அல்ல.



படிப்பகம்

www.padippakam.com

தமிழீழமக்களிடம் தனக்கு உள்ள செல்வாக்கினை பலகட்டங்களில் பிரபாகரன் நிரூபித்துக்காட்டியிருக்கிறார்.

1983ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாநிலங்களில் நடத்தப்பட்ட நகரசபைத் தேர்தல்கள் இதற்குச் சரியான சான்றாகும். தமிழர் போராட்டத்தைத் திசைதிருப்புவதற்காக நகரசபைத் தேர்தல்களை நடத்த ஜெயவர்த்தனா முயற்சிசெய்தார். இந்தத் தேர்தல்களில் 'தமிழர் விடுதலைக்கூட்டணி' பங்குபெற்றது. ஆனால் இந்தத் தேர்தலை முழுவதுமாகப் பகிஷ்கரிக்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கம் வேண்டுகோள் விடுத்தது. பிரபாகரனின் கையெழுத்திட்ட வேண்டுகோள் அறிக்கைகள் தமிழீழமெங்கும் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. சிங்கள அரசு பயங்கரவாதிகளின் சிவில் நிர்வாகத்தை அடியோடு புறக்கணிக்குமாறு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான ஆயுதப்புரட்சிக்கு ஆதரவு தருமாறும் பிரபாகரன் மக்களை வேண்டிக்கொண்டார். பிரபாகரனின் இந்த வேண்டுகோளுக்கு மக்கள் செவி சாய்த்தனர். வடக்கு மாநிலத்தில் 90 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் வாக்குச்சாவடிகளைப் புறக்கணித்தனர்.

தேர்தலுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாக போட்டியிட்ட சில வேட்பாளர்கள் என்னை மதுரையில் வந்து சந்தித்தனர். தேர்தலைப் புறக்கணிக்காமல் இருக்குமாறு பிரபாகரனுக்கு ஆலோசனை வழங்குமாறு கூறினார்கள். நான் அதை ஏற்கவில்லை. ''நகராட்சிகளில் போய் நீங்கள் சாதிக்கப்போவது எதுவுமில்லை'' விடுதலைப்போராட்டத்தை திசைதிருப்ப ஜெயவர்த்தனா முயற்சிசெய்கிறார். இதைப் புரிந்துகொண்டு தேர்தல்களைப் புறக்கணியுங்கள்'' என்று கூறி அவர்களைத் திருப்பியனுப்பினேன்.

தேர்தல்களைப் புறக்கணிக்குமாறு பிரபாகரன் விடுத்த வேண்டுகோள் மக்கள்மத்தியில் பேராதரவைப் பெற்றது.

அரச பயங்கரவாதத்தைத் தேர்தல்களினால் வெற்றிகொள்ளமுடியாது என விடுதலைப்புலிகள் இயக்கம் பிரச்சாரம் செய்தது. ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் இத்தேர்தலில் நிற்க முனைந்த வேட்பாளர்களுக்கு எதிராக விடுதலைப்புலிகளின் இயக்கம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனை அடுத்து சகல ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களும் தேர்தல் போட்டியில் இருந்து விலகினார்கள். இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் தேர்தலில் இருந்து ஒதுங்கியது. தேர்தலுக்கு இருதினங்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெரும்பாலான வேட்பாளர்கள் தேர்தல் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தனர். ஆனாலும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை தேர்தலில் நின்றே தீருவது என அறிவித்தது.

இந்த உள்ளூராட்சி தேர்தலில் மக்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட பிரச்னை ஒன்றுதான் வைக்கப்பட்டது. இலங்கைப் பாராளுமன்ற அமைப்பை ஸ்திரப் படுத்தும் உள்ளூராட்சித் தேர்தலை மக்கள் பகிஷ்கரிக்கவேண்டுமென பிரபாகரன் விடுத்த வேண்டுகோளை மக்கள் ஏற்கப்போகிறார்களா அல்லது தமிழர் விடுதலைக்கூட்டணியின் கோரிக்கைகளையேற்று தேர்தலில் மக்கள் வாக்களிக்கப் போகிறார்களா? என்பதுதான் பிரச்னையாக்கப்பட்டது. மிகப்பெரும்பாலான மக்கள் தேர்தலை அடியோடு புறக்கணித்ததின்மூலம் பிரபாகரனின் வேண்டுகோளை ஏற்றனர். இதுகுறித்து இலங்கையிலிருந்து வெளிவரும் பல முக்கிய பத்திரிகைகள் பின்வருமாறு எழுதின.



படிப்பகம்

www.padippakam.com

யாழ் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து தமிழீழத்தில் இருந்து வெளியாகும் **Saturday Review** என்ற ஆங்கில வாரஏடு கருத்துத் தெரிவித்திருப்பதை நோக்குவோம்.

''வாக்களிக்குமாறு த. வி. கூட்டணிவிடுத்த அழைப்பை வடக்கு நிராகரித்தது'' என்ற தலைப்பில் இப்பத்திரிகை கூறுவதாவது.

''மே 18ஆம் தேதி புதன்கிழமை வடக்கில் கிட்டத்தட்ட பூரணமான தேர்தல் பகிஷ்கரிப்பு நடைபெற்றதென்றே கூறவேண்டும். இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுபோன்ற நிகழ்ச்சி இதற்கு முன் எப்போதாவது கூட இடம்பெற்றது கிடையாது. உள்ளூராட்சித் தேர்தல்களை பகிஷ்கரிக்குமாறு தீவிரவாதிகள் விடுத்த அழைப்புக்குச் செவிசாய்த்து புதன்கிழமையன்று நடைபெற்ற தேர்தலில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களில் பருத்தித்துறையில் 99% ஆனோரும் வல்வெட்டித்துறையில் 98% ஆனோரும், யாழ்ப்பாணத்தில் 86% ஆனோரும், சாவகச்சேரியில் 85% ஆனோரும் வாக்களிக்கவில்லை''.

ஒட்டுமொத்தமாக நோக்கின் வடக்கில் வாக்காளர்கள் 8% ஆனோரே வாக்களித்துள்ளனர். 1981ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலில் தேசிய சராசரி விகிதத்திலும் அதிகமாக 80% ஆனோர் வாக்களித்தமையோடும் 1979ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் 75% ஆனோர் வாக்களித்தமையோடும் ஒப்பிட்டால் இது ஆழமான வேறுபாட்டைக் காட்டுகிறது.

**Far Eastern Economic Review** என்ற ஆங்கிலப் பத்திரிக்கையில் பிரசித்தி பெற்ற தெற்கு, மேற்காசியப் பிராந்திய விசேஷ நிருபரான சலாமட் அலி பின்வருமாறு எழுதுகிறார்.

''பிரிவினைகோரும் தலைமறைவான தமிழ்த் தீவிரவாத இயக்கமானது சிலமாதங்களுக்கு முன்னிருந்ததைவிட இப்போது மிகப்பெருமளவில் பொது மக்களின் அனுதாபத்தைத் தன்பக்கம் ஈர்த்துள்ளது''.

கொழும்பிலிருந்து வெளியாகும் **Lanka Guardian** (1.6.83) பின்வருமாறு எழுதியது.

''இத்தேர்தலின் வாக்களிப்பு விதமானது சரித்திரத்திலேயே மிகவும் குறைவானதாகும். அதிர்ச்சியூட்டும்வகையில் இரண்டு இடங்களில் 1%, 4% என்ற அளவிலும் இடம்பெற்றுள்ளது. ஆயுதம்தாங்கிய தீவிரவாதிகளுக்கு ஆகக்கூடிய புள்ளிகள் **(TOP MARKS)** கொடுக்கத்தான் வேண்டும்.

''சுதந்திரன்'' (22.5.83) பத்திரிகை ''தேர்தல் பகிஷ்கரிப்பு 90 சதவீதம் வெற்றி'' என்ற தலைப்பிட்டு பின்வருமாறு எழுதுகிறது.

''ஸ்ரீலங்கா அரசு நடத்தும் தேர்தலில் பங்குகொண்டு வாக்களிக்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைமைவிடுத்த வேண்டுகோளை 90 சதவீதமான தமிழ்மக்கள் நிராகரித்துவிட்டது குறிப்பிடத்தக்கது''.

விடுதலைப்புலிகளுக்கு மக்களிடம் செல்வாக்கு இல்லை என்னும் வாதம் எவ்வளவு தவறானது என்பதை மேலே கண்டவை நிரூபிக்கின்றன. மிகப் பெரும்பாலான மக்கள் விடுதலைப்புலிகளுக்கே ஆதரவாக இருக்கிறார்கள் என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிட்ட ஒன்றாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# தேசியஇயக்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தை தமிழர்களின் உண்மையான தேசிய விடுதலை இயக்கமாக பிரபாகரன் உருவாக்கியிருக்கிறார். மத பேதங்களோ, சாதி வேறுபாடுகளோ இந்த இயக்கத்தில் அணுவளவுகூட இல்லை. பிரபுத்துவ அம்சம் நிலவும் ஈழத்தமிழர் சமூகத்தில் சாதி வேறு பாடுகளுக்குத் துளியும் இடமில்லாமல் அனைவரும் தமிழர்கள் என்ற உணர்வுடன் இளைஞர்களை அவர் உருவாக்கியுள்ளவிதம் பிரமிக்கத்தக்க தாகும். இந்துக்கள், கிறிஸ்துக்கள், இஸ்லாமியர்கள் என்ற வேறுபாடு களோ உயர்ந்தசாதி, தாழ்ந்தசாதி என்ற எண்ணங்களோ கொஞ்சமும் இல்லாமல் சகோதர பாசத்துடன் விடுதலைப்புலிகள் வளர்கிறார்கள். ஆகவேதான் அவர்களால் அற்புதமான சாதனைகளைப் புரியமுடிகிறது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பற்றி வேண்டுமென்றே பொய்யான அவதூறான செய்திகளைச் சிலர் பரப்புகிறார்கள். அதில் முக்கியமானது வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட சாதியினரே இயக்கத்தில் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்படுகிறார்கள் என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். இதுகுறித்து பிரபாகரனின் மிக நெருங்கியத்தோழரும் யாழ்த்தளபதியுமான கிட்டு சென்னையிலிருந்து வரும் **Front Line** என்ற இத ழுக்கு அளித்தபேட்டியில் பின்வருமாறு கூறுகிறார்.

கேள்வி:- சில பிரிவினர் மத்தியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார்களே?

கிட்டு:- ஆம். சிலர் அவ்வாறு கூறுகிறார்கள். சிலர் அதற்கு மேலாகவும் சென்று, இயக்கத்தில் குறிப்பிட்ட சாதியினரே ஆதிக்கம் செலுத்துவதாகக் கூடக் கூறுகிறார்கள். அது பிழையான அபிப்பிராயம். தமிழ்ச் சமுதாயம் முழுவதும் எம்மோடு இணையாமல் தடுக்க இவ்வாறு சிலர் வேண்டுமென்றே பொய்ப்பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் என்ன நடந்தது என்பதை நீங் கள் உணரவேண்டும். திரு. பிரபாகரன் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தபோது, துவக்கத்தில் அவரோடு இணைந்தவர்கள் யார்? அவரது நண்பர்கள், அவருடன் படித்த பாடசாலை சக மாணவர்கள், அவருடைய உறவினர்கள், அயலவர்கள் இப்படி அவரது ஊரவர்களே முதலில் சேர்ந் தனர். ஆகவே இயல்பாக வல்வெட்டித்துறையிலேயே இயக்கம் ஆரம்ப மாகியது. நாங்கள் படிப்படியாகவே வளர்ந்தோம். காலம் செல்லச் செல்லத் தமிழீழத்தைத் சேர்ந்த பலரும் எம்மோடு இணைந்தனர். எமது இயக்கத்தில் மூத்தோருக்கே முதலிடம் என்கிற அடிப்படையில் தளபதி களை நியமனம் செய்கிறோம். ஆரம்பத்தில் இணைந்த முதல் முகாமைச் சேர்ந்தவர்களையே தலைவர்களாக நாம் நியமிப்பது எனும் கொள்கையைப் பின்பற்றி வருவதால் முதலாவது அணியைச்சேர்ந்த வல்வெட்டித்துறை வாலிபர்கள், தலைவர்களாக இருக்கின்றனர். அதேசமயம், ஏனைய பிர தேசங்களைச் சேர்ந்தவர்கள் ஏராளமானோர் தலைவர்களாகவும், தளபதி களாகவும் செயற்படுகின்றனர். விரைவில் 'சீனியாரிடி, தகுதி போன்றவற் றின் அடிப்படையில் இயக்கப் பொறுப்புகளை எம்மிடமிருந்து கையேற்பார் கள். அதன் பின்னர் இந்த வல்வெட்டித்துறை மாயை மறந்துவிடும். ஆனால் சாதி அடிப்படையில் எமது இயக்கம் இயங்குவதாகக் கூறப்படுவது கலப்பற்றச் சுத்தப்பொய்.''

தன்னுடைய இயக்கத்திலிருந்து பல்வேறு காரணங்களினால் விலகிச் செல்ல சிலர் விரும்பியபோது அதை அனுமதித்தவர் பிரபாகரன். அந்த உண்மைகளை நான் நேரில் அறிந்திருக்கிறேன். பிற போராளிகளின் இயக் கங்களில் அவ்வாறு அனுமதிக்கப்படுவதில்லை. அத்தகையவர்கள் துரோ கி



படிப்பகம்

www.padippakam.com

கள் எனக் கருதப்பட்டு பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பிரபாகரன் ஒருபோதும் தனது தோழர்களுடன் அப்படி நடந்துகொண்டதில்லை.

விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கழுத்தில் எப்போதும் 'சயனைட்' குப்பிகளைக் கட்டிக்கொண்டு திரிவது ஏன்? என்பது பற்றி பிரபாகரனே விளக்கம் தெரிவிக்கிறார். 1986ஆம் ஆண்டு செப்டம்பர் 4, 5 தேதிகளில் வெளியான 'இந்து' நாளிதழ்பேட்டியில் அவர் பின்வருமாறு கூறுகிறார்.

கே: - உங்கள் இயக்கப்போராளிகள் 'சையனைட்' புட்டியைக் கழுத்தில் கட்டிக்கொண்டு களத்தில் நிற்கிறார்களாமே உண்மையா? அல்லது மிகைப் படுத்தப்பட்ட சேதியா?

ப:- உண்மைதான் . இயக்கத்தின் தொடக்க காலத்தில் இருந்தே இதை நாங்கள் செய்துவருகிறோம். விளைவு? எங்கள் தோழர்கள் பலர் தியாகிகளாய் உயிர்களை அழித்துக் கொண்டார்கள். எங்கள் இயக்க ஆட்களை நீங்கள் சிறைச்சாலைகளில் பார்க்கமுடியாது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிருவரைத்தவிர. ஆம் அவர்கள்கூட எங்கள் இயக்கத்தில் உள்வளையத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. எமக்கு உதவியாக இருக்கும் ஆதரவாளர்களைக் காட்டிக்கொடுக்காமல் அவர்களை இராணுவத்திடம் இருந்து காப்பாற்ற எமது தோழர்கள் தங்கள் உயிர்களைப் பலி தருகிறார்கள். இந்த நிலை இல்லையென்றால் எமக்கு உறுதுணையாக இருக்கும் மக்கள் குடும்பங்களோடு கொடிய சிறைச்சாலைகளில் அழுந்தவேண்டி இருந்திருக்கும்.

அதுமட்டுமல்ல இதே 'சயனைட்'தான் எமது இயக்கத்தின் உயிரும் ஆகும். எமது இயக்கத்தின் வேகமான வளர்ச்சிக்குக் காரணம் 'சயனைட்'தான். நாங்கள் எமது இலட்சியத்துக்கு எம்மை ஒப்படைத்திருக்கிறோம் என்பதன் அடையாளச்சின்னம்தான் அது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் எங்கள் தளபதி கிட்டு கீழ்க்கண்டவாறு பேட்டியில் கூறியதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

''இந்த சயனைட் எங்கள் கழுத்தில் தொங்கும்வரை உலகில் எந்த சக்திக்கும் நாங்கள் அஞ்சமாட்டோம்!'' ஆம். இந்த சயனைட் தான் தங்கள் இலட்சியத்துக்காக எம்மவர்கள் உயிரையேத் தூக்கி எறியும் மேலதிக உறுதியைத் தந்திருக்கிறது. எதிரியைத் தாக்கும்போது எமது வீரர்கள் அவர்களுடைய உயிர்களைக் கணக்கெடுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். குண்டுமழையின் நடுவில் எதிரியை நோக்கி அவர்கள் முன்னேறிக்கொண்டிருப்பார்கள்.''

விடுதலைப்புலிகள் இயக்கம் சாதி-மதவேறுபாடுகளுக்கு அப்பால் உருவான தமிழர் தேசிய இயக்கம் என்பதை நானே நேரில் பார்த் தேன். விடுதலைப் புலிகள் முகாம்களில் பலநாட்கள் தங்கி அவர்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்தபோது இந்த உண்மையை உணர்ந்தேன். இந்து, கிறிஸ்துவர், இஸ்லாமியர் என்ற வேறுபாடுகளுக்கோ அல்லது சாதி வேறுபாடுகளுக்கோ அந்த இயக்கத்தில் துளியளவுகூட இடமில்லாததையும் அனைவரும் தமிழரே என்ற உணர்வுடன் அவர்கள் இயங்குவதையும் கண்டேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் திருமணங்கள் செய்யும்போது அவைகள் கலப்புத்திருமணமாகவே அமைகின்றன. மதக்கலப்புகள் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கு மாநிலக்கலப்புகளும் நிகழுகின்றன. அது மட்டுமல்ல சிங்களரின் கொடுமைக்கு ஆளாக வாழ்விழந்து தவிக்கும் விதவைகளுக்கு வாழ்வளிக்கும் வகையில் விதவைத்திருமணங்களும் புலிகளால் மேற்கொள்ளப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# மனிதநேயமிக்க புலிகள்

பிரபாகரனும் அவரது தலைமையின்கீழ் இயங்கும் விடுதலைப்புலிகளும் மனிதநேயமிக்கவர்கள் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம். பகைவனுக்கும் அருளுகிற மனம் அவர்களுக்கு நிறையவே உண்டு. சிங்களப் பொதுமக்களிடம் அவர்கள் ஒருபோதும் விரோதம் பாராட்டியது இல்லை. அப்பாவி சிங்களப் பொதுமக்களைத் தாக்குவது இல்லை என்ற கொள்கையை அவர்கள் உறுதியாகக் கடைப்பிடிக்கிறார்கள். அப்பாவித் தமிழர்களை ஈவிரக்கமின்றி சிங்கள இராணுவம் வேட்டையாடுவதுடன் ஒப்பிடும்போது இது ஒரு மாபெரும் சாதனையாகும். சிங்கள இராணுவத்தினரிடம்கூட சிலசமயம் அவர்கள் இரக்கம் காட்டியிருக்கிறார்கள். தமிழர் பகுதிகளில் அமைந்திருந்த இராணுவமுகாம்களில் பல மாதங்கள் அடைப்பட்டுக்கிடக்கக்கூடிய நிலைமையில் சிங்களச் சிப்பாய்கள் இருந்தபோது அவர்களுக்கு குடிநீர் மற்றும் அன்றாடத்தேவைகள் கிடைப்பதற்கு விடுதலைப் புலிகள் அனுமதித்துள்ளனர். தொண்டைமனாறு இடத்திலிருந்து சிங்கள இராணுவமுகாமைச் சுற்றிவளைத்து பல மாதங்களாக விடுதலைப்புலியினர் முற்றுகையிட்டிருந்தனர். அப்போது அவர்களுக்குக் குடிநீர் வெளியிலிருந்துதான் செல்லவேண்டியிருந்தது. அதைத் தடுக்கவேண்டாம் என்று விடுதலைப்புலிகளை சிங்களச் சிப்பாய்கள் வேண்க்கொண்டபோது அவர்களும் தாராள மனதுடன் அனுமதித்தார்கள்.

அதைப்போலவே யாழ்ப்பாணக்கோட்டைக்குள் சிக்கிக்கொண்ட சிங்கள சிப்பாய்களுக்கு விறகுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது முற்றுகையிட்டிருந்த விடுதலைப்புலிகளுக்கு வயர்லெஸ்மூலம் சிங்களராணுவத் தளபதி வேண்டுகோள் விடுத்தார். ''இரண்டு லாரிகளில் விறகு அனுப்பிவையுங்கள்'' என்றார். அந்த வேண்டுகோளை ஏற்று இரண்டு லாரிகளில் விறகுகளும் அத்துடன் ஒரு கூடை மாம்பழங்களையும் விடுதலைப்புலிகள் அனுப்புவைத்தனர்.

இலங்கை மக்கள் கட்சியின் தலைவரான **விஜயகுமாரணதுங்கா** என்னும் சிங்களத்தலைவர் யாழ்ப்பாணத்திற்கு வந்து சிங்களராணுவக் கைதிகளைப் பார்க்க அனுமதிகேட்டபோது யாழ்த்தளபதி கிட்டு அதை அனுமதித்தார். அவரையும் அவருடன் வந்தவர்களையும் விடுதலைப்புலிகள் அன்போடு வரவேற்றார்கள். சிங்களக் கைதிகளுடன் பேசுவதற்குத் தாராளமாக அனுமதித்தார்கள். அவரைப் பத்திரமாக யாழ்க்கோட்டையில் திரும்பக்கொண்டு போய் விட்டார்கள்.

25-க்கு மேற்பட்ட புத்தபிட்சுக்களையும், 40-க்கும் மேற்பட்ட சிங்களப் பொதுமக்களையும், பத்திரிகையாளர்களையும் தம்முடன் அழைத்துக் கொண்டு அவர் மறுமுறையும் யாழ்ப்பாணம் வரவிரும்பினார். 1983ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற இனக்கலவரத்திற்குப்பிறகு இவ்வளவு பெருந்தொகையான சிங்களர் யாழ்ப்பாணம் வருவது இதுவே முதல் தடவையாகும். ஆனால் அவரது பயணத்திற்கு அனுமதி தர சிங்கள அரசு மறுத்தது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உண்மைகளை அவர்கள்மூலம் சிங்கள மக்கள் அறிந்துகொள்ளக்கூடும் என்பதால் அவர்களைத் தடுக்க ஜெயவர்த்தனா அக்கறை காட்டினார். ஆனால் மனிதநேயமிக்க விடுதலைப்புலிகளுக்கோ அவர்களின் வருகை மகிழ்ச்சியளித்தது. அவர்கள் வருவதை அனுமதித்தனர். தங்களிடம் சிறைப்பட்டிருந்த இரு சிங்களச் சிப்பாய்களைச் சந்திக்கவும் அனுமதித்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த சிங்களர்களை வரவேற்றுத் தளபதி கிட்டு அங்கு நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு பேசினார்.



படிப்பகம்

www.padippakam.com

''நாம் எமது உரிமைக்காகவே போராடுகின்றோம். நாம் சிங்கள மக்களையோ, சிங்களப் பிரதேசங்களையோ ஆக்கிரமிக்கவில்லை. ஆனால் சிங்கள இனவாத அரசின் அடக்குமுறையை எதிர்ப்பதற்காகவே ஆயுதம் ஏந்தி போராடுகிறோம். சிங்கள இனவாத அரசினால் பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்த அடக்குமுறையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். விசேடமாக பிக்குமார்களின் இந்த விஜயம் தமிழர் மத்தியிலும், சிங்களவர் மத்தியிலும் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். எமது இயக்க வீரர்கள் தன்னிச்சையாக தாமாக முன்வந்து உயிரைத் தியாகம் செய்கிறார்கள். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவோர் சம்பளத்திற்காகச் சேருவதில்லை. ஆனால் இலங்கை அரசின் இராணுவத்தில் சம்பளம், பணம் உழைப்புக்காகவே சேர்க்கப்படுகிறார்கள். போராட்ட வரலாற்றில் போராளிகளும், இராணுவமும் கைதுசெய்யப்படுவதும், விடுவிக்கப்படுவதும் வழமை. நாமும் யாழ்ப்பாணம், மன்னார்போலீஸ் நிலையங்களின் தாக்குதலின்போது கைதுசெய்யப்பட்ட இராணுவம், போலீசாரை எவ்வித நிபந்தனையும் இன்றி விடுவித்தோம். ஏன் ஆனையிரவில் இருந்து தப்பி ஓடிய இரு இராணுவத்தினரையும் விடுதலை செய்தோம்.

இன்று நாம் போராடுகிறபடியால் ஒவ்வொரு பெற்றோரின் நிலைமைகளைப் புரிந்துகொள்ளமுடிகிறது. அதனால்தான் ஒன்பது சடலங்களை கோட்டை இராணுவத்திடம் ஒப்படைத்தோம். எமது உறுப்பினர்கள் பத்தொன்பது பேர் உட்படப் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் இன்று சிறையில் வாடுகிறார்கள். ஆனால் நாம் அவற்றை விட்டு எமது இரு வீரர்களை விடும்படியே கேட்கிறோம். உலக போராட்டங்களிலும் யுத்தக் கைதிகள் பரிமாற்றம் செய்யப்படுவது நடைமுறை. பிற இடங்களில் பெருந்தொகையான பணமும் கேட்டு விடுதலை செய்யப்படுகிறார்கள். ஆனால் நாம் அப்படி ஒன்றும் கேட்கவில்லை. இந்த இராணுவ சிப்பாய்களைப் பற்றி அரசுக்கு எவ்விதக் கரிசனையும் ஏற்படவில்லை. இந்த இராணுவத்தினர் சாதாரண சிப்பாய்கள் என்பதாலே அரசும் மௌனமாக இருக்கிறது. இவர்கள் இராணுவ உயர் அதிகாரிகளானால் எப்படியும் விடுவிக்க அரசு முயன்றிருக்கும். சாதாரண இராணுவ வீரர்களுக்கு இந்த அரசு எவ்வளவு மதிப்பளிக்கிறது என்பதை இதில் இருந்து நீங்கள் அறியுங்கள். இதனால் இராணுவத்தில் உள்ள ஒவ்வொருவீரரும் அரசிடம் மதிப்பை இழக்கின்றனர். ஒன்றரை மாதமாக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நாம் இதனைத் தெற்கிலுள்ள அரசியல்வாதிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்ததால், வடக்கே எவரும் வர அச்சமாக இருந்தும் திரு. விஜய குமாரரணதுங்கா இங்கு முதலில் வந்து எம்முடன் பேசினார். அவர் வராவிடில் இந்தப்பிரச்னை உலகுக்கும், தெற்கேயும் தெரியவந்திராது. அவரது வருகையால் அவர் அரசை நிர்ப்பந்தித்து நாம் இராணுவத்துடன் நேரடியாகத் தொடர்புகொள்ள முடிந்தது. நான் குருமாரையும், உங்களையும் கேட்பது என்னவென்றால் மீண்டும் அரசை நிர்ப்பந்தித்து எமது நிபந்தனைகளைக்கூறி இவ்விருவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள். நாம் ஒரு போதும் இவர்களைக் கொலை செய்யமாட்டோம். அப்படியான மனிதாபிமானமற்ற செயல்களைச் செய்ய மாட்டோம்''.

கிட்டுவின் இந்தப்பேச்சுக்குப் பதில் அளிக்கும்போது திரு. விஜய குமாரரணதுங்கா பின்வருமாறு கூறினார்.

''இன்று நாட்டின் வடபகுதியில் நடக்கும் போராட்டம் உயிர்வாழுவதற்கான போராட்டமே. தமது உயிர்களைப் பாதுகாக்க வடக்கிலுள்ள மக்கள் நடத்திவரும் போராட்டத்தை வறுமையின் பொருட்டு அரசு இராணுவத்தின் ஆயுதப்படையில் சேரும் சிங்கள வாலிபர்களின் 'வயிற்றுப்பாட்டு'



படிப்பகம்

www.padippakam.com

டன் ஒப்பிடலாம். தெற்கில் பொருளாதார வசதிபடைத்த எந்தவொரு குடும்பத்திலிருந்தும் எவரும் இந்த அவசர இராணுவசேவையில் சேர்ந்த தாக நான் அறியவில்லை. இன்று நாம் மீட்டுச்செல்ல வந்துள்ள அஜித் சந்திரசிறியும், பண்டாராவும் கூட 'வயிற்றுப்பாட்டு'க்காக இராணுவத்தில் சேர்ந்தவர்கள்தான்'' எனக்கூறிய விஜயகுமாரரணதுங்கா மேலும் பேசுகை யில் ''தானோ அல்லது தன்னுடன் வந்தவர்களோ எந்தவொரு அரசியல் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளாக யாழ்ப்பாண விஜயத்தை மேற் கொள்ள வில்லை எனக் குறிப்பிட்ட திரு. விஜயகுமாரரணதுங்கா, தமிழ்ப் போரா ளிகளின் மேல் வைத்துள்ள உறுதியான நம்பிக்கையின்பேரில், வடக்கிலும், தெற்கிலும் இருக்கக்கூடிய உரிமை மறுக்கப்பட்ட மக்களின் பொதுப் போராட்டத்தில் வட-தெற்குப் 'பாலம் ஒன்றை அமைப்பதே எமது பிர தான நோக்கம்' எனக் கூறினார்.

இதைத்தொடர்ந்து 20ஆம் தேதியன்று இரு சிங்களக் கைதிகளையும் விடுதலைப்புலிகள் விடுவித்தனர். பதிலுக்கு மேஜர் அருணாவும், இன் னொரு விடுதலைப்புலியும் விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட சிங்களக் கைதிகளை நேரில் அழைத்துசெல்ல சிங்கள பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத்முதலி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசியலில் இனவாதமற்ற அல்லது இனவாதத்திற்கு எதிரான முற்போக்கு சக்திகள் உண்டு. அவர்களுடன் இணைந்து தமிழர் பிரச்னைக் குத் தீர்வுகாண தமிழ்ப்போராளிகள் முன்வரவேண்டும் என ஆலோசனை கூறுபவர்கள் இலங்கையிலும் உண்டு. இந்தியாவிலும் உண்டு. யதார்த்த உண்மையை உணராது இவ்வாறு கூறுவோருக்கு பிரபாகரன் தகுந்த பதிலை அளித்துள்ளார்.

1986 செப் 4, 5 தேதிய ''இந்து'' நாளிதழ் பேட்டியில் அவர் பின் வருமாறு கூறுகிறார்.

கே:- ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் உள்ள சிங்கள அரசியல் வாதிகளைப்பற்றிய உங்கள் கருத்தை நான் அறியலாமா? இலங்கை அரசி யலில் இனவாதமற்ற அல்லது இனவாதத்துக்கு எதிரான முற்போக்கு சக்தி கள் உண்டா? தென்னிலங்கை அரசியல் அரங்கு பற்றி என்ன கருதுகி றீர்கள்?

ப:- நீண்டகால அரசியல் அனுபவத்தின் அடிப்படையில் பார்ப்போம். சிங்கள அரசியல் கட்சிகளை எடுத்துக்கொண்டால் இலங்கைத்தீவு சுதந் திரம் பெற்றதாகச் சொல்லப்பட்ட நாளில் இருந்து இன்று வரை ஐக்கிய தேசியக்கட்சியும், சிறீலங்கா சுதந்திரக்கட்யுமே மாறி மாறி ஆட்சி நடத்தி யுள்ளன. இந்த இரு கட்சிகளும் எவ்விதத்திலும் எங்கள் பிரச்னையைத் தீர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. எமது போராட்டம் சிரிமாவோ அம்மையார் பிரதமராக இருந்த காலத்தில் துவக்கப்பட்டது என்பதைக்கூட இங்கே சுட்டிக்காட்டலாம். தீவிரவாதப் போராட்டம் 1972ஆம் ஆண்டில் தான் கூர்மையடையத் தொடங்கியது. இந்த ஆண்டு எங்கள் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. பழைய அரசியல் அமைப்பில் தமிழர்களுக்கு வழங்கப்பட்டு இருந்த கொஞ்ச உரிமைகள்கூட இப்புதிய குடியரசு அரசியலமைப்பினால் பறிக்கப் பட்டன. இதற்குக் காரணமானவர்களில் இடதுசாரி முற்போக்குக் கட்சி களில் ஒன்றான லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கொல்வின் ஆர்.டி. சில்வா என்ற சிங்களத் தலைவரும் ஒருவராவார். புதிய குடியரசு அரசியல் அமைப்பை உருவாக்கிய சிறிமாவோ பண்டாரநாயகா அம்மையாரின் தலைமையிலான கூட்டணி ஆட்சியில் அப்போது கொல்வின் ஆர்.டி. சில்வா மட்டுமல்ல இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பீட்டர் கெனமனும் முக்கியமானவராய் இருந்தார்.




படிப்பகம்

www.padippakam.com

முற்போக்காளர்களான இடதுசாரிகள்கூட அரசியல் அமைப்புமூலம் எமது அடிப்படை உரிமைகளைப் பறித்தெடுக்க முயன்ற இவ்வேளையில் தான் எங்கள் விடுதலைப்போர் கூர்மையடையத் தொடங்கியது. 1972ஆம் ஆண்டு எமது விடுதலைப்போரானது குடியரசு அரசியல் அமைப்புக்கு எதிராகத் தீவிரமடைந்தது. இக்குடியரசு அரசியல் அமைப்பை எழுதியவர் நாடறிந்த பழம்பெரும் இடதுசாரியான கொல்வின் ஆர்.டி. சில்வா அவர் கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். குடியரசு அரசியல் அமைப்புக்கு ஒப்புதல் தரமாட்டோம் எனக்கூறிப் பாராளுமன்றத்தில் தமி ழர் பிரதிநிதிகள் வெளிநடப்பும் செய்தார்கள். இந்த அரசியல் அமைப்பில் கையெழுத்திட்ட ஓரிரு தமிழ்ப்பிரதிநிதிகள் எமது மக்களால் துரோகிக ளாய்க் கணிக்கப்பட்டார்கள்.

மிக அண்மையில் நடந்த ஒரு நிகழ்வை எடுத்துக்காட்டலாம். எஸ். எல். எம். பி. தலைவர் விஜயகுமாரரணதுங்க அவர்கள் சிங்கள மக்கள் மத்தி யில் மேடையில் பேசமுடியாமல் போயிற்று. தமிழருக்கு ஆதரவு தெரிவிக் கும் எந்தச் சிங்கள அரசியல் கட்சியும் அங்கே இயங்கமுடியாது என்ப தையே இது காட்டுகிறது. இதனால்தான் எந்தக் காலத்திலும் இங்கே சிங் கள அரசியல்வாதிகளை நம்பும் சூழ்நிலை இல்லை என்கிறோம். ஏதேனும் முற்போக்கான குரல் அங்கே ஒலித்தால் அது வலிமை குன்றியகுரலாகவே இருக்கிறது. எமக்காகக் குரல்கொடுக்கும் சிங்களவர்கள் மிகச்சிலரே. அப்படியானவர்களின் குரல்களும் அடக்கப்பட்டுவிடுகின்றன''.

பிரபாகரன் இவ்வாறு கூறி இரண்டாண்டு காலம் கழிவதற்குள் விஜய குமாரரணதுங்க சிங்கள வெறியர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். சிங்கள பேரினவாதிகள்பற்றிய பிரபாகரனின் கணிப்பு சரியானது என்பது இதன் மூலம் உறுதியானது.




படிப்பகம்

www.padippakam.com

# பிரபாகரனும் - பிற இயக்கங்களும்

''போராளிகளின் இயக்கங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுவதை பிர பாகரன் விரும்பவில்லை. மற்றவர்களை அடியோடு ஒழித்துக்கட்டிவிட்டுத் தானே சர்வாதிகாரியாக விரும்புகிறார்'' என்று அவர்மீது குற்றம்சாட்டப் படுகிறது. ஆனால் உண்மை என்ன? பல்வேறு காலக்கட்டங்களில் போரா ளிகளுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்த பிரபாகரன் எடுத்த முயற்சிகளை எந்த அளவுக்கு மற்றவர்கள் மதித்தார்கள் என்பது ஒரு பெரும் கேள்விக் குறியேயாகும். ஒருபோதும் ஒற்றுமைக்குக் குறுக்கே அவர் நின்றதில்லை.

1984ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நியூயார்க் நகரில் டாக்டர் திரு. பஞ்சாட்சரம் அவர்கள் முயற்சியினால் நடத்தப்பட்ட உலகத்தமிழீழ மாநாட்டிற்கு வரவேண்டும் என்று பிரபாகரன் அழைக்கப்பட்டபோது அவ ருக்குப் பிரபாகரன் எழுதிய பதிலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''விடுதலை இயக்கங்களை ஒன்றிணைத்து ஒரு தேசிய அரசியல் இராணு வத் தலைமையை உருவாக்குவது மாநாட்டின் நோக்கங்களில் ஒன்று என்ப தாகத் தெரிகிறது. இவ்வித ஒற்றுமை முயற்சிகளை நான் வரவேற்கிறேன். எனினும் இந்த முயற்சிகள் தமிழீழத்தில் மேற்கொள்ளப்படுவதையே நான் விரும்புகிறேன். தமிழ்நாட்டில் நிரந்தரமாக நிலைகொண்டுள்ள விடுதலைக் குழுக்களும் அதன் தலைமைகளும் தமிழீழம் வந்தாகவேண்டும். தமிழீழப் போராட்டக் களத்திலிருந்து ஒற்றுமைபற்றிப் பேசுவதற்கு நாம் தயார். ஆனால் அந்நிய நாடு ஒன்றில், அதுவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைநகரில் சி.ஐ.ஏ உளவுஸ்தாபனத்தின் சிலந்தி வலைக்குள் இருந்து எமது போர்முறைத் திட்டங்கள்பற்றி பேசுவதற்கு நாம் தயாராயில்லை. விடுதலை இயக்கங்கள் மத்தியில் ''சோசலிசத் தமிழீழம்'' என்ற இலட்சியத் தில் ஒருமைப்பாடு உண்டு என்பது நீங்கள் அறியாததல்ல, எனினும் இந்த இலட்சியத்தை அடைவதற்கான போருபாயங்களிலும், பொதுவான போர் முறைத்திட்டத்திலும் கருத்து வேறுபாடுகள் உண்டு. இது மிகவும் சிக்கலான விவகாரம். போர் நுட்பமும், போர் அனுபவமும் சார்ந்த விசயம். இயக்கத் தலைமைகள் மிகவும் இரகசியமாக, பரஸ்பர நம்பிக்கையுடன் பரிமாறிக் கொள்ள வேண்டியது. இவற்றை எல்லாம் சர்வதேச மாநாடுகளில், அது வும் அமெரிக்காவில், திறந்த அரங்குகளில் விவாதிக்க முடியாது.

தமிழீழ விடுதலைப்போராட்டம் வெற்றிபெறுவதாயின் மிகவும் கட்டுப் பாடுடைய தேசிய இராணுவ அமைப்பு ஒன்றை முதலில் கட்டி எழுப்ப வேண்டும். இதனையே நாம் இன்று செயற்படுத்திவருகிறோம். ஏனைய விடுதலை அணிகளும் எம்மோடு இணைந்து செயற்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை. போராட்ட சூழ்நிலைகள் இந்த ஒற்றுமையைப் பிறப்பிக் கும். விடுதலை அமைப்புகள் மட்டுமின்றி வெகுசனங்களுமே போராட்டத் தில் நேரடியாக குதிக்க வேண்டி நேரிடும்''.

இக்கடிதத்தில் ஒரு உண்மையை பிரபாகரன் தெளிவுபடுத்தியிருக்கிறார். தமிழ்நாட்டிலோ வெளிநாடுகளிலோ இருந்துகொண்டு ஒற்றமையைப் பற்றிப் பேசாமல் நேரடியாகக் களத்திற்கு வந்து ஒன்றுபட்டுப் போராடு வதற்கு முன்வருமாறு சகலக்குழுக்களுக்கும் அவர் அழைப்பு விடுத்திருக்கி றார். களத்தில் இறங்கி போராடுவதற்குத் தயாராகாமல் அந்நிய நாடு களிலிருந்து கொண்டும் சொகுசாக வாழ்ந்துகொண்டும் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவது போலித்தனமாகும் என்பதையும் அவர் அம்பலப்படுத்தி யிருக்கிறார்.

மீண்டும் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் விடுதலைப் போராளி கள் அனைவருக்கும் பின்வரும் வேண்டுகோளினைப் பிரபாகரன் வெளி யிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

''தனித்துநின்று போராடித் தமிழீழம் காணவேண்டும் என்ற இறுமாப்போடு நாம் இயங்கவில்லை. ஆயுதப் போராட்டப் பாதையை வரித்துக் கொண்ட சகல விடுதலை அமைப்புகளும் எமது பொது எதிரியை எதிர்க்கொண்டு போராட வேண்டும் என்பதே எமது ஆவல். ஒன்றுபட்டுப் போராடுவது எமது பலத்தைப் பன்மடங்கு பெருக்கும். ஆகவே, நாம் ஒற்றுமையை வரவேற்கவே செய்கிறோம். ஒற்றுமையின் தேவையை உணர்கிறோம். ஆனால் இந்த ஒற்றுமையானது தமிழீழப் புரட்சி இயக்கத்திற்கு அப்பாற்பட்ட அந்நிய சக்திகளின் அழுத்தங்கள் காரணமாகவோ, அன்றிப் பிற்போக்குச் சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளின் நெருக்குதல் காரணமாகவோ, அவசரப்பட்டுச் சமைத்த சாம்பார் ஒற்றுமையாக அமைவதை நான் விரும்பவில்லை. அப்படியான தளர்ந்த, உறுதியற்ற, சந்தர்ப்பவாத இணைப்பு நிரந்தரமான ஒற்றுமையை, உண்மையான ஒற்றுமையை, உருப்படியான ஒற்றுமையை உருவாக்கப் போவதில்லை என்பது எமது கருத்து. **இப்படிச் சொல்வதால் நாம் ஒற்றுமையை விரும்பவில்லை என்று எவரும் தவறாகக் கருதிவிடக்கூடாது.**

**நாம் விரும்புவது உண்மையான, நிரந்தர ஒருமைப்பாட்டையே. இந்த ஒற்றுமையானது புரட்சிகரத் தலைமையைக் கட்டியெழுப்பும் இலக்கில், வரலாற்று போக்கினை உணர்ந்துகொண்ட தெளிவில், புரட்சிகர இலட்சியங்களிலிருந்து வழுவாத உறுதிப்பாட்டில், ஆழமான சகோதரத் துவப் புரிந்துணர்வில், புரட்சிகர சக்திகள் மத்தியில் ஏற்படவேண்டிய ஒன்றாகும். இந்த ஒற்றுமையானது எந்தவொரு கட்டாயத்தின் பேரிலேயோ, அழுத்தத்தின் பேரிலேயோ பலவந்தமாகத் திணிக்கப்படுவதல்ல.**

நாம் இன்று வரலாற்றின் மிகவும் நெருக்கடியான காலக்கட்டத்தில் நிற்கிறோம். தமிழீழத்தில் கோரத்தாண்டவமாடிவரும் அரச பயங்கரவாத அட்டூழியங்களால் எமது மக்கள் மிகவும் இக்கட்டான ஆபத்தான நிலையை எதிர்நோக்கியுள்ளனர். எமது மக்கள் சிங்கள இனவாத அரக்கர்களால் கொன்றுகுவிக்கப்படும்பொழுது முழுஉலகமே கவலைகொள்ளலாம். கண்டனம் தெரிவிக்கலாம். கண்ணீர் வடிக்கலாம். ஆயினும் எமது மக்களைப் பாதுகாத்து, அவர்களது சுதந்திரத்தை வென்றெடுக்கும் மாபெரும் பொறுப்பு விடுதலைப் போராளிகளாகிய எம்முடையது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த மாபெரும் வரலாற்றைச் சுமந்து கொண்டிருக்கும் நாம், எம்மத்தியிலுள்ள வேற்றுமைகள், வெறுப்புகளைக் களைந்து எமது மக்களின் விடிவுக்காக ஒன்றிணைந்து போராடும் காலம் அண்மித்து விட்டது என்றே கருதுகிறேன். இந்த நெருக்கடியான காலக் கட்டத்தில் இதனையே எமது மக்களும் எதிர்பார்க்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாததல்ல.

ஒற்றுமைக்கு முதற்படியாக, ஒற்றுமைக்கான நல்லெண்ணச் சூழ்நிலையை நாம் உருவாக்கிக்கொள்வது அவசியம். இதற்கு வழியாக நாம் ஒருவரை ஒருவர் விமர்சிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். துரதிஷ்டவசமாக எம் மத்தியில் வேரூன்றிய வேறுபாடுகள், வெறுப்புணர்வுகளைக் களைந்துவிட வேண்டும். சொல்லளவில் ஒற்றுமை வேதாந்தம் பேசிக்கொண்டு, செயலில் சகோதரத்துவ யுத்தம் நடத்தும் விடுதலை அமைப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. இந்த சகோதர விரோதச் செயற்பாடுகள் நிறுத்தப் படாமல் ஒற்றுமைக்கான நல்லெண்ண சூழ்நிலையை எப்படி உருவாக்குவது? ஒற்றுமை என்ற உயரிய நோக்கினை மக்களை ஏமாற்றும் வெறும் பிரச்சாரச் சாதனமாகக் கையாள்வது மிகவும் கீழ்த்தரமான அரசியற் சந்தர்ப்பவாதமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் சகல புரட்சிகர விடுதலை அமைப்புகளுக் கும் நான் விடுக்கும் வேண்டுகோள் இதுதான். போர்க்களத்தில் குதியுங்கள். நமது பொது எதிரியை ஒன்றிணைந்து எதிர்ப்போம். களத்தில் எதிரியை சந்திக்கும்போது நம்மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் பிறக்கும் என்பது திண்ணம். அதேசமயம் உண்மையான ஒருமைப்பாட்டிற் கான ஆக்கப்பூர்வமான முயற்சிகளையும் மேற்கொள்வோம். நாம் தோளோடு தோள்நின்று போராடும்பொழுது நமது மக்களும் எம்மோடு அணிதிரளு வார்கள். முழுத் தேசமுமே நமக்குப் பக்கபலமாக நிற்கும். நமது ஒன்று திரண்ட பலத்தைக்கண்டு எதிரி நடுக்கங்கொள்வான். நாம் களத்தில் ஒன்றிணைந்து போராடினால் எதிரியை நமது தாய்நாட்டிலிருந்து விரட்டி யடித்து சுதந்திரத் தமிழீழம் காண்பது வெகுதூரத்தில் இராது!

பிரபாகரனின் இந்த அறிக்கை நல்லவிளைவை ஏற்படுத்தியது. 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன், தமிழீழ விடுதலை இயக்கத்தலைவர் (டெலோ) சிறிசபாரத்தினம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் (ஈ.பி.ஆர்.எல்.எப்) பத்மநாபா, ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) தலைவர் பாலகுமார் ஆகியோர் ஒன்றுகூடிப்பேசி கீழ்க்கண்ட கூட்டறிக் கையினை வெளியிட்டார்கள்.

''புரட்சிகர ஆயுதப்போராட்டப்பாதையைத் தழுவிக் களத்தில் போரா டும் இந்த நான்கு விடுதலை இயக்கங்கள் மத்தியில் ஒருமைப்பாடு ஏற் பட்டமை எமது விடுதலைப்போராட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். ஈழத்தமிழரின் சுதந்திரப்போரில் ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ள இந்நிகழ்ச்சி புரட்சிகரச் சக்திகளை ஒன்றிணைத்து ஆயுதப்போராட்டத்தை ஒருமுகப்படுத்தி வலுப்படுத்த வழிகோலியுள்ளது. இராணுவப்பயங்கரவாத அட்டூழியங்களையும், இனக்கொலையையும் எதிர் நோக்கி தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்துவரும் மக்களுக்கு எமது விடுதலை அணிகள் ஒன்றுபட்ட செய்தி பெருமகிழ்ச்சியையும், நம்பிக்கை யையும் அளிப்பதோடு, அவர்களது ஆன்ம உறுதியையும், விடுதலை உணர்வையும் பலப்படுத்தும் என்றே கருதுகிறோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும், தமிழீழ விடுதலை இயக்கமும், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய வற்றின் கூட்டமைப்பான ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் கீழ்க்கண்ட அரசியல் ரீதியான அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுபட்டுச் செயல் படத் தீர்மானித்துள்ளன.

1. ஸ்ரீலங்கா ஆதிக்கத்திலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் எமது தாய கத்தின் சுதந்திரத்தையும், இறைமையையும் வென்றெடுத்தல்.

2. இலங்கைவாழ் தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டுகின்ற தனியரசைத் தவிர்த்த வேறெந்த குறைந்தபட்ச சமரசத் திட்டத்தையும் அங்கீகரிப்பதில்லை.

3. பரந்துபட்ட மக்களின் பங்களிப்போடு பரிணாமம் பெறும் வெகு ஜன ஆயுதப்போராட்டத்தை (மக்கள் போராட்டத்தை) எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்.

4. தேசிய சுதந்திரப்போராட்டத்தோடு சோசலிசப்புரட்சியும் முன் னெடுத்து, சுதந்திரத் தாய்நாட்டில் சோசலிசச் சமுதாயத்தைக் கட்டி யெழுப்புதல்.



படிப்பகம்

www.padippakam.com

*5. உலக ஏகாதிபத்திய நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தைப் பூரணமாக விடுவித்து, அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல்.*

தற்போது ஒப்புக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் முக்கிய அரசியல் பிரச்னை குறித்து ஒன்றுகூடிக் கலந்தாலோசித்து முடிவெடுப்பதெனவும் ஸ்ரீலங்கா அரசப்படைகளுக்கெதிரான எமது ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளை ஒன்றுபடுத்திச் செயற்படுத்துவதெனவும் தீர்மானித்துள்ளோம்.

எமது இந்த ஒருமைப்பாடு விரிவுபட்டு வலுப்பெற ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு எமது மக்களின் விடுதலையில் அபிமானங்கொண்ட சகல தமிழ்மக்களையும் வேண்டிக்கொள்கிறோம்''.

இந்த அறிக்கைகண்டு தமிழர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். போராளிகள் ஒற்றுமைப்பட்டதன்மூலம் குறிக்கோளை நெருங்கிவிட்டதாக நினைத்தனர். ஆனால் நடந்ததோ வேறு?

1985ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் பூட்டான் தலைநகரான 'திம்புவில்' நடைபெற்ற மாநாடுவரை ஈழத்தேசிய விடுதலை முன்னணி ஒற்றுமையுடன் இயங்கியது. திம்பு மாநாட்டின்போது தமிழர் விடுதலைக்கூட்டணி, பிளாட் ஆகிய இயக்கங்களுடன் இணைந்துநின்று கூட்டாக குறைந்தபட்சத் திட்டம் ஒன்றினை ஈழத்தேசிய விடுதலை முன்னணி அளித்தது. இங்ஙனம் அனைத்து தமிழ் இயக்கங்களும் ஒன்றுபட்டு நிற்பது தனது நோக்கங்களுக்கு எதிரானது என இந்தியஅரசு எண்ணியது. எனவே போராளிகளை மிரட்டிப் பிளவுப்படுத்தத் திட்டமிட்டது. விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் டாக்டர் பாலசிங்கம், சந்திரகாசன், சத்தியயேந்திரா ஆகியோரை இந்தியாவிலிருந்து நாடுகடத்தியது. இதை எதிர்த்துத் தமிழகம் கொதித்தெழுந்தது. போராட்டங்கள் வெடித்தன. இதன்விளைவாக நாடுகடத்தும் உத்தரவை ரத்துசெய்யவேண்டிய அவசியம் இந்தியாவிற்கு ஏற்பட்டது. தற்காலிகமாக இந்தியஅரசு பின்வாங்கியபோதிலும் தனது திட்டத்தைக் கைவிடவில்லை.

ஈழத்தேசிய விடுதலை முன்னணியைப் பிளவுப்படுத்தும் சதித்திட்டத்தை ''ரா'' உளவுத்துறை வகுத்தது. ''ரா'' விரித்தவலையில் டெலோ இயக்கம் முதலில் விழுந்தது. ஈழத்தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகித்து போராளிகளுக்கிடையே ஒற்றுமை நிலவவேண்டுமென பேசிவந்த டெலோ இயக்கம் இன்னொருவிதத்தில் ராவுடன் சேர்ந்து இந்த ஒற்றுமைக்கு உலை வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது.





படிப்பகம்

www.padippakam.com

# இயக்க மோதல்களின் பின்னணி

1985ஆம் ஆண்டு செப்டம்பர் 2ஆம் தேதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுமான திரு. தர்மலிங்கம், திரு. ஆலாலசுந்தரம் ஆகியோர் படுகொலைச் செய்யப்பட்டனர். இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும், உலகநாடுகளிலும் இச்செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இலங்கையிலும், இந்தியாவிலுமுள்ள அரசியல்கட்சித் தலைவர்கள் இக்கொலைகளைக் கண்டித்தனர். இக்கொலைகளைச் செய்தது யார் என்பது புரியாத மர்மமாக இருந்தது. ஆனாலும் விடுதலைப்புலிகளே இந்திகொலைகளைச் செய்தார்கள் என்ற திட்டமிட்டப் பொய்ப்பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப் பட்டது. தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகயிருந்த அரசியல் தலைவர்களும், பத்திரிகைகளும் இக்கொலைகளைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள்மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி அவர்களுக்கு எதிரான பிரச்சாரங்களை முடுக்கிவிட்டனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் சிலர் என்னிடம் பேசும்போது விடுதலைப்புலிகளே இந்தக் கொலைகளை செய்தார்கள் என்றுக் குற்றம்சாட்டினார்கள். திரு. பிரபாகரன் அவர்களை நான் சந்தித்து இதுபற்றி கேட்டபோது அவர் திட்டவட்டமாக இதை மறுத்தார். ''நாங்கள் ஏன் இந்தக் கொலைகளைச் செய்யவேண்டும், அதற்கான அவசியம் என்ன? அதிலும் திரு. தர்மலிங்கம் அவர்கள் எங்களால் நன்கு மதிக்கப்பட்டவர். யாருக்கும் மனதாலும் தீங்கு நினைக்காதவர். எங்கள்பால் அன்பு கொண்டவர். எவ்விதக் காரணமுமில்லாமல் எதற்காக நாங்கள் அவரைக் கொலை செய்யவேண்டும்? இந்தக் கொலைகளை யார் செய்தது என்பதுபற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் உண்மைக்குற்றவாளிளைக் கண்டுபிடித்துவிடுவோம்'' என்று பிரபாகரன் என்னிடம் கூறினார்.

இந்நிகழ்ச்சிக்குப்பிறகு அதே ஆண்டில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நான் இரகசியமாக ஈழத்திற்குப் பயணம் செய்தேன். அப்போது யாழ்ப்பாணத்திலுள்ள முக்கியமான பலரைச் சந்தித்து இந்தக் கொலைகள்பற்றி விசாரித்தறிந்தேன். டெலோ இயக்கம்தான் இந்தக் கொலைகளைச் செய்தது என அவர்கள் திட்டவட்டமாகக் கூறினார்கள். விடுதலைப்புலிகளுக்கும் இந்தக் கொலைக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழகத்திற்குத் திரும்பியபிறகு நான் அறிந்துவந்த இந்த உண்மையினை தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களிடமும், மற்றவர்களிடமும் கூறினேன். ஆனால் அவர்கள் அப்போதும் விடுதலைப்புலிகள்மீதே குற்றம் சாட்டுவதை நிறுத்தவில்லை.

பின்னர் 1986ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் விடுதலைப்புலிகளுக்கும் டெலோ இயக்கத்தினருக்குமிடையே நடைபெற்ற மோதலின்போது கோப்பாய் தெற்குப்பகுதியைச் சேர்ந்த டெலோ உறுப்பினரான பழனிவேல் தங்கராசா என்பவர் விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டார். தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்களான திரு. தர்மலிங்கம், திரு. ஆலாலசுந்தரம் ஆகியோரின் கொலைகள்பற்றிய இரகசியங்களை அவர் வெளியிட்டார். தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கொலைசெய்யும்படி டெலோ தலைவர்களில் ஒருவரான பொபி என்பவர் தங்களுக்குக் கட்டளைப் பிறப்பித்ததாகவும், பொபியிடம் தாங்கள் காரணம் கேட்டபோது ''இது தலைமைபீடத்தின்



படிப்பகம்


www.padippakam.com

முடிவு. இது ஒரு அரசியல் தந்திரம். விளக்கம் தேவையில்லை'' என்று பொபி கூறியதாகவும் அவர் கூறினார். அவர் அளித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறினார்.

''இக்கொலைகளுக்கு வலன்டையன் தலைமைதாங்கினார். நான், சிட்டி பாபு, ரஞ்சித் ஆகியோர் பங்குபற்றினோம். சம்பவம் நடந்த அன்று வல் வெட்டியில் இருந்த எமது முகாமில் பழுப்பு நிற மோரிஸ் ஒக்ஸ்போட் கார் எம்மிடம் தரப்பட்டது. இக்கார் சம்பவத்தினத்திற்கு முதல்நாள் கிருபா என்பவரால் எங்கிருந்தோ கடத்திக்கொண்டு வரப் பட்டது. அக்காரில் நாம் நால்வர் மாலை 7.30 மணியளவில் ஆலால சுந்தரத்தின் வீட்டிற்குச் சென்றோம். பாஸ்போர்ட் விடயமாக அவருடன் பேசவேண்டும் என்று கூறினோம். வெளியேவந்த அவரைப் பலவந்தமாக ஏற்றிக்கொண்டு தர்மலிங்கம் வீட்டிற்குச் சென்றோம். ''ஆலாலசுந்தரம் உங்களுடன் கதைப் பதற்கு வந்துள்ளார்'' என்று தர்மலிங்கத்திடம்கூறி அவரையும் காரில் ஏற் றினோம். அவர்களை அழைத்துச் சென்று 8 அல்லது 8.30 மணியளவில் கோண்டாவிலை அடைந்தோம். தர்மலிங்கத்தை சிட்டிபாபுவுடன் அங்கு இறக்கிவிட்டு ஆலாலசுந்தரத்தை நல்லூர் இராஜவீதிச் சந்திக்குக் கொண்டு சென்றோம். சனநாட்டமற்ற ஒதுக்குப்புறத்தில் ஆலாலசுந்தரத்தின் கண் களைக்கட்டி நானும் வலண்டையனும் அவரைச் சுட்டுக்கொன்றோம். பின் னர் திரும்பிவந்து தர்மலிங்கத்தை ஏற்றிக்கொண்டு தாவடி ரோட்டில் உள்ள தோட்ட வெளிக்கு கொண்டு சென்றோம். பின்னர் அவரையும் சிட்டிபாபு சுட்டுக்கொன்றார். பின்னர் அவர்களது உடல்களை அவரவரது பாராளுமன்றத் தொகுதிகளுக்குக் கொண்டுசென்று போட்டோம்.

பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் தொலைவில் இருந்ததால் அன்றிரவு அவரைக் கொல்லமுடியாமல் போய்விட்டது. நீலன் திருச்செல்வத்தைக் கொல்வதற்கும் ஆயுத்தங்கள் நடந்ததாக நான் அறிந் தேன். இக்கொலைகளுக்கு ஒரு உப இயந்திரத்துப்பாக்கி, இரண்டு ஏ.கே. 47 ரக சிரிகுழல் துப்பாக்கிகள் ஆகியன எம்மால் உபயோகிக்கப்பட்டன''.

கொலையாளிகளே உண்மைகளை ஒப்புக்கொண்டு, யாருடைய உத் தரவின் பேரில் இதைச் செய்தனர் என்பதையும் வெளியிட்டனர். இந்தக் கொலைகளுக்கான பழியை விடுதலைப்புலிகள்மீது சுமத்தி தமிழ்நாட்டில் அவதூறுப் பிரச்சாரம் செய்தவர்கள் இதற்குப்பிறகு வாயடைத்துப் போனார்கள். தமிழ்நாட்டு மக்களும் இவர்களைப்பற்றித் தெரிந்துகொண்ட னர். உண்மைகளை நீண்டநாளைக்கு மூடிமறைக்க முடியாது என்பது நிரூபணம் ஆனது.





படிப்பகம்

www.padippakam.com

# டெலோவுடன் மோதல்

1986ஆம் ஆண்டு மே முதல்வாரத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், டெலோ இயக்கத்திற்குமிடையே பெருமளவு மோதல்கள் நிகழ்ந்தன. இதுபற்றிப் பலவிதமான தகவல்கள் வெளியாயின. மே 5ஆம் தேதியன்று மதுரையில் ''தமிழீழ ஆதரவாளர் மாநாடு'' ஒன்றினை நாங்கள் அப்போதுதான் நடத்திமுடித்திருந்தோம். தி.மு.க., தி.க., காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்டு பிளாக், ஆகிய கட்சிகளைக்கொண்ட டெசோ அமைப்பு இம்மாநாட்டை நடத்தியது. இம்மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவராக நான் இருந்தேன். மாநாட்டிற்கு தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்கினார். ஆந்திர முதல்வர் திரு. என். டி. இராமாராவ், பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் வாஜ்பாய், லோக் தளத் தலைவர் பகுகுணா, திரு. கி. வீரமணி உட்பட தலைவர்கள் பலரும் இம்மாநாட்டில் பங்கேற்றனர். சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இம்மாநாட்டில் திரண்டிருந்தனர். இம்மாநாட்டுப் பணிகளில் நான் ஈடுபட்டிருந்தபோது மே மாதம் 2ஆம் தேதி திடுக்கிடும் தகவல் ஒன்று எனக்குக் கிடைத்தது. 1985ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் மாதங்களில் தமிழீழத்தில் நான் 23 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தபோது எனக்குப் பாதுகாப்பாக வந்த விடுதலைப் புலிகளின் பாதுகாவல்படைக்குத் தளபதியாகத் தலைமைதாங்கிய **கேப்டன் லிங்கம்**, டெலோ இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்டார் என்பதே அந்தச் செய்தியாகும். கேப்டன் லிங்கம் பிரபாகரனின் ஆரம்பகாலத் தோழர்களில் ஒருவர். விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் மூத்த உறுப்பினர். தமிழீழ விடுதலைக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர். என்னுடன் மிக நெருங்கிப்பழகிய அவரின் மறைவு எனக்குப் பெரும் அதிர்ச்சியளித்தது. தாங்க முடியாத அந்த வேதனையை சுமந்துகொண்டு மாநாட்டுப்பணிகளில் ஈடுபட்டேன். மாநாடு முடிந்தபிறகு சென்னைசென்று பிரபாகரனைச் சந்தித்தேன்.

மாநாட்டிற்கும் அவரை நான் சந்திப்பதற்குமான இடைவெளியில் தமிழகத்தில் எவ்வளவோ வேண்டாத நிகழ்ச்சிகள் நடந்தன. தமிழீழம் உருவாவுவதற்கு எதிரானவர்களும், மொத்தத்தில் தமிழ் உணர்வுகளுக்கே எதிரானவர்களும் பிரபாகரனை கொலைகாரன் என்றும், ரத்தவெறிப்பிடித்தவர் என்றும் திட்டித்தீர்த்தனர். அவதூறான செய்திகளைத் தொடர்ந்து பரப்பினார்கள். உண்மை என்ன என்பதை அறிந்துகொள்ளாத தமிழக அரசியல் தலைவர்களில் சிலர் பிரபாகரனுக்கு எதிரான அறிக்கைகளை வெளியிட்டார்கள்.

இந்த சூழ்நிலையில்தான் மே மாதம் 14ஆம் தேதியன்று பிரபாகரனை சென்னையில் சந்தித்தேன். விடுதலைப்புலிகளுக்கும் டெலோவினருக்குமிடையே நடைபெற்ற மோதலைப்பற்றி அவர் விவரமாக என்னிடம் எடுத்துக் கூறினார். 1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் தேதியன்று கடலில் நடைபெற்ற போரில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த **மேஜர் அருணாவும்** மற்றும் சிலரும் வீரமரணமடைந்தனர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும்வகையில் யாழ்க்குடா நாட்டில் ஏப்ரல் 28ஆம் தேதியன்று **ஹர்த்தால்** நடந்தது. இதை மக்களாகவே முன்வந்து நடத்தினார்கள். ஆனால் அதற்கு நான்கு நாட்களுக்குமுன்னால் ஏப்ரல் 24ஆம் தேதியன்று சிங்களக் கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் டெலோ இயக்கம் 11 வீரர்களை இழந்திருந்தது. அவர்களின் மறைவுக்கு அஞ்சலிசெலுத்தாத மக்கள் விடுதலைப்புலிகளுக்கு மட்டும் அஞ்சலி செலுத்துவதைக் கண்டு புழுங்கிய டெலோவினர் 29ஆம் தேதி ஹர்த்தால் மேற்கொள்ளும்படி



படிப்பகம்

www.padippakam.com

பொதுமக்களைக் கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் மக்கள் இதை ஏற்க வில்லை. இதனால் ஆத்திரமடைந்த டெலோவினர் கல்லியங்காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு வீரவணக்கம் செலுத்திய மக்களைக் கண்மூடித் தனமாகத் தாக்கினார்கள். அத்துடன் அவர்கள் நிற்கவில்லை. அப்பகுதியிலிருந்த விடுதலைப்புலிகளின் தளபதிகள் மேஜர் பஷீர்காகா, லெப்டினட் முரளி ஆகியோரைக் கைதுசெய்து கொண்டு போனார்கள். இச் செய்தியை கேள்விப்பட்ட விடுதலைப்புலிகளின் கேப்டன் லிங்கம் பிரச்னையை பேசித்தீர்க்கும் நோக்கத்துடன் டெலோ முகாமுக்குப் போனார்.

டெலோ இயக்கத்தலைவர் சிறி சபாரத்தினம் அவரின் பழைய நண்பர். அந்தமுறையில் அவருடன் பேசி கைதுசெய்யப்பட்ட தனது தோழர்களை விடுவிப்பதற்காக கேப்டன் லிங்கம் அங்கு சென்றார். ஆனால் டெலோ முகாமுக்குள் வைத்து கேப்டன் லிங்கம் கொடூரமானமுறையில் படுகொலை செய்யப்பட்டார். அவருடைய கைகளைக்கட்டி, கண்களில் சுட்டு டெலோவினர் அவரைப் பிணமாக்கினார்கள்.

மேற்கண்ட செய்திகளை விவரித்த பிரபாகரன் சோகம்தோய்ந்த குரலில் லிங்கத்தின் குணாதிசயங்களை நினைவுகூர்ந்தார். ''லிங்கத்தின் சாவுச் செய்தி வந்தபோது நானே கொதிப்படைந்தேன். தளத்திலிருந்த எங்கள் தோழர்கள் எவ்வளவுபெரிய கொதிப்புக்கு ஆளாகியிருப்பார்கள் என்பதை நீங்களே எண்ணிப்பாருங்கள். தங்கள் படையின் கேப்டன் லிங்கத்தை படுகொலை செய்ததைக் கண்டிக்கவும், கைதான இருவீரர்களை விடுவிக்கும் அவர்கள் உடனடித் தாக்குதல் தொடங்கவேண்டிய நிலைமைக்கு ஆளானார்கள். எங்கள் தோழர்களுக்கு வேறுவழி எதுவுமில்லை. ஏனெனில் லிங்கத்தின் படுகொலையும், எங்களின் முக்கியத் தோழர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதும் ஏதோ தற்செயலாக நடந்த நிகழ்ச்சியாக நாங்கள் கருத வில்லை. ஆழமான சதியின் விளைவாகவே இவை நிகழ்ந்தன என்று கருதுகின்றோம். ''ரா'' உளவு அமைப்பின் தூண்டுதலின் பேரிலேயே சிறி சபாரத்தினம் இங்கே வந்து முகாமிட்டிருக்கிறார் என்பதும், எங்களுடன் மோதி எங்களை ஒழித்துக்கட்டுவதே அவரின் திட்டம் என்பதற்கான சாட்சியங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. எனவே நாங்கள் எங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானோம். சிறி சபாரத்தினத்தையோ மற்ற டெலோ இயக்கத்தினரையோ திட்டமிட்டு நாங்கள் கொலை செய்யவில்லை. எமது தற்காப்புக்காகவே நாங்கள் இதில் ஈடுபடநேர்ந்தது. நாங்கள் முந்திக் கொள்ளாவிட்டால் எங்களை அழித்துவிட டெலோவினர் முயன்றிருப்பார்கள்''.

இதை அவர் சொல்லும்போது அவர் குரலில் வருத்தம் தொனித்தது. உண்மைகளை உணராமல் தன்மீதும், விடுதலைப்புலிகள்மீதும் சிலர் அப்பட்டமான பழிசுமத்துவதைக் கண்டு அவர் மனம் நொந்து போயிருந்தார். ஆனாலும்கூட உண்மைகள் விரைவில் வெளியாகும். அப்போது எல்லாம் தெளிவாகும் என்பதில் அவருக்கு இருந்த நம்பிக்கையை என்னிடம் வெளிப்படுத்தினார்.

டெலோவினருடன் ஏற்பட்ட மோதல்குறித்து விடுதலைப்புலிகள் இயக்கத்தின்சார்பில் 1986ஆம் ஆண்டு மே மாதத்தில் வெளியிடப்பட்ட ஒரு சிறு பிரசுரத்தில் கீழேகண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

''டெலோ இயக்கத்தின்மீது நாம் இந்தக் கடும் இராணுவ நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டதற்கு வேறு காரணங்களும் உண்டு. டெலோ அமைப்பைத் தளமாகவைத்து, அமெரிக்க நாசகார உளவு ஏஜன்சி சி.ஐ.ஏ. யுடன் தொடர்புடைய எதிர்ப்புரட்சி சக்திகள் தமிழீழ விடுதலைப் போராட்



படிப்பகம்

www.padippakam.com

டத்தில் தலையிட்டு வந்தன. சர்வதேசரீதியான தகவல் அமைப்புகளையும் நிதி அமைப்புகளையும் கொண்ட இந்தப் பிற்போக்கு சக்திகள் சென்னையில் தளம் அமைத்து டெலோவுக்கு முண்டுகொடுத்து வந்தன. டெலோவின் அரசியல் மூளையாகவும் நிதி வங்கியாகவும் செயல்பட்ட இந்த சக்திகள் டெலோவை அத்திவாரமாகக்கொண்டு தமிழீழத்தில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தன. தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இந்த அமெரிக்கச் சார்பு சக்திகளின் ஊடுருவல் புரட்சிகர முற்போக்கு இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஒரு சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் அமைந்தது. ஏனென்றால் டெலோ இயக்கத்தை இராணுவரீதியாக வளர்த்துப் புலிகளை ஒழித்துக்கட்டுவதும் இந்த நாசகார சக்திகளின் சதித்திட்டமாக இருந்தது. ஆகவேதான் டெலோமீது நாம் எடுத்த இந்த இராணுவ நடவடிக்கை இவர்களுக்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்திருக்கிறது. எமது இயக்கத்தின்மீது பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு எம்மீது மாசு கற்பிக்க இவர்கள் முனைந்துவருகிறார்கள்.

டெலோ இயக்கத்தின்மூலம் புலிகளை அழிக்கமுடியாமல் போகவே அடுத்து ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தை இதற்குப் பயன்படுத்த ''ரா'' அமைப்பு முயன்றது.

டெலோ இயக்கத்தைத்தொடர்ந்து 86ஆம் ஆண்டின் இறுதியில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமும் ''ரா''வின் வலையில் விழுந்து விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்ட முயற்சிசெய்தது. கிழக்கு மாநிலத்தில் இஸ்லாமியத் தமிழர்களைத் துன்புறுத்தும் வேலைகளிலும் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் ஈடுபட்டது. ஏற்கெனவே தமிழர்களை இந்து, முஸ்லீம் அடிப்படையில் பிரித்து வேற்றுமையுணர்வை வளர்க்க சிங்களஅரசு முயற்சி செய்துகொண்டிருக்கும் இந்த வேளையில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் இந்த நடவடிக்கைகளை அப்பகுதியைச் சேர்ந்த தமிழர்கள் கண்டித்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் அட்டூழியங்களை எதிர்த்து கிழக்குமாநிலத் தமிழர்கள் கடையடைப்புகள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தினைத் தாக்கி அழிக்க ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் தயாரித்துக்கொண்டிருந்த இரகசியத்திட்டம் அம்பலமாயிற்று. இந்த இயக்கத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவரை விடுதலைப் புலிகள் கைதுசெய்தபோது அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கடிதத்தின்மூலம் பல இரகசியங்கள் தெரியவந்தன. எனவே வேறுவழியில்லாமல் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தை நிராயுதப்பாணிகளாக்க விடுதலைப் புலிகள் முடிவெடுத்து அதை வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள்.

டெலோ இயக்கத்தைத் தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமும் தமிழீழப்பகுதியில் தடைசெய்யப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# "ரா" உளவு அமைப்பின் சீர்குலைவு வேலைகள்

இந்திய அரசாங்கத்தின் உளவுத்துறைகளில் ஒன்றான "ரா" ஆரம்பத்திலிருந்து விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே செயல்பட்டு வந்திருக்கிறது. 1983ஆம் ஆண்டிலிருந்து இந்த அமைப்பு செய்துவந்த பல சீர்குலைவு வேலைகளை நாம் புரிந்து கொள்வது அவசியமாகும். பிரபாகரனுக்கும் இந்திய அரசுக்குமிடையே மோதலை உருவாக்கியது இந்த அமைப்பாகும்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செயல்பட்டுவந்த "ரா" அதே வேளையில் மற்ற சமூக விரோத இயக்கங்களை மறைமுகமாக ஊக்குவித்தது. இந்திய மண்ணிலிருந்துகொண்டு விடுதலைப்போராளிகள் என்ற போர்வையில் செயல்பட்டு வந்த பல சமூகவிரோத இயக்கங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொலை, கொள்ளை போன்ற காரியங்களைத் தங்குதடையில்லாமல் நடத்தின. அவற்றையெல்லாம் "ரா" மூடிமறைத்தது. இந்த சமூகவிரோத இயக்கங்களைப பாதுகாத்தது.

தமிழ்நாட்டில் பலகொலைகள், கொள்ளைகள் ஆகியவற்றை இந்த இயக்கங்கள் நடத்தியபோதிலும் அதற்குக் காரணமானவர்களைக் கண்டு பிடிக்கவோ தண்டிக்கவோ போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் சம்பந்தப்பட்டவர்கள் சுலபமாகத் தப்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள் என்பதும் அப்பட்டமான உண்மைகளாகும். இதற்கு "ரா" அமைப்பே காரணமாகும்.

உளவுத்துறையின் இந்த நடவடிக்கைகளுக்கு இரண்டு உள்நோக்கங்கள் இருந்தன.

முதலாவதாக இந்த இயக்கங்களைக்கொண்டு தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை போன்றவைகளை நடத்தி அதன்மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு ஈழத்தமிழர்கள்மீதே ஒரு வெறுப்புணர்வை ஏற்படுத்துதல்.

இரண்டாவதாக இந்த இயக்கங்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஏவிவிடுதல்.

மேற்கொண்ட இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்ற துரோக இயக்கங்கள் துணைபுரிந்தன.

தமிழீழ மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்ற இயக்கம் விடுதலைப் புலிகளின் இயக்கம் என்ற உண்மையை அடியோடு மறைத்து அதுபற்றிய தவறான செய்திகளை இந்திய அரசுக்கு "ரா" தெரிவித்து வந்தது. பிரதமராக ராஜீவ் காந்தி பொறுப்பேற்றபிறகு இலங்கைப்பிரச்னைப்பற்றிய முடிவுகள் எடுப்பதற்கு "ரா"-வின் ஆலோசனைகளையே பெரிதும் நம்பி அவர் செயல்பட்டார். அதன்விளைவாக அவருடைய முடிவுகள் எல்லாமே தவறுதலாக அமைந்தன. இந்திய அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே சுமூகமான உறவு ஏற்படாததற்கும் இந்த அமைப்பே காரணமாகும்.

பிரபாகரனையும் விடுதலைப்புலிகளையும் அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கு இந்த அமைப்பு பல்வேறு சதித்திட்டங்களைத் தீட்டியது. டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., பிளாட் போன்ற இயக்கங்களுக்கு விசேடப் பயிற்சியளித்து நவீன ஆயுதங்களைக் கொடுத்து விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்ட ஏவிவிட்டது. ஆனால் இந்தச் சதிவேலைகளைப்பற்றி பிரபாகரன் ஏற்கெனவே அறிந்திருந்த காரணத்தினால் இவற்றை வெற்றிகரமாக முறியடித்தார்.


படிப்பகம்

www.padippakam.com

ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்தானபிறகும்கூட தனது சீர்குலைவு வேலைகளை ''ரா'' நிறுத்தவில்லை. ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு விடுதலைப்புலிகள் நிராயுதப்பாணிகளாக காட்சிதரும் இந்தச் சமயமே அவர்களை ஒழித்துக்கட்ட ஏற்ற சமயம் என்று முடிவுகட்டி மீண்டும் சமூகவிரோத இயக்கங்களைச் சேர்ந்தவர்களை இந்திய ராணுவ விமானங்களின்மூலம் இலங்கை கொண்டு வந்து இறக்கியது. குறுகியகால இடைவெளியில் சுமார் 22 விடுதலைப்புலிகளை இந்த சமூகவிரோதிகள் படுகொலை செய்தார்கள். விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களையும் இவர்கள் விட்டுவைக்கவில்லை.

தீலிபனின் உண்ணாவிரதத்தினையொட்டி 1987ஆம் ஆண்டு செப்டம்பரில் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது சமூகவிரோத இயக்கங்களின் அக்கிரமங்களைக் குறித்து பல்வேறு செய்திகளை நேரடியாக அறியும்வாய்ப்பு கிடைத்தது.

பிரபாகரன் அவர்களிடம் நான் பேசிக்கொண்டிருந்தபோது அவர் மிக்க வேதனையுடன் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''யாழ்ப்பாணத்தை சிங்களப்படை முற்றுகையிட்டபோது எங்கள் தோழர்கள் இரவுபகலாக உறங்காமல், உண்ணாமல் காவல்புரிந்தார்கள். மக்களைப் பாதுகாத்தார்கள். ஆனால் அப்போது சென்னையில் சுகமாக உல்லாச வாழ்க்கை நடத்திய துரோகக்கும்பல் இந்திய இராணுவ உதவியுடன் இப்போது யாழ்ப்பாணத்திற்கு வந்து எங்கள் தோழர்களைச் சுட்டுக் கொல்கிறது. விடுமுறையில் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பிச் சென்றவர்களே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். வடமராட்சிமீது மூர்க்கத்தனமான சிங்களப்படை தாக்கியபோதுகூட நாங்கள் 7, 8 பேர்களைத்தான் இழக்க நேர்ந்தது. ஆனால் ஆயுதங்களைக் கீழே வைத்த பிறகு துரோக இயக்கங்களினால் எங்கள் தோழர்கள் 22 பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறியும்போது எங்கள் வேதனை அதிகமாகிறது. இந்திய அமைதிப்படையிடம் நாங்கள் முறையிட்டோம். அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதில் நடவடிக்கை எடுப்பதைத்தவிர வேறு வழியில்லாத நிலைமையில் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். சமூகவிரோத இயக்கங்களைச் சேர்ந்தவர்களை வளைத்துப் பிடித்து அவர்களின் ஆயுதங்களைப் பறித்தெடுத்தோம். எதிர்த்தவர்கள் சிலரை நாங்கள் சுடநேர்ந்தது. இறப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களும் தமிழர்களே என்பதை நாங்கள் வேதனையுடன் எண்ணிப்பார்க்கிறோம். ஏற்கெனவே எங்கள் இளைஞர்கள் பலரை பலிகொடுத்திருக்கிறோம். ஒவ்வொரு தமிழ் இளைஞன் இறக்கும்போதும் ஒரு தமிழ்ப்பெண் கணவன் இல்லாமல் போகிறாள் என்பது எங்களுக்குப் புரிகிறது. எங்கள் குலம் வளர நினைக்கும் எங்களுக்கு இது பேரிழப்புத்தான். ஆனாலும் துரோகிகளை நாங்கள் விட்டுவைக்க முடியாது. இந்த உண்மையை மற்ற இயக்கங்களிலுள்ள இளைஞர்கள் உணரவேண்டும். இந்த மோதல்களுக்கு இந்திய அரசாங்கத்தின் உளவுத்துறையே பின்னணியில் இருக்கிறது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். தமிழீழ இலட்சியத்தில் உறுதிப்பாடும், இயக்கக் கட்டுப்பாடும் உடைய ஒரு தேசிய இயக்கம் தோன்றுவதை இந்த சக்தி அன்றிலிருந்தே எதிர்த்து வருகிறது. தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப்புலிகள் வளருவதைக்கண்டு அஞ்சிய இந்திய உளவுத்துறை ஏனைய அமைப்புகளை ஆயுதக்குழுக்களாக வளர்த்துவிட்டு இயக்க மோதல்களை உருவாக்கி எம்மை அழிக்க முயலுகிறது. இந்த அழிவுக்கு இந்திய உளவுப்படை மட்டும் காரணமல்ல. இந்திய உளவுப்படையின் சூழ்ச்சிக்கேற்ப செயல்படும் இந்த அமைப்புகளின் தலைவர்களும் காரணமாவார்



படிப்பகம்

www.padippakam.com

கள். பதவிவெறிபிடித்த இந்தத் தலைவர்கள் இந்திய உளவுப்படையின் ஐந்தாம் படையாக விளங்குகிறார்கள். இந்த உண்மைகளை உணர்ந்து துரோகத் தலைவர்களைத் தூக்கி எறிந்துவிட்டு எங்களுடன் வந்து சேரு கிறவர்களை நாங்கள் சேர்த்துக்கொள்கிறோம். இலட்சிய பற்றுடைய போராளிகள் யாராக இருந்தாலும் அவர்களை அரவணைத்துக்கொள்ள நாங்கள் தயாராகவேயிருக்கிறோம். எங்களிடம் பிடிப்பட்ட பலரை அவரவர்களின் பெற்றோர்களை அழைத்து நாங்கள் ஒப்படைத்திருக்கி றோம். ஏனென்றால் அவர்களை நாங்கள் வெளியே விடுவோமேயானால் துரோகத் தலைவர்கள் அவர்களைக் கொன்றுவிட்டு பழியை எங்கள்மீது சுமத்திவிடுவார்கள்'' என்று அவர் கூறினார்.

பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தபோது இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திஅவரிடம் சில வாக்குறுதிகளை அளித்தார். அதை நம்பி பிரபாகரன் ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதித்தார். இடைக்கால அரசாங்கத்தில் விடுதலைப் புலிகள் முக்கிய பங்குவகிக்க வேண்டுமென்று பிரதமர் ராஜீவி லிருந்து இலங்கைத் தூதுவர் தீட்சித்வரை பலரும் பிரபாகரனை வற்புறுத்தி னார்கள். ஒருபுறம் இவ்வாறு செய்துகொண்டு மறுபுறம் விடுதலைப்புலி களை அடியோடு ஒழிக்க ''ரா'' அமைப்பின்மூலம் சதித்திட்டம் தீட்டப் பட்டது.

இந்திய அரசின் இந்த இரட்டைவேடம்கண்டு பிரபாகரன் மனம்நொந்து போயிருந்தார். ஒரு பெரிய நாட்டின் பொறுப்புமிக்க பதவியிலிருப்பவர் கள் இப்படியெல்லாம் கபடநாடகமாடுவதைக்கண்டு அவர் அளவற்ற வேதனையடைந்திருந்தார். அந்த வேதனையை என்னிடம் அவர் வெளி யிட்டபோது அவருக்கு நான் ஆறுதல் கூறினேன்.

''இந்தியாவின் பெரிய பதவிகளில் இன்றைக்கு இருப்பவர்கள்தான் இந்தியாவின் நிரந்தர பிரதிநிதிகள் என்று நினைக்கவேண்டியதில்லை. இவர்கள் தங்கள் சுயநலம் காரணமாக இவ்வாறு செய்கிறார்கள். இந்திய மக்கள் குறிப்பாக தமிழ்நாட்டுமக்கள் அவர்மீது மிக்க அன்பும், மதிப்பும் வைத்திருக்கிறார்கள்'' என்பதை நான் அவருக்கு விளக்கிச்சொன்னேன்.

''தமிழீழ மக்களின் முழு ஆதரவுப்பெற்ற தலைவராக நீங்கள் மட்டுமே விளங்குகிறீர்கள் என்பதை நீண்ட நாட்களுக்கு யாராலும் மறைத்துவைக்க முடியாது. அந்த உண்மை வெளிப்பட்டே தீரும். அப்படி ஒரு சூழ்நிலை உருவாகும்போது இந்தியமக்களின் முழுமையான ஆதரவு உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும்'' என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

''ரா'' உளவு அமைப்பு தொடர்ந்து இவ்வாறு செய்துவருவது பற்றி இருவரும் மனம்விட்டுப் பேசினோம். ஏனைய இயக்கங்களின் தலைவர்கள் ''ரா'' அமைப்புக்குக் கட்டுப்பட்டு விட்டார்கள் என்பதுபற்றியும் விரிவா கவே விவாதித்தோம். விவரம்புரியாத அப்பாவிகளான பல இளைஞர்கள் இந்த இயக்கங்களை நம்பி அவற்றில் சேர்ந்திருப்பது பற்றியும் பேசினோம். இந்த இயக்கங்களில் சேர்ந்துள்ள இளைஞர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் நடுவில் புலிகளைப்பற்றிய ஓர் அச்சம் உண்டாக்கப்பட்டிருப்பதை நான் கூறினேன். மற்ற இயக்கங்களை ஈவிரக்கமின்றி ஒழித்துக்கட்ட பிரபாகரன் முயலுகிறார் என்ற பொய்யான பிரச்சாரத்தைத் துரோக இயக்கங்களின் தலைவர்கள் செய்துவருவதற்கு, பதில் சொல்லியாகவேண்டும். இந்த இயக் கங்களின் துரோகத்தன்மையை அம்பலப்படுத்துவதோடு இந்த இயக்கங் களில் சேர்ந்துள்ள அப்பாவி இளைஞர்களுடன் தங்களுக்கு எவ்விதப் பகைமையும் இல்லை என்பதை விளக்கினால் நல்லது'' என்பதையும் நான் அவரிடம் கூறினேன். அந்த யோசனையை பிரபாகரன் வரவேற்றார். அன்றையதினமே பின்வரும் அறிக்கையும் அவர் வெளியிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

அந்த அறிக்கையில் விடுதலைப்புலிகளுடன் இணைந்துபோராட முன் வருமாறு அனைத்துப் போராளிகளுக்கும் அவர் நேசக்கரம் நீட்டினார். 25.9.'87 அன்று அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

''தமிழீழ மக்கள் இன்று மிகவும் ஆபத்தான வரலாற்று நெருக்கடியை எதிர்நோக்கி நிற்கிறார்கள். இந்த அக்கட்டான சூழ்நிலையில் ஒரு தேசிய எழுச்சியாக நமது போராட்டம் சாத்வீக-வடிவில் ஒரு புரட்சிகரமான புதிய பரிமாணம் பெற்று வருகிறது. இந்த சந்தர்ப்பத்தில் போராளிகளிடையே மோதல்கள் நிகழ்வது இன்றைய மக்கள் போராட்டத்திற்கு மாசு கற்பிப்பதாக முடியும். ஆகவே ஏனைய அமைப்புகளைச் சேர்ந்த போராளிகள் தமது விரோத மனப்பான்மையைத் துறந்து, பழிவாங்கும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, எமது விடுதலை இயக்கத்தோடு இணைந்துகொள்ள முன்வந்தால் அவர்களை அரவணைத்துக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்''.

''அன்றும் சரி. இன்றும் சரி இயக்க முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் எந்த சக்தி பின்னணியில் இயங்குகிறது என்பதை நான் பகிரங்கமாகவே அம்பலப்படுத்தியுள்ளேன். இந்தியஅரசு அங்கமாகிய இந்த சக்தியின் நாசகார நடவடிக்கைகள்பற்றி தமிழீழ மக்கள் இன்று நன்கு அறிவார்கள். தமிழீழ இலட்சியத்தில் உறுதிப்பாடும், இயக்கக் கட்டுப்பாடுடைய ஒரு தேசிய இயக்கம் தோன்றுவதை இந்த சக்தி அன்றிலிருந்தே எதிர்த்து வருகிறது. ஒரு தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப்புலிகள் வளர்வதுகண்டு அஞ்சிய இந்திய உளவுத் துறை ஏனைய அமைப்புகளை ஆயுதக்குழுக்களாக வளர்த்துவிட்டு, இயக்க மோதல்களை உருவாக்கி எம்மை அழிக்க முயன்றது. ஆனால் மக்கள் பலம் எமக்குப் பக்கபலமாக இருப்பதால் எம்மை அழிக்கமுடியவில்லை. ஆனால் இயக்க மோதல்கள் நிகழ்ந்தன. உடன்பிறப்புகள் ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டனர். தமிழனத்துக்கு ஏற்பட்ட இந்த அழிவுக்கு, இந்த அளப்பரிய இழப்பிற்கு இந்திய உளவுப்படை மட்டும் காரணமல்ல, இந்த உளவுப்படையின் நய வஞ்சக சூழ்ச்சிக்குப் பலியாகிய ஏனைய அமைப்புகளின் தலைமைகளும் இதற்குக் காரணம். பதவிவெறிபிடித்த இந்தத் தலைமைகள் இந்தியாவின் பகடைக் காய்களாக இந்திய உளவுத்துறையின் ஐந்தாம்படையாக இயங்கினார்கள். இயங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

எனது அன்பான உடன்பிறப்புகளே! எமது எதிர்நோக்கும் இந்த இக்கட்டான கட்டத்தில் நான் உங்களுக்கு எனது அன்புக்கரத்தை நீட்டுகிறேன். தமிழீழ இலட்சியத்தைக் கைவிட்டு, தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு, அந்நிய அரசு சக்தி ஒன்றிற்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் துரோகத்தலைமைகளைத் தூக்கி எறிந்துவிட்டு புலிகளோடு வந்து சேருங்கள். புலிகளாக மாறுங்கள். புலிகளின் இலட்சியப் போராட்டத்தில் அணிதிரளுங்கள். நீங்கள் எந்த இலட்சியத்திற்காக இந்த அமைப்புகளிடம் சேர்ந்தீர்களோ அந்த இலட்சியப் பாதையில் எமது விடுதலை இயக்கமே வீறுநடை போடுகிறது. ஆகவே தமிழீழ இலட்சியப்பற்றுடைய போராளிகள் யாவரையும் நாம் அரவணைத்துக்கொள்ளத்தயார். உங்களை எமது அணியில் சேர்த்துப் போராளிகளாக கௌரவிக்கத் தயார். எமது தோழர்களாகப் பராமரிக்கத் தயார்''

பிற இயக்கங்களுடன் இணைந்து நின்று போராட பலமுறை பகிரங்கமாக பிரபாகரன் முன்வந்தும் மற்ற இயக்கத்தலைவர்கள் அந்த அழைப்பை உதாசீனம் செய்தனர். இந்திய ''ரா'' உளவு அமைப்பு, மற்றும் சர்வதேச சீர்குலைவு அமைப்புகள் ஆகியவை விரித்தவலையில் விழுந்து விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட முயன்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கே துரோகம் செய்யவும் இவர்கள் தயங்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் பிரபாகரனின் வேண்டுகோள் பிற இயக்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்களைச் சிந்திக்க வைத்தன. ஆனால் தங்கள் தலைவர்களின் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு இவர்கள் அஞ்சினார்கள். எனினும் துணிந்து பலர் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்தனர். மற்றும் பலர் துரோக இயக்கங்களிலிருந்து அணி அணியாக வெளியேறத் தொடங்கினர்.

## தமிழகத்தில் பிரபாகரன்

1970களில் இருந்து பிரபாகரன் தமிழகத்திற்கு வந்தும்-சென்றும் இருந்தாலும் 1982ஆம் ஆண்டிற்குப்பிறகே அவரது பெயர் தமிழகத்தில் பரவத் தொடங்கியது.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து முகுந்தன் என்ற உமாமகேசுவரன் விலக்கப்பட்டபிறகு 1982ஆம் ஆண்டு மே 24ஆம் தேதி சென்னை பாண்டிபஜாரில் உள்ள ஒரு ஹோட்டலில் அவரும்-பிரபாகரனும் எதிர் பாராதவிதமாக ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்தது. இதையொட்டி நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையின் விளைவாக பிரபாகரன், முகுந்தன் மற்றுமிரு தோழர்களும் கைதுசெய்யப்பட்டனர். இச்செய்தி தமிழகத்தில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியது. இந்நிகழ்ச்சியையொட்டி பிரபாகரனின் மற்ற தோழர்களையும் போலீஸ் வேட்டையாடத் தொடங்கிற்று. சென்னையிலுள்ள எனது வீட்டையும் போலீஸ் சோதனையிட்டது. இந்த மோதலின் பின்னணி என்ன என்பதை எனக்கு ''கிட்டு'' விளக்கினார்.

''தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்தின் தொடக்கக் காலத்தில் அதன் தலைவராக உமா மகேசுவரன் என்ற முகுந்தன் இருந்தார். அவர் சர்வேயராக வேலைபார்த்தவர். ஆங்கிலம் கற்றவர். ஆகவே பிரபாகரன் அவரைத் தலைவராக்கிவைத்தார். இராணுவப்பிரிவு தலைமையை மட்டும் தான் வகித்தார். ''இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரான கனகரத்தினம் என்பவரைச்சுட முயன்று அதில் நாங்கள் தோல்விகண்டோம். அப்போது சிங்களப் போலீசார் எங்களைத்தேடி வேட்டையாடினார்கள். குறிப்பாக இயக்கத்தலைவர் உமாமகேசுவரன், இயக்க உறுப்பினர் ஊர்மிளா ஆகியோருக்கு வலைவீசினார்கள். எனவே அவர்கள் தப்பி தமிழகம் வந்து சேர்ந்தனர். புலிகள் இயக்கத்தில் கடுமையான ஒழுக்கக் கட்டுப்பாடுகள் உண்டு. உறுப்பினர்களில் யாரேனும் ஒருவர் திருமணம் செய்துகொள்ள விரும்பினால் இயக்கம் அதை அனுமதிக்கும். ஆனால் ஒழுக்கக்கேடான உறவுகளுக்கு இயக்கத்தில் இடம் இல்லை. உமாமகேசுவரன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள அனுமதிகேட்டார். இயக்கம் அதை அனுமதித்தது. ஆனால் இயக்க உறுப்பினர் ஊர்மிளாவுடன் அவருக்குத் தொடர்பிருந்தது என்பது வெளியானவுடன் இயக்கத்திற்குள் கடும் எதிர்ப்புக் கிளம்பிற்று. அப்போது ''தம்பி'' பெங்களூரில் இருந்தார். அவர் அங்கிருந்து வந்து இதுகுறித்து விசாரணை நடத்தினார். செல்லக்கிளி, ரவி, ராகவன், நாகராசன், அய்யர் ஆகிய முக்கிய உறுப்பினர்கள் உமாமகேசுவரன்மீது நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தினார்கள். இதற்கிடையில் மறுநாள் நடைபெற்ற விசாரணைக்கு உமாமகேசுவரனும், ஊர்மிளாவும் வரவில்லை. அவர்கள் தலைமறைவானார்கள். எனவே உமாமகேசுவரன் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டார். பிறகு பிரபாகரனே தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்''.



படிப்பகம்

www.padippakam.com

பிரபாகரன் கைது செய்யப்பட்ட செய்தியறிந்து அவசரஅவசரமாக நான் சென்னை திரும்பினேன். விடுதலைப்புலிகள் இயக்க அரசியல்பிரிவு பொறுப்பாளர் திரு. சுப்பிரமணியம் என்னைச் சந்தித்து விவரங்களைக் கூறினார். இதற்கிடையில் பிரபாகரனையும், முகுந்தனையும் கைதுசெய்து அழைத்துச்செல்ல சிங்கள உயர் போலீஸ் அதிகாரிகள் சென்னை வந்திருப் பதாகவும் தகவல் கிடைத்தது. அதைக் கண்டித்து நான் ஒரு அறிக்கை வெளி யிட்டேன். அதன் பின்னர் அனைத்துக்கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசினேன். ஜுன் 1ஆம் தேதியன்று சென்னையில் அனைத்துக்கட்சி கூட் டம் ஒன்றினையும் கூட்டினேன். 20 கட்சித்தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். கூட்டம் கூடுவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பாக அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளராக அப்போதிருந்த திரு. ப.உ. சண் முகம் அவர்கள் என்னுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டார். கூட்டப்படவிருக்கும் சர்வக்கட்சி கூட்டத்தை ஒத்திவைக்குமாறும், அத்தகைய கூட்டத்தை முதலமைச்சர் அவர்கள் கூட்டுவதாக இருக்கிறார் என்றும் அவர் வேண்டிக்கொண்டார். நான் அவருக்கு பின்வருமாறு பதில் சொன் னேன்.

''முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இத்தகைய கூட்டத்தைக் கூட்டுவதை நான் வரவேற்கிறேன். அது அதிகாரப்பூர்வமான கூட்டமாக இருக்கும். ஆனால் இப்போது நான் கூட்டியுள்ள இந்தக்கூட்டம் அதிகாரப் பற்றற்ற கூட்டமாக இருந்தாலும் நிலைமையின் அவசரத்தைக்கருதி கூட்டப் பட்ட கூட்டமாகும். எனவே இக்கூட்டத்தை இத்தருணத்தில் ஒத்திவைப்பது நல்லதல்ல. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் முதலமைச்சரின் கரங்களை மேலும் வலுப்படுத்தும். எனவே அவசியம் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன். முதலமைச்சர் கூட்டவிருக்கும் கூட்டத்தில் நானும் மற்ற கட்சித் தலைவர்களும் கலந்து கொள்வோம்'' என்று நான் பதில் சொன்னேன்.

பிறகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் அனுமதியுடன் திரு. ப.உ. சண்முகம் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார். தி.மு.க. சார்பில் பிரதிநிதிகள் யாரும் வரவில்லை என்றாலும் இக்கூட்டத்தின் நோக்கத் தினை வரவேற்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் ஒரு கடிதம் அனுப்பிவைத்தார்.

திரு. பிரபாகரன், திரு. முகுந்தன் ஆகியோரை எவ்வித நிபந்தனையு மின்றி விடுவிக்கவேண்டுமென்றும், எக்காரணம்கொண்டும் இவர்களை சிங்களப்போலீசாரிடம் ஒப்படைக்கக்கூடாது என்றும் வற்புறுத்தும் தீர் மானம் ஒன்று இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் பார் வையாளர்களாக விடுதலைப்புலிகளின் இயக்க அரசியல் பிரிவுப்பொறுப் பாளர் திரு. சுப்பிரமணியம், திரு. சந்திரகாசன், திரு. கரிகாலன் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள 20 கட்சிகள் ஒன்றுகூடி நிறைவேற்றிய இந்தத் தீர் மானம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்திய அரசாங்கத்தையும், தமிழக அரசாங்கத்தையும் சிந்திக்கவைத்தது. இதன்விளைவாக இந்த இரு வரையும் நாடுகடத்துவது நிறுத்தப்பட்டது. அனைத்துக்கட்சியினரும்கூடி இத்தகைய நடவடிக்கையை உடனடியாக எடுத்திருக்காவிட்டால் இந்த இரு வரும் சிங்களப் போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பார்கள். நல்ல வேளையாக அவ்வாறு நேரவில்லை.

விடுதலைப்புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த மற்ற தோழர்களை போலீஸ் வலைவீசித் தேடிவந்தது. எனவே முக்கியமான சில தோழர்களை பத்திர



படிப்பகம்

www.padippakam.com

மாக மறைத்துவைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. திரு. கிட்டு, திரு. ரஞ்சன், திரு. பண்டிதர், திரு. சீலன், திரு. புலேந்திரன், திரு. பொன்னம் மான், திரு. சுப்பிரமணியம் ஆகியோரை பாபநாசத்திலுள்ள எங்கள் வீட் டில் மறைத்து வைத்தேன். சிலமாதங்கள் அவர்கள் அங்கு தலைமறைவு வாழ்க்கை நடத்தினார்கள். இவர்களில் கிட்டு, சுப்பிரமணியம் ஆகிய இருவர் மட்டுமே இப்போது உயிருடன் இருக்கிறார்கள். மற்றவர்கள் வீர மரணமடைந்துவிட்டார்கள்.

பின்னர் ஒரு காலக்கட்டத்தில் புலேந்திரன் என்னிடம் ஒரு செய்தியைக் கூறினார். பிரபாகரன் கைதுசெய்யப்பட்டதும் மேற்கூறப்பட்ட தோழர்கள் ஒன்றுகூடி என்னசெய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார்கள். அப் போது ஒரு விசித்திரமான யோசனை அவர்களுக்குத் தோன்றியது. சென்னை யிலுள்ள மிக உயரமான கட்டிடமான எல்.ஐ.சி. கட்டிடத்தின் உச்சிக்குப் போய் நின்றுகொண்டு பிரபாகரனை விடுதலை செய்யாவிட்டால் மேலி ருந்து குதித்து தற்கொலை செய்து கொள்வதாக முறையிடுவதென்றும் அதற்கு அரசாங்கம் அசையாவிடில் ஒவ்வொருவராகக் கீழே குதித்துத் தற் கொலை செய்துகொள்வதென்றும் முடிவு செய்தார்களாம். இச்செய்தியை அறிந்த திரு. சுப்பிரமணியம், அவர்களை மிகக்கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

''பிரபாகரனை வெளியே கொண்டுவருவது என்னுடைய பொறுப்பு. அதை நான் எப்படியாவது செய்வேன். நீங்கள் இத்தகைய அசட்டுத்தன மான யோசனையை கைவிடுங்கள்'' என்று அவர் உறுதிகூறினார். அதன் பின்னரே அவர்கள் இந்த யோசனையைக் கைவிட்டார்கள். அதற்குப் பிறகு சென்னை மத்தியசிறையில் வைக்கப்பட்டிருந்த பிரபாகரனையும், முகுந்த னையும் நான் சந்தித்துப் பேசினேன்.

பிரபாகரனை நான் சந்தித்தபோது அளவுகடந்த வியப்புக்குள்ளானேன். ஏனென்றால் அவர்தான் பிரபாகரன் என்பது தெரியாமலேயே நான் பழகி இருந்திருக்கிறேன். திரு. சுப்பிரமணியம் அவர்கள்தான் புலிகள்சார்பில் என்னை அடிக்கடி சந்திப்பார். ''உங்கள் தலைவர் பிரபாகரனை நான் பார்க்க வேண்டும் என்று நான் சொன்னபோதெல்லாம் ஆகட்டும் அழைத்து வருகிறேன்'' என்று சுப்பிரமணியம் சொல்லுவார். ஆனாலும் அவர் அழைத்து வரவேயில்லை. அவரும் அவரது தோழர்களும் எனதுவீட்டில் தங்கியிருந்தார்கள். சட்டமன்ற கூட்டம் நடைபெறும் நாட்கள்தவிர பாக்கி நாட்களில் வெளியூர் சுற்றுப்பயணத்தில் இருப்பேன். எனவே இவர்களுடன் அதிகமாக சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பில்லை. சென்னை வரும்போது அவர்களைச் சந்திப்பேன். அவர்களில் ஒருவராக திரு. பிரபா கரன் இருக்கிறார் என்பது எனக்கு அப்போது தெரிவிக்கப்படவில்லை. எனவே சிறையில் திரு. பிரபாகரனை சந்தித்தபோது வியப்பில் ஆழ்ந் தேன். அத்துடன் எனக்கு அளவற்ற மகிழ்ச்சியும் ஏற்பட்டது. இரகசியத் தைக் கட்டுக்காக்கும் திறமையை மனதிற்குள்ளாகவே பாராட்டிக்கொண்டேன்.

அதன்பின்னர் பிரபல வழக்கறிஞர் திரு. என்.டி. வானமாமலை அவர் களை நான் அணுகி இந்தவழக்கில் இவர்களுக்காக வாதாடும்படி வேண்டிக் கொண்டேன். இந்தியக்கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்மாநிலச் செயலாளர் திரு. ப. மாணிக்கம் அவர்களும் அவரிடம் இதைப்போலவே வேண்டிக் கொண்டார். தி.மு.கவைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. இராதாகிருஷ்ணன், எங்கள் கட்சியைச்சேர்ந்த வழக்கறிஞர் திரு. இராதாகிருஷ்ணன் ஆகியோ ரும் இந்த வழக்கில் ஆஜரானார்கள்.

சிலமாதங்களுக்குப்பிறகு திரு. பிரபாகரனும், திரு. முகுந்தனும் ஜாமி னில் விடுதலையானார்கள். திரு. முகுந்தன் சென்னையிலும், திரு. பிரபா


படிப்பகம்

www.padippakam.com

கரன் மதுரையிலும் இருக்கவேண்டுமென்று நீதிமன்றம் ஆணைப்பிறப்பித்தது. நீதிமன்றம் பிறப்பித்த இந்த ஆணைதான் பிரபாகரனை எனக்கு நெருக்கமாகக் கொண்டுவந்து சேர்த்தது. அன்று இரவே திரு. பிரபாகரனை அழைத்துக் கொண்டு மதுரைக்குப் பயணமானேன். மதுரை மேலமாசிவீதியில் உள்ள எங்கள் இல்லத்தில் அவர் தங்கினார். 6, 7 மாதங்கள் அவர் மதுரையில் இருக்க நேர்ந்தது. அப்போது எங்கள் குடும்பத்தினருடன் அவருக்கிருந்த நெருக்கம் மிகுந்தது. எங்கள் குடும்பத்தினரால் மிகவும் நேசிக்கப்பட்டு எங்களில் ஒருவராகவே அவர் மாறினார்.

அந்த சிலமாதங்களில் பிரபாகரன் அவர்களைப்பற்றியும், அவரது இயக்கத்தைப்பற்றியும் நிறையவே நான் அறிந்துகொண்டேன். இயக்க முக்கிய தோழர்களான ரகு, சீலன், புலேந்திரன், அன்றன், மாத்தையா, தங்க வேலாயுதம், சுப்பிரமணியம், செல்லக்கிளி, ரஞ்சன் ஆகியோர் மதுரையில் பிரபாகரனுடன் இருந்தார்கள். எத்தனையோ நாட்கள் மணிக்கணக்கில் நாங்கள் பேசிக்கொண்டிருந்திருக்கிறோம்.

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குமிடையே நட்புறவு இருக்கவேண்டும் என்பதற்காக நான் பலமுயற்சிகள் எடுத்துக் கொண்டேன். 1982ஆம் ஆண்டு ஆகஸ்டு 11ஆம் தேதியன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்-நாயகம் திரு. அமிர்தலிங்கம் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மதுரைக்கு வந்தார். அப்போது அவரையும், பிரபாகரனையும் சந்திக்கவைத்துப் பேசவைத்தேன். ஒரு சுமூகமான சூழ்நிலை உருவாயிற்று.

1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரங்களுக்குப்பிறகு பிரபாகரன் அவர்களையும், அமிர்தலிங்கம் அவர்களையும் இலங்கையிலேயே சந்தித்துப்பேச முயற்சி எடுத்து அதன்விளைவாக அவர்கள் அங்கே சந்தித்துப் பேசினார்கள். இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களை அமிர்தலிங்கம் சந்தித்துப்பேசி ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க செய்யும் முயற்சிகளுக்கு தனது ஒத்துழைப்பு உண்டு என்று பல தடவை இருவருக்குமிடையே நான் தூதுசென்று இருக்கிறேன். எனது முயற்சிகள் ஓரளவுதான் வெற்றிபெற முடிந்தது. இந்திய உளவுத்துறையான ''ரா'' இவர்கள் இருவரும் ஒன்று பட்டுவிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனமாக இருந்தது. தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்களும் இந்திய அரசாங்கத்தையே முழுமையாகச் சார்ந்து நிற்கும் நிலைக்குச் சென்றுவிட்டார்கள். தமிழீழ மக்களோடு அவர்களுக்கிருந்த தொடர்பு முற்றாக அறுந்து போனநிலையில் அவர்களால் சரியான முடிவுகளை எடுக்கமுடியவில்லை. இதுபோன்ற காரணங்களினால் இரு இயக்கங்களுக்கும் இடையே இருந்த உறவு சீர்குலைந்தது.

1983ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் தேதி மதுரை ஒய்.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேதாஜியின் விழாவினை இந்தியத்தேசிய இராணுவத்தினர் கொண்டாடினார்கள். இந்த விழாவில் பேசுவதற்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். இவ்விழாவில் கலந்துகொள்ள நான் கிளம்பியபோது பிரபாகரன் அவர்களும் என்னுடன் வந்தார். மேடையில் வந்து அமர மறுத்துவிட்டார். கூட்டத்தினரோடு உட்கார்ந்துகொண்டார். இவ்விழாவில் நான் பேசும்போது நேதாஜியின் வாழ்க்கையைப் பின்பற்றி விடுதலைப் புலிகள் ''தமிழீழம்'' பெறுவதற்கு போராடுகிறார்கள் என்று கூறினேன். விழாமுடிந்து திரும்பும்போது திரு. பிரபாகரன் என்னிடம் பேசும்போது பின்வருமாறு கூறினார்.

''அண்ணா! நீங்கள் சொன்னது உண்மைதான். நேதாஜிதான் எங்களுக்கு வழிகாட்டி. அவர் வாழ்க்கையைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்'' என்றார். அதைத்தொடர்ந்து இருவரும் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தோம்.



படிப்பகம்

www.padippakam.com

அப்போது நேதாஜியை பிரபாகரன எநதளவுக்கு நேசிக்கிறார் என்பது எனக்குப் புலனாயிற்று. நேதாஜியைப்பற்றி அவர் பேசும்போது பரவசத் துடனேயே பேசினார். நேதாஜியைப்பற்றி நான் சேகரித்துவைத்திருந்த பல புத்தகங்களை அவருக்குக் கொடுத்தபோது அவர் அளவற்ற மகிழ்ச்சி யடைந்தார்.

மதுரையிலிருக்கும்போது பிரபாகரன் சும்மா இருக்கவில்லை. தோழர் களுக்குப் பயிற்சியளிப்பதிலும், எதிர்காலத் திட்டங்களை வகுப்பதிலும் ஈடுபட்டார். புலிகள் இயக்கத்திற்கான சீருடை, தொப்பி போன்றவை களின் மாதிரிகளை அவர் மதுரையில் இருக்கும்போதுதான் தேர்ந்தெடுத் தார். அவற்றை என்னிடம் காட்டி எது நன்றாக இருக்கிறது என்று பிர பாகரன் கேட்டார். அவர் தேர்ந்தெடுத்ததையே நன்றாக இருக்கிறது என்று நானும் சொன்னேன்.

விடுதலைப்புலிகளின் துணைத்தளபதியாக தற்போதிருக்கும் திரு. மாத் தையாவுடன் 1985ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழீழத்தில் நான் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்தபோது என்னிடம் அவர் ஒன்றை நினைவு கூர்ந்தார். ''அண்ணா! நாங்கள் மதுரையில் இருக்கும்போது தலைவர் ஒன்றைச் சொன்னார். இந்த சீருடைகள் அணிந்து 100 விடுதலைப்புலிகள் அணிவகுத்துச் செல்வதை கண்களால் காணவேண்டுமென்று ஆசைப்பட் டார். ஆனால் இப்போது தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் பல நூற்றுக்கணக்கான விடுதலைப்புலிகள் சீருடையுடன் அணிவகுத்துக் கொண் டிருக்கிறார்கள். தலைவர்கண்ட கனவு இவ்வளவு சீக்கிரத்தில் நனவாகி விட்டது'' என்று மாத்தையா கூறியபோது அவருடைய குரல் தளதளத்தது. எனக்கேகூட இது ஆச்சரியமாக இருந்தது.

தமிழீழத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளின் விளைவாக பிரபாகரன் அங்கு திரும்பவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் நீதிமன்ற ஆணையின்படி மதுரையில் தங்கி தினமும் போலீஸ்நிலையத்திற்குச் சென்று கையெழுத்துப் போடவேண்டிய நிலையில் பிரபாகரன் இருந்தார். இரவும்-பகலும் அவ ருக்குக் காவலாக ஒரு சப்-இன்ஸ்பெக்டர், இரண்டு போலீஸ்காரர்கள் இருந்தார்கள். அவர்களின் காவலைமீறித் தப்பிச்செல்வது என்பது எளி தான காரியம் அல்ல. ஆனாலும் செல்லவேண்டிய அவசியம் இருந்தது. என்னிடம் இதை அவர் கூறியபோது நான் அதற்குத் தடையொன்றும் சொல்லவில்லை. ''எது உசிதம் என்று உங்களுக்குத் தோன்றுகிறதோ அப்படியே செய்யலாம்'' என்று நான் சொன்னேன். அதன்படி வழக்கு வாய்தாவுக்காக சென்னைக்குப் புறப்பட்டு வருவதாகச் சொல்லிவிட்டு வந்த பிரபாகரன் நடுவிலேயே திடீரென்று மாயமாய் மறைந்து போனார். அவருடன் பயணம் செய்துவந்த போலீஸ் அதிகாரிகள் சென்னைக்கு வந்து சேர்ந்தபோது பிரபாகரன் வந்து சேராததைக்கண்டு திகைப்படைந்தார்கள். போலீஸ் அதிகாரிகள் பலரும் என்னை உடனடியாகச சந்தித்து விசாரணை நடத்தினார்கள். நான் அவர்களிடம் உண்மையைச் சொன்னேன். ''பிரபாக ரன் பத்திரமாக யாழ்ப்பாணம் போய்ச்சேர்ந்துவிட்டார்'' என்று நான் சொன்னதை அவர்கள் நம்பத் தயாராகயில்லை. ''பாண்டிச்சேரி அல்லது பெங்களூரில்தான் அவர் மறைந்துகொண்டிருக்கிறார்'' என்று அவர்கள் சொன்னார்கள். ''அப்படியானால் அங்குபோய்த் தேடுங்கள்'' என்று நான் சொன்னேன். அவர்களால் என்னை நம்பவும் முடியவில்லை, நம்பாமலிருக்கவும் முடியவில்லை.

அதன்பிறகு உயர் அதிகாரி ஒருவர் என்னை வந்து பார்த்தார். ''பிர பாகரன் தப்பிச்சென்றதன்விளைவாக சில அப்பாவி போலீசார்கள் கடும் நடவடிக்கைக்கு ஆளாகியிருக்கிறார்கள். தயவுசெய்து அவரைத் திரும்பி



படிப்பகம்

www.padippakam.com

வரச்சொல்லுங்கள். வெளியேயிருப்பது அவருடைய உயிருக்கே ஆபத்து'' என்றெல்லாம் அவர் கூறினார். நான் அவரிடம் பின்வருமாறு கூறினேன். ''பிரபாகரன் இங்கில்லை. நீங்கள் எங்கு தேடினாலும் பயனில்லை. அவருடைய நாட்டிற்கு அவர் போய்ச்சேர்ந்துவிட்டார். அவர் தப்பிச்செல்வதற்கு உதவியாகயிருந்தேன் என்பதற்காக என்னைக் கைதுசெய்வதானாலும் செய்யுங்கள். இதற்குமேல் எதுவும் நான் சொல்ல விரும்பவில்லை'' என்று நான் சொன்னேன். நான் சொன்னதை அவர்கள் நம்பாமல் தமிழ்நாடு முழுவதிலும், அதற்கு அப்பாலும் பிரபாகரனை வலைவீசித் தேடினார்கள். பல மாதங்களுக்குப் பிறகே நான் சொன்னது உண்மை என்பது அவர்களுக்குத் தெரிந்தது.

பிரபாகரன் கைது செய்யப்பட்டதையொட்டி சென்னையில் உள்ள எனது வீட்டை சோதனைப்போட்ட போலீஸ் அதிகாரிகள் என்னிடம் ஒரு வாக்குமூலத்தை வாங்க விரும்பினார்கள். அப்போது நான் கீழ்க்கண்ட வாக்குமூலத்தையளித்தேன். ''பிரபாகரனுக்கும் மற்ற விடுதலைப்புலிகளுக்கும் எனது வீட்டில் நான் அடைக்கலம் கொடுத்தது உண்மை. ஒரு தமிழன் என்றமுறையில் எனது கடமையை நான் செய்தேன். சிங்களவெறியர்களின் கொடுமைகளுக்கு ஆளாகி உயிர் தப்பியோடிவரும் ஈழத்தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். இந்தக் கடமையையே நான் செய்தேன். எதிர்காலத்திலும் அவ்வாறே செய்வேன்'' என்று கூறினேன்.

எனது இந்த வாக்குமூலத்தைப் பதிவுசெய்துகொண்ட போலீஸ் அதிகாரிகள் திடுக்கிட்டுப் போனார்கள்.

''குற்றம்சாட்டப்பட்டவர்கள் பயங்கரவாதிகள். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் அவர்கள்மீது மிகக்கடுமையான குற்றங்களை சுமத்தியுள்ளது. இந்த நிலையில் நீங்கள் இத்தகைய வாக்குமூலத்தைக் கொடுப்பது நாளை உங்களுக்கே ஆபத்தாக முடியும்'' என்று அந்த அதிகாரிகள் என்மீது கொண்ட அன்பினால் எச்சரித்தார்கள்.

''அதுபற்றி நான் கவலைப்படவில்லை. அதனால்வரும் விளைவுகளை சந்திப்பதற்கு நான் தயாராகவே இத்தகைய வாக்குமூலத்தைக் கொடுத்திருக்கிறேன்'' என்று கூறினேன்.

1984ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி ஒரு அதிர்ச்சிதரும் செய்தி கிடைத்தது. சிங்களராணுவம் பிரபாகரனை சுட்டுக்கொன்றுவிட்டதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாயின. தமிழ்நாட்டுப் போலீஸ் அதிகாரிகளும் மத்திய அரசின் உளவுத்துறை அதிகாரிகளும் இச்செய்தி பற்றிய உண்மையறிய என்னைத் துளைத்தெடுத்தார்கள். விடுதலைப்புலிகளின் அலுவலகத்திற்குத் தொடர்புகொண்டு இச்செய்தி உண்மையல்ல என்பதை நான் அறிந்துகொண்டாலும் என்மனதில் ஏற்பட்ட கவலை குறையவில்லை. எங்கள் குடும்பத்தில் அனைவரும் அன்று இரவு தூங்கவில்லை. எல்லோரும் அளவற்ற கவலையில் ஆழ்ந்திருந்தோம். மறுநாள் காலை ஒரு இன்ப அதிர்ச்சி எங்களை எதிர்கொண்டது. காலையில் மதுரையிலுள்ள எங்கள் வீட்டிற்குமுன்னால் ஒரு ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியது யார் என்று நினைக்கிறீர்கள்? பிரபாகரன்தான்! சிரித்த முகத்தோடு இறங்கிவந்தார். எங்கள் குடும்பத்தினர் அனைவரும் மகிழ்ச்சியால் திகைத்தனர். சிரித்துக்கொண்டே உள்ளே வந்த பிரபாகரன் எனது மகள் உமாவை இழுத்து அணைத்துக்கொண்டு ''மாமாதான் வந்திருக்கிறேன். மாமாவின் ஆவி அல்ல'' என்றார். அடுத்த நிமிடம் எல்லோரும் கை கொட்டிச் சிரித்தோம்.



படிப்பகம்

www.padippakam.com

சிங்கள அரசு வேண்டுமென்றே திட்டமிட்டு இத்தகைய பொய்யான செய்தியைப் பரப்பியதாக அவர் கூறினார். ஈழத்து நிலவரங்களைக் குறித்து இருவரும் அன்று நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

1985ஆம் ஆண்டின் நடுவில் திரு. பிரபாகரனை சந்தித்து ஒருநாள் முழுவதும் பேசிக்கொண்டிருந்தேன். ஈழநாட்டு மக்களின் மனநிலையை நேரில் அறிந்துவந்து இந்திய மக்களுக்கும், உலகுக்கும் தெரிவிக்க வேண்டுமென்ற எனது விருப்பத்தினை அவரிடம் வெளியிட்டேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டார். அதைப்பற்றியே நாங்கள் பேசினோம். அதற்குப்பின்னர் எப்போது புறப்படுவது என்பதுபற்றி பின்னர் கூறுவதாக அவர் தெரிவித்தார். அதன்படி அக்டோபர் மாதத்தில் முதல்வாரத்தில் நான் அவரைச் சந்தித்தபோது அக்டோபர் 10ஆம் தேதியன்று புறப்படலாம் என்று பிரபாகரன் கூறினார். அந்தப் பயணத்திற்கான முன்னேற்பாடுகள் அத்தனையையும் அவரே முன்னின்று கவனித்தார். அவரது மெய்காவல் படைக்குத் தளபதியாகயிருந்த திரு. லிங்கம் தலைமையில் அவரது மெய்காவலர்கள் பலரை எனக்குப் பாதுகாப்புக்கு நியமித்தார். ஈழநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்த புலிப்படை தளபதிகளுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும்படி ஆணையிட்டார். ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்த தளபதியும் அந்தந்தப் பகுதியில் என்னுடன் சுற்றுப்பயணம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருந்தார். இந்த சுற்றுப்பயணம் வெற்றியடைந்ததற்கு அவருடைய முன்னெச்சரிக்கையும், ஏற்பாடுகளுமே காரணமாகும். அவருடைய யோசனைப்படி எனது சுற்றுப்பயணம் முழுக்கமுழுக்க வீடியோப்படமாக எடுக்கப்பட்டது. 23 நாட்கள் நான் ஈழநாட்டில் செய்த சுற்றுப்பயணமும் அதற்குப் பின்னர் நான் பத்திரமாக இந்தியாவுக்குத் திரும்பிவந்து அங்கு நடைபெறும் கொடுமைகளை அம்பலப்படுத்தியபோது இந்தியமக்கள் அதிர்ச்சியடைந்தார்கள். ராஜீவ்காந்தியின் முயற்சியினால் இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட்டு அமைதி நிலவுகிறது என்று நம்பியவர்கள் போர்நிறுத்தம் ஒரு மோசடியே என்பதை நான் அம்பலப்படுத்திய போது திடுக்கிட்டுப்போனார்கள். ஏறத்தாழ 33 மணிநேரத்திற்கு எடுக்கப்பட்டிருந்த வீடியோப்படங்களின் முக்கியபகுதிகள் சுமாரி 1 1/2 மணிநேரத்திற்குச் சுருக்கப்பட்டு தமிழ்நாடெங்கும் காட்டப்பட்டது. இந்தப்படத்தைக்காட்டக்கூடாது என தமிழக அரசு தடைவிதித்தது. அதையும்மீறி இந்தப்படம் எல்லா இடங்களிலும் காட்டப்பட்டது. இந்தியாவின் பிற பகுதிகளிலும், ஆங்கில விளக்கத்தோடு இப்படம் காட்டப்பட்டது. டில்லியில் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களுக்கும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இப்படம் காட்டப்பட்டபோதுதான் அவர்கள் பல உண்மைகளை அறிந்துகொண்டனர். அகில இந்திய ஜனதாகட்சியின் தலைவர் திரு. சந்திரசேகர் அவர்கள் இப்படத்தைப் பார்த்தபிறகு பின்வருமாறு கூறினார். ''விடுதலைப்புலியினரை சாதாரண பயங்கரவாதிகள் என்று நான் நினைத்தேன். இப்படத்தைப் பார்த்தபிறகு அது எவ்வளவு தவறான எண்ணம் என்பது எனக்குத் தெரிகிறது. நேதாஜியின் இந்தியத் தேசிய இராணுவத்தை போலவே இவர்களும் ஒரு விடுதலை இராணுவத்தினர் என்பதைப் புரிந்துகொண்டேன்'' என்று கூறினார்.

மற்றும் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலும் இந்த வீடியோப்படம் காட்டப்பட்டது. இதன்மூலம் ஈழமக்கள் படும் பயங்கரங்களையும், சிங்கள இராணுவத்தின் கொடுமைகளையும் உலகம் தெரிந்துகொள்ள வழிவகுக்கப்பட்டது. இவற்றுக்கு நான் ஒரு சிறு கருவியாக பயன்பட்டேன் என்பதில் பெருமைப்படுகிறேன். இதற்கான திட்டத்தைத்தீட்டி அதை வெற்றிகரமாக அமுல்நடத்திய பெருமை பிரபாகரனுக்கும் அவரது தோழர்களுக்குமே உரியது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் ஆண்களைப்போலவே பெண்களும் உரிய பங்கினை பெறவேண்டுமென்று பிரபாகரன் விரும்பினார். அதற்கான திட்டத்தையும் தீட்டினார். பெண்களுக்கு இராணுவ பயிற்சியளிக்க அவர் முடிவுசெய்தார். இந்திய இராணுவத்தில்கூட பெண்களுக்கான தனிப்பிரிவு கிடையாது. ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பெண்களுக்கான பிரிவு அமைக்கப்பட்டது. பெண்களுக்கான பயிற்சிமுகாம் ஒன்றினை பிரபாகரனுடன் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆண்களைப்போலவே சகல பயிற்சிகளையும் இப்பெண்கள் பெறுவதை நான் பார்த்து வியந்தேன். சகல நவீன ஆயுதங்களையும் அவர்கள் எவ்வளவு லாவகமாக கையாளுகிறார்கள் என்பதைப் பார்த்துப் பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன். மருத்துவம், பிரச்சாரம் போன்ற பணிகளுக்கே பெண்கள் ஏற்றவர்கள் என்ற நிலையை பிரபாகரன் அடியோடு மாற்றியிருந்தார். விடுதலை வேட்கையும், உரிமை உணர்வும்கொண்ட வீராங்கனைகளை அவர் உருவாக்கியுள்ளவிதம் பாராட்டத்தக்கது. அவரின் திறமைக்கு இது சரியான சான்றாகும். சிங்கள இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் தங்களின் பெற்றோரை, அண்ணன்மாரை, கணவரை இழந்தவர்கள் இந்தப்பெண்கள். எனவே அவர்களின் உள்ளங்கள் வைரம் பாய்ந்திருக்கின்றன. அவர்களுடன் நான் பேசியபோது அவர்களின் மனத்திடத்தினையும், துணிவினையும் கண்டு வியந்தேன். பாரதி கனவுகண்ட புதுமைப் பெண்களை பிரபாகரன் உருவாக்கியிருக்கிறார்.

1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் தேதி சென்னையில் பிரபாகரனை சந்தித்து நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தேன். முதலமைச்சர் எம். ஜி. ஆர்., பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் விவரங்களை அவர் கூறினார். விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அங்கீகாரம் அளிப்பதாகவும், தமிழ்மாநிலத்தின் முதலமைச்சர் பதவியை பிரபாகரனுக்குக் கொடுப்பதாகவும், இவற்றுக்கு ஒப்புக்கொள்ளும்படி இந்தியஅரசு கூறுவதாகவும் இவர்கள் தெரிவித்தார்கள். ''டில்லியின் இந்த முடிவை ஏற்றுக்கொள்ளும்படி எங்களை மேற்கண்ட இருவரும் வற்புறுத்தினார்கள். ஆனால் நான் ஏற்றுக்கொள்ள மறுத்தேன். இதற்கு ஒப்புக் கொள்ளாவிட்டால் டில்லி எங்களைக் கைகழுவிவிடவும் செய்யும், அல்லது எங்களைக் காட்டி இலங்கையை ஏமாற்றவும் முயற்சிக்கும்'' என்று பிரபாகரன் கூறினார். ''எங்களைத்தவிர மற்ற இயக்கங்களுக்கு ஏராளமான ஆயுதங்களை டில்லி கொடுத்துள்ளது. நாங்கள் சிங்கள இராணுவத்துடன் மோதி அழிந்தபிறகு இந்த ஆயுதங்களுடன் இவர்கள் இலங்கைக்கு வரவிருக்கிறார்கள்'' என்பது பற்றியும் விவரமாகக் கூறினார். இதைத் தொடர்ந்து நவம்பர் 10ஆம் தேதியன்று பிரபாகரனை வீட்டுக் காவலில் வைக்கும்படி தமிழகஅரசு உத்தரவிட்டது. போராளிகளிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. பெங்களூரில் நவம்பர் 16ஆம் தேதியன்று நடைபெறவிருந்த சார்க் மாநாட்டிற்கு முன்பாகவே தனது திட்டத்திற்கு பிரபாகரனை இணங்கச் செய்யவே இத்தகைய நிர்ப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதும் தெளிவாயிற்று.

நவம்பர் 9ஆம் தேதி கோவையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொள்ள நான் சென்றேன். இதற்கு முன்னதாகவே நானும் திராவிடர்கழகப் பொதுச்செயலாளர் திரு. வீரமணி அவர்களும் ஒரு இரகசியத் திட்டத்தினைத் தீட்டியிருந்தோம். ''தென்னாசிய மாநாட்டில் கலந்துகொள்ள ஜெயவர்த்தனா வரும்போது அவருக்குக் கறுப்புக்கொடி பிடிப்பது'' எனத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் எதிர்பாராதவிதமாக 9ஆம் தேதி அதிகாலையிலேயே திரு. வீரமணி அவர்களுக்கு லேசான இருதய நோய் ஏற்பட்டது. எனவே அவர் படுத்தபடுக்கையில் இருக்கவேண்டி



படிப்பகம்

www.padippakam.com

நேரிட்டுவிட்டது. கோவையிலுள்ள தனியார் மருத்துவமனையிலிருந்த அவரைப் பார்த்து ஆறுதல் சொல்லிவிட்டு நான் இரகசியமாக பெங்களூருக்குச் சென்றுவிட்டேன். 16ஆம் தேதி திட்டமிட்டபடி கர்நாடகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தோழர்களுடன் சென்று கறுப்புக் கொடிகாட்டி நாங்கள் கைதானோம். அதே வேளையில் திரு. பிரபாகரன் அவர்கள் பெங்களூருக்கு அழைத்துச்செல்லப்பட்டு நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டார். வடக்கு மாநிலத்தின் முதலமைச்சர் பதவியை இப்போதைக்கு ஏற்றுக்கொண்டு சிங்கள அரசுடன் ஒரு உடன்பாட்டிற்குப் பிரபாகரன் ஒப்புக்கொண்டால் பின்னர் அவருக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வதாக இந்தியஅரசின் சார்பில் ஆசை வார்த்தை காட்டப்பட்டது. இதில் எப்படியும் பிரபாகரனை ஒப்புக்கொள்ள வைத்து விட முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்தியஅரசு செயல்பட்டது. தென்னாசிய மாநாடு முடிந்து தனது நாட்டிற்குப் புறப்படவிருந்த ஜெயவர்த்தனாவை 3 மணிநேரம் தாமதிக்கும்படி பிரதமர் ராஜீவ் வேண்டிக்கொண்டார். அவரும் தனது பயணத்தை ஒத்திவைத்துவிட்டு அங்கு தங்கினார். இந்த 3 மணி நேரமும் பிரபாகரனுக்குக் கடும் சோதனையாக இருந்தது. தனது இலட்சியத்தை எள்ளளவும் விட்டுக்கொடுக்க பிரபாகரன் தயாராகயில்லை. முதலமைச்சர் எம். ஜி. ஆர். வற்புறுத்தியும் அவர் இணங்கவில்லை.

## இந்தியாவும் - பிரபாகரனும்

இந்தியாவையும் இந்திய மக்களையும் பிரபாகரன் எவ்வாறு நேசிக்கிறார் என்பதற்கு அன்னை இந்திராமறைவின்போது அவர் வெளியிட்ட அறிக்கையே சான்று பகருகிறது. அந்த அறிக்கையின் ஒவ்வொரு வார்த்தையும் அவரது உள்ளத்திலிருந்து வெளிவந்த உணர்ச்சியின் சிதறல்களாகவே காட்சி தருகின்றன.

மறைந்த அன்னை இந்திராகாந்திமீது பிரபாகரனும் அவரது தோழர்களும் அளவுகடந்த மதிப்பு வைத்திருந்தனர். மனிதகுலத்தின் ஒளிவிளக்காக அவரைக் கருதினார்கள். துயருறும் தமிழீழமக்களின்மீது அனுதாபமும், அக்கறையும் கொண்ட மாபெரும் தலைவராகவே அவரைப் போற்றினார்கள். அவர் இறந்த செய்தி பிரபாகரனையும் தமிழீழ மக்களையும் மாபெரும் சோகத்தில் ஆழ்த்திவிட்டது. அதையொட்டி ராஜீவ்காந்தி அவர்கட்கு பின்வரும் உருக்கமான கடிதத்தை பிரபாகரன் எழுதினார்.

அன்புடையீர்!

அன்னை இந்திராகாந்தி கொடிய கொலைஞர்களால் அகால மரணமடைந்த செய்திகேட்டு நாம் ஆழ்ந்த துயரமும் பேரதிர்ச்சியுமுற்றோம். மனித சமூகத்திற்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமான இக்கொலை பாதகச் செயலை நாம் வன்மையாகக் கண்டனம் செய்கிறோம்.

ஒடுக்கப்பட்ட மனிதகுலத்தின் ஒளிவிளக்காகவும், பாரததேசத்தின் உன்னத ஆத்மாவாகவும் திகழ்ந்த ஒரு ஒப்பற்ற பெரும் தலைவரை நாம் இழந்து நிற்கிறோம். தங்கள் குடும்பமும் இந்திய மக்களும் உலகமும் இந்த ஈடு செய்ய முடியாத பேரிழப்பால் அடைந்திருக்கும் ஆழ்ந்த துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

திருமதி. இந்திராகாந்தி உலக சமாதானத்திற்காகவும், மனித சுதந்திரத்திற்காகவும் அயராது போராடிய வீராங்கனையாவார். ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் ஏகோபித்த குரலாகத் திகழ்ந்தார். தீர்க்கதரிசனத்தோடும் பூரண அர்ப்பணிப்போடும் பாரத தேசத்தை சோசலிசப் பாதையில் நிர்மாணம்



படிப்பகம்

www.padippakam.com

செய்ய அயராது உழைத்தார். நவபாரதத்தின் சிற்பியாகத் திகழ்ந்தார். இந்தியத் துணைக்கண்டத்தில் ஏகாதிபத்தியத்தையும் அதன் பேராதிக்க சதி வலைப்பின்னலையும் அவர் முழுமூச்சாக எதிர்த்து வந்தார். தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உலககெங்கும் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களை அவர் முன்னின்று ஆதரித்துவந்தார்.

அநாதரவான நிலையில் துயருறும் தமிழீழ மக்களின்பால் அன்னை இந்திராகாந்தி எப்போதுமே அனுதாபமும் அக்கறையும் காட்டிவந்திருக்கிறார். ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து வருவதனை அவர் எப்போதுமே கண்டித்தார். தமிழ் மக்களின் மீதான இனப் படுகொலையை நிறுத்தியாகவேண்டும் என்று அரசியல் ராஜதந்திர வழிகளில் அவர் ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்தித்தார். இந்தியாவின் நல்லெண்ண அனுசரணையின்கீழ் தமிழ்மக்களின் பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்குத் தனிப்பட்ட முறையில் பெரும் அக்கறை செலுத்தினார். தமிழ் மக்களின் பெருங்காவலராகத் திகழ்ந்த அன்னை இந்திராவின் தனிப்பட்ட அக்கறை மட்டும் இல்லாது போயிருந்தால் எமது தேசமே அழிந்துபோயிருக்கும். தமிழ் விடுதலை இயக்கத்தின் ஆத்மீக வலிமையின் கோபுரமாக அவர் திகழ்ந்தார்.

தமிழ்மக்கள் இந்திராவை என்றும் அன்புடனும், நன்றியுடனும், பெருமதிப்புடனும் நினைவுகூர்வார்கள். தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள நீங்கள், எந்த உன்னத இலட்சியங்களுக்காக அன்னை இந்திராகாந்தி வாழ்ந்து, போராடி, இறந்தாரோ அந்த இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வீர்கள் என்றே நாம் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

நீங்கள் வெற்றிபெற எமது நல்வாழ்த்துக்கள்''.

இக்கடிதத்தில் தனது நெஞ்சத்தினை மட்டும் அவர் பிரதிபலிக்கவில்லை. தமிழீழமக்களின் உள்ளார்ந்த உணர்வினையும் பிரபாகரன் சரியாகப் பிரதிபலித்தார்.

அன்னை இந்திராவின்மறைவு தமிழீழ மக்களை சொல்லவொணாத சோகத்தில் ஆழ்த்திற்று. 3 நாட்கள் தமிழீழமக்கள் துக்கம் கொண்டாடினார்கள். யாழ்ப்பாண மருத்துவமனைமீது கறுப்புக்கொடியேற்ற முயன்ற இரண்டு விடுதலைப்புலிகளைச் சிங்களராணுவம் சுட்டுவீழ்த்திற்று. அன்னை இந்திராவுக்காக தமிழர் இரத்தமும் சிந்தினார்கள். உயிர்களையும் தியாகம் செய்தார்கள்.

இந்தியாவின்மீதும் அதன் தலைவர் இந்திராமீதும் அளவற்ற நம்பிக்கையையும், மரியாதையையும் பிரபாகரன் கொண்டிருந்தாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் விஷயத்தில் இந்திய அரசுக்குள்ள வரம்புகளை பிரபாகரன் அறியாமல் இல்லை.

இந்திய அரசில் உள்ள பல்வேறு மாறுபட்ட சக்திகளின் கருத்தோட்டங்களையும் பிரபாகரன் அறிந்திருந்தார். அதிலும் குறிப்பாக அன்னை இந்திராவின் மறைவிற்குப்பின் உருவான புதிய சூழ்நிலையில் தனக்கு எதிரான சக்திகளின் கையோங்கிவருவதை அவர் உணராமல் இல்லை.

தமிழீழக் கோரிக்கைக்கு இந்தியா ஆதரவுதர மறுப்பது பற்றியும், பிரபாகரன் தெளிவாக அறிந்திருந்தார். ஆனால் காலப்போக்கில் இக்கோரிக்கையை இந்தியா ஆதரிக்கவேண்டிய அவசியம் நேரும் என்றும் அவர் நம்பினார். இந்தியாமீதும், இந்திய மக்கள்மீதும் அவர் வைத்திருந்த நம்பிக்கைதான் இதற்கு அடிப்படை காரணமாகும். 11.8.86 நியூஸ் வீக் என்ற அமெரிக்க இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் பின்வருமாறு கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

கே:- இனப்பிரச்னைக்குப் பேச்சுவார்த்தைமூலம் சமாதானத் தீர்வுகாண விரும்பும் இந்தியா, உங்கள் தனிநாட்டுக்கொள்கையை எதிர்க்கிறது. இதற்கு என்ன கூறுகிறீர்கள்?

ப:- உலகம் மாறிக்கொண்டு போகிறது. அரசியலும் அவ்வாறே மாறிக் கொண்டு வரும். சூழ்நிலைகள் காரணமாக, கடைசியில் இந்தியா எமது விடுதலைப் போரை அங்கீகரித்தே தீரும் எனும் நம்பிக்கையுடன் இருக்கி றோம். இந்தியா பல விடுதலை இயக்கங்களை அங்கீகரித்துள்ளது. பாலஸ் தீன விடுதலை இயக்கம் மற்றும் சுவாப்போ இயக்கங்களை கடைசி நேரத் தில் இந்தியா அங்கீகரித்ததுபோல, எமது போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்படும்.

**இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்திய ராணுவத் தலை யீடு உருவாவதை பிரபாகரன் ஒருபோதும் விரும்பவில்லை.** அத்தகைய தலையீடு அவசியமற்றது என்று அவர் கருதினார். இதுபற்றியும் திட்ட வட்டமான தெளிவான கருத்து அவருக்கு இருந்தது. தமிழர்கள் தங்களுடைய முயற்சியினாலும் தியாகத்தினாலும், தங்களுடைய லட்சியத்தில் வெற்றிபெறவேண்டும். அவ்வாறு வெற்றிபெறவும் முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார்.

1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை யில் (விடுதலைப்புலிகள் இதழ் குரல் 6) இந்தியாவின் உதவியைப்பற்றியும் தெளிவாக விளக்கியிருக்கிறார். இந்தியராணுவப் படையெடுப்புக்கு அழைப்புவிடும் தமிழீழத் தலைவர்கள் சிலர் குறித்து அவர் பின்வருமாறு கூறியிருக்கிறார். ''நாமே போராடி எமது மக்களின் விடுதலையை நாமே பெற்று எடுக்கவேண்டும் என்ற தன்னம்பிக்கை இவர்களிடம் இல்லை. அத னால்தான் இவர்கள் இந்திய இராணுவப்படையெடுப்புக்கு அழைப்பு விடுகிறார்கள்.

**எமக்கு இந்தியாவின் உதவியும் அவசியம். இந்தியாவின் ஆதரவும் அவசியம். இந்தியாவின் நல்லெண்ணமும் அவசியம்.**
நாம் முதலில் இந்தியாவிடம் எமது தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவு பெற்றுக்கொள்ள முயலவேண்டும். எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தவேண்டும். தமிழீழத் தனியரசு தான் எமது பிரச்னைக்கு இறுதியானத் தீர்வு என்பதைத் திட்டவட்டமாக எடுத்துரைக்க வேண்டும். எமது கோரிக்கையைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்கூறி இந்தியாவின் நல்லாதரவைப் பெறுவதைவிட்டு எமது பிரச் னையைத் தீர்த்துவைக்குமாறு இந்தியாவிடம் கைநீட்டி நிற்பது அரசியல் சாமர்த்தியமாகாது.

தமிழீழப்போராட்டத்தில் இந்தியாவின் பங்கு எவ்வாறு இருக்கவேண்டும் என்பது பற்றியும் அவருக்குத் திட்டவட்டமான கருத்து இருந்தது. இந்தியா-டு-டே (30.6.86) இதழுக்கு அளித்தபேட்டியில் அதையும் தெளிவாக விளக்கி இருக்கிறார்.

கே:- இந்திய அரசின் ஈடுபாட்டை எவ்வளவுதூரம் போற்றுகிறீர்கள்?

ப:- எமது இலட்சியத்துக்கு இந்திய அரசின் அனுதாபம் உண்டு; எம்மை இங்கு தங்குவதற்கு அனுமதித்துள்ளதே இந்திய அரசின் மிக உயர்ந்த மனப் பான்மைக்கு எடுத்துக்காட்டு. கரந்துறையும் ஈழத்தின் சகல அரசியல் தலை வர்கட்கும், அகதிகளாக வந்திருக்கும் இலட்சக்கணக்கான ஈழமக்களுக்கும் இந்தியா அடைக்கலம் தந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

கே:- இந்தியா ஐக்கிய இலங்கை என்ற அமைப்புக்குள் தீர்வைக்காண முயற்சிக்கிறது. நீங்கள் ஈழம் தவிர எதையும் ஏற்பதில்லை என்கிறீர்கள். இதிலே முரண்பாடு இல்லையா?

ப:- நாம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளையே பிரதிபலிக்கிறோம். எமது மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக இந்தியஅரசு நடவாது என்று நம்புகிறோம். எமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற இந்தியாவின் ஆதரவு தேவை. அதே சமயம் எமது தமிழீழ மக்களுக்கு, இறைமையும், சுயநிர்ணய உரிமையுமுண்டு.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றிபெற இந்தியாவின் ஆதரவு இன்றியமையாதது என்பதை ஒப்புக்கொண்ட பிரபாகரன் அதேவேளையில் இந்தியா தனது தீர்வைத் தமிழீழமக்கள் மீது திணிப்பதை விரும்பவில்லை. தங்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முழுஉரிமையும் தமது மக்களுக்கு உண்டு என்பதில் பிரபாகரன் உறுதியாக இருந்தார்.

## உண்ணாநோன்பு.

1986ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழ்நாட்டுப் போலீஸ் விடுதலைப் புலிகளிடமிருந்து தகவல்தொடர்புச் சாதனங்களைப் பறித்தார்கள். அதைப் போல மற்ற போராளிகளின் இயக்கங்களிடமிருந்தும் சகல சாதனங்களையும் பறித்தெடுத்தார்கள். இந்தநிலையில் பிரபாகரன் என்ன செய்யப் போகிறார்? என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாக இருந்தது. எந்த நாட்டை நம்பி அடைக்கலம் புகுந்தாரோ அந்த நாடே அவரிடமிருந்து சாதனங்களைப் பறித்தெடுத்தபோது அவர் தனது எதிர்ப்பை எவ்வாறு வெளிக்காட்டப்போகிறார் என்பது பெரும் புதிராகவே இருந்தது. சிங்கள அரசு இந்தக் காரியத்தைச் செய்திருக்குமேயானால் ஆயுதத்தின்மூலமே அவருக்குப் பதிலடியை பிரபாகரன் கொடுத்திருப்பார். செய்ததோ இந்திய அரசு. ஆகவே பிரபாகரன் செய்யப்போவதை ஆவலுடன் அனைவரும் எதிர்பார்த்தனர். ஆயுதப்புரட்சியில் நம்பிக்கை வைத்து, அதைத்தவிர தன்னுடைய மக்களை விடுவிப்பதற்கு வேறு வழியில்லை என்று உறுதியாக நம்பிச் செயற்பட்டுவரும் பிரபாகரன் எல்லோரும் வியக்கும்வண்ணம் ஒரு மகத்தான செயலினைப்புரிந்தார். தமிழகப் போலீசார் தங்களிடம் பறித்த தகவல் தொடர்புச் சாதனங்களைத் திருப்பித் தரவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். அவரின் இந்தச் செயல் அனைவரையும் குலுக்கியது. இதன்விளைவாக அரசாங்கம் கீழிறங்கி வந்தது. அவரிடம் பறித்த சாதனங்களைத் திரும்பக் கொடுத்தது. இது குறித்து அவரிடம் சில பத்திரிகையாளர்கள் வினாத் தொடுத்தனர்.

"உங்களுடைய அகிம்சைப் போராட்டத்திற்கு வெற்றிகிடைத்திருக்கும் போது நீங்கள் இலங்கையிலும் அகிம்சை முறையிலேயே போராடலாமே? ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய அவசியம் ஏன்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் பளிச்சென பதில் சொன்னார். "உலகிலேயே தன்னுடைய சுதந்திரத்தைப்பெறுவதற்கு அகிம்சாமுறையில் போராடி வெற்றி பெற்ற நாடு இந்தியா. எனவே அகிம்சைப் போராட்டத்தின் மகத்துவத்தை உணர்ந்திருக்கிற இந்தியாவில் அகிம்சைப் போராட்டத்திற்கு வெற்றி கிடைத்திருக்கிறது. ஆனால் மனிதநேயமற்ற சிங்கள அரசிடம் அகிம்சை முறை எடுபடாது. எனவேதான் அங்கே நாங்கள் ஆயுதம் தாங்கிப் போராடுகிறோம்" என்றார்.



படிப்பகம்

www.padippakam.com

# ஜெயவர்த்தனா சூழ்ச்சி.

இந்தியர்வின் யோசனைகளைக் கேட்க மறுத்தால் இந்த மண்ணிலிருந்து செயல்படுவதற்கு இந்திய அரசாங்கம் தடைவிதிக்கக்கூடும் என்பதை மேற் கண்ட நிகழ்ச்சிகளின்மூலம் ஊகித்து உணர்ந்திருந்தார் பிரபாகரன். ஆகவே எந்நேரமும் இந்திய மண்ணிலிருந்து வெளியேறுவதற்குத் தயாராகவே அவர் இருந்தார்.

இந்தியாவிலிருந்து அவர் 1987ஆம் ஆண்டு ஜனவரி முதல்வாரத்தில் வெளியேறினார். ஆனால் அதற்கு கிட்டத்தட்ட 14 மாதங்களுக்கு முன்ன தாக அதாவது 16.10. '85-ல் ''தேவி'' இதழில் வெளியான அவரது பேட்டியில் பின்வருமாறு கூறியிருந்தார்.

''கடைசியாக ஒரு கேள்வி. எங்களுடைய யோசனையை கேட்காததால் நீங்கள் இந்த மண்ணிலிருந்து செயல்படக்கூடாது. அனைவரும் வெளியேறி விடுங்கள் என்று இந்தியஅரசு தேதி நிர்ணயிக்குமானால் என்ன செய்வீர் கள்?

இதைக்கேட்பதற்கு சங்கடமாகத்தான் இருந்தது. இருந்தாலும் நம் இந்திய ஆட்சியாளர்களின் போக்கு அப்படியெல்லாம் இருக்கிறதே.

ஆனால் பிரபாகரன் கொஞ்சமும் தயங்காமல், தளராமல் பதில் சொன்னார்.

''நாங்கள் ஆரம்பத்திலிருந்தே எங்கள் மண்ணிலிருந்துதான் போராடி வருகிறோம். அதுமட்டுமல்ல. எங்கள் சுதந்திரப்போரை எங்கள் மக்களை நம்பித்தான் ஆரம்பித்திருக்கிறோம். எங்கள் மக்களும் தயாராகவே இருக்கி றார்கள். எனவே நாங்கள் தொடர்ந்து எங்கள் மண்ணிலிருந்து போராடு வது கடினமான காரியமல்ல. அதுமட்டுமல்ல எங்கள் விடுதலைப்புலி அமைப்பில் பெரும்பகுதியினர் தமிழீழ மண்ணிலிருந்துதான் போராடி வருகிறார்கள். நாங்கள் சில அடிப்படை உதவிகளுக்காகத்தான் தமிழக மக்களுடன் எங்கள் சகோதரர்களுடன் உறவு வைத்திருக்கிறோம். நீங்கள் சொல்வது மாதிரியான நிலை வந்தால் நாங்கள் எங்கள் நாட்டுக்குச் சென்று உரிமைக்காகப் பாடுபடுவோம். ஆனால் உடன்பிறவாச் சகோதரர் களான தமிழக மக்கள் அவ்வாறான நிலைக்குச் செல்லவிடமாட்டார்கள் என்று நம்புகிறோம்''.

விடுதலைப்புலிகளையும், இந்திய அரசையும் மோதவைக்கவேண்டும் என்பது தான் ஜெயவர்த்தனாவின் திட்டமாகும். அவரின் இந்த நயவஞ்சக எண்ணத்தை பிரபாகரன் தெளிவாகவே அறிந்திருந்தார். ஆனால் இந்தியப் பிரதமர் ராஜீவ் இதைப் புரிந்துகொள்ளாமலேயே ஜெயவர்த்தனாவின் பல்வேறு முயற்சிகளுக்குத் துணைபோனார். 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் பிரபாகரன் பின்வருமாறு கூறி யிருந்தார். ''இந்தியப் பிரதமர் ராஜீவின் சமரச முயற்சிகளை ஆதரிப்பது போல ஜெயவர்த்தனா அரசு நடித்துக் கொண்டிருப்பதாலும், சமாதானத் தீர்வில் எவ்வித அக்கறையும் எடுக்காது இந்திய அரசை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக முடிந்துவிடுவதில்தான் முற்றும் முழுதாக முனைந்து வருகிறது. ஜெயவர்த்தனாவின் இந்த நயவஞ்சக இராஜதந்திர சூழ்ச்சியை நாம் நன்கு அறிவோம். இந்திய அரசும் வெகுவிரைவில் புரிந்துகொள்ளும் என்பதே எமது நம்பிக்கையாகும்''.

பிரபாகரனின் இந்த நம்பிக்கை வீணானது. ராஜீவ்காந்தியின் விவேக மற்ற போக்கினால் விபரீதங்கள் விளைந்தன.


படிப்பகம்

www.padippakam.com

''ஜெயவர்த்தனா விரித்துள்ள சூழ்ச்சிவலையில் ராஜீவ் விழக்கூடும். அதன்மூலம் இந்திய அரசுக்கும் போராளிகளுக்குமிடையே மோதல் உருவாகக் கூடும்'' என்பதை முன்னதாகவே பிரபாகரன் உணர்ந்திருந்தார் என்பதைக் கீழ்க்கண்ட பேட்டி எடுத்துக்காட்டுகிறது.

1986ஆம் ஆண்டு செப்டம்பர் 4, 5 தேதிகளில் ''இந்து'' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் அவர் பின்வருமாறு கூறினார்.

''நல்லவர்கள்போல உலக அரங்கில் தங்களைக் காட்டிக்கொள்ளவே இலங்கைஅரசு இந்த நாடகத்தை ஆடுகிறது. உண்மையில், உள்நாட்டில் போருக்கான ஆயத்தங்களைச் செய்யும் அதேவேளையில் வெளி உலகத்துக்குத் தன்னை ஒரு சமாதானப்பிரியனாகக் காட்டிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஜெயவர்த்தனாவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அல்லது தான் சமாதானத்தை விரும்புகிறவர் என்றும் சமாதானத்தைக்காண இயலாமல் போன நிலையில்தான் போரை நடத்த வேண்டியுள்ளதென்றும் உலகின் முன் நடிக்க அவர் முனைகிறார். தான் நடைபோடும் இனவாத இன வெறிப் பாதையில் தோரணம் கட்டி மயக்குகிறார் ஜெயவர்த்தனா. அவருடைய அண்மைக்கால போர் முழக்கங்கள் அவரது சுயவடிவை வெளிக்கொணர்கின்றன. சமீபத்தில் அவர் சொன்னார். ''உடல் வலிமையுள்ள எல்லாச் சிங்களவர்களையும் தமிழர்மீது போர் தொடுக்கும் படையாக மாற்றுவேன். அந்தப்படைக்கு நானே தலைமை தாங்குவேன்''. ஜெயவர்த்தனாவின் இக்கூற்று அவரைச் சமாதானப்பிரியராகக் காட்டவில்லை.

ஜெயவர்த்தனாஅரசு இன்னொரு நோக்கத்துக்காகவும் இந்த நாடகத்தை மேடையேற்றி வருகிறது. பெருமளவு நிதி உதவி வழங்கும் நாடுகளை அணுகி ''நான் பிரச்னையைத் தீர்க்க என்னாலவரை முயன்றேன். முடியவில்லை. அதனால்தான் தமிழர்மேல் போர்ப்பிரகடனம் செய்யவேண்டியதாயிற்று'' என்றுகூறி அவர்களைத் திருப்திப்படுத்தி நிதி உதவி பெறுவது தான் ஜெயவர்த்தனாவின் நோக்கம். எத்தனை தடவை தோல்விகள் ஏற்பட்டாலும் சளைக்காமல் அரசியல் தீர்வு காண்பதில் ஆர்வம் கொண்டவரைப்போல் ஜெயவர்த்தனா வெளியே காட்டிக்கொள்கிறார். ஆனால் தீர்வுக்கான எந்த உருப்படியான திட்டத்தையும் அவர் முன்வைக்கவில்லை. சுற்றிச்சுற்றி இன்னும் 'மாகாணசபை' பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்.

மூன்றாவதும், முக்கியமானதும் என்னவென்றால் இந்திய அரசைப் பயன்படுத்துவதில் ஜெயவர்த்தனா கடைப்பிடிக்கும் அரசியல் தந்திரம். இந்திய அரசுக்குத் தன்மீது நம்பிக்கை வரும் விதத்தில் நடந்துகொண்டால், தான் தமிழர்களுக்குக் கொடுக்கும் பெறுமதியற்ற சலுகைகள் நியாயமானவை என்று இந்தியஅரசை நம்பவைத்தல், அவற்றை இந்தியஅரசு ஏற்றுக்கொள்ளச்செய்தல், இந்திய அரசுக்கும் போராளிகளுக்கும் இடையில் விரிசலை உருவாக்க முடிந்தால் பின்பு எங்களை நிராயுதபாணிகளாக்கவும், அழித்துவிடவும் முடியும் என்று ஜெயவர்த்தனா சிந்திக்கிறார். தான் முன்வைத்துள்ள திட்டங்களையே தமிழர் ஏற்றுக்கொள்ள இந்தியஅரசு முயல வேண்டும் என்றும் பின் அவற்றை இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவர உதவவேண்டும் என்றும்தான் ஜெயவர்த்தனா இந்தியஅரசைப் பகிரங்கமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்''.

ஓராண்டு காலத்திற்கு முன்பே பிரபாகரன் கணித்தது சரியாகிவிட்டது. ஜெயவர்த்தனா அளித்துள்ள தீர்வை தமிழர்கள் ஏற்கவேண்டும் என இந்தியஅரசு நிர்ப்பந்திக்கிறது. ஏற்கமறுத்தமைக்காக விடுதலைப்புலிகள்மீது தனது இராணுவத்தை ஏவி வேட்டையாடுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

இலங்கைத்தமிழர் பிரச்னையில் இந்தியாவின் நிலை, அதனுடைய பங்கு என்ன என்பதைப்பற்றி பிரபாகரனுக்குத் திட்டவட்டமான தெளிவான கருத்து இருந்தது. இப்பிரச்னையைத் தீர்க்க ராஜீவ் அரசு எடுத்துக்கொண்ட சமரச முயற்சிகள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அமைந்திருந்தாலும் சிங்கள இனவெறி அரசுக்கு முன்னால் இம்முயற்சிகள் வெற்றிபெறாது என்பதை பிரபாகரன் தெளிவாகவே அறிந்திருந்தார். ஆனாலும் ராஜீவ் அரசின் சமரச முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்க அவர் விரும்ப வில்லை.

1985ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் வீரவேங்கை இதழில் பிரபாகரன் வெளியிட்ட ஒரு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''எமது தேசிய சுதந்திரப்போராட்டம் இன்று உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஒரு உள்நாட்டு நெருக்கடிபோலத் தோன்றிய எமது பிரச்னை இன்று உலகத்தை ஈர்க்கும் ஒரு சர்வதேச நெருக்கடியாக விசுவரூபம் கொண்டுள்ளது.

சிங்கள அரசாவது எம்முடன் தனித்துநின்று போராடவில்லை. ஏகாதி பத்திய நாசகார சக்திகள் அனைத்தையும் தனக்குப் பக்கபலமாக அணி திரட்டி எமது மக்களுக்கு எதிராக ஒரு இனஒழிப்பு யுத்தத்தை நடத்தி வருகி றது. இந்த ஏகாதிபத்திய நாசகார சக்திகளின் ஊடுருவல் இந்திய உபகண்டத்தின் ஸ்திர நிலைக்கும், இந்துமகாசமுத்திர பந்தோபஸ்துக்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்ததால் இந்திய அரசு இப்பிரச்னை யில் தலையிட்டது. சமாதானப் பேச்சுக்கள்மூலம் ஒரு நியாயமானத் தீர்வை ஏற்படுத்தி இந்த நெருக்கடியைத் தணித்துவிடலாம் என நம்பியது. இந்திய அரசின் நல்லெண்ண முயற்சிக்கு நாம் முட்டுக்கட்டையாக இருக்கவிரும்ப வில்லை.

தமிழீழ மக்களின் அடிப்படையான அரசியல் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதிலோ அல்லது அவர்களது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதிலோ ஜெயவர்த்தனா அரசுக்குத் துளிகூட அக்கறை இல்லை என் பது எமக்கு நன்கு தெரியும். நீண்டதும் கசப்பானதுமான வரலாற்று அனு பவம் எமக்கு சில அரசியல் உண்மைகளைப் புகட்டியிருக்கிறது.

ஆனால் புதிய பாரதப்பிரதமரின் நேர்மையான நல்லெண்ண முயற் சிக்கு நாம் எவ்வகையிலும் குந்தகமாக இருக்க விரும்பவில்லை. ஜெயவர்த் தனா அரசின் சர்வாதிகாரக் கொடுங்கோன்மை ஆட்சியின் அட்டூழியங் களை அம்பலப்படுத்துவதோடு தமிழர் பிரச்னையை நியாயமானமுறையில் தீர்த்துவைப்பதில் சிங்களஅரசுக்கு எவ்வித விருப்பும் இருக்கவில்லை என் பதைப் பகிரங்கப்படுத்தவும் எமக்கு ஒரு அரிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவேதான் நாம் தற்காலிக யுத்த நிறுத்தத்திற்கு இணங்கினோம். பேச்சு வார்த்தைக்கும் சம்மதித்தோம். நாம் தீர்க்க தரிசனத்துடன் அனுமானித்த படி தமிழீழ மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைத் தழுவிய எந்தவொரு உருப்படியான தீர்வுத் திட்டமும் சிங்கள அரசினால் முன் வைக்கப்படாமல், தமிழ்மக்களால் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்ட பழைய புளித்துப்போன திட்டங்கள் புதிய போர்வைகளில் மீண்டும் மீண்டும் மேசைக்கு வந்தபோது நாம் அவற்றை நிராகரித்தோம். சிறீலங்கா அரசு முன்வைத்த திட்டங்கள் தமிழ்மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசை களைப் பூர்த்திசெய்யவில்லை என்பதை இந்தியஅரசும் ஒத்துக்கொண்டது''



படிப்பகம்

www.padippakam.com

சமரச முயற்சிகளை மேற்கொள்ளும் இந்திய அரசு ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சிகளையும் புரிந்துகொள்ளவேண்டுமென்று பிரபாகரன் வற்புறுத்தினார். தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு எதிராக இந்தியஅரசை மோத விடவேண்டும் என்பதுதான் ஜெயவர்த்தனாவின் இரகசியத் திட்டமாகும் என்பதை 1985ஆம் ஆண்டிலேயே பிரபாகரன் அம்பலப்படுத்தினார். 3 ஆண்டுகளுக்கு முன்னரே பிரபாகரன் உணர்ந்திருந்த இந்த உண்மையை பிரதமர் ராஜீவ் இன்னமும் உணரவில்லை என்பதுதான் வேதனைக்குரியது.

இதே அறிக்கையில் பிரபாகரன் ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சித் திட்டத்தைப் பின்வருமாறு அம்பலப்படுத்தியுள்ளார்.

''சிங்கள இனவாத ஆட்சியாளர் ஒரு இராணுவத் தீர்வையே விரும்புகிறார்கள் என்பது அவர்களது நடவடிக்கைகளிலிருந்து தெட்டத்தெளிவாகியுள்ளது. எமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் பூதமாகத் திரித்துக்காட்டி சுதந்திரப் போராளிகளை வன்முறைப் பித்தர்களாக சித்திரித்துக்காட்டி இராணுவரீதியாக எம்மை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதே அவர்களது நோக்கம். இந்த இலக்கில் அவர்கள் முழுச் சிங்கள தேசத்தையுமே இராணுவமயமாக்கி வருகிறார்கள். பெரியதொரு இன யுத்தத்திற்கு ஆயத்தங்கள் செய்துவருகிறார்கள்.

சிங்கள இனவாத அரசின் இந்த நாசக்காரத் திட்டத்தை இந்தியஅரசு புரிந்துகொள்ள வேண்டும் என்பதே எமது அவா. ஜெயவர்த்தனா இனத்துவேசம் கொண்ட பாசிச சர்வாதிகாரியே அன்றி பரந்த நோக்குடைய சமாதானப்பிரியர் அல்ல. அவரது தனிப்பட்ட அரசியல் வரலாறானது தமிழரின் இரத்தத்தால் எழுதப்பட்டது. அவர் அரசியலில் புகுந்தகாலம் தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்குமேலாக தமிழினத்தின் உரிமைகளைப் பறித்தெடுப்பதில்தான் அக்கறை காட்டிவந்திருக்கிறார்.

தமிழினத்தைப் படிப்படியாக ஒழித்துக்கட்டி இலங்கையை ஒரு சிங்களத் தீவாக, ஒரு பௌத்த பூமியாக மாற்றுவதையே அவர் தமது வாழ்க்கையின் உன்னதஇலட்சியமாகக் கொண்டவர். இந்த சிங்கள-பௌத்த இனவெறியர் தமிழரின் பிரச்னையை சுமுகமாகத் தீர்த்துவைப்பார் என்பதில் எமக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை.

ஜெயவர்த்தனா சூழ்ச்சியும் கபடமும் வஞ்சகமும் நிறைந்த அரசியல்வாதி என்பதையும், நம்பமுடியாத ஏமாற்றுப் பேர்வழி என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டவர் முன்னாள் பாரதப்பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அம்மையார். ஜெயவர்த்தனா அரசானது தமிழர் பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வைத் தேடாது தமிழரை ஒழித்துக்கட்டுவதில்தான் முனைந்திருக்கிறது என்பதை அவர் தமது அனுபவமூலமாகக் கண்டறிந்தார். இதனால் அவர் ஜெயவர்த்தனா அரசுமீது வெறுப்புக்கொண்டிருப்பதோடு, ஈழத் தமிழர்மீது அநுதாபமும் அக்கறையும் காட்டிவந்தார்.

புதிய பாரதப்பிரதமர் சமாதானப்பிரியர். தமிழ்மக்களின் பிரச்னையில் தனிப்பட்ட அக்கறைகொண்டவர். தமிழ்மக்கள் கௌரவமாக, பாதுகாப்பாக நிம்மதியாக வாழவேண்டும் என விரும்புபவர். அவரது நற்நோக்கையும், நல்லெண்ண முயற்சியையும் ஆதரிப்பதுபோல ஜெயவர்த்தனா அரசு நடந்துகொண்டாலும், சமாதானத்தீர்வில் எவ்வித அக்கறையும் எடுக்காது, இந்திய அரசை தமிழீழ விடுதலைப்போராளிகளுக்கு எதிராக முடிந்துவிடுவதில்தான் முற்றுமுழுதாக முனைந்து வருகிறது ஜெயவர்த்தனாவின் இந்த நயவஞ்சக ராஜதந்திரச் சூழ்ச்சியை நாம் நன்கு அறிவோம். இதனை இந்தியஅரசும் வெகுவிரைவில் புரிந்துகொள்ளும் என்பதே எமது நம்பிக்கை.



படிப்பகம்

www.padippakam.com

தனியரசே எமது அசைக்கமுடியாத அரசியல் இலட்சியம். இந்த இலட்சியத்தை அடையவே நாம் உயிரை அர்ப்பணித்துப் போராடி வருகிறோம். ஒடுக்கப்படும் எமது மக்களின் அரசியல்அபிலாசையும் அதுவே. வேறு எந்த மாற்றுத்திட்டமும் எமது மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாக அமையமாட்டாது, என்பதே எமது கருத்து. மூன்றாம் உலகத்து ஒடுக்கப்படும் மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டங்களை கௌரவித்து, ஆதரித்துவரும் பாரதநாடு, ஈழத்தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இந்திய மக்களின் அங்கீகாரம் எமக்குக் கிட்ட காலம் பிடிக்கலாம். ஆயினும் நாம் அதற்காகத் தொடர்ந்து போராடிக்கொண்டே இருப்போம்.

**தர்மமும் உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கிறது. அதுவே எமது பலம். அதர்மமும் பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கிறது. அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றிகொள்வது நாமே. ஏனெனில் என்றுமழியாத தர்மம் எமக்குப் பக்கபலமாக இருக்கிறது''** என்றார்.

### மகத்தான சோதனை.

1987ஆம் ஆண்டு தொடங்கியதினத்தில் எனது வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பினேன். ஜனவரி 2ஆம் தேதி காலையில் சென்னை வந்துசேர்ந்தேன். வந்தவுடன் பிரபாகரனை அவரது வீட்டில் சந்தித்தேன். காலை 11 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். பல்வேறு நாடுகளிலுமுள்ள நிலைகளைக்குறித்து அவருக்கு விளக்கிக்கூறினேன். ''அமெரிக்கா, கனடா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில்அநேகமாக எல்லா தமிழர்களும் ஒன்றுபட்டு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் திரண்டிருக்கிறார்கள். மற்ற இயக்கங்கள் எல்லாம் அறவே செல்வாக்கற்றுப்போய்விட்டன. தேசிய விடுதலை இயக்கம் என்ற அந்தஸ்து விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், தேசிய விடுதலைப்போராட்டத்தின் தலைவர் என்ற அந்தஸ்து பிரபாகரனுக்கும் வெளிநாட்டுத் தமிழர்களால் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இனி ஒருமுகமாக விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குத்தான் உதவிகள் புரிவார்கள்'' என்பதையும் கூறினேன்.

இந்த செய்திகளையெல்லாம் நான் கூறியபோது பிரபாகரன் மகிழ்ச்சியடைந்தாலும், அவற்றுக்குஊடே இனம்தெரியாத ஒரு கவலை ஊடாடுவதைப் பார்த்தேன். நான் கிட்டத்தட்ட 1½ மாதகாலமாக தமிழ்நாட்டில் இல்லாத நேரத்தில் என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளவிரும்பினேன். அவரும் பரபரப்பான சில விஷயங்களைக் கூறினார்.

பெங்களூர் மாநாட்டிற்குப்பின்னால் இந்தியப் பிரதமர் ராஜீவ் தங்கள் மீது மிகுந்தகோபமடைந்திருப்பதாக பிரபாகரன் கூறினார். பிரபாகரனையும் விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் ஒழித்துக்கட்டிவிட்டால் பிறகு தமது இஷ்டம்போல ஒரு தீர்வினை இலங்கைத் தமிழர்கள்மீது திணிக்கமுடியுமென்று பிரதமர் ராஜீவ் நினைப்பதாகக்கூறிவிட்டு மேலும் பேசுகையில் ''அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம், மீது நாங்கள் நடவடிக்கை எடுத்து சிலரைக் கைதுசெய்தபோது அவர்களிடமிருந்து பல முக்கியமான தகவல்கள் எங்களுக்குக் கிடைத்தன. ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம், டெலோ இயக்கம் ஆகிய இரண்டுக்கும் ஏராளமான நவீன ஆயுதங்களை இந்திய அரசு அளித்துள்ளது. என்னை இந்தியாவிலேயே படுகொலை செய்ய இவர்களுக்கு விசேட அதிரடிப்பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது'' என்றார்.



படிப்பகம்

www.padippakam.com

இவற்றையெல்லாம் தெரிவித்த 'தம்பி' இதற்கான ஆதாரங்களையும் என்னிடம் காட்டினார். இதைக்கண்டு நான் கொதிப்படைந்தாலும் ஆச்சரியப்படவில்லை. இது நான் எதிர்பார்த்ததுதான். விடுதலைப்புலிகள் வலிமை பெறுவதை இந்தியஅரசு ஒருபோதும் விரும்பவில்லை. எனவே மற்ற இயக்கங்களை ஏவி புலிகளை ஒழிக்க விரும்புகின்றனர். ஆனால் அந்த சதியை முளையிலேயே கிள்ளியெறிந்து துரோக இயக்கங்களை புலிகள் முழுமையாக அடக்கிவிட்டனர்.

எங்கள் பேச்சு முடியவில்லை. பிற்பகல் 3 மணியாகிவிட்டது. எனவே நான் விடைபெற்று எழுந்தேன். 'தம்பி' மறுநாள் சந்திக்கவிரும்புவதாகக் கூறினார். மறுநாள் அதாவது 3ஆம் தேதி கோவையில் திராவிடர்கழக மாநாடு இருக்கிறது அதற்குச் செல்லவேண்டுமே என்றுகூறி, எனவே 4ஆம் தேதி சென்னை வருவதாகக் கூறினேன்.

அதைக்கேட்ட தம்பி சிரித்தார். அந்த சிரிப்பில் ஏதோ மர்மம் புதைந்திருப்பதாக எனக்குத் தோன்றியது. என்னவென்று புரியாமல் விழித்தேன். அவரே அந்தப் புதிரையும் அவிழ்த்தார்.

''அண்ணா! 4ஆம் தேதி நீங்கள் இங்குவரும்போது நான் இங்கிருக்க மாட்டேன்'' என்றார்.

எனக்குப் பளிச்சென்று உண்மைத் தெளிவாகியது. 'தம்பி' ஈழம் திரும்ப முடிவுசெய்துவிட்டார் என்பதுதான் அந்த உண்மை.

''ஏற்பாடு எல்லாம் ஆகிவிட்டதா?'' என்று கேட்டேன்.

''ஆம்! உங்களிடம் மட்டும்தான் சொல்லியிருக்கிறேன். வேறுயாருக்கும் தெரியாது'' என்றார்.

தம்பி என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக்கண்டு நெகிழ்ந்துபோனேன்.

அன்று இரவு எனக்கு உறக்கம் வரவில்லை.

கோவை மாநாட்டிற்கு 4ஆம் தேதி வருவதாக செய்தியனுப்பிவிட்டு எங்கள் பொதுச்செயலாளர் திரு. எம்.கே.டி. சுப்ரமணியம் அவர்களை அங்கு அனுப்பிவைத்தேன்.

மறுநாள் காலையில் தம்பியைப் பார்க்கச் சென்றேன். அவரது அறையில் நான் கண்டகாட்சி என்னைத் திடுக்கிடவைத்தது. அங்கு ரகுவும் மற்றும் முக்கிய தோழர்களும் உட்கார்ந்து 'சயனைட்' குப்பிகள் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அவற்றில் ஒன்றை கையில் எடுத்து தனது கழுத்தில் மாட்டி, மீண்டும் தூக்கி வாய்வரை வருகிறதா! என்று தம்பி பார்த்தபோது எனது நெஞ்சம் கலங்கிற்று. மௌனமாக அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிதுநேரத்தில் அவர்கள் அந்த வேலையை முடித்துக் கொண்டு வெளியேறினார்கள். 'தம்பி' தனிமையில் என்னுடன் பேசினார்.

''அண்ணா' சென்னையில் இருக்கும்வரை எனக்கு மத்திய - மாநில அரசுகளின் நிர்ப்பந்தம் இருந்து கொண்டேதான் இருக்கும். எங்கள் மக்களின் நலனுக்கேற்ற முடிவுகளை நாங்கள் சுதந்திரமாக எடுக்க முடியாது. குறுக்கீடுகளும் தடைகளும் இருந்து கொண்டே இருக்கும். மேலும் மற்றொரு விதத்திலும் என்னை அபாயம் சூழ்ந்துள்ளது. இந்திய அரசுடன் பேசவரும் போது டில்லியிலோ அல்லது சென்னையிலோ என்னைக் கொலைசெய்ய திட்டமிட்டுள்ளனர். இங்குதான் இருக்கும்வரை ஆபத்து நீடிக்கவே செய்யும். நான் ஈழம் திரும்பிச்செல்வதன் மூலம் எங்கள்போராட்டம் மேலும் வலுவடையும். ஆகவே அங்கு செல்கிறேன்'' என்று கூறினார்.


படிப்பகம்

www.padippakam.com

''தமிழீழ விடுதலைப்போராட்டம் உங்கள் ஒருவரை நம்பியேயிருக்கிறது. எனவே நீங்கள் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உங்களை ஒழித்து விட்டால் ஈழவிடுதலைப் போராட்டத்தையே நசுக்கிவிடலாம் என்று எதிரிகள் நினைக்கிறார்கள். எனவே நீங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்'' என்று கூறினேன்.

''கடலைக் கடக்கும்வரைதான் எனக்கு ஆபத்து. கரைசேர்ந்துவிட்டால் என்னை யாரும் எதுவும் செய்துவிடமுடியாது'' என்று தம்பி கூறினார்.

அவர் முகத்தில் தன்னம்பிக்கை ஒளிர்ந்தது.

மேலும் பல முக்கிய விஷயங்கள்குறித்து இருவரும் பேசினோம். எங்கள் பேச்சில் நண்பகலாகிவிட்டதை நாங்கள் கவனிக்கவில்லை. தம்பியின் மனைவி மதிவதனி உள்ளே வந்தார்.

''இருவரும் பேச உட்கார்ந்துவிட்டால் பசியே இருக்காதா'' என்று கேட்டுவிட்டு இருவரையும் உணவு உண்ண அழைத்தார். இருவரும் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்தினோம். உணவில் எனது நாட்டம் செல்லவில்லை. தம்பி நாடு திரும்பவிருப்பது பற்றியே எனது உள்ளம் சிந்தித்துக்கொண்டிருந்தது. பிறகு தம்பியிடம் நான் பிரியாவிடைபெற்றேன். எனது கண்கள் கலங்கின. மீண்டும் 'தம்பியை' என்று சந்திப்போம்?

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் தேதி இந்திய அதிகாரிகள் சிலர் பிரபாகரனை யாழ்ப்பானத்தில் சந்தித்தார்கள். பிரதமர் ராஜீவ் காந்தி அவரைச் சந்தித்துப் பேசவிரும்புவதாகக் கூறினார்கள்.

''எதற்கு என்று? பிரபாகரன் கேட்டார்''

மிக முக்கியமான விஷயமாகப் பேசவிரும்புவதாகச்சொல்லி அந்த அதிகாரிகள் அவசரப்படுத்தினார்கள்.

இந்தியராணுவ ஹெலிகாப்டர்மூலம் அவரை உடனடியாக டில்லி அழைத்துசெல்ல வந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

தன்னுடைய மக்களுக்கும், தோழர்களுக்கும் ஒரு அறிக்கையின்மூலமாக இதைத்தெரிவித்துவிட்டு பிரபாகரன் டில்லி புறப்பட்டார். சென்னையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போதும் எதற்காக இந்த அழைப்பு என்பதுபற்றிய உண்மை யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. டில்லியில் 'அசோகா ஓட்டலில்' பிரபாகரனும் அவரது தோழர்களும் தங்கவைக்கப்பட்டார்கள்.

இந்திய ஹைகமிஷனர் தீட்சித், இந்திய வெளிநாட்டுத்துறை செயலாளர் கே.பி.எஸ். மேனன் உட்பட பல அதிகாரிகள் பிரபாகரனை சந்தித்து இந்தியாவும், இலங்கையும் செய்துகொள்ளவிருக்கும் உடன்பாடுபற்றி முதன்முதலாகத் தெரிவித்தார்கள். இதைக்கேட்டதும் பிரபாகரன் அதிர்ச்சியடைந்தார்.

உடன்பாட்டின் நகல்களைக்கூட அவரிடம் கொடுத்துவிட்டு உடனே திரும்பப்பெற்றுக் கொண்டார்கள். இந்த உடன்பாட்டினை ஏற்கமுடியாது என்று பிரபாகரன் மறுத்தார். பிரபாகரனைச் சம்மதிக்கவைக்க மேலும் பல முயற்சிகள் செய்யப்பட்டன.

சென்னையிலிருந்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் டில்லிக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மறுபடியும் வற்புறுத்தினார்கள். ஆனால் பிரபாகரன் உறுதியாக மறுத்துவிட்டார்.


படிப்பகம்

www.padippakam.com

பிரதமர் சந்திக்கவிரும்புவதாகச் சொல்லி பிரபாகரனை அழைத்துச் சென்றவர்கள் பிரதமரும், பிரபாகரனும் சந்திக்க ஏற்பாடுகள் செய்ய வில்லை. இடையில் நான்கு நாட்கள் பறந்தோடின.

பிரபாகரன் சம்மதிக்க மறுத்துவிட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிந்த வுடன் சென்னையிலுள்ள மற்ற இயக்கங்களின் பிரதிநிதிகள் டில்லிக்கு அழைத்துவரப்பட்டனர். சொல்லிவைத்தப்படியே அவர்கள் உடன்பாட்டிற் குச் சம்மதம் தெரிவித்தார்கள். விடுதலைப்புலிகளைத்தவிர மற்றவர்கள் அனைவரும் இந்த உடன்பாட்டிற்குச் சம்மதித்து இந்த உடன்பாட்டை ஏற் றுக்கொண்டார்கள் என்று பிரதமர் ராஜீவ்காந்தி அறிவித்தார். யார் ஒப்புக் கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும் உடன்பாட்டில் கையெழுத்திட ஜூலை 29ஆம் தேதி கொழும்பு செல்லப்போவதாகவும் கூறினார். இதற் குப் பின்னர் அவரைச் சந்திக்க பிரபாகரன் அனுமதிக்கப்பட்டார். உடன் பாட்டிலுள்ள பல குறைகளை பிரபாகரன் சுட்டிக்காட்டினார். ஆனால் பிரபாகரன் இந்த உடன்பாட்டிற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டதாகப் பொய்யான செய்திகள் பத்திரிகைகளுக்கு இந்திய அதிகாரிகளால் கொடுக் கப்பட்டன. உடனே பிரபாகரன் அதை மறுத்து அறிக்கை வெளியிட்டார். பிரபாகரன் தங்கியிருந்த அசோகா ஓட்டலைச் சுற்றி கறுப்புப் பூனைகள் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். பிரபாகரனைச் சந்திக்கவோ அவருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொள்ளவோ எவரையும் அதிகாரிகள் அனு மதிக்கவில்லை.

இந்தச்சமயத்தில் நான் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தேன். ஆஸ்திரேலியப் பத்திரிகைகளில் இந்திய - இலங்கை உடன்பாடு பற்றிய விரிவான செய்திகள் இடம்பெற்றிருந்தன. அச்செய்தி களைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன். ஆஸ்திரேலியாவிலிருந்து உட னடியாக திராவிடக்கழகப் பொதுச்செயலாளர் திரு. கீ. விரமணி அவர் களுடன் தொலைபேசிமூலம் பேசினேன். இந்தியப் பத்திரிகைகளில் எதி லும் உடன்பாடுபற்றிய செய்திகள் வெளிவரவில்லை எல்லாமே மூடுமந்திர மாக வைக்கப்பட்டிருக்கின்றன என்று அவர் கூறினார். ஏதோ பித்தலாட் டம் நடக்கிறது என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது.

உடனே டில்லி அசோகா ஓட்டலுக்குத் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டேன். ஜூலை 27ஆம் தேதியன்று இரவு 8 மணிக்கு 'தம்பியுடன்' தொலைபேசிமூலம் பேசினேன். ''விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அங்கீ காரம் தருவதுபற்றி பிரதமர் பேசவிரும்புவதாகச் சொல்லி தன்னை அழைத்து வந்ததாக'' தம்பி கூறினார். இங்கு வந்தபிறகுதான் உடன்பாடுபற்றிய உண் மைகள் தெரிவிக்கப்பட்டதாகவும் இந்த மோசமான உடன்பாட்டை ஒப்புக் கொள்ளமுடியாது என்று தான் மறுத்ததாகவும் கூறினார்''. அவர் கூறிய செய்திகள் எனக்கு அதிர்ச்சியளித்தன. எனது சுற்றுப்பயணத்தை ரத்துசெய்து விட்டு உடனே இந்தியா திரும்புவதாக அவருக்குத் தெரிவித்தேன். உடனே புறப்பட்டுவரும்படி அவரும் கூறினார். பிறகு டில்லியிலிருந்த எனது நண் பரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. உன்னிக் கிருஷ்ணன் அவர்களுடன் தொலைபேசிமூலம் பேசினேன். அவருக்கு நிலைமைகளை விளக்கிக்கூறினேன். அவரும் நான் கூறியவற்றைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். உடன்பாடு பற்றிய விவரங்கள் யாருக்கும் தெரிவிக்கப் படவில்லை என்றும் ஜூலை 29ஆம் தேதி உடன்பாடு கையெழுத்தான பிறகே அவற்றை வெளியிடுவார்கள் என்றும் திரு. உன்னிக்கிருஷ்ணன் வெளிவந்திருப்பதை, நான் அவருக்கு வாசித்துக்காட்டினேன். ஏதோ மோசடி வேலை நடக்கிறது என்று அவரும் கருத்துத் தெரிவித்தார். ஜனதா கட்சித்தலைவர் திரு. சந்திரசேகருடன் தொடர்புகொள்ள முயன்றேன். அவர் டில்லியில் இல்லை.


படிப்பகம்

www.padippakam.com

தன்னுடைய அழைப்பை மதித்து ஏற்று இந்தியாவுக்கு வந்த பிரபாகரனை ஏமாற்றி, வஞ்சித்து சிறைவைப்பதுபோல வைத்துவிட்டு பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பு சென்று 40 இலட்ச ஈழத்தமிழர்களின் தலைவிதியை அவர்களின் சம்மதமில்லாமலேயே நிர்ணயிக்க முயன்றார். சிங்களர்களும் இந்த உடன்பாட்டை ஏற்கவில்லை. கொழும்பு நகரத்தில் பெரும் கலவரம் மூண்டது. புத்தபிட்சுகள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். பிரதமர் பிரேமதாசா **உட்பட** 11 அமைச்சர்கள் உடன்பாட் டிற்கு எதிராக அறிக்கை வெளியிட்டார்கள். இவ்வளவு எதிர்ப்புக்கிடையே யும் ராஜீவும் - ஜெயவர்த்தனாவும் உடன்பாட்டில் கையெழுத்திட்டார்கள்.

தங்களுடைய தலைவர் பிரபாகரன் வஞ்சகமாக அழைத்துச்செல்லப் பட்டு சிறைவைக்கப்பட்டிருப்பது கண்டு யாழ்பாணத்து மக்கள் கொதித் தெழுந்தார்கள். அவர்களை அடக்குவதற்காக இந்திய இராணுவம் அவசர அவசரமாக யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கியது. தமிழ்த் தாய்மார்கள் தங் கள் குழந்தைகளுடன் இந்திய ராணுவவீரர்களை உள்ளேவிடாமல் தடுத்து மறியல் செய்தார்கள். தங்கள் தலைவர் பிரபாகரன் திரும்பிவராமல் ஆயு தங்களை ஒப்படைக்கமாட்டோம் என்று விடுதலைப்புலிகள் மறுத்தார்கள். உடனடியாக பிரபாகரன் விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்குத் திருப்பி யனுப்பப்பட்டார். செல்லும்வழியில் அவர் சென்னை வந்தார். அவர் வந்த அன்று தமிழ்நாடெங்கும் ஒப்பந்த நகலை எரிக்கும் போராட்டத்தினை திரா விடர்கழகமும் தமிழ்நாடு காமராஜ் காங்கிரசும் நடத்தின. அதையொட்டி என்னை மதுரையில் போலீஸ் கைதுசெய்தது. எனவே என்னால் சென்னை வரமுடியவில்லை.

திரு. வீரமணி அவர்கள் போராட்டத்திற்குச் செல்வதற்கு முன்னால் பிர பாகரனைச் சந்தித்தார். அப்போது அவரிடம் தன்னிலையில் தான் உறுதி யாக இருப்பதாக பிரபாகரன் தெரிவித்தார். இந்தச் செய்தியை எனக்கும் தெரிவிக்கும்படி கூறினார். அந்தநேரத்தில் பிரபாகரனை அவரது தந்தை யும், பிரபாகரனின் மனைவியும் சந்தித்தார்கள். அப்போது அவர்கள் தம்பி யிடம் ''உங்களை நம்பியிருக்கும் மக்களை ஒருபோதும் கைவிடாதீர்கள். அதைவிட நீங்கள் மரணத்தை ஏற்பதை வரவேற்போம்.'' எனக் கூறினார் கள். தமிழீழ மக்களின் உணர்வுகளையே அவர்கள் பிரதிபலித்தார்கள்.

மறுநாள் நான் சென்னை வந்து சேர்ந்தபோது திரு. வீரமணி இந்த விவ ரங்களை எனக்குத் தெரிவித்தார். பேராசிரியர் பாலசிங்கம், திரு. நடேசன் ஆகியோரையும் நான் சந்தித்தேன். டில்லியில் என்ன நடைபெற்றது என் பதை அவர்கள் விரிவாகக் கூறினார்கள். பிரபாகரன் பிரதமர் ராஜீவைச் சந்தித்தபோது அவர் பின்வருமாறு கூறினாராம். ''புலிகளின் தியாகம் பெரிது. அவர்களின் தியாகம் இல்லாவிட்டால் ஜெயவர்த்தனா இந்த உடன்பாட்டிற்கு வந்திருக்கமாட்டார்கள் என்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன்'' என்று கூறினாராம். மேலும் கிழக்குமாநிலத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது என்றும் உறுதி கூறினாராம். பெயரள வுக்காவது சிறிதளவு ஆயுதங்களைக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். பிரதமரின் இந்த வேண்டுகோளுக்கு பிரபாகரன் பின்வரும் பதிலையளித் தார். யாழ்ப்பாணம் திரும்பி தனது தோழர்களையும், மக்களையும் கலந்தா லோசிக்காமல் எந்த முடிவையும் செய்ய இயலாது'' எனக் கூறினாராம். அதன்படி யாழ்ப்பாணம் திரும்பியபிறகு பிரபாகரன் தனது தோழர் களுடன் ஆலோசனை நடத்தினார்.

1937ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2ந் தேதியன்று யாழ்ப்பாணத்திற்கு அருகேயுள்ள சுதுமலை என்னுமிடத்தில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் பேசும்போது பிரபாகரன் பின்வருமாறு பேசினார்.



படிப்பகம்

www.padippakam.com

''நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாது போனாலும் இந்த ஒப்பந்தத்தை அமுலாக்கியே தீருவோமென இந்திய அரசு கங்கணம்கட்டி நின்றது. இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையை மட்டும் தொட்டு நிற்கவில்லை. இது பிரதானமாக இந்திய - இலங்கை உறவு பற்றியது. இந்திய வல்லாதிக்க வியூகத்தின்கீழ் இலங்கையைக் கட்டுப்படுத்தும் விதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இலங்கையில் அந்நிய நாசகார சக்திகள் காலூன்றாமல் தடுக்கவும் இது வழி வகுக்கிறது. ஆகவேதான் இந்திய அரசு இந்த ஒப்பந்தத்தை செய்துகொள்வதில் அதிக அக்கறை காட்டியது. ஆனால் அதேசமயம் ஈழத் தமிழரின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பதாகவும் இந்த ஒப்பந்தம் அமைகிறது.'' ஆகவேதான். எமது மக்களைக் கலந்தாலோசிக்காது எமது கருத்துக்களைக் கேளாது இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். ஆனால் நாம் ஆட்சேபித்ததில் அர்த்தமில்லை, எமது அரசியல் தலைவிதியை எமது வலிமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயமாக முடிவு செய்திருக்கும்பொழுது நாம் என்ன செய்வது?''

அதே பேச்சில் இந்தியாவின் பிரதமரோடு தான் பேசிய விவரங்களையும் அவர் அளித்த வாக்குறுதிகளைக் குறித்தும் பிரபாகரன் குறிப்பிட்டார். இந்திய இராணுவத்துடன் மோதும் நிலைமை ஏற்படுவதை அவர் ஒரு போதும் விரும்பவில்லை. எனவே ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு அவர் முன்வந்தார். ஆயுதங்களை ஒப்படைப்பதன்மூலம் எதிர்காலத்தில் ஈழத் தமிழர் ஒவ்வொருவரது உயிருக்கும் இந்திய ராணுவம்தான் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதையும் அவர் வற்புறுத்தினார். இந்த உண்மைகளை எடுத்துக்கூறும்போது அவர் பின்வருமாறு கூறினார்.

''இந்தச் சூழ்நிலையில் பாரதப்பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் என்னை அழைத்துப்பேசினார். அவரிடம் எமது பிரச்னைகளை மனம் திறந்து பேசினேன். சிங்கள இனவாத அரசுமீது எமக்கு துளிகூட நம்பிக்கை இல்லை என்பதையும் இந்த ஒப்பந்தத்தை அவர்கள் நிறைவேற்றப்போவதில்லை என்பதையும் இந்தியப்பிரதமரிடம் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்புப் பிரச்னைப்பற்றியும் அதற்கான உத்தரவாதங்கள் பற்றியும் அவரிடம் பேசினேன்.

பாரதப்பிரதமர் எமக்கு சில வாக்குறுதிகளை அளித்தார். எமது மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்தார். பாரதப் பிரதமரின் நேர்மையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவரது உறுதிமொழிகளில் நம்பிக்கை இருக்கிறது. சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிழர் இன அழிப்பு நடவடிக்கைகளில் இறங்க இந்தியா அனுமதிக்காது என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கையினால்தான் நாம் இந்திய சமாதானப்படையுடன் ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்தோம்.

நாம் எமது மக்களின் பாதுகாப்பிற்காக எத்தனை அளப்பரிய தியாகங்களைப் புரிந்தோம் என்பதை நான் இங்கு விளக்கிக்கூறத் தேவையில்லை. எமது இலட்சியப்பற்றும். தியாக உணர்வும் எத்தன்மை வாய்ந்தது என்பதை எமது மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்களது பாதுகாப்பிற்காக உங்களது விடுதலைக்காக. உங்களது விமோசனத்திற்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து, எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம். ஈழத்தமிழரின் ஒரே பாதுகாப்புச் சாதனமாக இருந்துவந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடமிருந்து பெற்றுக்கொள்வதிலிருந்து எமது மக்களின் பாதுகாப்பு என்ற பெரும்பொறுப்பு தங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைத்தான் குறிக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். அதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கிறோம். இந்திய வீரனுக்கு எதிராக நாம் ஆயுதங் களை நீட்டத் தயாராக இல்லை. எமது எதிரியிடமிருந்து எம்மைப் பாது காக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஈழத்தமிழர் ஒவ் வொருவரது உயிருக்கும் பாதுகாப்பிற்கும் இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்கவேண்டும் என்பதை நான் இங்கு இடித்துக்கூற விரும்புகிறேன்.''

இந்த ஒப்பந்தம் ஒருபோதும் தமிழர்களின் பிரச்னையைத் தீர்க்கப் போவதில்லை. சிங்கள இனவாதபூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும். தமிழீழம் ஒன்றுதான் இந்தப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு என்பதையும் அவர் வலியுறுத்தி பேசும்போது பின்வருமாறு கூறினார்.

''இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்கு வோம். ஆனால் இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாதபூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சி யத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் நான் இங்கு திட்டவட்டமாக உங்களுக்குக் கூற விரும்புகிறேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை. எமது இலட்சியம் வெற்றிபெறுவதானால் எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்கவேண்டும்.

## திலீபனின் தியாகம்.

பிரபாகரன் வாழ்வில் மிக சோதனையான காலக்கட்டம் தொடங்கியது. சிங்களராணுவத்தை எதிர்த்துப்போராடிய அவர் இந்திய ராணுவத்தையும் எதிர்த்துப் போராடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்ட வரலாறு சோதனையும் துயரமும் மிக்கதாகும்.

உடன்பாடு கையெழுத்தானபிறகு இந்திய அரசின்போக்கில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. உடன்பாட்டிலுள்ள பல அம்சங்களை நிறைவேற் றாமல் ஜெயவர்த்தனா காலம்கடத்தியபோத இந்திய அரசு அதைப்பார்த் துக்கொண்டு சும்மாயிருந்தது. ஆனால் அதேவேளையில் விடுதலைப்புலி களிடமிருந்து ஆயுதங்களை பறிப்பதில் குறியாகயிருந்தது. துரோக இயக்கங் களைச் சேர்ந்தவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுக்கப்பட்டு இந்தியராணுவ விமானங்களின்மூலம் அவர்கள் யாழ்ப்பாணம் கொண்டுவந்து இறக்கப்பட் டனர். ஆயுதமில்லாமல் திரிந்துகொண்டிருந்த விடுதலைப்புலிகளை அவர் கள் வேட்டையாடத் தொடங்கினார்கள்.

''இந்தியராணுவம் வந்தது தங்களைப்பாதுகாக்கத்தான் என்று கருதிய தமிழர்களுக்குக் கொஞ்சம்கொஞ்சமாக உண்மைகள் புரியத்தொடங்கின. மக்களுக்கு மேலும் உண்மைகளை எடுத்துக்கூறும்வகையில் விடுதலைப்புலி கள் பிரச்சாரக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தினார்கள். கவிஞர் காசி ஆனந்தன், யோகி போன்றவர்கள் இக்கூட்டங்களில் பேசினார்கள். இதற் கிடையில் செப்டம்பர் 13ஆம் தேதியன்று இந்தியத் தூதுவர் தீட்சித்திற்குக் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தும் ஒரு கடிதத்தினை பிரபாகரன் அனுப்பிவைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

1. பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் சிறைவைக்கப்பட்டத் தமிழர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

2. வடக்கு - கிழக்கு மாநிலங்களில் சிங்களக்குடியேற்றங்களை நிறுத்த வேண்டும்.

3. இடைக்காலஅரசு அமைக்கப்படும்வரை நிவாரணப்பணிகளை மேற்கொள்ளக்கூடாது.

4. இடைக்காலஅரசு அமைந்தபிறகே அதன் பொறுப்பில் போலீஸ் நிலையங்கள் திறக்கப்படவேண்டும்.

5. சிங்கள ஊர்க்காவல் படையினரிடமிருந்து ஆயுதங்கள் திரும்பப் பெறப்படவேண்டும்.

"உடன்பாட்டின்படி மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற ஜெயவர்த்தனா மறுத்துவிட்டார். எனவே மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற இந்தியா உறுதிமொழி கொடுக்கவேண்டும். இல்லையென்றால் செப்டம்பர் 15ஆம் தேதியன்று தீலிபனின் உண்ணாநோன்பு போராட்டமும் மறியல் போராட்டங்களும் ஆரம்பமாகும்" என்று பிரபாகரன் அறிவித்தார். இந்திய அரசிடமிருந்து எவ்விதப் பதிலும் வராமல்போகவே செப்டம்பர் 15ஆம் தேதியன்று தீலிபனின் உண்ணாவிரதம் தொடங்கப்பட்டது. அதையொட்டி வடக்கு - கிழக்கு மாநிலங்களில் அரசாங்க அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் போராட்டங்களும் ஆரம்பமாயின.

ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்குத் தலைமைதாங்கி நடத்திய பிரபாகரன் அகிம்சை வழியிலான மக்கள் போராட்டத்திற்கும் தலைமைதாங்கினார். இந்தியா தங்களைக் காப்பாற்றவே இராணுவத்தை அனுப்பி வைத்திருக்கிறது என்ற மயக்கத்தில் ஆழ்ந்திருந்த தமிழர்களை அந்த மயக்கத்திலிருந்து தெளிவிக்க பிரபாகரன் மக்கள் போராட்டத்தைத் தொடங்கினார். தீலிபனின் உண்ணாவிரதம் அம்மக்கள் மத்தியில் மாபெரும் எழுச்சியைத் தோற்றுவித்தது.

தீலிபனின் உண்ணாவிரதம் தொடங்கிய சிலநாட்களில் தம்பியிடமிருந்து எனக்கு அழைப்புவந்தது. உடனே புறப்பட்டு யாழ்ப்பாணம் வரும்படி அழைத்திருந்தார். அதற்கிணங்க செப்டம்பர் 22ஆம் தேதி நான் யாழ்ப்பாணம் புறப்பட்டேன். செல்வதற்கு முன்னால் திராவிடர்கழகப் பொதுச் செயலாளர் திரு.கீ. வீரமணி அவர்களுக்கு விஷயத்தைத் தெரிவித்துவிட்டுச் சென்றேன். அன்று இரவே நான் நெடுந்தீவு போய்ச்சேர்ந்தேன். அங்கு கவிஞர் காசி ஆனந்தன், யோகி ஆகியோரைச் சந்தித்தேன். இரவு அங்கு தங்கிவிட்டு காலையில் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தோம். பேராசிரியர் பாலசிங்கம், திலகர், மாத்தையா ஆகியோரை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். பிறகு தம்பியும் வந்து சேர்ந்தார். அங்கு உள்ள நிலவரங்களைத் தெரிவித்தார்.

"தீட்சித் தந்திரசாலியாக உள்ளார். வாக்குறுதிகளின்படி நடக்க மறுக்கிறார். எங்களை ஏமாற்றுவதற்கு முயலுகிறார்" என்று கூறினார்.

"துரோக இயக்கங்களை எங்களுக்கு எதிராக ஏவிவிட்டிருக்கிறார்கள். இந்திய அமைதிப்படையிடம் நாங்கள் முறையிட்டோம். எந்தப்பயனுமில்லை. எனவே நாங்கள் எதிர் நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலைக்கு ஆளானோம்" என்று மிகவருத்தத்துடன் கூறினார்.

அதற்குப்பிறகு இந்திய அமைதிப்படை தளபதி திபீந்தர்சிங் இந்திய தூதுவர் தீட்சித் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்த தம்பி புறப்பட்டுச் சென்றார்.



படிப்பகம்

www.padippakam.com

தீலிபனின் உண்ணாவிரதத்தையொட்டி ஏற்பட்டுள்ள மக்களின் எழுச்சியை நேரில்காணவும் அவற்றை வெளி உலகத்திற்குத் தெரியப்படுத்தவும், இந்திய அமைதிப்படை உண்மையில் என்ன செய்கிறது என்பதை அறிந்து கொள்ளவுமே என்னை யாழ்ப்பாணம் வரும்படி தம்பி அழைத்திருந்தார் என்பது எனக்குப் புலனாயிற்று. இந்திய இராணுவத்தை மாலைசூட்டி, திலகமிட்டு வரவேற்ற மக்கள் இப்போது எந்த அளவுக்கு அதை வெறுக்கிறார்கள் என்பதை நான் நேரில் காணும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

பிறகு நான்தீலிபனைப் பார்க்கச் சென்றேன். என்னுடன் மாத்தையாவும், திலகரும் வந்தனர்.

1985ஆம் ஆண்டு நான் தமிழீழத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது என்னுடனேயே இருந்தவர்களில் தீலிபனும் ஒருவர். இலட்சியபற்றும், தியாக உணர்வும்கொண்ட தீலிபனின் நிலையைப் பார்த்து நான் கண்கலங்கினேன். ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் ஒருவாரகாலத்திற்கு மேலாக உண்ணா நோன்பிருந்துவரும் அவர் மிகச் சோர்வாகக் காணப்பட்டார். மரணப்படுக்கையில் கிடந்தபோதும் மனஉறுதி குன்றாத அவரின் நிலை என்னை நெகிழவைத்தது. தீலிபன் என்னை அடையாளம் கண்டு கொண்டார். மெல்லிய குரலில் பேசினார்.

''அண்ணா! மக்கள் எழுச்சிப் பெற்றுவிட்டார்கள். தலைவரை உறுதியாக இருக்கச் சொல்லுங்கள். எனக்காக அவர் எதையும் விட்டுக்கொடுக்கக் கூடாது'' என்று கூறினார். தான் இறந்தாலும் பரவாயில்லை, இலட்சியம் நிறைவேற வேண்டும் என்று துடிக்கும் அந்த இளைஞனின் தியாக உணர்வைக்கண்டு நான் மெய்சிலிர்த்தேன்.

தீலிபனுக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருக்கும் **செல்வி சிவா துரையப்பா** என்னும் பெண்மணியையும் நான் பார்த்தேன். ஏற்கெனவே எனக்கு அவர் எழுதிய கடிதத்தை நினைவுபடுத்தினார். தீலிபனின் உயிரை எப்படியாவது பாதுகாக்கும்படி வேண்டிக்கொண்டார். ஆயிரக்கணக்கான மக்கள் குறிப்பாக பெண்கள் சோகமேவடிவாக அங்கு கூடியிருந்ததை நான் பார்த்தேன்.

தீட்சித்துடன் பேச்சுவார்த்தை நடத்தச்சென்ற தம்பியும் மற்றவர்களும் இரவு திரும்பினார்கள். பேச்சுவார்த்தை எவ்விதப் பயனுமளிக்கவில்லை என்று தம்பி கூறினார். தம்பியின் அலுவலக அறையிலேயே இருவரும் படுத்தோம். வழக்கம்போல தம்பி தலையணைகூட வைத்துக்கொள்ளவில்லை தனது கைகளையே தலையணைகளாக்கிக்கொண்டு படுத்தார். தன் இடுப்பில் வைத்திருந்த கைத்துப்பாக்கியை அருகில் கழற்றி வைத்தார். நாங்கள் தங்கியிருந்த அந்தக் கட்டிடத்தைச்சுற்றி பலமான காவல் போடப்பட்டிருந்தது. சிறிதுநேரம் இருவரும் பேசிக்கொண்டே தூங்கிப்போனோம்.

மறுநாள் பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த தளபதிகள் தம்பியைக்காண அங்குவந்திருந்தனர். மட்டக்களப்புத் தளபதியாகயிருந்து தற்போது யாழ்ப்பாணத் தளபதியாகயிருக்கும் குமரப்பாவையும் கண்டேன். அவரிடம் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தேன். இந்திய-இலங்கை உடன்பாடுபற்றி கிராமம்கிராமமாக மக்களிடம் உண்மைகளை விளக்கி வருவதாகக் கூறினார். 20 நாட்களுக்குமுன்னால் அவருக்குத் திருமணம் நடந்ததையும் தெரிவித்தார். எனது மகிழ்ச்சியையும், வாழ்த்தையும் அவருக்குக் கூறினேன். தம்பி அவரை அழைத்து வடமராட்சி பகுதிகளைப் பார்வையிட என்னை அழைத்துச் செல்லும்படி கூறினார். குமரப்பாவுடன் பல பகுதிகளுக்குச் சென்று நான் பார்த்தேன்.

6



படிப்பகம்

www.padippakam.com

அன்று மாலையில் 'கரும்புலிகள்' என்ற அமைப்புப்பற்றி தம்பி எனக்கு கூறினார். விடுதலைப்புலிகளே தங்கள் உயிர்களைத் தியாகம் செய்வதற்கு தயாரானவர்கள். அதிலும் அதிதீவிரமான கரும்புலிகள் என்னும் தற் கொலைப் படையை தம்பி உருவாக்கியிருக்கிறார். வடமராட்சியிலிருந்த சிங்களராணுவ முகாமை கரும்புலியான மில்லர் வெடிமருந்து ஏற்றிய வாகனத்தோடு சென்று அதை வெடிக்கசெய்து சிங்கள இராணுவமுகா மையே அழித்து, தானும் அழிந்து போனது ஒரு மயிர்க்கூச்செறியச்செய்யும் நிகழ்ச்சியாகும். சிதைக்கப்பட்ட சிங்களராணுவமுகாமை நான் பார்த்த போது திடுக்கிட்டுப்போனேன். கண்ணுக்கு எட்டிய தூரம்வரையில் கட்டி டங்கள் சிதறிக்கிடந்தன. அப்படியானால் மில்லரின் உடல் எப்படி சின்னா பின்னமாகியிருக்கும் என்பதை என்னால் உணரமுடிந்தது.

மில்லர் போன்ற வீரத் தியாகிகளை உருவாக்க பிரபாகரனால் முடி கிறது. அதைப்போலவே தீலிபன் போன்ற அறத்தியாகிகளையும் அவரால் உருவாக்கமுடிகிறது. அவரிடமுள்ள இந்த அற்புதமான ஆற்றலை எண்ணி நான் வியந்தேன்.

தீலிபனின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக யாழ் மாணவர்கள் நடத்திய பிரமாண்டமான ஊர்வலத்தை நான் பார்த்தேன். சுமார் இலட்சம் பேருக்கு மேல் அணிவகுத்து சென்றார்கள். இந்தியாவுக்கு எதிரான உணர்வு அந்த ஊர்வலத்தில் கொப்பளித்தது. இத்தகைய உணர்வு தமிழர்களிடம் உருவாக வேண்டும் என்று ஜெயவர்த்தனா விரும்பினார். அதனால்தான் இந்திய இராணுவத்தை வரவழைத்தார். அவரின் இந்த சூழ்ச்சியைப் புரிந்துகொள் ளாமல் ராஜீவ் நடந்துகொண்டதின்விளைவாக இந்திய எதிர்ப்புணர்வு அங்கு கொளுந்துவிட்டு எரிவதையும் நான் பார்த்தேன்.

செப்டம்பர் 26ஆம் தேதியன்று காலையில் தீலிபனின் உடல்நிலை மிக மோசமான கட்டத்தை அடைந்தது. இனி அவர் பிழைக்கப்போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது. அந்தவேளையில் பிரபாகரனுடன் பேச்சுநடத்த தீட்சீத் பலாலி இராணுவமுகாமுக்கு வந்தார். அந்த துயர மானவேளையில் யாராகயிருந்தாலும் பேச்சுவார்த்தைக்குப் போகமாட்டார் கள். தம்பி என்ன செய்யப்போகிறார் என்பது எனக்குப் புரியவில்லை. ஆனால் அவர் நிதானம் தவறாமல் இருந்தார். தனது அருமை தோழன் மரணத்தின்வாயிலில் நிற்கிறான் என்பதனால் ஏற்பட்ட சோகம் அவர் முகத்தில் வெளிப்படையாகவே தெரிந்தது. ஆனாலும்கூட தன்னுடைய மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையைச் செய்யவேண்டுமென்று விரும் பினார். தன்னுடைய சகாக்களை அழைத்து தீலிபன் விஷயமாக எது நேர்ந் தாலும் உடனே தனக்குத் தகவல் தெரிவிக்கும்படி கூறிவிட்டு பலாலி இராணுவமுகாமுக்குச் சென்றார். அவர் இராணுவமுகாமுக்கு போய்ச் சேருவதற்குள்ளாகவே தீலிபன் மரணத்தைத் தழுவிக்கொண்டார். கவிஞர் காசி ஆனந்தனும், நானும் மற்றவர்களும் மாளாத துயரத்தோடு அங்கு போனோம். தீலிபனுக்கு அஞ்சலி செலுத்தினோம்.

செய்தியறிந்த மக்கள் கொதித்தெழுந்தார்கள். யாழ்ப்பாணத்தில் அரசு பஸ்கள் கொளுத்தப்பட்டன. இந்திய இராணுவத்தினர் வெளியில் நடமாட முடியாத நிலைமை. ஆனால் பலாலிமுகாமிலிருந்து பிரபாகரன் அமைதி காக்கும்படி மக்களை வேண்டிக்கொண்டார். பிரபாகரனின் இந்த வேண்டு கோளை ஒலிபெருக்கிகள்மூலம் மக்களுக்கு அறிவித்தபோது அமைதி ஏற் பட்டது. பிரபாகரனின் வேண்டுகோள் மந்திரசக்திபோல வேலைசெய்தது. கொதித்தெழுந்த மக்கள் தங்கள் கோபத்தை அடக்கிக்கொண்டனர். அவ ருடைய சொல்லுக்கு மக்கள் எப்படிக் கட்டுப்படுகிறார்கள் என்பதை அன்று நான் நேரில் பார்த்தேன். இந்தியராணுவ அதிகாரிகளும் அதைக் கண்டு அதிசயித்துப் போனார்கள். தீட்சித்துடன் பேசச்சென்ற தம்பியும்


படிப்பகம்

www.padippakam.com

மற்றவர்களும் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு திரும்பினார்கள். பிறகு தீலிபனின் உடலுக்குத் தம்பி அஞ்சலி செலுத்தினார். தீலிபனின் சாவு அவரை பெருமளவுக்குப் பாதித்தது என்பதை நான் நேரில்கண்டேன்.

அன்று இரவு தமிழீழ மக்களுக்கு ''நிதர்சனம்'' தொலைக்காட்சிமூலம் அவர் விடுத்த வேண்டுகோளில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''இந்தியஅரசு எமது நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து காலந் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் தீலிபன் உயிர் பிழைத்திருப்பான். இன்னமும் இந்தியஅரசு எமது கோரிக்கைகளை நிறை வேற்றுவதில் காலம் தாழ்த்திவருகிறது. இன்று எமது மக்கள் எதிர்கொள் ளும் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதில் சிரத்தைக்காட்டுவதைவிடுத்து எமக்கு நிபந்தனைகளை விதிக்கிறது. எம்மோடு கலந்தாலோசிக்காத ஒரு ஒப்பந்தத்துக்கு எமது அங்கீகாரம் கேட்கிறது. இப்பொழுதும், ஆயுதங்களை ஒப்படைப்பதுபற்றிப் பேசுகிறது. போராட்டத்தைக் கைவிடச்சொல்கிறது. நாம் உருப்படியான செயல்முறைத்திட்டங்களைக்கேட்க இந்தியா நிபந் தனைகளைப் போடுகிறது. இந்தச் சூழ்நிலையில் நாம் போராட்டத்தை கைவிடமுடியாது. மாறாக போராட்டத்தைத் தீவிரப்படுத்தவேண்டும். தமிழீழமக்களின் ஒன்றுபட்ட தேசிய எழுச்சியாக எமது போராட்டம் புரட்சி வடிவம் பெற வேண்டும்.''

இந்தியஅரசு அளித்த வாக்குறுதிகளை நம்பி தாங்கள் மோசம் போனதைப்பற்றியும் பிரபாகரன் தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டார்.

''எமது உரிமைகள் வழங்கப்படும், எமது மக்களுக்கும், எமது மண்ணுக் கும் பாதுகாப்பு அளிக்கப்படும், தமிழ்மக்கள் தமது பாரம்பரிய தாய்ப் பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும். இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங் களைக் கையளித்தோம். எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்கு பொறுப்பளித்தோம்.

இதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் எனது மக்க ளாகிய உங்களுக்குத் தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக்கிராமங்களுக்குச் செல்லமுடியாது முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்க, சிங்களக் குடியேற்றம் துரிதகெதியில் தமிழ் மண்ணைக் கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் போலீஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது. அவசரஅவசரமாக சிங்கள இனவாத அரசயந்திரம் தமிழ்ப்பகுதிகளில் ஊடுருவியது. 'சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப்படையின் அனுசரணையுடன் சிங்கள அரசு ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்துகொண்டு தீலிபன் இதற்கு ஒரு முற்றுப் புள்ளிகாண திடசங்கற்பம் கொண்டான். சிங்கள அரசுடன் உரிமைகோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம்தான் எமது மக்களின் உரிமைக்கு உத்திரவாதமளித்தது. பாரதம்தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம்தான் எமது ஆயுதப்போராட்டத்தை நிறுத்திவைத்தது. ஆகவே பாரத அரசிடம்தான் நாம் உரிமைகோரிப் போராடவேண்டும். எனவே தான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத் தொடுத்தான் தீலிபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக்கொண்டான்.


படிப்பகம்

www.padippakam.com

நீராகாரம்கூட அருந்தாது மரணநோன்பை தீலிபன் தழுவிக்கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்தியத் தூதுவர் திரு. தீட்சித்துக்கு முன்னறிவித்தல் கொடுத்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள்வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந்தியஅரசு ஆதிக்கத்தின் கீழுள்ள தொடர்பு சாதனங்கள் குறிப்பாக அகில இந்தி வானொலி எம்மீது விசமத்தனமான பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. தீலிபன் உண்ணாவிரதத்தை மிகவும் கேவலமாகக் கொச்சைப்படுத்தியது. ஒன்பதாவது நாள் இந்தியத் தூதுவர் இங்கு வந்தார். உருப்படியில்லாத உறுதிமொழிகளைத் தந்தார். வெறும் உறுதிமொழிகளை நம்பி எமது இனம் காலம்காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது. உருப்படியான திட்டங்களை முன்வையுங்கள். எமது கோரிக்கைகளை நிறைவேற்றிவையுங்கள். அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்படமாட்டாது என்றேன். உங்களுக்கு தீலிபனது உயிரில் அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்களுக்கு முன்பாக அவனிடம் உறுதிமொழிகளைக் கூறுங்கள். நாம் உண்ணாவிரதத்தை வாபஸ்பெறுகிறோம் என்றேன். அதற்கு இந்தியத் தூதர் மறுத்துவிட்டார்.''

தீலிபனின் உன்னதமான உயிர்த்தியாகத்தை கொச்சைப்படுத்த முயன்ற இந்திய அரசின் போக்கு பிரபாகரனின் உள்ளத்தில் ஆறாத வேதனையை ஏற்படுத்தியது.

தீலிபனின் இறுதி ஊர்வலத்தில் நான் கலந்துகொண்டேன். வழிநெடுக மக்கள் வெள்ளமெனத் திரண்டிருந்தார்கள். கருப்புக்கொடி ஏற்றாத வீடு இல்லை. தீலிபனின் படம் வைக்கப்படாத முச்சந்தி இல்லை. வழிநெடுக கதறி கதறி அழுதபடி ஓடிவந்த தாய்மார்களை நான் பார்த்தேன். தீலிபனின் உயிர்த்தியாகம் தமிழீழமக்களை எந்தளவுக்குப் பாதித்துள்ளது என்பது எனக்குப் புரிந்தது.

காந்தியின் தேசம் செய்த துரோகத்தை எதிர்த்துக் காந்தீய வழியிலேயே போராடி உயிர்நீத்தத் தீலிபனுக்கு மக்கள் செலுத்திய அஞ்சலி வரலாறு காணாததாக இருந்தது. தீலிபனின் உயிர்த்தியாகமும் அதைத்தொடர்ந்து மக்கள்மத்தியில் ஏற்பட்ட பேரெழுச்சியும் இந்திய அரசின் சூழ்ச்சித் திட்டங்களைத் தவிடுபொடியாக்கிவிட்டன.





படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவுடன் மோதல்.

தீலிபனின் தியாகமும் அதனால் ஏற்பட்டமக்கள் எழுச்சியும்கண்டு இந்திய அரசு இறங்கிவந்தது. பிரபாகரனின் நிபந்தனைகளை ஏற்று இடைக்கால அரசு அமைக்கும் திட்டத்திற்கு இணங்கியது.

ஆனால் குள்ளநரியான ஜெயவர்த்தனா அதிலும் சூழ்ச்சிபுரிந்தார். இடைக்கால அரசில் விடுதலைப்புலிகளின் பிர திநிதிகளாக நியமிக்கப்பட்ட 7 பேர்களுமே வடக்குமாநிலத்தைச் சேர்ந்தவர்களாக நியமித்தார். பிரதம நிருவாகியாக கிழக்குமாநிலத்தைச் சேர்ந்தவர் ஒருவரையே நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தார். இதன்விளைவாக மீண்டும் சிக்கல் ஏற்பட்டது.

இதற்கிடையில் மற்றொரு துயரகரமான நிகழ்ச்சி நடைபெற்றுவிட்டது. விடுதலைப்புலிகளின் **தளபதிகளான** குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 பேரை சிங்களக்கடற்படை கைதுசெய்தது. பொதுமன்னிப்பு அளிக்கப்பட்ட பிறகு இவ்வாறு கைதுசெய்தது உடன்பாட்டினைமீறிய சதியாகும். கைது செய்தது மட்டுமல்லாமல் அவர்களைக் கொழும்பு கொண்டுசெல்லவும் அது முயன்றது. உடன்பாட்டைமீறி ஜெயவர்த்தனா செயல்படுவதைத் தடுக்க இந்திய அரசு எந்த முயற்சியும் செய்யவில்லை. மாறாக அதற்கு மறைமுகமாக ஒத்துழைத்தது. இதன் விளைவாக புலேந்திரன், குமரப்பா உட்பட 12 விடுதலைப்புலிகள் விஷமருந்தித் தற்கொலைச் செய்துகொண்டனர். இந்நிகழ்ச்சி தமிழீழமக்களைக் கொதித்தெழ வைத்தது. கொதித்தெழுந்த மக்களை அடக்குவதற்கு இந்திய இராணுவம் முயற்சிசெய்தது.

தீலிபன் இறந்த சமயத்தில் இதுபோல மக்கள் கொதித்தெழுந்தபோது பிரபாகரனின் வேண்டுகோள் அவர்களைக் கட்டுப்படுத்தியது. அதைப் போலவே இப்பொழுதும் பிரபாகரனை அணுகி அவர்மூலம் மக்களைக் கட்டுப்படுத்தி இருக்கலாம். ஆனால் ஏற்கெனவே விடுதலைப்புலிகளை அடியோடு ஒழிப்பதென இந்திய அரசு முடிவு செய்திருந்ததால் இதை சாக்காக பயன்படுத்திக்கொண்டு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கிற்று.

ஈழநாடு, முரசொலி ஆகிய இருபத்திரிகை அலுவலகங்களை இந்திய இராணுவம் தாக்கி அடியோடு தகர்த்தது. மிகப்பெரிய அளவில் இந்திய இராணுவம் விடுதலைப்புலிகள்மீது போர்த்தொடுத்தது. எனவே வேறுவழியில்லாமல் இந்தியராணுவத்தை எதிர்க்கவேண்டிய நிலைமைக்கு பிரபாகரன் ஆளாக்கப்பட்டார் 24 மணிநேரத்தில் விடுதலைப்புலிகளை ஒடுக்கி, பிரபாகரனையும் மற்ற தலைவர்களையும் கைது செய்வதாக ஜம்பம் அடித்த இந்தியராணுவம் விடுதலைப்புலிகளுடன் போராடத்திணறியது. கிட்டத்தட்ட ஆறு மாதகாலத்திற்கு மேலாக போராடியும் விடுதலைப்புலிகளை ஒழிக்கவோ, பிரபாகரனைப் பிடிக்கவோ முடியவில்லை. பலம்பொருந்திய இந்திய இராணுவம் விமானப்படை, கடற்படை டாங்கிப்படை போன்றவைகளின் துணையுடன் நடத்திய பிரமாண்டமான படையெடுப்பை, எதிர்த்துப் பிரபாகரன் வெற்றிகரமாகச் சமாளித்திருப்பதைக்கண்டு உலக நாடுகள் வியந்தன.

இராணுவத் தந்திரங்கள் அத்தனையையும் கரைத்துக்குடித்திருந்த தலைசிறந்த இராணுவத் தளபதியாக பிரபாகரன் விளங்குகிறார் என்பதை அவருடைய எதிரிகளும் ஒப்புக்கொள்ளவேண்டி நேர்ந்தது. இந்தியராணுவத்தை எதிர்த்துப் பிரபாகரன் நடத்திக்கொண்டிருக்கும் இந்தப் போராட்டம் விடுதலைப்புலிகளின் மரியாதையை மிகப்பெரிய அளவுக்கு உயர்த்தியிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஈழமக்கள் பிரபாகரனுடன்தான் இருக்கிறார்கள் என்பது இந்தப் போராட்டத்தின்மூலம் வெளிப்பட்டது. இந்திய இராணுவக் கொடுமைகளுக்கு இலக்கான அந்தமக்கள் கொஞ்சமும் மனஉறுதிகுன்றாமல் பிரபாகரனையே தொடர்ந்து ஆதரிக்கிறார்கள். இந்தப்போராட்டத்தில் எவ்வளவுதான் முயற்சித்தாலும் இந்தியராணுவம் வெற்றிபெறப்போவதில்லை.

இந்திய இராணுவத்துடன் மோத பிரபாகரன் ஒருபோதும் விரும்பியதில்லை. ஆரம்பத்திலிருந்தே அதை அவர் தவிர்த்துவந்திருக்கிறார். இந்திய இராணுவமும் விடுதலைப்புலிகளும் மோதிக்கொள்ளவேண்டும் என்பதே ஜெயவர்த்தனாவின் திட்டம் என்பதை அவர் தெளிவாக அறிந்திருந்தார். எனவே ஜெயவர்த்தனா, விரித்த வலையில் அவர் ஒருபோதும் சிக்கவில்லை. ஆனால் பிரதமர் ராஜீவ் அந்த வலையில் தலைகுப்புற விழுந்தார். விடுதலைப்புலிகளுடன் மோதி அவர்களை அழித்தொழிக்குமாறு இந்திய இராணுவத்தை ஏவிவிட்டார். இந்த உண்மைநிலையை விளக்கித் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் அனைவருக்கும் தனித்தனியே கடிதங்களைப் பிரபாகரன் எழுதினார். இக்கடிதத்தில் இந்தப் போர் ஏற்படுவதற்கான காரணங்களையெல்லாம் விளக்கிவிட்டு இறுதியில் பின்வருமாறு கூறினார்.

''பாரதம் ஒரு வல்லரசுநாடு. உலகத்திலேயே மிகப்பெரிய இராணுவத்தை வைத்திருக்கிறது. பாரதத்துடன் போர்த்தொடுக்க நாம் பைத்தியக்காரர்கள் அல்லர். ஆனால் பாரதம் எம்மோடு போர்த்தொடுத்து எம்மை அழிக்க முயல்கிறது. ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்று குவிக்கிறது. விடுதலைப்புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. விடுதலைப்புலிகள் ஒரு மக்கள் இயக்கம். புலிகள்தான் மக்கள். மக்கள்தான் புலிகள். ஆகவே பாரதம் எமது மக்களுக்கு எதிராகவே ஒரு அநீதியான யுத்தத்தைத் தொடுத்திருக்கிறது. ஜெயவர்த்தனா அரசு நடத்திமுடித்த யுத்தத்தை, இப்போது பாரதம் தொடர்கிறது. இனப்படுகொலையைத் தடுப்பதற்காக எந்த இராணுவம் இங்கு வந்ததோ அந்த இராணுவமே அந்த இன அழிப்பைச் செய்கிறது.''

1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் தேதி 48 மணிநேர போர் நிறுத்தத்தை இந்தியஅரசு அறிவித்தது. இதைத்தொடர்ந்து விடுதலைப் புலிகள் தங்கள்வசமுள்ள ஆயுதங்களை ஒப்படைத்துவிடவேண்டுமென்று இந்தியஅரசு வற்புறுத்தியது. இந்திய அரசின் இந்தக் கோரிக்கைக்குப் பிரபாகரன் பின்வரும் பதிலை அளித்தார்.

''தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியநாட்டின் வல்லரசப்பங்கினை நாம் அறிந்திருக்கிறோம். அதோடு இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களையும், நிர்ப்பந்தங்களையும் நாம் மதிக்கிறோம். ஆகவேதான் இந்திய நலன்களுக்குமாறாக இந்தியாவுடன் மோதவோ, முரண்டவோ நாம் விரும்பவில்லை.

ஆனால் அதேசமயம் எமது மக்களின் நலன்களிலும் அரசியல் அபிலாசைகளிலும் எமக்கு ஆழ்ந்த அக்கறை உண்டு. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாகாணசபைத் தீர்வுத் திட்டமானது எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யவில்லையென நாம் கருதுகிறோம். எமது நிலைப்பாட்டை இந்தியஅரசு புரிந்திருக்கிறது என்றுதான் நாம் எண்ணினோம்.''

தமிழர்களை அடியோடு ஒழித்துக்கட்ட சிங்கள இராணுவம் என்ன செய்ததோ அதையே இந்திய இராணுவம் செய்துவருவதாகவும் பிரபாகரன் சுட்டிக்காட்டினார். தமிழ்மக்களின் பாதுகாவலர்களாகவும், அமைதியை



படிப்பகம்

www.padippakam.com

நிலைநிறுத்தவேண்டியவர்களாகவும் விளங்கவேண்டிய இந்திய அமைதி காக்கும்படை யுத்தப்படையாகமாறி சிங்கள இனவாத ஆளும்கும்பல் விரோத வலையில் விழுந்து தமிழர்களுக்கு எதிராகத் துப்பாக்கிகளை நீட்டியபோது அதை எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை விளக்கும்வகையில் பிரபாகரன் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''சரணடைந்து அவமானப்பட்டு அழிவதைக்காட்டிலும் தற்காப்புக்காகப் போராடி மானத்துடன் மரணத்தைத் தழுவிக்கொள்வதைத்தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறுவழியில்லை என்பதை இந்தியா மறந்திருக்க நியாயம் இல்லை. இந்தியாவுடனான ஓர் யுத்தத்தை நாம் எமது கனவிற் காணும் எதிர்நோக்கியிருக்கவில்லை. இந்தியராணுவவீரர்கள்மீது நாம் ஆழ்ந்த அன்பும் அபிமானமும் வைத்திருக்கிறோம். அவர்களுடன் போர் புரிய நேரிடுமென நாம் எதிர்பார்க்கவேயில்லை. அப்படியான ஒரு யுத்தத்தை நாம் விரும்பவில்லை.

ஆனால் இந்திய ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் நாம் விரும்பாத நாம் எதிர்பாராத சூழ்நிலையை எம்மீது திணித்தார்கள். தன்மானத்திற்காகவும் தற்பாதுகாப்பிற்காகவும் போராடுவதா? அல்லது அவமானப்பட்டு அழிந்து போவதா? என்றவகையில் நாம் முடிவெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். இந்த சிக்கலான சூழ்நிலையில்தான் நாம் போராடுவதெனத் தீர்மானித்தோம். ஆயினும் எம்மீது தொடுக்கப்பட்ட இந்த அதர்மமான யுத்தத்தை நிறுத்த நாம் கேட்டுவருகிறோம்.''

தமிழீழ மக்களை இந்திய இராணுவம் கொன்றுகுவித்தவேளையிலும்கூட இந்தியமக்கள்மீது தான் கொண்டிருந்த ஆழமான அன்பினை வெளிப்படுத்தும்வகையில் பிரபாகரன் ஒரு உன்னதமான செயலினை புரிந்தார். போராட்டத்தின்போது சிறைப்பிடிக்கப்பட்ட இந்திய இராணுவவீரர்கள் 18 பேரை எவ்வித நிபந்தனையுமில்லாமல் அவர் விடுதலை செய்தார். இச்செயல் இந்தியாவில் மட்டுமல்ல உலகம்பூராவிலும் எதிரொலியை ஏற்படுத்திற்து. பிரபாகரனும் அவரது விடுதலைப்புலியினரும் மனிதாபிமானம் மிக்கவர்கள் என்பதையும் இந்தப்போர் இந்தியாவினால் அவர்கள் மீது திணிக்கப்பட்ட போதிலும் இந்தியமக்களை அவர்கள் வெறுக்கவில்லை. இன்னமும் நேசிக்கிறார்கள் என்பதையும் காட்டியது.''





படிப்பகம்

www.padippakam.com

# துரோகம் செய்தது யார்?

இந்திய-இலங்கை உடன்பாட்டிற்குப் பிறகு உருவான புதிய சூழ்நிலையில் பிரபாகரன் சற்றுப் பொறுமையைக் கையாண்டு இடைக்கால அரசை அமைத்து தனது நிலையை ஸ்திரப்படுத்திக்கொண்டபிறகு அடுத்த நடவடிக்கைகளில் இறங்கி இருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள்.

இன்னும் சிலர் இந்திய-இலங்கை உடன்பாட்டை பிரபாகரன் எதிர்த்தது தவறு. தீலிபனின் உண்ணாவிரதப்போராட்டம் தேவையற்றது. புலேந்திரன், குமரப்பா உட்பட 12 விடுதலைப்புலிகள் விஷமருந்தித் தற்கொலை செய்து கொண்டதும் அவசியமற்றது என்றெல்லாம் குற்றம்சாட்டுகிறார்கள்.

எவ்வளவோ உதவிசெய்த இந்தியாவை மதிக்கப் பிரபாகரன் தவறிவிட்டார். துரோகம் செய்துவிட்டார் என்று சிலர் வாய்புளித்ததோ! மாங்காய் புளித்ததோ! என்று பேசுகிறார்கள்.

தீலிபனின் உயிர்த்தியாகத்தையொட்டி அதற்குமுன்னும் பின்னுமாக 10 நாட்கள் நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். பிரபாகரனுடனும் அவரது முக்கிய தோழர்களுடனும் மனம்விட்டுப்பேசியும் பல்வேறு பகுதிகளுக்கும் போய் அங்குள்ள பலரையும் சந்தித்தும், நேரில் நிலைமைகளை ஆராய்ந்தும் அறிந்தும் உண்மையான நிலவரங்களை அறிந்துவந்ததை முந்திய அத்தியாயங்களில் விவரமாகக் கூறியுள்ளேன்.

தமிழீழப்போராட்டத்திற்கு இந்தியாவின் ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெறவேண்டும் என்பது பிரபாகரனின் நோக்கமாக இருந்தது. ஆனால் இந்திய அரசின் நோக்கமோ வேறுவிதமாக இருந்தது. பிராந்திய வல்லரசு என்ற முறையில் தனது பிராந்திய நலன்களுக்கு எதுஏற்றதோ அதற்கு இலங்கை அரசு ஒத்துழைக்கவேண்டும் என இந்தியஅரசு விரும்பியது. இந்த நோக்கம் நிறைவேற தமிழீழமக்களைப் பலிகொடுக்கவும் துணிந்தது. இந்தியஅரசின் கடந்தகால நடவடிக்கைகள் இதைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

1977ஆம் ஆண்டில் ஜெயவர்த்தனா இலங்கை ஆட்சியைக் கைப்பற்றினார். அவர் தமிழர்களுக்கு எதிரான தீவிரமான அடக்குமுறைகளைக் கையாண்டார். தனது வெளிநாட்டுக்கொள்கையையும் அமெரிக்காவுக்கு ஆதரவாக வகுத்துக்கொண்டார். இதன்மூலம் இந்தியாவின் பிராந்திய வல்லாதிக்கத்திற்கும், பூகோள அரசியல் நலன்களுக்கும் ஆபத்து ஏற்பட்டது. 1983ஆம் ஆண்டு ஜூலையில் தமிழர்களுக்கு எதிரான மிகப்பெரிய இனக்கலவரம் வெடித்தது. அதையொட்டி மேற்குநாடுகளிடமிருந்து ஆயுத உதவிகளை ஜெயவர்த்தனா கோரினார். இந்த சூழ்நிலையில்தான் இந்தியஅரசு இப்பிரச்னையில் தலையிட நேர்ந்தது.

சிங்களர்-தமிழர் தகராறில் முதல்முறையாக மத்தியஸ்தம் செய்ய இந்தியா முன்வந்து பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது. அதேவேளையில் தமிழீழப் போராளிகளின் அமைப்புகளுக்கு இராணுவப் பயிற்சியையும், ஆயுதங்களையும் வழங்கி ஆயுதப்போராட்டத்தை விரிவுபடுத்த இந்தியா திட்டம்தீட்டியது.

தமிழீழ மக்களின் நலன்களைப்பேணி அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்தோடு இத்தகைய உதவியை இந்தியா செய்யவில்லை. போராளிகள் மூலம் நிர்ப்பந்தத்தைப் பிரயோகித்து இராஜதந்திரரீதியாக ஜெயவர்த்தனா அரசைத் தன்னிடம் பணியவைப்பதே இந்தியாவின் நோக்கமாக இருந்தது. அதாவது ஈழத்தமிழர்பிரச்னையைத் தனது வல்லாதிக்கத்தின் நலன்களுக்காகப் பயன்படுத்த இந்தியஅரசு முயன்றது.



படிப்பகம்

www.padippakam.com

ஜெயவர்த்தனாவுடன் பேச்சுநடத்தும்படி தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்களுக்கு இந்தியஅரசு ஆலோசனை வழங்கியது. அதேவேளையில் அவர்களுக்கே தெரியாமல் போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சியையும் அளித்தது. இந்த விவரம் எனக்குத் தெரியவந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் இதுபற்றி நான் விசாரித்தேன். இச்செய்தி கேட்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். தங்களைப் பேச்சுவார்த்தைக்குப் போகும்படி ஒருபுறம் சொல்லிக்கொண்டு மறுபுறத்தில் தங்களுக்கே தெரியாமல் போராளிகளுக்குப் பயிற்சியும் ஆயுதமும் கொடுக்க இந்தியா முன் வந்தது ஏன்? என திகைத்தார்கள். அதிலும் தமிழர்விடுதலைக்கூட்டணியிலிருந்து விலகியிருக்கிற திரு. சந்திரகாசன் மூலமாகப் போராளிகளின் இயக்கங்கள் அணுகப்பட்டவிதம்கண்டு கூட்டணித் தலைவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். இந்த நிகழ்ச்சிகளை எதற்காக குறிப்பிடுகிறேன் என்று சொன்னல் 83ஆம் ஆண்டிலிருந்தே இப்பிரச்னையில் இந்தியஅரசு இரட்டைவேடம் பூண்டது என்பதை எடுத்துக்காட்டத்தான்.

போராளிகளுக்கான பயிற்சியளிக்கும் திட்டமாவது ஒழுங்காக நடந்ததா என்றால் இல்லை. இதற்கான பொறுப்பையேற்று இருந்த இந்திய உளவுத் துறையான ''ரா'' அமைப்பு போராளி அமைப்புகளிடையே மோதல்களைத் திட்டமிட்டு ஏற்படுத்தியது. கட்டுக்கோப்பான தேசிய விடுதலை இயக்கம் ஒன்று உருவாகாமல் தடுக்கும் நோக்கத்துடனும், இந்திய அரசின் முழுக் கட்டுப்பாட்டின்கீழுள்ள கூலிப்படைகளாக போராளி அமைப்புகளைச் செயல்படவைக்கும் நோக்கத்துடனும் ''ரா'' இயங்கியது. ராவின் முயற்சிகளின் விளைவாகப் பல்வேறு போராளிகள் அமைப்புகளிடையேயும் மோதல்கள் வெடித்தன. ''ரா'' அமைப்பின் பொறுப்பிலிருந்த **உன்னிக்கிருஷ்ணன்** என்ற ஒரு அதிகாரி இதில் முக்கிய பாத்திரம் வகித்தார். இவரது தீய நோக்கங்கள் குறித்து இந்திய அரசுக்கு விடுதலைப் புலிகள் பல்வேறு புகார்களை அனுப்பியும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சிங்கள அரசின் உளவாளியாக இவர் செயல்படுகிறார் என்று நானும், திரு. வீரமணி அவர்களும் பகிரங்கமாகவே குற்றம் சாட்டினோம். போராளிகள்பற்றியும் அவர்களின் நடவடிக்கைகள்குறித்தும் சிங்கள அரசுக்கு இவர் தெரியப்படுத்துவதாக நாங்கள் கூறினோம். **ஆனால் பிரதமர் ராஜீவ்காந்தி அவரைத்தான் பெரிதும் நம்பி செயல்பட்டார். ஆனால் 1987ஆம் ஆண்டு நடுவில் திடீரென அவரை சி.ஐ.ஏ. ஏஜெண்ட் என குற்றம்சாட்டி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்து இந்தியஅரசு சிறையில் வைத்தது. ஈழப்பிரச்னையில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு இந்த அதிகாரி பெரும் காரணமாக இருந்தார். காலம் கடந்து அவரை அமெரிக்க உளவாளி என்று உணர்ந்திருக்கும் இந்தியஅரசு பிரபாகரன் கூறியபோதே உண்மையை உணர்ந்து செயல்பட்டிருந்தால் பின்னால்நேர்ந்த பல அனர்த்தங்கள் நேர்ந்திருக்காது.**

***ராஜீவ்காந்தி நம்பிய உன்னிக்கிருஷ்ணன் போன்றவர்கள்தான் இந்தியாவிற்குத் துரோகம் செய்தார்களேத்தவிர, பிரபாகரன் ஒருபோதும் இந்தியாவிற்குத் துரோகம் செய்யவில்லை.***

**சிங்கள இனவெறி ஆட்சியின் நலன்களைப்பேணி அதன்மூலம் இலங்கை அரசைத் தனது ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொள்வதையே இந்தியா விரும்புகிறது. இதன் மூலம் தனது தேசியப் பூகோள நலன்களைப் பாதுகாக்கமுடியும் என இந்தியா கருதுகிறது. இதை ஏற்றுக்கொள்வதற்கு விடுதலைப்புலிகள் மறுக்கிறார்கள். தமிழ்த்தேசிய இனத்தின் நலன்களுக்கு இது எதிரானது. இந்தியாவின் தேசிய, பூகோள நலன்களைப் பாதுகாக்கப்பட ''தமிழீழம்'' அமைவது ஒன்றே சிறந்த வழியாகும். சுதந்திரத் தமிழீழம்தான்**



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின் உண்மையான நண்பராகவும் இருக்க்முடியும். எவ்வளவுதான் விட்டுக்கொடுத்து தாஜா செய்தாலும் சிங்கள இனவெறி அரசியல்வாதிகள் ஒருபோதும் இந்தியாவுக்கு நன்றியுடன் இருக்கமாட்டார்கள். இந்த உண்மைகளைப் பிரபாகரன் சுட்டிக்காட்டுவதை ராஜீவ்காந்தி விரும்பவில்லை. ஆகவேதான் இருவருக்குள்ளேயும் முரண்பாடு எழுந்தது.

1986 நவம்பரில் நடைபெற்ற பெங்களூர் மாநாட்டின்போதும், 1987 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இந்திய-இலங்கை உடன்பாடு ஏற்படுவதற்கு முன்னும் ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதியாக பிரபாகரனுக்கு அங்கீகாரம் அளித்து அவரை அழைத்து பிரதமர் ராஜீவ் பேச்சுவார்த்தை நடத்தினார். தனிப்பட்டமுறையில் சிலவாக்குறுதிகளையும் வழங்கினார். அதையெல்லாம் நம்பி பிரபாகரன் ஆயுதங்களைக் கொடுப்பதற்குச் சம்மதித்தார். ஆனால் பின்னர் யார் துரோகம் செய்தது? ராஜீவ்காந்தியா பிரபாகரனா?

ஒருபுறம் பிரபாகரனுக்கு வாக்குறுதிகள்தந்து அவரிடமிருந்த ஆயுதங்களைக்கொடுக்க வைத்த ராஜீவ்காந்தி அதேவேளையில் துரோக இயக்கங்களுக்கு நவீன ஆயுதங்களைக் கொடுத்து பிரபாகரனையும், விடுதலைப்புலிகளையும் ஒழிப்பதற்கு ஏவிவிட்டார். போராளிகள் அனைவரும் ஆயுதங்களைக்கீழே வைத்துவிடவேண்டுமென்று வற்புறுத்துகிற ராஜீவ்காந்தி மற்ற இயக்கங்களைச்சேர்ந்த 300 பேர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து இந்திய ராணுவத் துணையுடன் ஈழநாட்டிற்கு அனுப்பியது ஏன்? விடுதலைப்புலிகளிடம் இடைக்கால அரசை ஒப்படைக்கும் நோக்கம் ராஜீவ்காந்திக்கு இருந்தால் ஏனைய துரோக இயக்கங்களுக்கு ஆயுதம்வழங்கி ஏவிவிட்டது ஏன்? இங்கேயும் ராஜீவ்காந்தி இரட்டைவேடம் பூண்டதை நாம் பார்க்கிறோம். அதேவேளையில் இந்த உண்மைகளை மூடிமறைத்து இந்திய தொலைக்காட்சியிலும், வானொலியிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஜனவரியில் வடமராட்சிபகுதிமீது 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவவீரர்களை ஏவி ஒருமாபெரும் படையெடுப்பை ஜெயவர்த்தனா நடத்தினார். அந்தநேரத்தில் விடுதலைப்புலிகளிடம் ஆயுதங்கள், வெடிமருந்துகள் பற்றாக்குறையாக இருந்தன. மக்களைக் காப்பதற்கு போதுமான ஆயுத உதவிகளை அளியுங்கள் என்று பிரபாகரன் இந்திய அரசிடம் பலமுறை வேண்டினார். ஆனால் அதேவேளையில் விடுதலைப்புலியினரிடம் வெடிமருந்துகள் பற்றாக்குறை இருப்பதுபோன்ற பல இரகசியங்களை இலங்கை அரசாங்கத்திற்கு ''ரா'' அதிகாரியான உன்னிக்கிருஷ்ணன் தெரிவித்தார். இதன்விளைவாக வடமராட்சிப்பகுதியில் விடுதலைப்புலிகள் பெரும் இழப்புக்கு ஆளாகநேர்ந்தது. நெருக்கடியான காலக்கட்டத்தில் விடுதலைப்புலிகளுக்குத் துரோகம் செய்தது ராஜீவ்காந்தியும் அவரது அதிகாரிகளுமேயாவர். பிரபாகரன் ஒருபோதும் இந்தியாவுக்குத் துரோகம் செய்யவில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழீழ மக்கள் அரசியல் அபிலாசைகளைக் கொஞ்சமும் பூர்த்தி செய்யவில்லை என்பதனால் அதை ஏற்க பிரபாகரன் மறுத்தார். இதையொட்டி அவர்மீதும், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதும் எத்தனையோ நிர்ப்பந்தங்கள் ஏவிவிடப்பட்டன. அச்சுறுத்தல்கள் நடைபெற்றன. இறுதியாக விடுதலைப்புலிகள்மீது இந்தியராணுவம் ஏவிவிடப்பட்டிருக்கிறது.

பிரபாகரன் ஒருபோதும் உடன்பாட்டை ஒப்புக்கொள்ளவில்லை. அதில் கையெழுத்திடவும் இல்லை. ஆனால் அதேவேளையில் உடன்பாட்டில் கையெழுத்திட்டிருக்கிற ஜெயவர்த்தனா உடன்பாட்டில் கண்டுள்ள முக்கிய அம்சங்களை அடியோடு மீறி விட்டார். அவர்மீது எந்த நடவடிக்கையையும் ராஜீவ்காந்தி எடுக்கவில்லையே ஏன்?



படிப்பகம்

www.padippakam.com

அமைதிகாக்கும் பணி என்ற போர்வையில் இந்தியராணுவம் மிகப் பெரிய தாக்குதலை தமிழர்கள்மீது தற்போது தொடுத்திருக்கிறது. விடு தலைப்புலிகளுக்கு ஆதரவாக அணிதிரண்டு இருக்கிற தமிழர்களை மிரட்டி இந்தியாவுக்கு அடங்கியவர்களாகச் செய்வதுதான் இந்தப்படையெடுப்பின் நோக்கமாகும். சிங்களராணுவத்தையும் மிஞ்சும்வகையில் இந்தியராணுவ வீரர்கள் வெறியாட்டம் நடத்துகிறார்கள். வீடுகளையும் கடைகளையும் எரித்து நாசப்படுத்துகிறார்கள். மருத்துவமனையில் இருக்கும் நோயாளிகளையும், காயமுற்றவர்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. அகதிகள்முகாம் களிலும், கோவில்களிலும் தஞ்சமடைந்திருப்பவர்கள்மீது குண்டுமழை பொழிகிறார்கள். ஏராளமான தமிழ்ப் பெண்கள் கொடூரமானமுறையில் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகாலமாக சிங்களராணுவத் துடன் ஏற்பட்டபோரில் எவ்வளவு சேதம் ஏற்பட்டதோ அதைவிட பல மடங்கு அதிகமான சேதம் இந்தியராணுவத்தின் இரண்டுமாதத் தாக்கு தலில் ஏற்பட்டிருக்கிறது.

இராணுவ நடவடிக்கைகளோடு நின்றுவிடாது பொருளாதாரத் தடை களும் விதிக்கப்பட்டுள்ளன. மின்சாரத்தடை, தண்ணீர்விநியோகத்தடை, போக்குவரத்துத்தடை, மீன்பிடித்தடை போன்ற பல்வேறு தடைகள் மக் களுக்கு விதிக்கப்பட்டுள்ளன. இதன்விளைவாகத் தமிழர்களின் பொது-சமூகவாழ்க்கை முற்றிலுமாகச் சீர்குலைக்கப்பட்டிருக்கிறது.

எதற்காக இவற்றை இந்தியா செய்கிறது?

1. பொதுமக்களை இராணுவ அட்டூழியங்களுக்குத் தொடர்ந்து இலக்காக்கி மனோரீதியான அச்சத்தையும், விரக்தியையும் ஏற் படுத்துவது. இதன் மூலம் போராட்டத்தின்மீதும், போராளிகளின் மீதும் பொதுமக்களை வெறுப்படையச் செய்வது. இப்படியாகப் பொதுமக்களைப் போராளிகளிடமிருந்து அந்நியப்படுத்துவது, இறுதியில் போராளிகளைக் காட்டிக்கொடுக்க ஊக்கப்படுத்துவது.
2. பொருளாதாரத் தடைக்குத் தொடர்ந்து பொதுமக்களை இலக் காக்கி பொதுமக்களின் துன்பங்களுக்கெல்லாம் போராளிகள் தான் காரணம் என்ற பழியைப்போட்டு, போராளிகள்மீது பொது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவது. பிறகு நிவாரண உதவி களை வழங்கிப் பொதுமக்களை தம்வசப்படுத்துவது.
3. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள்மூலம் போராளி களைப் பற்றி திட்டமிட்டப் பொய்ப்பிரச்சாரம் செய்வது. இந்தப் பொய்ப்பிரச்சாரம்மூலம் மக்களைக்குழப்பி போராளிகளுக்கு எதி ராக அவர்களைச் திருப்புவது.

இவ்வாறு ஆழமான உள்நோக்கத்துடன் இந்தியஅரசு செயல்படுகிறது.

பிரதமர் ராஜீவ் அளித்த உறுதிமொழிகளை நம்பிக் கணிசமான ஆயுதங் களை பிரபாகரன் ஒப்படைத்தார். ஆயுதங்களை ஒப்படைத்ததின்மூலம் தங் களின், தங்கள் மக்களின் பாதுகாப்பினை இந்தியராணுவம் மேற்கொள் ளும் என்று அவர் நம்பினார். ஆனால் நடந்தது என்ன? பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டபிறகு இருமுக்கிய தளபதிகள் உட்பட 17 பேரை சிங்கள ராணுவம் கைதுசெய்தபோது இந்தியராணுவம் வேடிக்கை பார்த்தது. கடந்த 4 ஆண்டுகாலத்தில் தளபதிகள் புலேந்திரன், குமரப்பா ஆகியோர் அருகே வரக்கூட அஞ்சிய சிங்களராணுவம் அவர்களைக் கைதுசெய்யும் நிலை யாரால் ஏற்பட்டது? ராஜீவின் பேச்சை நம்பி ஆயுதங்களைக் கொடுத்ததனால் ஏற்பட்டது. அவர்கள் சாவுக்கு ராஜீவ்காந்தியே பொறுப்பு.



படிப்பகம்

www.padippakam.com

கொடுத்த வாக்குறுதியை மீறியவர் ராஜீவ்காந்தியேதவிர பிரபாகரன் அல்ல. எந்தக்கட்டத்திலும் தான் கொடுத்த வாக்குறுதிகளிலிருந்து பிரபாகரன் விலகிச் சென்றதே இல்லை.

இடைக்கால அரசு அமைந்து விடுதலைப்புலிகள் தங்கள்நிலைகளை ஸ்திரப்படுத்திக்கொள்வதை ஜெயவர்த்தனா கும்பல் விரும்பவில்லை.

17 விடுதலைப்புலிகளைக் கைது செய்து அவர்களைக் கொழும்பு கொண்டுசென்று சித்திரவதை செய்ய ஜெயவர்த்தனா கும்பல் முயன்றபோது அதைத்தடுக்கவேண்டிய இந்திய அமைதிப்படை தனது கடமையிலிருந்து முற்றிலுமாகத் தவறியது. டில்லி ஆலோசனையின்பேரில்தான் இவ்வாறு நடந்துகொண்டது எனக் கூறப்படுகிறது.

இதையொட்டி கிழக்குமாநிலத்தில் பெரும்கலவரம் மூண்டது. திருகோணமலைத் தளபதியான புலேந்திரனும், மட்டக்களப்புத் தளபதியான குமரப்பாவும் மாண்டசெய்தி அம்மக்களைக் கொதித்தெழவைத்தது இயற்கையேயாகும்.

புலேந்திரன், குமரப்பா மற்றும் 12 விடுதலைப்புலிகளின் உடல்களுக்கு இறுதிக்கிரியைகள் யாழ்பகுதியில் நடைபெற்றன. 3 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கண்ணீரும் கம்பலையுமாகக்கூடி அஞ்சலி செலுத்தினார்கள். அவர்கள் கொதித்தெழாமல் பிரபாகரன் கட்டுப்படுத்திவைத்தார். ஆனால் தொலைவில் உள்ள கிழக்கு மாநிலத்தில் கலவரம்மூண்டபோது பிரபாகரனின் உதவியோடு அதைக் கட்டுப்படுத்தியிருந்திருக்கமுடியும்.

ஆனால் ஜெயவர்த்தனாகும்பல் அமைதியை விரும்பவில்லை. இதைச் சாக்கிட்டு விடுதலைப்புலிகளை ஒழிக்கவே விரும்பியது. எனவே உடன்பாட்டை ரத்துசெய்யப்போவதாக ஜெயவர்த்தனா டில்லியை மிரட்டினார்.

உடன்பாடு ரத்தானால் இந்தியாவில் தனது அரசியல் மரியாதை காற்றில் பறக்கும் என அஞ்சிய ராஜீவ்காந்தி உடனடியாக இந்தியத் தலைமைத் தளபதி சுந்தர்ஜி, பாதுகாப்பு அமைச்சர் பந்த் ஆகியோரை கொழும்பு அனுப்பிவைத்தார். அவர்களும் சென்று ஜெயவர்த்தனாவிடம் மன்றாடினார்கள். இந்தியாவின் இக்கட்டான நிலையைப்புரிந்துகொண்ட ஜெயவர்த்தனா அவர்களின் முன்னிலையிலேயே கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

1. விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குத் தடை
2. பிரபாகரன் தலைக்கு ரூ.10 லட்சம் வரை
3. பொதுமன்னிப்பு அடியோடு ரத்து
4. இடைக்காலஅரசு இனி இல்லை

இவ்வாறு அவர் அறிவிப்பது உடன்பாட்டுக்கு விரோதமானது எனக்கூற இந்திய அரசு முன்வரவில்லை என்பதோடு விடுதலைப்புலிகளை அடியோடு ஒழிக்க தனது இராணுவத்தையும் ஏவிவிட்டது.

ஜெயவர்த்தனாவை திருப்திப்படுத்த தமிழர்களைப் பலிகொடுத்தார் ராஜீவ்.

நம்பிய தமிழர்களுக்குத் துரோகம் செய்தவர் ராஜீவ்தான்.

பிரபாகரன் எந்தக்கட்டத்திலும் இந்தியாவுக்குத் துரோகம் செய்யவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக அரசியலும் - பிரபாகரனும்.

தமிழீழ மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் 'தம்பி' பிரபாகரன் குறித்து பொய்யான அவதூறான செய்திகள் அவ்வப்போது வேண்டு மென்றே வெளியிடப்படுகின்றன.

சிங்களரிடம் கைக்கூலிபெறுகிறவர்களும் இந்திய அரசின் கையாட் களும்தான் இத்தகைய அவதூறுகளைத் திட்டமிட்டு பரப்புகிறார்கள். இத் தகைய அவதூறுகளை பரப்புபவர்கள் பிரபாகரனைபற்றி எதுவும் அறியாத வர்கள் என்பதுமட்டுமல்ல. விடுதலைப்புலிகளின் இயக்கத்தைப்பற்றியும் எதுவும் தெரிந்துகொள்ளாதவர்கள். அல்லது தெரிந்துகொள்ளவிரும்பாத வர்கள். யாருக்காகவோ? எதற்காகவோ? இத்தகைய பொய்களை அச் சடித்து விற்பவர்கள், மனசாட்சியைக்கொன்ற மனிதர்களாவர்.

தம்பி பிரபாகரனுக்கு இப்போது 33 வயதாயிற்று. தன்னுடைய 17வது வயதில் குடும்பத்தைவிட்டு, வீட்டைவிட்டு வெளியேறினார். 16 ஆண்டு களாகியும் இன்னமும் அவர் வீடு திரும்பவில்லை. குடும்பத்தினரைச் சந் திக்கவில்லை. வீடும் எரிந்து சாம்பலாகிவிட்டது. குடும்பமும் சிதறிவிட் டது. விடுதலைப்புலிகள் இயக்கத்திலுள்ள அவரது தோழர்கள் பலரின் கதி யும் அப்படியே.

சின்னஞ்சிறிய பருவத்தில் இவர்கள் உள்ளத்தில் விடுதலைத் தீ பற்றி யெரிந்தது. இனிமைநிறைந்த இளம்பருவத்து இளைஞர்களுக்கு ஏற்படும் ஆசைக்கனவுகளுக்கு இவர்களின் நெஞ்சத்தில் இடமில்லை. தங்கள் வாழ் வில் வசந்தகாலங்களை இவர்கள் காடுகளிலும், களங்களிலும் கழித்துவரு கின்றார்கள்.

பிரபாகரன் தமிழ்நாட்டிலிருந்த காலங்களில்கூட அடர்ந்தகாடுகளுக்கு நடுவே அமைக்கப்பட்ட பயிற்சிமுகாம்களில்தான் தனது பெரும்பொழுதைக் கழித்தார். ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து அவர் களை வீரவேங்கைகளாக உருவாக்கும் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட் டிருந்தார். கடந்த 3 ஆண்டுகாலத்தில் அவரும் அவரது முக்கிய தளபதி களும் சலியாமல் பணியாற்றி வீரஞ்செறிந்த விடுதலை இராணுவத்தை உருவாக்கினார்கள். இஸ்ரேல், பாகிஸ்தான், பிரிட்டன் போன்ற நாடு களின் நவீன இராணுவத்தளபதிகளினால் விசேஷ பயிற்சியளிக்கப்பட்டு மிக நவீன ஆயுதங்களை ஏந்திப்போராடும் சிங்களராணுவத்தை, விடு தலைப்புலிகள் ஓட ஓட விரட்டியடிக்கிறார்கள் என்றால் கடந்த 3 ஆண்டு களில் எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையே அவர்களைப் பிரபாகரன் உரு வாக்கியவிதம்தான் இன்றைக்குத் தமிழீழமக்களை அழிவிலிருந்து காப் பாற்றிவருகிறது.

தமிழ்நாட்டிலிருந்த காலக்கட்டத்தில் அவர் எங்கும் பகிரங்கமாகத் தோன்றி ஆரவார அரசியல் நடத்தியதில்லை.

பல ஆண்டுகாலமாகத் தமிழ்நாட்டில் இருக்கவேண்டி நேர்ந்ததால் அவ ருக்குத் தமிழக அரசியலைக் கூர்ந்துக்கவனிக்கும் வாய்ப்பிருந்தது. தமிழ் நாட்டு அரசியலைத் தெரிந்துகொள்ள ஆர்வம்காட்டினாரேதவிர அதில் தலையிட ஒருபோதும் அவர் விரும்பியதில்லை. எந்தக்கட்டத்திலும் தமிழ் நாட்டு அரசியலில் தலையிடக்கூடாது என்று தன்னுடைய இயக்கத்தவர் களுக்கு கண்டிப்பான கட்டளையைப் பிரபாகரன் பிறப்பித்திருந்தார். தமிழ்நாட்டில் பொதுமேடைகளிலோ, கட்சி மேடைகளிலோ பிரபா கரனோ, விடுதலைப்புலிகளின் இயக்கத்தின் முக்கியத் தலைவர்களோ ஒரு போதும் பேசியது இல்லை. ஆனால் மற்ற இயக்கங்களைச் சேர்ந்த தலை



படிப்பகம்

www.padippakam.com

வர்கள் பொதுமேடைகளிலும், கட்சி மேடைகளிலும் தாராளமாகத் தோன்றினார்கள். பேசினார்கள். ஆயுதம் தாங்கிய போராளிகள் புடைசூழ தடபுடலாக பொதுமேடைகளில் காட்சி தந்தார்கள். இத்தகைய ஆரவார அரசியலை பிரபாகரன் அறவே வெறுத்தார். தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்குத் தமிழ்நாட்டிலுள்ள சகலத்தரப்பு மக்களின் ஆதரவும் இன்றியமையாதது என்பதை அவர் உணர்ந்திருந்த காரத்தினால் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தார். ஆனாலும் அவரை ஒரு சர்ச்சைக்குரிய மனிதராக்க தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் சிலரும், சில பத்திரிகைகளும் இடைவிடாது முயற்சி செய்தன. பொய்யான குற்றச்சாட்டுகளையும், அவதூறுகளையும் அவர்மீது அள்ளிஅள்ளிப் பொழிந்தார்கள். ஆனாலும் பிரபாகரன் பொறுமையைக் கடைப்பிடித்தார். யாருக்கும் எந்தவிதமான பதிலையும் அவர் சொல்லவில்லை.

இந்தியப் பிரதமராக இந்திராகாந்தி இருந்தபோதும், அதற்குப்பிறகு ராஜீவ் வந்தபோதும் அவர்களுடன் அவர்கொண்டிருந்த உறவு என்பது வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. தமிழ்நாட்டு முதலமைச்சர் எம்.ஜி. ஆர். அவர்களுடனும் அத்தகைய எல்லைக்குட்பட்ட உறவே இருந்தது. இந்தியாவைப் புகலிடமாகக்கொண்டு தானும் தனது இயக்கத்தவர்களும் தங்கியிருக்கும்போது இங்குள்ள அரசுகளுக்குத் தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதில் பிரபாகரன் மிகக் கவனமாக இருந்தார். தங்களுடைய விடுதலைப்போராட்டத்திற்கு இந்திய-தமிழக அரசுகளின் ஆதரவு இன்றியமையாதது என்ற காரணத்தினால் அவைகளிடம் ஆதரவு கோரினார்.

இந்தியாவின் பிரதமர் பொறுப்பிலும், தமிழகத்தில் முதல்வர் பொறுப்பிலும் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அணுகி பிரபாகரன் ஆதரவுகேட்பது தவிர்க்கமுடியாததே. அவர்நிலையில் அதுதான் சரியானது. ஆனால் தமிழ்நாட்டு அரசியல் சூழ்நிலையில் இதைத் தவறாகப் புரிந்துகொண்டவர்கள் பிரபாகரனைக் குற்றம் சாட்டினார்கள். ஆனால் அப்போதும் அவர் அதற்கு எவ்விதப் பதிலையும் கூறவில்லை. இதுகுறித்து அவரும் நானும் எவ்வளவோமுறையில் மனம்விட்டுப் பேசியிருக்கிறோம். ''தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தங்களுக்குள் இருக்கும் சண்டையில் எங்களை ஏன் இழுக்கப்பார்க்கிறார்கள்'' என்று அவர் வேதனையுடன் கேட்டதுண்டு.

தமிழ்நாட்டிலிருந்த காலத்தில் அவருடைய வாழ்க்கை எத்தகைய எளிமையானது. எவ்வளவு கடுமையானது. எத்தகைய கட்டுப்பாடு நிறைந்தது என்பதை நான் நன்கு அறிவேன். விடுதலைப்புலிகளின் இயக்கத்திலுள்ள சகத் தோழர்களுக்கு என்னவசதிகள் அளிக்கப்படுகிறதோ. எத்தகைய உணவு தரப்படுகிறதோ. அதுதான் அவருக்கும் அளிக்கப்பட்டது. அவரோ மற்ற தளபதிகளோ மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவசதியான வாழ்வை நடத்தியவர்கள் அல்லர்.

வாழ்ந்தால் தனது நாட்டு மக்களோடு வாழ்வது. வீழ்தாலும் அவர்களோடு வீழ்வது என்ற மாறாத மனஉறுதியோடு விளங்கும் அவரைப் பழிப்பது தமிழர் பண்பாட்டையே பழிப்பதாகும்.

வெற்றுக்கோஷங்களிலும், போலித்தனமான போராட்டங்களிலும் மயங்கி இவையே நமது விடிவுக்கான இயக்கங்கள் என ஏமாந்து திசைதடுமாறி மயங்கிநின்ற தமிழர்களுக்கு நடுவில் உண்மையான போராட்டம் என்றால் என்ன? உண்மையான தியாகம் என்றால் என்ன? உண்மையான வீரம் என்றால் என்ன? என்பதை நிலைநாட்டிய பெருமை பிரபாகரனுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் உண்டு. தமிழீழ இளைஞர்களுக்கு அவர் ஊட்டிய வீர உணர்வும். தியாக உணர்வும் தமிழ்நாட்டு இளைஞர்கள் நடுவிலும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டுவிடக்கூடாதே என நினைத்துப் பதைப்பவர்கள்தான் பிரபாகரனைப் பழிக்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

பிரபாகரனைப் பழிப்பதன்மூலம் சிங்கள ஆதிபத்தியத்திற்கு இவர்கள் துணைபோகிறார்கள். போராடும் தமிழர்களுக்குத் துரோகம் புரிகிறார்கள். இத்தகையவர்கள் குறித்தும், அவர்களின் குற்றச்சாட்டுகளுக்கும் பிரபாகரனே பதில் கூறியுள்ளார்.

1986ஆம் ஆண்டு செப்படம்பர் 4,5 தேதிகளில் வெளியான ''இந்து'' நாளிதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் பின்வருமாறு கூறினார்.

கே :- ஒளிவு மறைவில்லாமல் ஒரு கேள்வி கேட்கிறேன். உங்களைப் பற்றி வெளியே பல கருத்துக்கள் உலாவுகின்றன. விடுதலை வீரர்களுக்கு மகத்தான தியாக உணர்வைத் தட்டி எழுப்பவல்ல கட்டுப்பாடும் ஆற்றலும் மிக்க ஒரு தலைவராய் உங்களைப்பலர் காண்கிறார்கள். இன்னொருபுறம் சிலர் உங்களுடைய 'தயவு தாட்சண்யமற்ற தன்மையைச் சுட்டிக்காட்டு கிறார்கள், உண்மையில் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டு, '' நியூயார்க் டைம்ஸ்'' பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையை எடுத்துக்காட்டாகக் கூறலாம். அந்தக் கட்டுரையில், ''போருபாயத்தில் மதிநுட்பமும் அதே வேளை, தயவுதாட்சண்யமற்ற தன்மையும் கொண்ட உலக கொரில்லாத் தலைவர்களது பட்டியலில் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற பெயரையும் சேர்த்துக்கொள்ளலாம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த மதிப்பீடுகளிலிருந்து உங்களது நடவடிக்கைகள் மனிதநேயமும் சனநாயகப் பண்புகளும் குன்றியவை என்பதுதான் அர்த்தமாகிறது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

ப :- 'கண்டிப்பான தன்மை என்பது இராணுவக்கட்டுப்பாட்டின் ஓர் இயல்புத்தன்மையே' எந்த நாட்டிலானாலும் சரி இராணுவக் கட்டுப்பாட்டுக்கென்று சில தனித்தன்மைகள் உண்டு. 'கம்யூனிச' நாடாகட்டும் சனநாயக நாடாகட்டும் இராணுவக்கட்டுப்பாடு எந்த இடத்திலும் தனி இயல்பு கொண்டதாகவே இருக்கும். எந்த இராணுவத்தின் நடவடிக்கையையும் கவனியுங்கள். விளைவுகளைப்பற்றிக் கவலைப்படுவதில் அல்ல. வெற்றியை அடைவதிலேயே. அது கண்ணும்கருத்துமாய் இருக்கும். இராணுவ நடவடிக்கைகளில் 'வெற்றியே' எல்லாவற்றையும்விட முக்கியமானது. இன்னொன்று நாங்கள் மக்களுக்காகப் போராடும் மக்களின் நம்பிக்கைக்குரிய போராளிகள். எம்மை மதிப்பாய்வு செய்கிறவர்கள் எதிரிகளோடு மோதும் எங்கள் இரக்கமற்ற தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார்கள். ''இரக்கமற்ற தன்மையையே'' வடிவமாகக்கொண்ட எதிரிகளோடுதான் நாங்கள் மோதுகிறோம் என்பதை மறந்துவிடுகிறார்கள். நாங்கள் அவர்களை அன்போடு அணுகமுடியும் என்று நினைக்கிறீர்களா? முடியாது. இதுதான் உண்மை. ஆனால் உண்மையில் நடைமுறையில் நாங்கள் அறப்பண்பும் ஒழுங்குணர்வும் அமைந்தவர்களாகவே இருக்கிறோம்.

நல்ல கட்டுப்பாட்டில் நம்பிக்கையுள்ள ஓர் தலைமை ஆசிரியரின்கீழ் கட்டுப்பாடுகள்மிக்க ஒரு பள்ளிக்கூடம் இருக்குமானால் அங்கே பயிலும் மாணவர்கள் நல்ல கல்விபெற்று வாழ்வில் உயர்நிலை அடைவார்கள். ஆசிரியர்களும், குறிப்பாக தலைமையாசிரியரும் கட்டுப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சில பள்ளிக்கூடங்கள் முதல்தரப் பள்ளிக்கூடங்களாய் மக்களால் கணிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள். அப்படிப்பட்ட தலைமை ஆசிரியருக்குக் கீழே பயின்று ஒவ்வொரு ஆண்டும் வரிசை வரிசையாக வெளியேறும் மாணவர்கள் பிற்காலத்தில் சிறப்புடன் வாழ்க்கை நடத்துவதையும் கண்டிருப்பீர்கள். எங்கள் நிலையிலும் இந்த உவமை பொருந்தும். இதனால்தான் நாங்கள், கட்டுப்பாட்டுக்கு முதலிடம் தருகிறோம்.

கே :- இந்தக்கட்டுப்பாடு பற்றி இன்னும் விளக்கமாகச் சொல்லுங்கள் பார்க்கலாம்.


படிப்பகம்

www.padippakam.com

ப :- கட்டுப்பாடு என்பது என்ன? மக்களுக்கு எதிரானவர்களையும், மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் மனதில் வைத்து எண்ணிப் பாருங்கள். எமது இயக்கத்தில் போராளி ஒருவன் சேர்ந்தால் மக்களுக்காகப் போராடும் ஒரு வீரன் என்றுதான் பொருள். அவன் மக்களின் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினால் அவனை நாங்கள் ஆதரித்தால் அடிப்படை இலட்சியத்தில் இருந்து எமதுபோர் திசைதிரும்பிவிடும். இன்னொன்றையும் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆயுதம் கொண்டவர்களிடமே அதிகாரம் போய்ச் சேருகிறது. அந்த அதிகாரங்கள் பிழையான வழியில் பயன்படுத்தப்பட்டால் சர்வாதிகாரம் உருவாவதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும். இதனால்தான் நாங்கள் எமது இராணுவ அமைப்பை பலத்த கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறோமே தவிர நாங்கள் இரக்க மற்றவர்கள் என்பதல்ல. இரக்கமற்ற தன்மையை இரக்கமில்லாதவர்களிடமே காட்டுகிறோம். எமது வெற்றிக்கு இது தேவை என்பதால்''

மேற்கண்ட பதிலிலிருந்து ஒரு உண்மைத் தெளிவாகத் தெரிகிறது. பிரபாகரனின் இயக்கம் கட்டுப்பாடு மிகுந்த இயக்கம் என்பதால்தான் அவர்களால் மகத்தான சாதனைகளைச் செய்யமுடிந்திருக்கிறது. அவர்கள் தங்களது இரக்கமற்றதன்மையை எதிரிகளிடம். அதுவும் இரக்கமற்றத்தன்மைக் கொண்ட எதிரிகளிடம் மட்டுமே காட்டுகிறார்கள். சில நேரங்களில் அந்த எதிரிகளிடமும் அவர்கள் மனிதநேயத்துடன் நடந்துகொண்டிருக்கிறார்கள். தங்களால் கைது செய்யப்பட்ட சிங்களச்சிப்பாய்களையும், இந்திய இராணுவ வீரர்களையும் மனிதநேயத்துடன் நடத்தி அதற்குப்பின்னர் அவர்களை விடுவித்தது ஒரு சரியான உதாரணமாகும். அவர்கள் இரக்கமற்றவர்களாக இருந்திருப்பார்களேயானால் இந்தக் கைதிகளைச் சுட்டுக்கொன்றிருக்கமுடியும். தமிழீழ மக்களை ஈவு இரக்கமின்றி கொன்றுகுவித்த இந்தக் கைதிகளிடம் இரக்கம் காட்டவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. ஆனாலும்கூட போர்க்கைதிகளிடம் அவர்கள் காட்டிய கருணையும், அவர்களை விடுவித்ததும் உலகநாடுகளின் பாராட்டுதலைப் பெற்றுள்ளன.

ஆனால் அதேவேளையில் பிரபாகரன்மீது குற்றம்சாட்டும் பிற போராளிகளின் இயக்கங்கள் என்ன செய்கின்றன? தமது இயக்கங்களுக்குள்ளேயே கருத்து மாறுபாடு கொள்வோரைக் கொலைசெய்து குவிப்போர்தான் பிரபாகரன்மீது பழிசுமத்துகிறார்கள். இயக்கத்துக்குள்ளேயே சித்திரவதைக் கூடங்களை அமைத்து இயக்கத்தோழர்களையே வதைப்பவர்கள்தான், இவ்வாறு குற்றம்சாட்டுகிறார்கள்.

தமிழர்கள் தமக்கென்று தனிநாடு அமைத்துவிடக்கூடாது என நினைப்பவர்களும், சிங்கள ஏகாதிபத்தியதாசர்களும் பிரபாகரனை பழிசாற்றுவதில் ஒன்று சேர்ந்துகொள்கிறார்கள். பிரபாகரனை இவர்கள் குறிவைக்கவில்லை. மாறாக வளர்ந்துவரும் தமிழர் தேசிய உணர்வை அழிக்கவே திட்டமிடுகிறார்கள். தமிழர் தேசிய எழுச்சியின் வடிவமாக பிரபாகரன் திகழ்வதால் அவரைக் குறிவைக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் எழுச்சியின் வடிவம்

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில், வாளோடு முன்தோன்றி மூத்தக்குடி'' என புகழ்பெற்ற வீரக்குடியினராகத் தமிழர்கள் சிறந்திருந்தார்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன்செங்குட்டுவன், ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன், கரிகால்பெருவளத்தான், இராஜராஜசோழன், இராஜேந்திரசோழன் என மன்னாதி மன்னர்கள் பலர் தங்கள் வீரத்தால் தமிழனின் பெருமையை இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும், அதற்கப்பால் மேற்கே ரோமாபுரியிலிருந்து கிழக்கே சீனம் வரையிலும் பரப்பியிருக்கிறார்கள்.

பொற்கோட்டு இமயத்தில் விற்கொடியைப்பொறித்து தமிழனின் வீரத்தை உலகறிய செய்த சேரன்செங்குட்டுவனின் படைத்தளபதியாக விளங்கியவன் வில்லவன்கோதை.

உத்தரபாரதத்தின் ஏக சக்ரவர்த்தியாக விளங்கிய ஹர்ஷவர்த்தனன் தென்னகம்நோக்கிப் படையெடுத்தபோது அவனைத் தோற்கடித்த பெருமைக்குரியவன் சளுக்கியமாமன்னன் புலிகேசி. அத்தகைய பேராற்றல் படைத்த பெருவீரனான புலிகேசியை முறியடித்து அவனின் தலைநகரமான வாதாபியை அழித்த மாமல்லச் சக்ரவர்த்தியின் படைக்குத் தளபதியாக விளங்கியவன் பரஞ்சோதி.

அசோக சக்ரவர்த்தியினாலேயே வெல்லமுடியாத கலிங்கத்தை வென்றான் குலோத்துங்கச்சோழனின் படைத்தளபதியாக விளங்கிய கருணாகரத் தொண்டமான். தமிழர்களின் வீரவரலாறு விவரிக்கும் அழிக்கமுடியாத உண்மைகள் இவை.

பழமையும், பெருமையும்மிக்க தமிழர் வரலாற்றுக்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டுக்காலமாக எத்தனையோபேர் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

ஆனால் இது எல்லாம் பண்டையப்பெருமையாய், பகற்கனவாய் மறைந்து விட்டன. எந்தெந்த நாடுகளில் தமிழன் வெற்றிக்கொடி நாட்டினானோ அந்தந்த நாடுகளிலேயே தமிழன் கொத்தடிமையாகச் சென்று வாழத் தொடங்கினான். தமிழர்கள் என்றாலே நல்ல கொத்தடிமைகள் என்று உலகம் கருதியது. அடிமைச்சேற்றில் நெளியும் புழுக்களாக புறநானூற்றுத் தமிழர்கள் ஆன இழிநிலை வந்தது. அடிமை வாழ்வினைத் தமிழன் விதியென நினைத்து ஏற்றுக்கொண்டான்.

''விதியே விதியே தமிழச்சாதியே என்செய நினைத்தாய்'' என மகாகவி பாரதி மனம்நொந்து பாடும் அளவுக்கு தமிழனின் நிலை தாழ்ந்தது.

வெள்ளையனை எதிர்த்து வீரபாண்டியகட்டபொம்மனும், ஊமைத்துரையும், வீரமருதுசகோதரர்களும் போராடியபோது தமிழர்கள் உறங்கிக்கிடந்தார்கள். அந்த மானறவர்களின் வீரப்போராட்டத்திற்குப் போதுமான ஆதரவளிக்கவில்லை. கோழைகளாகிவிட்ட தமிழர்களுக்கு நடுவே வாழ்வதை விடத் தூக்கிலே தொங்கி மடிவதேமேல் என அம்மாவீரர்கள் மாண்டு போனார்கள். அதற்குப் பிறகு தமிழர்கள் எவரேனும் ஆயுதம் தூக்கிப் போராடத் துணியவில்லை. இந்தியாவின் சுதந்திரப்போராட்டம் நடைபெற்றவேளையில்கூட தமிழகத்தில் ஆயுதப்புரட்சி உருவாகவில்லை.

வ.உ.சி.யும். பாரதியும் ஊட்டிய தேச பக்திக்கனல் ஒரே ஒரு வீரவாஞ்சிநாதனை தோற்றுவித்தது. ஆனால் அப்போதும் தமிழகம் கிளர்ந்தெழவில்லை.

7



படிப்பகம்

www.padippakam.com

அச்சமும் பேடிமையும் அடிமை சிறுமதியும்
உச்சத்திற் கொண்டா ரடி! - கிளியே!
ஊமைச் சனங்க ளடி!

என பாரதி சித்தம் நொந்தான்.

பகற்கனவாகப் போய்விட்ட இந்தப் பழம்பெருமைகளுக்கு மீண்டும் உயிர் கொடுத்து, முதன்முதலாகத் தமிழர்களே நடத்தும் ஆயுதப்புரட்சிக்கு வித்திட்டு அதற்குத் தலைமைதாங்கியிருப்பவர் 'தம்பி' பிரபாகரன் ஆவார். இதன்மூலம் தமிழ்க்குலம் வீரத்தளபதி எவரையும் தோற்றுவிக்கவில்லையே என்ற குறையை பல நூற்றாண்டுகளுக்குப்பிறகு பிரபாகரன் போக்கி இருக்கிறார்.

உலகில் தமிழனுக்கென்று ஒரு தனிநாட்டினை அமைக்கும் திருப்பணிக்காகத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக்கொண்டுள்ள தியாகப்படை ஒன்றை அமைத்து அதனை வழிநடத்திச் செல்கிற பிரபாகரன் தமிழர் வரலாற்றில் இதுவரை யாரும் கண்டும் கேட்டறியாத அற்புத சாதனையைப் புரிந்திருக்கிறார்.

விடுதலைக்காகப் போராடிய பல்வேறு நாடுகளில் பல தலைவர்கள் இத்தகைய விடுதலைப்படைகளை அமைத்தது உண்டு. ஆனால் அவர்களுக்கெல்லாம் ஏதேனும் ஒரு நாடோ, அல்லது பல நாடுகளோ உதவி புரிந்தன. இந்தியாவின் மாபெரும் தலைவரான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தில் இந்தியாவைவிட்டு வெளியேறினார். அந்த நிலையிலேயே அவர் உலகமறிந்த தலைவர். ஜெர்மனியும், ஜப்பானும் அவருக்கு உதவிசெய்ய போட்டிபோட்டுக்கொண்டு முன்வந்தன. இந்திய மக்களின் மாபெரும் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட அவருக்கு உலகத்தில் இரண்டு பெரிய வல்லரசுகள் என்னென்ன உதவிகள் தேவையோ அந்த உதவிகளைச் செய்துகொடுத்தன. பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தில் பணியாற்றி ஜப்பானியர்களால் சிறைக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த இந்திய போர்வீரர்களை மீட்டு அவர்களைக்கொண்டு இந்தியத் தேசிய இராணுவத்தினை நேதாஜி சிங்கப்பூரில் உருவாக்கினார். இந்த இராணுவத்திற்குத் தேவையான ஆயுதங்கள். மற்ற உதவிகள் ஆகியவற்றை ஜப்பான் கொடுத்தது. நேதாஜியின் சுதந்திர அரசை ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி மற்றும் நட்பு நாடுகள் அங்கீகரித்தன.

நேதாஜியை தனது வழிகாட்டியாகக் கொண்டிருக்கிற அருமைத்தம்பி பிரபாகரனை நேதாஜியுடன் ஒப்பிடமுடியாது. வயதிலும் சிறியவர். அனுபவத்திலும் சிறியவர். நேதாஜியைப் போன்ற பெரிய தலைவராக உருவாகி அதற்குப் பின்னர் அவர் இந்தப் போராட்டத்தைத் தொடங்கவில்லை. இளைஞராகயிருந்தபோது தன்னுடைய பதினாறாவது வயதில் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கினார்.

நேதாஜிக்கு உலக வல்லரசுகள் துணைபுரிந்தன. அருமைத்தம்பி பிரபாகரனுக்கு திக்கற்ற தமிழ் இளைஞர்கள் மட்டுமே துணைநின்றனர். வேறு எந்த நாடும், எந்த வல்லரசும் அவருக்கு உதவிபுரிய முன்வரவில்லை. ஆனால் அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகள் அள்ளி அள்ளித்தரும் நவீன ஆயுதங்களை வைத்திருக்கக் கூடிய சிங்களராணுவத்தை ஓட ஓட விரட்டியடிக்கிற விடுதலைப்படையை பிரபாகரன் உருவாக்கியவிதம் கற்பனைக்கு எட்டாதது. அதைப் போலவே வலிமைவாய்ந்த இந்தியஇராணுவத்தை எதிர்த்து அவர் நடத்திக்கொண்டிருக்கும் வீரப்போராட்டமும் கனவிலும் எண்ணிப்பார்க்கமுடியாதது. இதை எப்படி அவர் சாதித்தார்? இன்னமும் புரியாத புதிர்தான். தமிழ்



படிப்பகம்

www.padippakam.com

நாட்டிலும், தமிழீழத்திலும் இன்னும் உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் தருகிற சிறுசிறு உதவிகளைப்பெற்று அவற்றைக் கொண்டு ஆயுதங்களை வாங்கி தனது போராட்டத்தை அவர் தொடர்ந்து நடத்துகிறார். இராணுவ பலம்மிக்க ஒரு எதிரியை எதிர்த்து மக்கள் பலத்தைத்தவிர வேறு எந்த பலமுமில்லாமல் போராடிவரும் அவரது துணிவுக்கு ஈடுயிணையே இல்லை.

தமிழீழத்தில் சுற்றுப்பயணங்கள் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து அறிந்ததன்விளைவாக எனக்கு ஒரு உண்மை தெளிவாகப்புரிந்தது. தமிழீழ விடுதலைப் போரின் முன்னணிப் படையாக விடுதலைப் புலிகளின் இயக்கம் திகழ்கிறது. அரசியல் அறியாத சிறுவர்களாக அவர்களைக் கருதுவதும், அவர்களின் முயற்சி வெறும் தற்கொலைக்கு ஒப்பாகும் என்றெல்லாம் சிலர் பேசிவருவது எவ்வளவு பெரிய தவறு என்பதை நான் நேரில்கண்டேன்.

வியட்நாம் விடுதலைப்போராட்டத்தை அந்நாட்டு மக்கள் உறுதியாக நடத்தியதைப்போல தமிழீழ விடுதலைப்போராட்டத்தையும் விடுதலைப் புலிகள் வீறுகொண்டு நடத்துகிறார்கள். இதை ஒரு மக்கள் போராட்டமாக மாற்றி வருகிறார்கள். மக்களின் துணையோடு தங்கள் விடுதலைப் போராட்டத்தை அவர்கள் விரிவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் வீரப் போராட்டத்தின் விளைவாக சிங்கள இனவெறி ஆட்சியின் அத்திவாரம் ஆட்டம் கண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் முன்னின்று நடத்தும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மூலம்தான் தமிழினம் தன்னை முழுமையாக உணரத்தொடங்கியுள்ளது. ஜாதி, மதம், கட்சி போன்றவற்றால் பிளவுபட்டுக் கிடந்த ஈழத்தமிழ் இனம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினால்தான் ஒன்றுபட முடிந்திருக்கிறது. உலகம் பூராவிலும் உள்ள தமிழர்களுக்கு எழுச்சியையும், உணர்ச்சியையும் ஊட்டுகிற ஒரு போராட்டமாகவும் அவர்களை ஒன்றுபட வைக்கிற ஒரு போராட்டமாகவும் இப்போராட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

எந்தவொரு நாட்டின் விடுதலைப் போராட்டமும் தகுந்த தேசியத் தலைமையின் வழிகாட்டல் இன்றி வெற்றிபெற்றதில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் இது பொருந்தும். இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முற்றிலும் தகுந்த தேசியத் தலைமையை விடுதலைப் புலிகளின் இயக்கம் தம்பி பிரபாகரன் வடிவத்தில் தந்துள்ளது. தமிழீழ மக்களும் இதை மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளனர். நானே நேரில்கண்ட உண்மை இது. 1985ஆம்ஆண்டு அக்டோபர் நவம்பர் மாதங்களிலும், 1987ஆம் ஆண்டு செப்டம்பரிலும் தமிழீழப்பகுதியில் சுற்றுப்பயணம் செய்து பலதரப்பு மக்களையும்கண்டு பேசி அவர்களின் உள்ளத்து உணர்வுகளைப் புரிந்துகொண்டபிறகே இதை எழுதுகிறேன்.

தம்பி பிரபாகரன் அவர்களைத் தமிழீழ மக்கள் தங்களது தவப்புதல்வனாகக் கருதுகிறார்கள். மனமார நேசிக்கிறார்கள். சிங்கள அரக்கர்கள் கொடுமைகளில் சிக்கித்தவித்து அடிமை இருளில் தடுமாறிக்கொண்டிருந்த தங்களின் வாழ்வில் தோன்றிய நம்பிக்கை நட்சத்திரமாக அவரைக் கருதுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

**தமிழீழமக்கள் தங்கள்** நாடு முழுமையாக விடுதலை பெற்றால் ஒழிய தங்களுக்கு வாழ்வில்லை என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அறவழியில் அதை அடைய முடியாது என்பதைக் கடந்த 30 ஆண்டுகால அனுபவம் அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறது. சமரசப்பேச்சுக்கள் அவர்களைச் சுதந்திர மனிதர்களாக்காது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு இழப்பு, இவ்வளவு அழிவு, இவ்வளவு தியாகத்திற்குப்பின் இனி ஒருபோதும் பின்வாங்கமுடியாது. விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வத்தைத்தவிர வேறுவழியில்லை என்பதை ஜயந்திரிபர உணர்ந்திருப்பதோடு அவ்வாறு செய்வதற்குத் தகுதியானவர் பிரபாகரனே என்பதையும் அறிந்திருக்கிறார்கள்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

என வள்ளுவர் வாக்கின் பொருளை நன்குணர்ந்த ஈழமக்கள் தங்கள் தாயக விடுதலை என்னும் அரிய செயலை முடிக்கத் தக்கவன் பிரபாகரனே என்பதைத் தெளிந்து தேர்ந்து அவர் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

தனது சொந்த உறுப்பினர்களைக்கூட கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியாத இயக்கங்களையும் தலைமைகளையும் கண்டு மனம்வெறுத்துப்போன தமிழீழ மக்கள் அவற்றோடு புலிகள் இயக்கத்தை ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்த்தபிறகே இத்தகைய முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

கட்டுப்பாடு, ஒழுக்கம் இவற்றோடு தியாகமும், வீரமும் நிறைந்தவர்களாகப் புலிகளை மக்களைக் கருதுகிறார்கள்.

மக்களால் வளர்க்கப்படும் மக்கள் இயக்கமாகப் புலிகள் இயக்கம் வளர்ந்திருக்கிறது. மக்களின் ஒத்துழைப்போடு தங்கள் போராட்டத்தை மக்கள் போராட்டமாகப் புலிகள் மாற்றியுள்ளனர்.

அடிமைச்சேற்றில் நெளியும் புழுக்களாகத் தமிழர்களைக் கருதியவர்கள் இன்று அவர்கள் புலிகளாக மாறி உறுமுவதைக்கண்டு கிலிகொண்டு நடுங்குகின்றனர். விடுதலைப்புலிகளின் வீரத்தினாலும், தியாகத்தினாலும் தமிழினமே தலைநிமிர்ந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு வழிவகுத்தவர் பிரபாகரனே.

காலங்காட்டும் இந்த உண்மைகளை உணராது தனது இராணுவபலத்தைக் கொண்டு பிரபாகரனையும் விடுதலைப்புலிகளையும் அழித்துவிட பிரதமர் ராஜீவ் முயலுவது பேதமையாகும். இந்தநோக்கம் ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை.

தாங்கள் சிந்தும் இரத்தத்தினால் ஈழமண் சிவந்துகொண்டேயிருந்தாலும், வங்கக்கடல் செங்கடலானாலும் பிரபாகரனும் அவரது தோழர்களும் தங்களின் இலட்சியக்கனவு நிறைவேறும்வரை போராடுவார்கள். தமிழீழத்தின் சுதந்திரக் கொடியை ஏற்றும்வரைத் தொடர்ந்து போராடியே தீருவார்கள். அவர்களுக்குக் காலம் இட்டிருக்கிற கட்டளை இது. அதை மீற எவராலும் இயலாது.



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# மாதரசி மதிவதனி

மாதரசி மதிவதனியைப்பற்றிக் குறிப்பிடா மல் பிரபாகரனின் வீரவரலாறு முழுமை பெற்றதாகாது. இலட்சிய வெறிகொண்ட வேங்கையாகத் திரிந்த பிரபாகரனின் வாழ்வில் திடீர் திருப்பம் ஒன்று எதிர்பாராமல் நிகழ்ந்தது. 31 ஆம் வயதில் அவரது வனவாசவாழ்வில் வசந்தம் மலர்ந்தது. காதல்தென்றல் தவழ்ந்தது. அது ஒரு சுவையான கதை. அதை அவரே விவரிக்க, கேட்கும்பேறு எனக்குக் கிடைத்தது.

1985 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பிரபாகரன் ஒருநாள் சென்னையிலுள்ள எங்கள் வீட்டிற்குத் திடீரென்று வருகைதந்தார். பல்வேறு விஷயங்களைக் குறித்து நாங்கள் மனம் விட்டுப் பேசினோம். பிறகு ஏதோ சொல்லுவதற்கு அவர் தயங்குவதாக எனக்குத் தோன்றியது.

''என்னிடம் என்ன தயக்கம்? எதுவாகயிருந்தாலும் சொல்லலாமே?'' என நான் அவரிடம் கூறினேன்.

''அண்ணா! எனக்குத் திருமணமாகிவிட்டது'' என்று அவர் வெட்கம் கலந்த குரலில் சொன்னபோது நான் ஒருகணம் திகைத்துப் போனேன். எமது திகைப்பைக் கண்டு அவர் புன்னகையுடன் ''அண்ணா! உங்களுக்குக் கூட சொல்லாமல் திருமணம் செய்து கொள்ள நேர்ந்துவிட்டது. நீங்கள் மதுரையில் தேர்தல் களத்தில் மும்முரமாக இருந்தீர்கள் அந்தநேரத்தில் உங்களுக்கு இதைத் தெரிவிக்க முடியவில்லை'' என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

வீரத்திருமகனான அவரின் உள்ளத்தைக் கவர்ந்த மாதரசி யாராக இருக்க முடியும் என்று நான் யோசித்தேன். எனக்கு எதுவும் புலப்படவில்லை. எனது குழப்பத்தை அவரே தீர்த்துவைத்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு உண்ணாவிரதப்போராட்டத்தை முன்னின்று நடத்திய **மதிவதனி** என்ற பெண்ணைத்தான் பிரபாகரன் இரகசிய திருமணம் செய்துகொண்டிருந்தார்.

சாகும்வரை உண்ணாவிரதமிருந்த மதிவதனியையும் மற்றுமுள்ள மாணவர்களையும் சிங்களராணுவம் கைது செய்யவிருந்தது. ஆனால் அதற்கு முன்னதாகவே அவர்களை விடுதலைப்புலிகள் பத்திரமாக இந்தியாவுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். அந்த மாணவர்கள் மதுரைக்கு வந்து என்னைச் சந்தித்தது என் நினைவுக்கு வந்தது.

''நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் கூட இப்படித்தான் இரகசிய திருமணம் செய்துகொண்டார். அவரைப்போலவே நீங்களும் இரகசிய திருமணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று நான் கூறினேன். உடனே என்னுடைய துணைவியை அழைத்து அந்த நல்ல செய்தியை சொன்னபோது அவள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தாள். பின்னர் அந்தத் திருமணத்தைக் கொண்டாட அவசரஅவசரமாக அறுசுவை விருந்து ஒன்றினைத் தயாரித்தளித்தாள்.

அதற்கு அடுத்த நாளே பிரபாகரன் வீட்டிற்கு நாங்கள் இருவரும் சென்று புதுமணத் தம்பதியினருக்கு வாழ்த்துக்கூறினோம்.

பிரபாகரனுக்குத் திருமணம் நடந்த செய்தி அவருடைய பெற்றோருக்குக் கூடத் தெரிவிக்கப்படவில்லை. அப்போது அவர்கள் திருச்சியில்தான் இருந்தார்கள். காதல்திருமணமான இத்திருமணத்தை அவர்கள் இரகசியமாகச் செய்து கொண்டார்கள். பெற்றோரிடம் தெரிவித்து அவர்களின் சம்மதத்தைப் பெற நினைக்காத பிரபாகரன் தன்னுடைய தோழர்களுக்கு மட்டும் தெரிவித்து அவர்களின் சம்மதத்தைப்பெற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

தன்னுடைய நெருங்கிய தோழர்களிடம் இதுகுறித்து அவர் மனம்விட்டுப் பேசி அவர்களின் கருத்தைக் கேட்டபோது அவர்கள் திகைத்துப்போனார் கள். தங்கள் தலைவர் எதைச் சொன்னாலும் அதை வேதவாக்காக ஏற்றுச் செயல்பட்டு பழக்கப்பட்டிருந்த அவர்களுக்குத் தங்கள் தலைவர் தங்களிடம் இதுகுறித்துக் கேட்டபோது அவர்களால் எதுவும் சொல்ல இயலவில்லை. ஆனால் பிரபாகரனோ ஒவ்வொருவரையும் தனித்தனியாகவும், கூட்டாக வும் அழைத்துப் பேசினார். அனைவரும் சம்மதம் அளித்த பிறகே இத்திரு மணத்தை செய்ய அவர் தீர்மானித்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் உள்ளவர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டுமானால் அதற்கு இயக்கத்தின் அனுமதியைப்பெறவேண்டும் என் பது விதியாக இருந்தது. தலைவர் என்றமுறையில் இந்தவிதியிலிருந்து விலக்குப்பெற பிரபாகரன் விரும்பவில்லை. இயக்கத் தோழர்களின் அனுமதி கிடைத்தபிறகே அவர் திருமணம் செய்துகொண்டார்.

திருமணம் நடந்து பேரனும் பிறந்தபிறகே பிரபாகரனின் பெற்றோர் அவர்களைச் சந்தித்தார்கள். 13.9.'86 அன்று சென்னையில் உறவினர்வீட் டில் நடைபெற்ற திருமணமொன்றில் எதிர்பாராதவிதமாக இச்சந்திப்பு நிகழ்ந்தது. ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்குப்பிறகு தங்கள் அருமை மகனை அதுவும் மருமகளோடும் மழலைச்சிந்தும் பேரனோடும் பார்க்கநேர்ந்த பெற்றோர் நெகிழ்ந்து போனார்கள். இந்தச்சந்திப்பு அனைவருக்குமே மகிழ்ச்சியைத்தந்தது.

பிரபாகரனின் துணைவி மதிவதனி படித்த பெண்மணி என்பது மட்டு மல்ல. இயக்கத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் தியாக உள்ளமும் கொண்டவர். இயக்கத்தைச் சேர்ந்த தோழர்களிடம் அவர் காட் டும் அன்பு தாயன்புக்கு நிகரானது. பிரபாகரனின் இல்வாழ்க்கைத் துணை வியாக மட்டுமில்லாமல் விடுதலைப்புலிகள் குடும்பத்தின் அன்னையாகவும் இந்த இளம்வயதில் அவர் விளங்குகிறார். பிரபாகரன் எடுக்கும் முடிவு கள் குறித்து தன் மனத்தில்பட்டதை பளிச்சென்று அவரிடமே ஒளிவுமறைவில் லாமல் அவர் தெரிவிப்பதைப் பலமுறை பார்த்து வியந்திருக்கிறேன். இயக்கத் தோழர்கள் போர்க்களத்தில் வீர மரணமடைந்த செய்தி வரும் போதெல்லாம் தனது சொந்த சகோதரர்களை இழந்து போல் கண்ணீர் வடிப்பார். அவரைத் தேற்றுவது பிரபாகரனுக்குப் பெரும்பாடாக இருக் கும். அந்த அளவுக்கு இயக்கத்தோடு இரண்டறக் கலந்துவிட்ட பெண்மணி யாக மதிவதனி திகழ்ந்தார்.

புங்குடுத்தீவில் பிறந்த மதிவதனியின் தந்தையின் பெயர் திரு. ஏரம்பு என்பதாகும். தாயாரின் பெயர் **திருமதி சின்னம்மாள்** என்பதாகும். இவர் கள் பிரபாகரனின் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லர். பிரபாகரன்-மதி வதனி திருமணம் காதல் திருமணம் மட்டுமல்ல. கலப்புத் திருமணமும் ஆகும்.

இந்த இலட்சியத் தம்பதிகளுக்கு **சார்லஸ்** என்ற புதல்வனும் **துவாரகா** என் கிற புதல்வியும் பிறந்தார்கள். விடுதலைப்புலிகள் இயக்கத் தளபதியாகவும், பிரபாகரனின் இணைபிரியாத தோழனாகவும் விளங்கிய **லூகாஸ் சார்லஸ் அன்றனி** என்பவரின் பெயரையே தன்னுடைய மகனுக்குப் பிரபாகரன் சூட் டினார்.

இந்திய அரசின் போக்கு புலிகளுக்கு எதிராகத் திரும்பியநிலையில் பிர பாகரன் தாயகம் திரும்ப முடிவுசெய்தார். அப்போது அவருடைய துணைவி மதிவதனியும் பிடிவாதமாகவே அவருடனேயே தாயகம் திரும்பினார். தனக் கும் குழந்தைகளுக்கும் நேரவிருக்கும் அபாயங்களைக்குறித்து அவர் கொஞ்



படிப்பகம்

www.padippakam.com

சமும் கவலைப்படவில்லை. தன்னுடைய வீரக்கணவரின் காரியங்கள் யாவற்றுக்கும் கைகொடுத்து துணைநிற்கவேண்டும் என்ற உறுதியுடன் அவருடனேயே சென்றார்.

1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் திலீபனின் உண்ணாநோன்பினையொட்டி நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது பிரபாகரனின் வீட்டிற்கும் சென்றிருந்தேன். தமிழகத்தில் அமைதியான சூழ்நிலையில் எப்படி இருந்தாரோ அதைப்போல யாழ்ப்பாணத்தில் அபாயகரமான சூழ்நிலையிலும் கொஞ்சமும் பதட்டமில்லாமல் திருமதி. மதிவதனி இருந்ததைக் கண்டு நான் வியப்படைந்தேன்.

''நீங்கள் தமிழ்நாட்டிலேயே இருந்திருக்கலாமே! இங்கே வந்து இவ்வளவு சிரமப் படவேண்டுமா? என்று நான் ஆதங்கத்துடன் கேட்டபோது, அவர்கூறிய பதில் என்னைப் பெருமிதம் கொள்ளவைத்தது.

''என்னையும் என்னுடைய குழந்தைகளையும் தமிழ்நாட்டில் பத்திரமாக வைத்துவிட்டு இவர் மட்டும் இங்கே திரும்பினால் எங்கள் மக்கள் என்ன நினைப்பார்கள்? இலட்சக்கணக்கான எங்கள் நாட்டுத் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் என்ன நேரிடுகிறதோ! அது எனக்கும் என்னுடைய குழந்தைகளுக்கும் நேரிடட்டும்!'' என்று அவர் கூறியபோது ஒரு புறநானூற்றுத் தாயை அவர் வடிவில் நான் கண்டேன்.''

எதிர்பார்த்ததைப்போலவே சொல்லமுடியாத கஷ்டநஷ்டங்களுக்குப் பிரபாகரன் குடும்பம் ஆளானது. இந்திய ராணுவம் யாழ்ப்பாணத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டு தாக்குதல் தொடுத்தபோது அந்த இளம்தாய் தன்னுடைய இருகுழந்தைகளோடு அளவற்ற துயரங்களுக்கு ஆளாகிப் பதுங்கிப் பதுங்கி வாழநேர்ந்தது. பிரபாகரனைப் பிடிக்கமுடியாத இந்திய ராணுவம் அவருடைய மனைவியையும், குழந்தைகளையும் எப்படியும் பிடித்து விட வேண்டும் என்று பயங்கரமாக வேட்டையாடியது. இந்தத் தலைமறைவு வாழ்க்கையில் அவர்கள் அனுபவித்த துயரத்தை வெறும் எழுத்துக்களால் வருணித்து விடமுடியாது. ஈழநாட்டுத் தாய்மார்களும், குழந்தைகளும் அந்தக் கொடுமைகளையும், சோதனைகளையும் தாங்கி கொள்ளும் மனவலிமையை திருமதி. மதிவதனி மூலம் பெற்றார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ஈழநாட்டுப் பெண்களுக்கு முன்னுதாரணமான வீரபத்தினியாகவும் வீரத்தாயாகவும் மதிவதனி திகழுகிறார்.

இந்திய ராணுவத்தையும், சிங்கள இராணுவத்தையும் எதிர்த்து தன்னுடைய கணவர் வீரப்போர் புரிந்து கொண்டிருந்தவேளையில் அகதிகளின் முகாம்களிலிருந்து கொண்டு திக்கற்ற தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆறுதல் கூறி தேற்றும் பணியில் மதிவதனி ஈடுபட்டிருந்தார். இந்தக் காலகட்டத்தில் துன்பம்தோய்ந்த அவரது வாழ்க்கையில் சோககரமான நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. பிரபாகனின் அருமைப்புதல்வி துவாரகா நோய்வாய்ப்பட்டபோது சிகிட்சை செய்வதற்கு மருத்துவரோ மருந்துகளோ இல்லாமல் துடிதுடித்து உயிர்நீத்தாள். ஆனாலும் அந்த மாதரசி மனம் கலங்கவில்லை. குழந்தை துவாரகாவின் உடல் மரியாதையான முறையில் அடக்கம் செய்யப்படுவதைக்கூட இந்தியராணுவம் அனுமதிக்கவில்லை. துவாரகாவின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட மக்களை மிரட்டும்வகையில் இந்தியராணுவம் அவர்களைச் சுற்றிவளைத்தது. இறுதிச் சடங்குக்கு பிரபாகரன் எப்படியும் வருவார், அவரை வளைத்துப் பிடித்துவிடலாம் என்று ரத்தவெறிகொண்டு இந்தியராணுவம் கெடுபிடி செய்தது. இந்தியராணுவத்தின் முற்றுகையிலிருந்து தன்னுடைய புதல்வன் சார்லசோடு மதிவதனி மீண்டும் தப்பினார்.

RAYA
87 RUE DE COLOMBES 104
92600 ASNIERES SUR SEINE . FRANCE



படிப்பகம்

www.padippakam.com

அவர் ஒருபக்கம், பிரபாகரன் மற்றொரு பக்கம் என்று பிரிந்து வாழும்
துயர சூழ்நிலை. ஈழநாட்டில் எத்தனையோ குடும்பங்களின் வாழ்வு
சிதைக்கப்பட்டதுபோல பிரபாகரன் குடும்பவாழ்வு சிதைக்கப்பட்டிருக்
கிறது.

கைப்பிடித்த கணவன் போர்க்களத்தில் போராடிக்கொண்டிருக்க மதி
வதனியோ தனது பால்மனம் மாறாத கைக்குழந்தையைப் பறிகொடுத்த
விட்டு மற்றொரு குழந்தையுடன் வாழுவதற்காகப் போராடிக்கொண்டிருக்
கிறார்.

இந்த இலட்சியத் தம்பதிகள் போர்க்களத்தில் சந்தித்தார்கள். போராட்
டத்தின்நடுவே திருமணமும் செய்து கொண்டார்கள். போராட்டப்
பாதையே அவர்களுக்கு வாழ்க்கைப்பாதையாக அமைந்தது. போர்க்
களத்தில் கூட அவர்களால் இணைந்து நிற்க முடியவில்லை. கணவன் ஒரு
புறமாகவும் மனைவி மற்றொரு புறமாகவும் போராடுகிறார்கள். அவர்
கள் மட்டுமல்ல ஆயிரமாயிரம் தமிழீழ இளைஞர்களும், யுவதிகளும்
மாறாக மனஉறுதியோடு தொடர்ந்து போராடுகிறார்கள். தாயக விடு
தலை கீதமே அவர்களின் ஜீவகீதமாக ஒலித்துக்கொண்டிருக்கிறது.



## மக்களோடு புலிகள்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!

RAYA
87 RUE DE COLOMBES
92600 ACHIERES SUR -
- SEINE ; FRANCE



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்